# முற்றாத
# இரவொன்றில்......

ம. காமுத்துரை

செல் - 91500 95266

பாரதி
புத்தகாலயம்

RangaRakes

tamilnavarasam.com

# 1

“மாட்டேன்...!” என்றபடி வீட்டுக்குள் பதுங்கினாள் வசந்தி. மருண்ட பார்வையை மாயன் மேல் நிறுத்தி இருந்தாள்.

மாயனுக்கும் பலவிதமான யோசனைகள். எதை நம்புவது... எதையுமே நம்பாமல் என்ன செய்யப் போகிறோம்... குழம்பிப் போயிருந்தான். பாம்பும் பழுதும் புரியாமல் தவித்தான்.

சோனை முத்துவைப் பார்க்க, அவன் முகமலர்ச்சியோடு கைகளை பின்னால் கோர்த்தபடி நின்றிருந்தான். ஒருவேளை தன் பாரம் தீர்ந்த சந்தோசமோ...?

திண்ணை நிறைய ஊர்க்காரர்கள் உட்கார்ந்திருந்தனர். சின்ன மர ஸ்டூலில் அய்யாச்சாமி பெரிய்யா... மாயனும் சோணமுத்துவும் மட்டும் வீட்டின் எதிரிலிருந்த வரவரங்காச்சி மரத்தை அண்டக்குடுத்து நின்றிருந்தனர். கயிற்றுக் கட்டிலில் காப்பித் தம்ளரும் வெத்திலை பாக்கும் சில்வர் தட்டில் வைக்கப்பட்டிருந்தது. வந்தவர்கள் கொண்டு வந்த பலகாரப் பை விடைத்த காதுடன் வாசலோரமாய் சுவரில் சாய்ந்து கிடந்தது.

யாரும் எதும் தொடவில்லை.

“இதப்பார் மாயா...” நாட்டாமை துவக்கியபோது,

“இல்ல பெர்சு... மாயக் கண்ணெ...” இடைமறித்து திருத்தினான். சின்னராசு.

ஓட்டத்த தொவங்கறப்பவே காலத்தட்டற வேலதான ஆகாது... என்று மனசுக்குள் கறுவிய நாட்டாமை. “மாயக்கண்ணனா... நல்ல மாயம் பண்ணுனப்பா...'' என்றவர், ‘‘சரி... இப்ப... வேணும், வெளையணும்னுதே அல்லாரும் வந்துருக்கம். வில்லங்கம் எதுமில்லாம அனுப்பிச்சு விடப்பா... ஒரு இடைவெளி தருவது போல நிறுத்தினார். அது அவருக்கும் தேவைப்பட்டது.

வசந்தியின் அய்யா, கருத்தக்கண்ணு எல்லோருக்கும் நடுவில் உட்கார்ந்திருந்தார். முகங்கொடுத்துப் பேசப் பிரியப்படாதவர் போல மூசுமூசென்று மூச்சிறைந்து கொண்டிருந்தார்.

பூராவும் பெரிய சம்சாரிகள். இளவட்டங்கள் யாரும் இல்லை. உண்மையிலேயே சமாதானத்துக்குத் தான் வந்திருக்காங்களா...?

மாயன் தரப்பிற்கு அய்யாச்சாமி பெரியப்பா மட்டுமே உட்கார்ந்திருந்தார் -சோனைமுத்துவின் தகப்பனார். மாயன் மாங்காய் அடிக்க தோப்புக்குப் போயிருந்தான். பெரியகுளத்துக்காரர் குத்தகை

தோப்பு. இங்கே வந்ததிலிருந்து அந்த வேலைதான் நாலைந்து நாளாய் நிலைத்திருக்கிறது. அதுக்கும் இன்னிக்கு வேட்டு. இல்லாவிட்டால் வத்தலக்குண்டு சந்தைக்குப் போகும் முடிவிலிருந்தான். வசந்தியின் பாதுகாப்புக்காகத்தான். மருகித் திரிய வேண்டி இருந்தது. அடைக்கலம் கொடுத்தவர் வீட்டிலேயே எத்தனை நாள்தான் ஓசிச்சோறு திங்கறது... வசந்தி தன்னுடைய தாமரைப்பூ பேசரியை சோனைமுத்துவின் தங்கச்சிக்கு போட்டு விட்டிருந்தாள். அதுவரை கொஞ்சம் விசனப் பட்டுக் கொண்டிருந்த அந்தக் குடும்பம் இவளது ஒட்டுதலைப் பார்த்து கரைந்து போனது.

"என்னாத்தடா ஊர்ல ஒலகத்துல செய்யாதத செஞ்சு போட்டடீக... ம்..? மனசுக்கு ஒப்புச்சு, ஓடி வந்துட்டடீக... ஆம்பளையும் பொம்பளை யுந்தான சேந்துருக்கீக... ஆடு மாடு கூடயா தொடுப்பு வச்சுக் கிட்டடீக..." லட்சுமி பெரியடித்தானே நறுக்கெனக் கேட்டு இவர்களின் அச்சம் போக்கி இருந்தது. கூடவே, சோனைமுத்துவை உடன் இருக்கச் செய்தது.

"அய்யா... பொதுவாளுக, நாங்க ஒரு விசயம் சொல்லாம்னு நெனைக்கிறம்..." மஞ்சள் சட்டையும் காவி வேட்டியும் அணிந்திருந்த - காசிக்குப் போய் வந்ததிலிருந்து மங்கள உடைதான் அணிவாராம் - நாட்டாமை மறுபடி துவக்கினார். "இங்கன உள்ளூர்ல ஆரும் பெரியாள்கள எதும் கூப்புடணுமாய்யா....?" என்று அபிப்ராயம் கேட்க, வசந்தியின் தகப்பனார் உடனடியாக மறுத்தார்." கையெடுத்துக் கும்புடுறேன் மாமா...! அம்மூர்ல அசிங்கப்பட்டது போதும்... ஆரையும் கூப்புட வேணாம்...!"

"ஸ்சு... கருத்தகண்ணு... பொழுதீன்னிக்கும் அத அதப் பேசாதப்பா... என்னா அசிங்கம்... ஒம் மக என்னா மொண்டி மொடவம் மேலயா ஆசப்பட்டு வந்துருக்கா... 'வீமெ' மாதிரி சிங்கத்தத்தானப்பா கைப் பிடிச்சிருக்கு... மாயனுக்கு என்னா கொறச்சல்... நீ அறியாத பயலா... பெரியகம்மா வயலக் குடுத்துப்பாரு... வருசத்துக்கு ரெண்டுக்கு மூணா வெளயவச்சு வீட்ட நெப்பீருவானாக்கும்... என்னா அப்பனு...!" உடம்புக்கும் குரலுக்கும் சம்பந்தமில்லாமல் கணீரெனப் பேசினார்.

அய்யாச்சாமி பெரிய்யா எதோ சொல்ல தொண்டையைச் செருமினார். மஞ்சள் வெயில் தணிந்து கொண்டிருந்தது.

"பெரியவங்க வீடுதேடி வந்திருக்கீங்க சந்தோசம். இதுக சின்னஞ் சிறுசுக.. எளரத்தம். இருந்து, பெத்தவக மத்தவக சம்மதங்கேட்டு ஒறமொறையோட நிண்டு கூடி இருக்கோணும். எளங்கண்டு பயமறியாதும்பாங்க... ஆனா இதுக எதியோ நெனச்சு பயந்து வந்திருச்சுக... நாலொண்ணு நல்லது சொல்லி... நாமதேன்..."

அவரை முடிக்க விடாமல் மறித்த சின்னராசு, "அதுக்குத் தான வந்துருக்கம்..." என்று பேசியதும் அவனை தொடையில் தட்டி நிறுத்தினார் நாட்டாமை.

RangaRakes tamilnavarasam.com

“அய்யா... கட்டுத்தொர வச்சுப் பொழங்குன குடும்பம்... காராம் பசுவ ஓட்டிட்டு வந்துட்டீக... காள மாட்டோட சேத்து வச்சு கட்டுத்தர பொழங்கட்டுமேன்னு நாங்க பிரியப்படுறம்... என்னா... சரியா...!” கருத்தக் கண்ணுவின் சம்மதத்தோடு பேசுவது போல சொன்னார்.

பெரிய்யய்யாவுக்கு தர்ம சங்கடமாயிருந்தது. வந்தவங்கள் வழுகிக் கொண்டே போகிறார்கள். வார்த்தையை விட்டு பகைச்சுக்கறது வேண்டாம். அதுக்காக அண்டி வந்த மாயனை பலி கொடுக்கவும் முடியாது.

“எந்தக் கட்டுத் தரைல. பசுவோட காளங்கண்டு எந்தக் காலத்துல நின்னுச்சூ...” சோனைமுத்து சுருக்கென கேட்டு விட்டான்.

“எங்க தொழுவத்துல வந்துபாரப்பா... மயிலயில இருந்து மாங்(ன்) கொம்பு வரைக்கும், வகைக்கொரு சோடி வருச போட்டு நிக்கிம்...” சின்னராசு தன்னைத்தானே மெச்சிக் கொண்டான். இம்புட்டு கோர்வையாப் பேச வருதே... இல்லாதவிசயத்தப் பேசுனாத்தே பேச்சு எகனமொகனயா வருமோ...

“கட்டுத்தரன்னா என்னான்னு தெரிமா...” கருத்தக்கண்ணு சூட்சுமத்தில் கல்லெறிந்தார். அதைக் கண்ட நாட்டாமை அவசரமாய் நுழைந்தார். “யே... மயிலக் காளைக்கும் மருமகப் பிள்ளைக்கும் வித்தியாச மில்லியாப்பா...” என பனிப்போரை முடித்து வைத்தவர், “இப்ப என்னா... பிள்ளைய கூட்டிப் போக வந்துருக்க...! அதப்பேசு... ” வந்த நோக்கத்தை மெல்ல அவிழ்த்து விட்டார்.

“மாட்டே...ன்! மறுபடியும் கதவுப் பக்கமிருந்து கீச்சுக்குரலில் சொன்னாள் வசந்தி.

மாயனைத் தவிர யாரும் அவளை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. வசந்தியின் கண்களில் இருந்த கலக்கம் அவனுக்குப் புரிந்தது. மாயனுக்கு திடமான நம்பிக்கை இருந்தது. நிச்சயமாகத் தங்களை யாரும் பிரிக்க முடியாது. இந்த பதினைந்து நாட்களாகத் தங்களை கண்டுபிடிக்க முடியாதவர்கள். இப்போது படையோடு வந்திருப்பதால் வசந்தி தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறாள். இரண்டு பேரின் மனசும் உடம்பும் கெட்டித்துப் போய்விட்டது. இனிமேல் அந்தப் பேச்சுக்கே இடமில்லை. பேசட்டும் பேசிக் கொண்டிருக்கிற வரை எந்தப் பிரச்சனையும் இல்லை. செயலில் வருகிறபோது பார்த்துக் கொள்ளலாம். பயப்பட வேண்டாம்... அவனும் கண்களில் தூது விட்டான்.

பறவைகள் கூடடையக் கூப்பாடு போட்டபடி வந்தன. பகல் முழுக்க சுற்றியலைந்த கதைகளைப் பேசிக் கொண்டே சக தோழர்க ளோடு, வீட்டின் பின்பக்கமிருந்த பூவரசு மரத்தில் இருப்புக் கொண்டன. அதில் ஏதோ ஒரு ஜோடி சண்டையிட்டுக் கொண்டே வாவரங்காச்சி மரத்தில் வந்து நின்றன.

வசந்தி வீட்டுக்குள் போய் விளக்கைப் போட்டாள். அடுக்களையில் லைட் எரிந்து கொண்டிருந்தது. லட்சுமி அத்தையும் பிள்ளைகள் இ ரு
வரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இவளைப் பார்த்ததும், "சோற் சாப்பிடுறியா..." எனக் கேட்டனர்.

"வேணாம்... த்த..." மறுத்துவிட்டு மறுபடி வாசலுக்கு வந்தாள்.

"ஒங்க பிள்ள மருமகன கூட்டிட்டுப் போக ஆரும் தடுக்கப் போறதில்ல... இருந்தாலும் ஒரு மொறன்னு வழம இருக்குல்ல..." பெரிய்யா ஒரு கணக்கு வைத்துப் பேசினார்.

"ஆ...மா... எல்லாமே மொறயாத்தே நடந்துருக்கு நடவுக்கு வந்தபய வெத நெல்ல களவாண்டு போயிருக்கானாம்... மொறயாம்... மொற..." வெந்த மனசோடு பேசத் தொடங்கிய கருத்தக்கண்ணுவை மறித்த நாட்டாமை,"யே... கருத்தக்கண்ணு... புத்தி கெட்டுப் போச்சாப்பா... மகளக் கூட்டிப் போக வந்தியா... மல்லுக்கட்ட வந்தியா?"

"நாம்... போக மாட்டே...ன்" ஆவேசமும் இரைச்சலுமாய் சொன்னாள் வசந்தி. வாசலை விட்டு வெளியில் ஒரு அங்குலம் கூட கால் மிதிக்கவில்லை.

"நீ ஒண்ணும் வரவேணா... இங்கனயே இருந்து சாணி தட்டிக்கிட்டு, பயலுகளுக்கு பீ மூத்தரம் அள்ளிக்கிட்டுத் திரி..." வேதாளமாய் பொங்கிப் பேசினார் கருத்தகண்ணன்.

சோனைமுத்துவுக்கு இவர்களின் பேச்சு நாடகம் போல தெரிந்தது. முதலில் ஊருக்குள் வந்து மாயனைக் கேட்டதும் தெரியாது என்றுதான் சொன்னான். இங்கே வந்திருப்பதாக துப்புக் கிடைத்த விபரத்தைச் சொன்ன பிறகும் கூட அவன் சொல்லவே இல்லை. சமாதானம் பேசிக் கூட்டிப் போக வந்திருப்பதாகவும், வில்லங்க விவகாரம் எதுவுமில்லை என்று விசாரித்த பிறகே இவர்களை வீட்டுக்குக் கூப்பிட்டு வந்து உட்கார வைத்தான். தோப்பிற்குப் போய் மாயனை அழைத்து வந்தான். எப்படியோ ஊரும் பேருமாய் அவர்கள் சேர்ந்து விட்டால் நல்லதுதானே... ஆனால் இங்கே பேசுகிற பேச்செல்லாம் சூது போலத் தெரிந்தது. அவசரப்பட்டு நம்பியவனைக் காட்டிக் கொடுத்து விட்டோமோ... பதை பதைத்தான்.

"யேய்... நிறுத்தப்பா... நிறுத்து... நிறுத்து கருத்தக்கண்ணு ரெம்பத் துள்ற...? இதுக்குமேல ஒனக்கு பஞ்சாயத்து பேச வந்தா எம்மரியாத கெட்டுப் போகும்... மனுசெம் மாதரியா பேசுற... ம்...?" நாட்டாமை விசுக்கென எழுந்து நின்றார். வேஷ்டியை அவிழ்த்து இறுகக் கட்டிக் கொண்டார்.

"இதானப்பா... ஒதிப் புத்தி போனாலும் சாதிப்புத்தி போகாதுன்றது...! எங்க, எப்படிப் பேசணும் என்னா செய்யணும்ற தன்ம வேணும்." என்றவர் வசந்தியை அழைத்தார். "கொஞ்சந் தண்ணி குடு தாயி... கத்திக் கத்தி தொண்டத் தண்ணி போனதேம் மிச்சம்..." தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தார்.

அய்யாச்சாமிக்கும் மாயனுக்கும் நாட்டாமை யாருக்காக வந்தார் என்பது விளங்கவில்லை. சரியாகப் பேசுகிறாரா அல்லது விரிசலுக்கு மாவுக்கட்டுப் போடுகிறாரா...வாயடைத்து நின்றனர்.. ஆனால் எதோ ஒரு நோக்கத்தில் இருப்பதாக மட்டும் புரிந்தது.

வசந்தி தண்ணி கொண்டு வந்தாள். செம்பை வாங்கிய நாட்டாமை, “தாயி... ங்நொப்பேம் பேச்சுல ஆத்தரமிருந்தாலும் ஒம்மேல இருக்க பாசத்துல பழுதில்ல ஆத்தா... அங்க ஒங்கம்மா சேட்டமில்லா... நீச்சு நெனவில்லாம ஒன் நெனப்பா அனத்திட்டுக் கெடக்குது. அந்தக் காண்டுலதே இவெ இம்புட்டுப் பேசிட்டான்.. இருந்தாலும் அசலூர்க்காரவகளுக்கு அது தெரியாதுல்ல... நீதேம் புரிஞ்சுக்கணும். ஒரெட்டு நீ வந்து ங்நொம்மாளப் பாத்துட்டு மட்டும் வந்துரு... அல்லார்க்கும் நல்லது... இதுதான் நாஞ்சொல்றது...” வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினார்.

“பொம்பளப் பிள்ளகிட்ட என்னாத்த தனியாப் பேசறீங்க” சோனைமுத்து முன்னால் வந்தான்.

“நாம் மாட்டேன்...” தலையை ஆட்டியபடி செம்பை வாங்கிக் கொண்டு நகர்ந்தாள் வசந்தி.

“யேய்... எம்புள்ளப்பா... உள்ளாங்கைல தூரிகட்டி வெளாண்டபுள்ள... உம்பாட்டுக்கு இரு...” சோனைமுத்து அமைதியடைய, அய்யாச்சாமி கையெடுத்துக் கும்பிட்டார்.

“நாஞ் சொல்றத தப்பா எடுத்துக்கக் குடாது. இதுக உங்க பிள்ளை கதான் ஒங்களுக்கு கூட்டிட்டு போக ரைட்டும் இருக்கு; இல்லீங்கள.. அந்தப்பிள்ள மெரண்டு ஒரேதா தலயக் குலுக்குது... அதனால சமாதானம் பேசவாரவங்க பொண்டு பிள்ளைகளோட வந்தா நல்லாருக்கும். இல்ல அந்தப் பிள்ளையோட அம்மாவாச்சும் வந்திருந்தா.. பேசச் செய்ய நல்லாருக்கும்... மாட்டேன்னு சொல்ற பிள்ளைய மல்லுகட்டி அனுப்ப மனசு வரல...” - அய்யாச்சாமி பெரியய்யா கையெடுத்துக் கும்பிட்டுச் சொன்னார்.

“அப்ப...!” கருத்தக்கண்ணு சீறினார்.

“அவக அம்மாவக் கூட்டிட்டு வாங்கன்றாரு...” சின்னராசு மொழிபெயர்த்தான்.

“அப்ப மனசு வந்துருமா... வேணாம்... ஆரு பிள்ளைய ஆரு அனுப்பறது...” சண்டைக்கு எழுந்தவரை கையைப் பிடித்து உட்கார வைத்து அமுக்கிப் பிடித்துக் கொண்ட நாட்டாமை எதும் பேசாமல் தலையசைப்பிலும் கண்ணசைவிலும் விடைபெற்று, கருத்தக் கண்ணுவை விசும்பாமல் சமாதானப்படுத்தியபடி நடத்திப் போனார். தெரு கடந்ததும் கையை விட்டவர் ஆள் பார்த்துப் பேசினார்.

“கருத்தக்கண்ணு... ஒன்னிய மாதிரியெல்லா வெடச்சுக்கிட்டுப் பேச முடியாதுப்பா... நம்மாள்க்கு காரியம் முக்கியம். என்னாச்சு... முழிச்சுக்கிட்டாங்கல்ல... கமுக்கமாத்தெ சில வேலைகளப் பண்ணனும்... கிறுக்குத்தனமா இருக்கு.. விடு. ஆழம் பாத்தாச்சுல்ல... வா...

# 2

சாம்பல் பூத்து ஒளிர்ந்தது நிலா. வானமெங்கும் ஆங்காங்கே திட்டுத் திட்டாய் மேகத் தடைகள். ஜின்னிங் பாக்டரியின் அரவை அறைக்குள்ளே பறக்கிற பஞ்சுத் துகள்கள் மாதிரி நாலாபுறமும் சிதறி மிதந்து கொண்டிருந்தன மேகங்கள். அந்த வெளிச்சத்தில் நட்சத்திரங்கள் ஒளியிழந்து கிடந்தன.

திண்ணையின் மேல் கால்களைக் குத்த வைத்து கைகளால் இறுக்கிக் கட்டிக் கொண்டு வாடைக் காத்துக்கு அனவாய் உக்காந்திருந்தான் சோனைமுத்து. மாயன், கைகள் ரெண்டையும் திண்ணையில் ஊன்றி, பெரிய மனுசத் தோரணையில் தலையைக் கவிழ்த்து, தொங்கிய கால்களை அலயவிட்டபடி அமர்ந்திருந்தான். பூவரசு மரத்தைப் பிளந்து வந்த காற்று சீத்தியடித்துக் கொண்டு போனது.

''எப்பிடி இங்க துப்புக் கண்டு பிடிச்சாங்கெ...?'' ஏழாவது முறையாகக் கேட்டான் சோனை.

“வாட கண்டுகிட்ட நாயி இனி வால ஆட்டிகிட்டேல்ல வரும்...!” அவனுக்கு பதில் சொல்லவில்லை மாயன்.

“அப்பன்னா... இன்னொர்க்கா வருவாங்கன்றியா...”

“கேனத்தனமா பேசுறியே... களவு பொருள கண்டுகிட்டவெ எடந்தெரிஞ்சப்பறம் சும்மாருப்பானா...”

சோனைமுத்துவுக்கு தாங்கள் பாதுகாப்பில்லாமல் இருக்கிறோம் என்ற பயம் வந்தது. “அப்டின்னா பெர்சுகளோட இன்னஞ் செலபேரு வந்திருக்கனுன்ற...”

“நிச்சியமா... பெர்சுகள விட்டு நோட்டம் விட்டு பின்னாடி இருப் பானுக... அனேகமா... இன்னம் ஊருக்குத் திரும்பாம இங்கிட்டுக் கூட சுத்தீட்டுத் திரியலாம்...'' ஒவ்வொரு வார்த்தையாய் நிறுத்தி யோசனைக்குப் பிறகு சொல்லி வந்தான்.

“யாத்தேடி...” குபுக்கென ஒரு காற்று கொத்தாய் வந்து ஆளைத் தள்ளியது. வாவரங்காச்சி மரங்களும் சீத்தியடிக்க முயற்சித்தன. உறக்கத்திலிருந்த பட்சிகள் காற்றின் உக்கிரத்தில் உறக்கம் கலைந்து சிணுங்கின.

“ஊரத்தாண்டி இருக்கதால காத்து கூடுதலோ...” மாயன்.

“ஆ..மா... வீடுக இன்னமும் பெருகலீல்ல...” என்ற பதிலளித்த சோனைமுத்துவுக்கு, கத்தியோடும் வேல்க்கம்போடும் எதிரிகள் இந்த

RangaRakes tamilnavarasam.com

அபாந்தரமான பகுதியில் திரிவது போன்ற பிரமை தட்டியது. “அந்த நாட்டாமக் கெழவெ பேசுன சீரே எனக்கு சந்தேகமாவே இருந்துச்சு. அம்புட்டுப் பேச்சும் அம்மள்க்குச் சாதகமாப் பேசிட்ருக்கானே... ஏதோ சூச்சி இருக்கணும்னு மனசு சொல்லுச்சு...

‘‘அப்பிடி விழுந்து பேசுனாத்தான எதிராளியோட தடந் தெரியும்...” அடுத்தபடியாக என்ன செய்வது என்பது இரண்டு பேருக்கும் கேள்வியாய் நின்றது. நிச்சயமாக எல்லோரும் ஊருக்குத் திரும்பி இருக்க மாட்டார்கள். யாராவது ஒன்றிரண்டு பேரை இங்கே நிறுத்தி விட்டுத்தான் போயிருப்பார்கள். இடுப்பைத் தடவிக் கொண்டான் மாயன் சூரி திடமாய் இருந்தது. தற்காப்புக்குப் போதும்.

“நாந்தே காட்டிக் குடுத்திட்டேனா...” சோனைமுத்து மாயனின் தோள் தொட்டான்.

“சேச்ச... அப்பிடியெல்லா இல்ல. கோழி கொத்தாட்டியும் குஞ்சு வெளிய வந்துதான தீரும். என்னா... நீ சொல்லங்காட்டி ஒக்காந்து பேசுனாங்க... இல்லாட்டி அடிச்சுக்கிட்டு பேசுவாங்க...”

“ஆள் இல்லைன்னு போயிருக்கலாம்ல...”

இல்லை என தலையாட்டினான். “ஏய் ஆடு மாட பறி குடுத்தவனே வெறியோட அலயிறாங்கெ... பெத்த புள்ளைய காணாக்கிப்புட்டு ‘யாராச்சும் ஒரு நிமிசம் ஒக்காருவாங்களா...”

“அப்ப... நாம்மளும் கொஞ்சம் உசாராத்தே இருக்கணும்ங்கற...”

ரெம்பவும் பயமுறுத்த விரும்பவில்லை மாயன். அடைக்கலம் கொடுத்தவர்களுக்கு அனாவசிய தொந்தரவு வராமல் அந்தக் கடவுள்தான் வழிவிடணும். கேட்காத மாதிரி மௌனம் காத்தான் மாயன்.

“சரி... வர்ரத யாரால மறிக்க முடியும்... பாக்கலாம்...” சோனைமுத்து எழுந்தான். “கீழ போய்ட்டு வந்துர்ரே... கதவ தாப்பா போடாம சாத்தி மட்டும் வச்சிரு...” திண்ணையிலிருந்து இறங்கி வேட்டியை அவிழ்த்துக் கட்டினான்.

“கீழன்னா...”

“கீழன்னா... ஊருக்குள்ள...”

“இந்நேரத்தில எதுக்குடா...?”

“ப்ச்... வீருசின்னு இருக்கில்ல வீருசின்னு... அவகண்ணே பன்னீருப் பயல பாத்துட்டு வந்திர்ரே...”

“ம்... ஹூம்...!” கிரகித்துக் கொண்டான்.

“யே... தப்பா நெனைக்காதப்பா... அவனத் தெரிம்ல”

“ம்... தெனாவட்டுக்காரப்பய...”

“ஆம்மா... நம்ம மேல உசுரா இருப்பான். எதுக்கும் பாத்து சொல்லி வச்சிட்டு வந்திர்ரேன்...” அடுத்த வார்த்தைக்கு ஆள் இல்லை. வீட்டை சுற்றிக் கொண்டு இறங்கிப் போனான்.

RangaRakes tamilnavarasam.com

சொந்தக்காரவங்க வீட்டுக்கே வந்துருக்கக்குடாதோ...! வேறெங் குட்டாச்சும் போயிருக்கணும்... பேசாம திருப்பூர் செவ கூட ஓடீர்க்கலாம். இத்தனைக்கும் சோனை நெருங்கின சொந்தமுங் கெடையாது. தாத்தா வகையில் ஒரு கிளையார். இப்போ மில்லில் வேலைக்குச் சேர்ந்ததில் மறுபடி துளிர்த்தது. வசந்தியைக் கூட்டிக் கொண்டு பல இடங்களில் அலைந்து இந்த இடம்தான் சரியாகப் பட்டது. பத்து பதினஞ்சு நாளைக்கு மேல் ஆகிப் போனது. சும்மாவே இருக்க வேண்டாமென்றுதான் மாந்தோப்பிற்கு காய் ஒடிக்கப் போனான். வீட்டில் சோனைமுத்துவின் அம்மா மட்டும்தான் பிரியமில்லாமல் இருக்கிறது. பேசாமல் நாளக் காலம்பறக் கூட வசந்தியைக் கூட்டிக் கொண்டு இடம் மாறிவிட வேண்டியதுதான். எதுக்கு தொந்தரவு...

பூவாசனை அடித்தது. வசந்தி வந்தாள்.

“தூங்கலியா....!” பக்கத்தில் உட்கார்ந்தாள்.

“ஒறங்கணும்....!”

சில வினாடி மௌனம் குடி புகுந்தது.

“வேற எங்கியாச்சும் போய்ருவமா...” வசந்தியின் குரலில் பரிதாபம் ஒலித்தது.

“யே...ன்?”

“பயம்மாருக்கு... கூப்புட்டுப் போய்ருவாங்கள்ல....!”

“போனாத்தான...?”

“இவுங்களே அனுப்பிச்சு விட்டாங்கன்னா...”

“ச்...” மறுத்து தலையாட்டினான். “அதெல்லா உன்னய மட்டுந் தனியா அனுப்ப மாட்டாங்க.. அனுப்புனா சேந்தவாக்லதான்...”

“அவங்க ஏத்துக்கணும்ல....!”

“ச்...இதெல்லா..ம்.. பேச்சா..?”

“பயம்மா இருக்குல்ல...” பொசுக்கென அவளது கண்களில் கண்ணீர் வடிந்து விட்டது. அவசர அவசரமாகத் துடைத்துக் கொண்டாள். துடைக்கத் துடைக்க வழிந்து கொண்டே இருந்தது. அடிக்கிற காற்றில் கண்ணுப்பட்டையின் ஈரம் குளுமை தந்தது.

‘‘எதுக்கு அழுவ்ற...!’’ நெருங்கி உட்கார்ந்து அணைத்துக் கொண்டான்.

“என்னைய மட்டும் தனியாஅனுப்பிச்சு விட்றாத... நா...ம்... போ... மாட்டேன்...”

“கிறுக்குத்தனமா பேசாத... தனியா அனுப்பவா இம்புட்டு தூரம் ஓடி வந்திர்க்கம்....!”

“இல்ல... எங்கப்பாவப் பத்தி ஒனக்குத் தெரியாது... அதக்காட்டியும் எங்கம்மா... இழுத்துட்டு போயிருவாங்க. போயி என்னையும்... ஊட்டியத் திருகி கொன்னுபோட்டு வாங்க...” கண்கள் மிரள மிரள பேசினாள்.

மாயனுக்கும் பயமாய்த்தானிருந்தது. அவளது அப்பா அம்மா ரெண்டு பேருமே கிருச கெட்டவர்கள்தான். திண்டு முண்டாகத் தான் எதையும் செய்வார்கள். ரேசன் கடையில் சரக்கு வாங்கி வருகையில் அஞ்சு ரூவாயை காணாமப் போட்டதுக்கே நாலு நாளாய் பொருமித் தள்ளியது. காமாட்சி யாத்தா... இல்ல அத்தை. இந்நேரம் எத்தனை வேகாளத்தோடு இருக்குதோ... வெளியில் உட்காரக் கூட வெறுக்கென்றுதான் இருந்தது. அவரது ஆட்கள் எங்குட்டாச்சும் திரிவான்கள். காசு செலவழிக்க அஞ்சாது... ஆனாலும் எதோ ஒரு நம்பிக்கை நெஞ்சுக்குள். எதுவும் அத்தனை சுலபமில்லை என்று திடமாய் ஒலித்தது.

"வசந்தி... இங்க பாருவே..." இடுப்பிலிருந்த சூரியைக் காட்டினான்." "எப்பவும் அம்மாள்க்கு இதுதே கொலதெய்வம்... லேசா எவனாச்சும் ஒரசுனான்னு வையி தாயளி தொலஞ்சான் நா ரெம்பக் கெட்டவெ... கோவக்காரெ தெரியும்ல..."

"கொக்கரக்கோ..." வாவரங்காச்சி மூட்டுக்குள்ளிருந்து எதோ ஒரு சேவல் கூவியது. தொடர்ந்து அடுத்தடுத்த வீடுகளிலிருந்து கூவல் சத்தம் எழும்பியது.

"அய்யோ... விடிய நேரமாச்சா..." வசந்தி.

"இல்லல்ல.. ஏதோ ஒருவேலயத்த சேவ, ஒறக்கம் புடிக்காம கத்துது. "

"சோனையெ... எங்க போறாப்ல..."

உடனே பதில் சொல்லாமல் அவள் முகத்தையே பார்த்தான். சில வினாடிக்குப் பிறகு... அவள் காதில் கிசுகிசுத்தான்." அவெ செட்டப்பு வீட்டுக்கு..."

கண்களை உயரமாய் விரித்தவள், "ச்செட்டப்பா..."

"ம்...! வீடுசின்னு ஒரு சமயல் வேலக்கிப் போறவள வச்சிருக்கான்"

"ச்சீ... பொய் சொல்ற..."

"அட.. நெசந்தேங் கழுத..."

"அதுக்குத்தே எங்கிட்ட அம்பது ரூவ்வா கேட்டுச்சா..."

"அம்பது ரூவாயா...?"

"காலம்பற தரேன்னு வாங்குச்சு..."

"அடப்... இது வேற நடக்குதா...?"

"ப்ச்... அரிசியில்ல... சீமன்ன இல்லேங்குறாக... சும்மாருக்க முடில... பாவம்... சின்னப் பிள்ளைக வேற காசு காசுங் குதுக... என்னா செய்ய...!"

"ம்.. எம்புட்டுத்தே மிச்சமிருக்கு...!"

"முன்னூறு, நானூறு வரும்...!"

"ரெண்டாயிரம் கொண்டாந்தேன்ன..."

"கணக்கு சொல்லவா...! ஓங்கணக்கே ஆறு நூறு ஆச்சு..." கைகளிரண்டையும் விரித்து விரல்களை எண்ணி கணக்குப் போட்டவனைப் பார்க்க மாயனுக்கு ஆசையாயிருந்தது.

அவளது கைகளை பிடித்தான். “சரி சரி... அதவிடு... ஒரு கமல்கிஸ் குடு...” முகத்தை நீட்டினான்.

“ம்... எரும ஈத்தளியுதாம்... கெடாக்கன்டு எரிந்திரிச்சு நிக்கிதாம்... விடு” உதறினாள்.

“ப்ளீஸ்... ப்ளீஸ்த்தா... கண்ணுல்ல...” பற்றிய கைகளை தன் பக்கம் இழுத்தான்.

“அறிவுருக்கா... நட்ட நடு வீதில... போ...” கைகளை உதறிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள். உள்ளே கசகசவென பிள்ளையும் குட்டியுமாய் படுத்துக் கிடந்தனர்.

சோனைமுத்து சொன்னதுபோல கதவைத் தாழ் போடாமல் சாத்திவிட்டு, காத்துக்கு திறவாமலிருக்க பெரிய கல்லெடுத்து அனவு குடுத்தான்.

ஓரமாய் கிடந்த பாயை எடுத்துக் கொண்டு அடுப்படி நுழைந்த வசந்தியைப் பின்தொடர்ந்தான் மாயன்.

RangaRakes tamilnavarasam.com

# 3

நாயுறங்கும் நேரம் தாண்டிவிட்டது. காமாட்சி பவனத்திலிருந்து நாட்டாமை கொட்டாவி விட்டபடி வெளியில் வந்தார். மேலே நிலா சின்னப் பிள்ளை போல வெள்ளந்தியாய்ச் சிரித்துக் கொண்டிருந்தது. வானத்தில் எந்த மாசு மருவுமில்லை. துடைத்து வைக்கப்பட்ட கண்ணாடி போல ஜொலித்தது.

காத்து குளுந்து வந்தது. உடம்புக்கு சுகமாய் இருந்தாலும் நாசிக்குள் ஏறுகையில் புரு புருவென குறுகுறுப்பை உண்டு பண்ணியது. 'சே... கெட்ட காத்தா இருக்கே...' என்றபடி தோள் துண்டை காது சேர்த்துப் போர்த்திக் கொண்டார். வீட்டுக்குள்ளே அடித்த சீமெண்ணெ வாசனைக்கு இது பரவால்லை எனத் தோன்றியது. வீடாவா வச்சிருக்கானுக... ஒரு பக்கம் சீமெண்ண நாத்தம்னா... அங்குட்டு அரிசிய அடஞ்சு வச்சு, வாந்தி எடுத்துக் கெடந்தமாதிரி புளிச்ச வாட... ஒக்காந்தம்னா அம்புட்டு புழுக்கம்... வண்டு ஊர்ற மாதிரி ஒடம்பு பூராம் ஊறல் வேற... இதுல எப்பிடித்தே படுத்து பொரண்டு புள்ளயப் பெத்துப் போட்டாங்களோ...

"பெரிய்யா... நாட்டாமப் பெரியா..." சின்னராசு பின்னாலேயே ஓடிவந்தான். ஒடிசலான தேகம் முகமெல்லாம் ஒட்டிப் போய் கண்ணுமுழி மட்டும் பெரிசாய் இருந்தது. துண்டை மப்ளர் மாதரி கழுத்தைச் சுற்றிப் போட்டிருந்தான்.

நாட்டாமைக்கு கடுப்பாய் இருந்தது... 'என்னாடா... இப்பத்தே வெளிய வந்தே... என்னா..."

"உள்ள கூப்புடுறாங்க... ஆத்தா கூப்புடுதுல்ல..."

"ஆத்தா கூப்ட்டா... நீ போய் பாலக்குடி...."

"பெரிய மனுசெம் மாதிரி பேசு நாட்டமேய்... அது ஒனக்கு மக இல்லியா..."

"ஆமாடா... எனக்கு மக.. ஒனக்கு ஆத்தாதானடா..."

"அய்யா...சாமி... ஆளவிடுங்க... நான்லாம் ஆள்க் கெடையாது... நடு குடு சாமம் ஆகிப்போச்சு சட்டு புட்டுன்னு பேசி முடிச்சுக் கௌம்ப மாட்டாம பொம்பளயப் பேசவிட்டு பொராக்குப் பாத்துக்கிட்டிருக் கீகளே.." புகாராய் ஒப்பித்தான் சின்ராசு.

"யே... பொம்பளயாடா அது... யே... அய்க்கோட்டு வக்கீலு கணக்கா லா பாய்ண்டு பேசுறப்ப... நாம சந்து பொந்தெல்லா பொத்திக்கிட்டுத்தான ஒக்காரத்தான வேண்டிருக்கு..."

“என்னா... லா... பாய்ண்டு... எங்களுக்கும் பேசத் தெரியும்ல...”

“பேச வேண்டிதான... ஒர்த்தனும் அடச்சவாய ஆன்னு தொறக்க மாட்டேங்கிறீங்க...”

“ஆ..மா.. பேசீ... ” என்றவன் "ஓடிப் போனவககூட இன்னேரம்ஜாலியா இருப்பானுக... நாமதே... ஒட்டா நாயிலயிங் கேவலமா...” புலம்பியபடி சிகரட் ஒன்றை பத்த வைத்தான் "உள்ள போங்க நாட்டாமேய்... ஒவ்வொர்த்தரா வந்துரப் போறாங்க... அப்பறஞ் சிவராத்ரி தே..ன்”

“அய்யா... கழுதக்கி வாக்கப்பட்டாச்சு. குத்துது கொடையுதுன்னாலும் ஒண்ணுஞ் செல்லாது. உள்ள போ... வகுறு உருட்டுது மந்தைக்கிப் போய்ட்டு வந்திர்ரே...” சொல்லிவிட்டு வேகமாய் நடந்தார்.

“இந்த அர்த்தராத்திரில மந்தைக்கு எதுக்கு போறீக... இங்குட்டு எங்கிட்டாச்சும்... ஓரஞ்சாரமா ஒதுங்க வேண்டீதான... எளவட்டம்ன நெனப்பு...” என்றபடி சின்னராசுவும் தொடர்ந்தான்.

ஒரு தெரு திரும்பியதும் ஆளைக் காணவில்லை. திரும்பித் திரும்பிப் பார்த்தான் தெரியவில்லை. பீஸ் போன தெருவிளக்கு கீழ் படுத்திருந்த நாயை வாலில் மிதித்து விட்டான். ‘வாவ்’ என்று அசுர வேகத்தில் எழுந்து குரைத்து விட்டு மறுபடி இன்னும் ஓரமாய்ப் போய் சுருண்டு படுத்துக் கொண்டு வாலை தடதடவென ஆட்டியது. பயந்து போன சின்னராசு ஒதுங்கிப் போனான். ஆனாலும் அந்த நாய் மின் மினிப்பூச்சி போல கண்களை திறந்து மூடிக் கொண்டிருந்தது. பளிங்காங்குண்டாய் அதன் விழிகள் பச்சை நிறத்தில் ஒளிர்ந்து பயமுறுத்தின.

தெருமுக்கில் ரேசன் கடை. அதனருகே கிணறு வடிவத்தில் இருந்த குப்பைத் தொட்டியைப் பிடித்தபடி நின்றிருந்தார் நாட்டாமை. உட்கார முடியாமல் குனிந்தபடி வேஷ்டியை உயர்த்திக் கொண்டு முக்கி முனகிக் கொண்டிருந்தார்.

“கருமங்... கருமம்.. இன்னிக்கி எந்த முண்ட மொகத்துல கண்ணு முழிச்சமோ...” தலையிலடித்தபடி வந்த வழியே திரும்பினான் சின்னராசு.

வீட்டுக்குள் நுழைந்து கதவு சாத்திவிட்டு வந்தான் சின்னராசு ஊர் ஆளுகள் பெஞ்சியில் உக்காந்திருக்க கருத்தக் கண்ணுவும், காமாட்சியும் மட்டும் தரையில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்திருந்தனர். காமாட்சிகூட புருசனை பெஞ்சியில்தான் உக்காரச் சொன்னாள். ‘இருக்கட்டும்’ என்றபடி மூலையில் போய் சாய்ந்து கொண்டார். அப்போதே காமாட்சிக்கு கோபம் கிளம்பிவிட்டது.

“குச்சுக் கட்டுன கொமரியாக்கும்... மூலைல குத்த வச்சிருக்க... யே... ஆம்பள கணக்கா... இங்கிட்டு வந்து ஒக்காரு... ஒரு உப்புக்கல்லுக்கும் பெறுமதி கெடையாது.. அதுதேன் ஊர்பயலெல்லா வந்து ஓட்டீட்டு போறானுக...”

RangaRakes tamilnavarasam.com

மறு பேச்சில்லாமல் தள்ளி வந்து சம்மணம் போட்டுக் கொண்டார். அப்பவும் வெறுக்கென்றது. இதுக்கும் எதாச்சும் சொல்லப் போறா... பேசாம பெஞ்சியிலியே ஆளோட பேரா உக்காந்திருக்கலாம்... நல்ல வேளையாக ஒன்றும் சொல்லவில்லை.

ஒரே ஒரு ட்யூப்லைட் மட்டும் எரிந்தது. காத்தாடி மெதுவாக சுற்றிக் கொண்டிருந்தது. உட்கார்ந்திருந்த பட்டாசாலை தவிர மூணு பக்கமும் சின்னச் சின்ன ரூம்கள். எல்லா அறையிலும் ரேசன் பொருள்கள் சிந்திச் சிதறிக் கிடந்தன.நேர்உள் ரூமில் மட்டும் பிள்ளைகள் படுத்திருந்தார்கள்.

“என்னாடா... நீ மட்டு வார...” காமாட்சியாத்தாள் கேட்டாள்.

“வர்ராரு.. சொல்லிவிட்டு தனது இருக்கையில் அமர்ந்தான்.

“சாகப் போற நாளையில பெருசுகள வீட்டோட இருக்க விடாம, இன்னமு அதுகளப் போட்டு வதச்சுக்கிட்டு... இருக்கவனுகளயெல்லா உசுர வாங்குறீகளேப்பா...” மீசையைத் தடவிக் கொண்டே வீரபத்திரன் சொன்னான். இளைஞர் சங்கத்தின் முக்கியஸ்தர்.

“சாதி வேலைக்கு வேற ஆருவர்ரா... நானுன்னு நிக்க. அவெவெ ஒக்காந்து திங்க நேரமில்லாம ஓடித் திரியிறானுக... இப்பிடி எதாச்சும் வில்லங்கம் வெவகாரம்னா... ஒன்னப் போல ரெண்டு பேரப் பாக்க முடிது... மத்தபடி நல்லது கெட்டதுகளுக்கெல்லா இவக இல்லேன்னா நாறிப் போகுமாக்கும்...!” கருத்தக்கண்ணு காமாட்சியை பார்த்துக் கொண்டே பேசினார்.

“சாதிங்கறது எதுக்கு வச்சிருக்காங்க... வம்பு வழக்குன்னு மணியம் பாக்கத்தான...? அதுல இவகள வச்சி ஊறுகா கூடப் போட முடியாது...”

“ஆமாப்பூ... எங்கள வச்சு ஊறுகா போட முடியாது... ஒங்கள வச்சு உப்புக்கண்டம் போடலாமாக்கும்...” அடைத்திருந்த கதவைத் திறந்து கொண்டு, காலடி மண்ணைத் தட்டிக்கொண்டே காமாட்சி பவனத்திற்குள் நுழைந்தார் நாட்டாமை.

யேண்டா.. ஒனக்கெல்ல தெக்குவடக்கு தெச சொல்லத் தெரியுமாடா சொல்றா... எண்ணிரண்டா பதினாறு தெசையும் சொல்லீடு பாப்பம்...! ஆம்பள...”

கூட்டமாய்ச் சிரித்தனர்.

“ஆ..மா.. பெரிய தங்கமல ரகசியம்.. ஒண்ணாப்பு வாய்ப்பாடத் தெறந்தா தெரிஞ்சிட்டு போவுது.”

“அதுதாண்டா... நீ, புஸ்தகத்தப் பாத்துத்தே சொல்ல முடியும்... எங்களுக்கு வயசு... அனுபவம்.. அதுக்கு மரியத குடுக்கப்பாரு...”

“இங்காரப்பா... வீரபத்ரா... வாயி இருக்குனு எதியும் பேசீரக் குடாது... செத்த வீட்ல நீயெல்ல எம்புட்டு நேரம் தாக்காட்டி இருப்ப... நாள்ப்பூராம் மண்டி போட்டு பொணத்த குழில சேக்கந்தன்டியும்

இருந்து காரியம் பாக்கறதுன்னா லேசுப்பட்ட காரியம்னு நெனச்சியா...” காமாட்சியாத்தா கேட்டாள்.

“அதேன்க்கா... குழில சேக்குற வேலயத்தா இவகனால பாக்க முடியும்...” கேகே என சிரித்துக் கொண்டே சொன்னதும் நாட்டாமைக்கு கோபம் வந்தது.

“யே... இருக்க வேலைலயே அதாண்டா புண்ணியஞ் சேக்ற வேல என்னா தெரியும் ஒனக்கு...?

“பெரிய்யா... அத விடுங்க.. சின்னப்பயலுக்கு சமதயா நீங்க பேசிட்டு... நானும் வெக்கமத்துப் போயி பேசிட்டுருக்கே... பெத்து.. பேரு வச்சி வளத்து.. பொக்குன்னு தொலச்சிப்புட்டு... நெய்யா உருகிக்கிட்டிருக்கே... ஆனதப் பேசுங்க... ஆகுற வழி சொல்லுங்க...” ஒப்பு வைப்பது போல ஒப்பித்ததும். சப்பென அத்தனை பேரும் கப்சிப்பென அடங்கினர். அத்தனைபேர் மனசிலும் மாயனும் வசந்தியும் ஊடாடினர்.

“அக்கா.. ஒட்றத் தண்ணீல ஒழக்குத் தண்ணிதே உசுரக் காக்கும். அதுபோல ஒரே பேச்சுத்தே வேணும். என்னா... அவெ... காரியஸ்தே... ஆரு... மாயெ... ஒவ்வீட்டு உப்பத் தின்னுகிட்டே ஒம் புள்ளய லவுத்திட்டுப் போய்ட்டான். அவுக ஆத்தா அப்பெ நாம் புள்ளெயே பெறலீன்னுட்டாக... இல்லியா..? மாப்ள அசலூர்ல போயி சம்முன்னு சமுசாரம் பண்றாரு... இப்ப நிய்யி என்னா செய்யலாம்ன்ற... ஒண்ணு, போடா பொக்கேன்னு விட்டுப்புட்டு ஒம் பொழப்ப பாக்கப் போறியா... இல்ல, அவனப் புடிச்சுத் தொவச்சு புள்ளய இழுத்து வரப் போறியா... அதும் மில்லியா... சீரு செனத்தியோடபோயி சேத்து வக்கெப் போறியா...” வீரபத்திரன் பிரி பிரியாய் திரித்தக் குடுத்தான்.

“லேய்... காமாட்சி எப்பேர்ப்பட்டவ... கல்லக் கடஞ்சு கசாயம் போட்டுக் குடிக்கிறவ... எங்கிட்ட சீருவாங்கி சீவிச்சிரு வாங்கெளாக்கும்... எவ்வீட்ல பண்ணயம் பாத்தவனுக்கு கூட்டிக் குடுத்தப்புட்டு, இந்த காமாட்சி கோடீஸ்வரியா வேற வாழ்வாளாக்கும்... அது பொழப்பாக்கும்... அதுக்கு வாய்க்குள்ள கையவிட்டு நாக்கப் புடிச்சு நசுக்குன்னு இழுத்து நாண்டுகிட்டு செத்துப் போவாளாக்கும்... யாருகிட்ட என்னாகேளுவீ...” மூச்சிரைக்கப் பேசினாள்.

“ஒம்புள்ளதே மாட்டே மாட்டேன்னு தலய சிலுப்புதே! வந்தா, இன்னவரைக்குமா விட்டுட்டு வந்திருப்பம்” நாட்டாமை கண்களை மூடிக் கொண்டு சொன்னார். பொம்பளை இம்புட்டு வீரம் பேசியதில் இயலாமை இம்சித்தது.

“எப்பிடி பெரிய்யா வருவா... அவிங்கதே. மருந்து வச்சுல்ல இழுத்திட்டுப் போயிருக்காங்கெ... தூக்கிட்டு வந்து ஆண்டி பட்டிலபோயி, வச்சமருந்த எடுத்துக் காமிக்கிறே... அப்பறமில்ல இருக்கு ஒவ்வொருத்தனுக்கும். ஒவ்வொரு சிறுக்கிக்கும் வேட்டு...”

“பயமுறுத்தறதுக்கு நம்ம பயக ரெண்டு பேர அங்க விட்டுட்டுதே வந்திருக்கம். அனேகமா நாள நாளன்னைக்குள்ள காரியம் முடிஞ்

சிரும்...” கருத்தக்கண்ணன் தாங்கள் ஊரை விட்டு வரும் பொழுது அங்கிருக்கும் தாயத்துக்கார் ஒருத்தர் வீட்டில் தனது ஆட்கள் இரண்டு பேரை நிறுத்தி வந்த விபரம் முழுக்க சொன்னார்.

“ம்... அதெல்லா இந்தக் காலத்துல ஆகாது... ஒண்ணு காசுக்குடுத்து ஆச காமிச்சுப் பாக்கணும். இல்லியா கால ஒடிச்சு ஆள முடிக்கணும்... என்னா வீரபுத்ரா...” சின்னராசு.

“அதத்தே நானுஞ் சொல்றே... ஒம் புருசெ ஒத்துக்கணும்ல... நாயம்... அசிங்கம்னு கட்டயக் குடுக்குறாப்லயே...”

“இங்க வாரப்பா... பேச்சு வழக்குக்குன்னு ஒரு வரமொற இருக்கு. நீ நெனைக்கிற மாதிரி எடுத்த ஒடனே வேல்க்கம்பத் தூக்கிட்டுப் போறதுக்கு... அவெ ஒண்ணும் ஆன புலி இல்ல அடுத்த சாதி இல்ல...”

“வேணாம் பெரிய்யா... அத்தோட நிறுத்துங்க...” ஆவேசமானாள் காமாட்சி. “ஆயிரந்தே அவெ அய்யர் பொறப்பா இருந்தாலும் எங்கிட்ட எச்சித் தண்ணி வாங்கி பொழச்சவெ. அவெ ஆத்தா...ரேசன் அரிசிய பொடச்சு நாங்குடுத்த கருக்கா அரிசிய வாங்கி கஞ்சி காச்சுனவ அவகிட்டப் போயி.. நிய்யும் நானும் ஒரே சாதி... வாடா சம்மந்தின்னு... கொலவணுமாக்கும்...”

“கிறுக்குத்தனமா பேசாதம்மா... என்னாதேம் பேசுனாலும் ஒரு சாதிங்கறது இல்லேன்னு ஆயிருமா... அப்பிடி ஒரு எனத்துக்குள்ள ஒலப்புலாட்டமிருந்தா அடுத்த சாதிக்காரெ நம்மள சிரிச்சுப் புடுவாந் தெரிமா...” நாட்டாமைக்கும் வேகம் வந்தது.

“அதத்தே நானுஞ் சொல்றே... இதுல விட்டுக் குடுத்தேன்னு வையிங்க... இன்னொர்த்தே எளய புள்ளய இழுத்திட்டுப் போவான்.. ஏன்.. நீங்க சொல்ற அடுத்த சதிக்காரனே நிய்யும் வாரியான்னு என்னியவே கூடக் கூப்புடுவாம் பெரிய்யா... கூரோட பேசுங்க...” வேகமாய் பேசியதில் காமாட்சிக்கு மூச்சு வாங்கியது. கிஸ்புஸ் செ்ன நெஞ்சுக் குழி ஏறி இறங்கியது. கண்ணுமுழி பிதுங்கி உட்கார முடியாமல் அப்படியே சாய்ந்து உழன்றாள். ஓடிப் போய் கருத்தக்கண்ணு முதுகைத் தாங்கிப் பிடித்தார். உட்கார்ந்திருந்த அத்தனை பேரும் எழுந்து காமாட்சியிடம் ஓடி வந்தனர்.

“தண்ணி எடுத்துவாப்பா...” நாட்டாமை தாங்கிக் கொள்ள கருத்தகண்ணு தண்ணீர் கொண்டு வந்தார்.

‘‘வேண்டாமென மறுத்தவள் கொஞ்சநேரம் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

“தேவலயா... காமாட்சி...” நாட்டாமை பிடியை விட்டு பெஞ்சுக்குப் போனார்.

“சரி சரி.. காலம்பற பேசிக்குவம்... கௌம்புங்க...” நாட்டாமை சபையை கலைக்க, காமாட்சி தடுத்தாள்.

“இல்ல பெரிய்யா... எனக்கென்னமோ நறுக்குப் படுது... இந்தப் பெரச்சனைய... இன்னியும் இழுத்துப் போக வேணாம்னு படுது. இத்தன நாளா லெக்குத் தெரியாம அலஞ்சம்... இப்ப... புடிச்ச மீன விட்டகதயா ஆயிரக்குடாது... எப்பிடியாச்சும் என்னா செஞ்சாச்சும் எம்மகள நா மீட்டாகணும்... சொத்து போனாலுஞ்சரி... உசுரு போனாலுஞ்சரி...” மீண்டும் ஆவேசங் கொண்டாள்.

“அதுக்கு நா...ங்கேரண்டிக்கா...” வீரபத்திரன் கைநீட்டிச் சொன்னான். “நாளெ... நாளெ மறுநா... ஒம் மக இந்த வீட்ல இருக்கும்...” என்றவன்“ஆனா...” என இழுத்தான்.

“என்னா.... செலவாகும்கிறயா... எம்புட்டு வேணும்...”

“ச்... அத விடுக்கா...” என்றவன் மேலும் தயங்க...

“யே... சொல்றா... நானே டென்சனாகி கெடக்கே... இன்னமு ஏத்தாதடா..”

“எம் பெத்த தாயா வச்சுப் பேசுறே... தப்பா நெனைக்காத... பத்து பதினஞ்சு நாளு கூடவே ஒண்ணா இருந்துருக்கானுங்க... பழகிச் செஞ்சு இருந்தா...”

எல்லாரும் சங்கடத்துக்குள் வீழ்ந்தனர். நெளிந்தனர். காமாட்சி தெளிவாகப் பேசினாள். “வீரபத்ரா... இந்த அறிவு கூட இல்லாமயா இருப்பேன்... டேய் அவ கருக்கூடி இருந்தாலும் கவல இல்லடா அய்யா.. கூட்டிட்டு மட்டும் வா... நாம் பாத்துக்கறேன்...” இழுத்து மூச்சு விட்டாள்.

செலவுக்கு பணம் வாங்கிக் கொண்டு அனைவரும் வெளியேறினர்.

வீரபத்திரனுக்கு கேட்காமல் சின்னராசு நாட்டாமையிடம் கிசுகிசுத்தான்.

“ஏம் பெர்சூ... மந்தைக்கு போறேன்னு போனீக வந்து சம்மணம் போட்டு பெஞ்சில ஜம்முன்னு ஒக்காந்து கிட்டீக...” என்றாள் ஒருவித அசூயையுடன்.

“ம்... குண்டியக் கழுவிச் சுத்தம் பண்ணி எந்தப் பொண்டாட்டி கூடப் படுக்கப் போறே... போடா...”

சீ... என்றபடி வீரபத்திரனோடு சேர்ந்து கொண்டாள் சின்னராசு.

# 4

குளிர்ந்த காற்று கூடுதலாய் அடித்தது. வெக்கையை விரட்ட வந்த விசிறி போல் தவழ்ந்த காற்று, நேரம் கடக்க கடக்க ஏதோ ஒரு அவசர கதியில் முனகலுடன் வீசியது. வேகம் கூடக் கூட யாருக்கோ ஏவி விடப்பட்டது போல ஒரே திசையில் வந்து விழுந்தது. எடையே இல்லாமல் வருடிய சுகம் போய், திரை போல தன்னில் ஈரப் பதத்தைச்சுமந்து வந்தது. விஷக் காற்றாய் சில்லிட்ட தன்மையினை பரப்பியது. நாசிகள் விடைத்து உடலுள்ளும் புகுந்து முடிவில் தலை கனக்கச் செய்தது.

நிலா, வேடிக்கை பார்க்கிற சன்னலோரச் சிறுமியைப் போல வானத்தில் அலங்காரமாய் ஊர்ந்து கொண்டிருந்தது. வளர்பிறைக் காலமாதலால் வெளிச்சத்துக்கு குறைவில்லை. அடுத்தநாள் பௌர்ணமி. வீரப்ப அய்யனார் மலைக் கோயிலில் பௌர்ணமி பூசைக்கு ஏற்பாடுகள் ஆகிக் கொண்டிருந்தது. ஊரிலிருந்து மூன்று மைல்களுக்கு மேல் தொலைவிருந்தும் கூட்டம் குறைவில்லாமல் வந்து கொண்டிருக்கிறது. பகலில் மாந்தோப்பு காவலுக்கும், தோட்ட வேலைகளுக்குமாய் ஆட்கள் வருவதும் நித்ய கடமைகள். ராத்திரி போதில் காவல்காரர்கள் கூட தங்க மாட்டார்கள். இந்த நிலையில் யாரோ ஒரு சாமியார் ஆரம்பித்து வைத்த பௌர்ணமி வழிபாட்டுக்குப் பிறகு சினிமாவுக்குப் போவது போல் சனங்கள் இயல்பாக வர ஆரம்பித்திருந்தார்கள். ராத்திரியில்மலை இறங்கி வரும், மிளா, ஒத்தைக் கொம்பு, காட்டுப்பன்றி, எருமை, குள்ளமுயல் போன்ற ஜீவராசிகளுக்குத் தான் இடைஞ்சல். எப்படியோ முழு நிலாவின் புறப்பாட்டுக்கு விமோசனம் கிடைத்து விட்டது. இப்போதெல்லாம் பலரையும் சந்தோசித்த சந்திப்பில் நிலா சந்தோசப்படுகிறது.

“கதவச் சாத்தீரட்டுமா...” கைகளை விலாப் பகுதியோடு இறுக்கி குளிரை அடக்க முயன்றவளாய் மாயனின் சின்னம்மா மயில் கேட்டாள். பூதிப்புரத்திலிருந்து வந்திருந்தாள்.

“என்னமோ கழுத... இன்னிக்கி இம்புட்டுக் குளுருது அடச்சு விடு...” அக்காவின் உத்தரவுக்குப் பிறகும் கைகளை விடுவிக்காமல் உடலை இறுக்கியபடியே நடந்து போன மயிலு இடுப்புச் சொருகளிலிருந்த முந்தானையை உருவி முக்காடு போட்டுக் கொண்டு வாசலோரம் சாக்கடையில் அமைத்திருந்த கொல்லைப்படலுக்குள்

நுழைந்து ஒண்ணுக்குப் போனாள். கால் கழுவ தண்ணியைத் தொட பயமாய் இருந்தது. ஆனாலும் பழக்கப்பட்ட கை போனியை துழாவி எடுத்து சுத்தம் செய்தது. பாதத்திலும் தொடையிலும் உண்டான நீரின் குளிர்ச்சி உடம்பை வலிப்புக்காரனைப் போல கிடுகிடுக்க வைத்தது. பாவாடையால் அழுந்தத் துடைத்துக் கொண்டு, ரெட்டைக் கதவைத் தாழ் போட்டாள். இடது பக்கமிருந்த கதவு சரியாய்ப் பொருந்தாமல் விடைத்துக் கொண்டு விரல் கனத்துக்கு சந்து விழுந்தது. அமுக்கிப் பார்த்து முடியாமல் சடாரென அறைந்து தாப்பாள் போட வேண்டி வந்தது. அந்த சத்தம் இருட்டை அரட்டியது.

“ப்பா... ப்பிடிக்குள்ருது...”

“பச்சத் தண்ணிய வேற தொட்ருக்கீல்ல”

“சாப்பிடுறியா...” ஆத்தாக் கிழவி கேட்டது.

“சாப்புட்டுத்தே வந்தே...ன்... எங்க, எதாச்சும் ஒரெடத்துக்குப் போகணும்னாத்தே ஆயிரத்தெட்டு சோலி வந்து அமுக்கிப் புடுதுல்ல... அவசரமா ரெண்டுவா அள்ளிப் போட்டுட்டு வந்தே... என்னா சாப்பாடு...?”

அவள் நீட்டி முடிப்பதற்குள் கிழவி சாப்பாட்டுத் தட்டைக் கழுவி கேப்பக்களியை போட்டு வைத்தாள்.

“என்னாதூ... ஏது கேப்பமாவூ... அரச்சியா...” முந்தானையை மறுபடி இழுத்து இடுப்பில் சொருகிக் கொண்டு குத்துக்காலிட்டவாறு சாப்பாட்டுத் தட்டை தன் பக்கம் இழுத்துக் கொண்டாள்.

“ஆ..மா..! கேப்பய வாங்கி அத பண்டுதம் பாத்து அரைக்கத்தே நேரமிருக்கு... ந்தா... மலரு புருசெ மசால்ப் பொடி, மாவெல்லா விக்கிறார்ல.. அந்தாள்ட்டதே வாங்கிக்கறது. அப்பப்ப இருக்க காசக் குடுத்தம்னா.. வாங்கிக்கிடுவாரு... நல்ல மனுசெ...”

“ஆரு...? ஒரு செவல...! சைக்கிள்ளயே வருவாரே...”

“ஆமாமா... ஒங்கூருக்கும் வாராராம்ல...”

“இப்ப வாரதில்ல... எங்க.., வாங்குன எல்லா முண்டைகளும் மொங்காம் போடத்தேம் பாக்குறாளுக.. பாவம். வசூல் தோது இல்லன்னு நின்னுகிட்டாரு... என்னா கொழம்பு?..... கருவாடா...! ஒன்னியுமே காணாம்... மாமா முழுங்கிட்டாரா...” முழுசு முழுசாய்க் கிடந்த வெங்காயத்தை எடுத்து மென்றபடி கேட்டாள்.

“ம்.. அல்லாரும் சாப்ட்ட பெறகு வந்தா வெளையவா செய்யும்..?” மாயனின் அம்மா பருவதம் சொன்னது. மாயனின் அய்யா சித்திரம் பிள்ளை ஆட்டுரலோரமாய்க் குத்த வைத்து பீடிப்புகை ஊதிக் கொண்டிருந்தார். காலடியில் வெள்ளாட்டங் குட்டி ஒன்று படுத்துக் கிடந்தது.

“போன மாசம்னு நெனைக்கிறேன்... இப்பிடித்தே வெள்ளிக் கெழமயா... இல்ல இல்ல சனிக்கெழம... வெரதத்த முடிச்சிட்டு துணிய

தொவச்சுக்கிட்டு இருந்தே. வெளிய சைக்கிளு நிப்பாட்ற சத்தங் கேட்டுச்சு. ஆர்ரா.. தவால்கார்ராக்கும்னு பாத்தா... இவெ.., கள்ளக் கொறப்பயலா சிரிச்சுக்கிட்டே வந்தியா..ன். வீட்ல ஒரு சனம் இல்ல.. வந்தவெ மடமடன்னு உள்ள நொழஞ்சு டேப்ரிக்காடப் போட்டயான். சேர இழுத்துப்போட்டு சரிக்கிச்சரி தாளம் போட ஆரம்பிச்சான்...

‘என்னாடா...’ன்னு கேட்டா, ‘ஒண்ணுமில்ல மேற்க வந்தே... அப்பிடியே இங்குட்டு நல்லுகுண்டுக் கரடு வழியா பாத இருக்குன்னாக... வந்தே’ன்னா...

“யேன்.. மரக்காமல மேல ஏறி வாடான்னு சொல்ல வேண்டிதான... களவானிப்பய... பாத கண்டுபுடிச்சானாம்...” பீடியை அணைத்துவிட்டு ஒடித்துப் போட்டபடி சொன்னார் சித்திரம்பிள்ளை.

“நானுங் கேள்விப்பட்டுருக்கே... அந்த வழியா அம்மூரு பொம் பளையாளுக வேலைக்குப் போவாகளாம்ல... என்னா, ஆத்தக் கடக்கணும் போல...”

“ஆமாமா... ரெண்டு மூணு தோப்பயுங் கடக்கணும்...”

“ஒக்காந்த ஒடனே.. ‘சித்தி சோறு போடு’ன்னியா... பரவால்லடா சாமி நல்ல நேரத்துக்குத்தே வந்திருக்க... ரசங் கொழம்பு எல்லாம் இருக்கப்ப வந்தியேடா அய்யா’ன்னு சோத்தப் போட்டா... கருவாடு இல்லியாங்கிறான்...”

“வெளக்கமாத்தக் கொண்டிப் போட வேண்டிதான” அம்மா சொன்னது. சாப்பிடும் போதெல்லாம் அவனோடு நெதமும் சண்டைதான். இருப்பதைச் சாப்பிட மாட்டான் இல்லாததைக் கேட்பதே அவனுக்கு வளமயாய்ப் போச்சு.

கிழவிக்கு பேரனின் லீலை புளகாங்கிதத்தைக் கொடுத்தது. சின்ன மகளுக்கு இன்னும் கொஞ்சம் கருவாட்டுக் குழம்பை ஊத்திவிட்டு நாடியில் கைஊன்றிக் கொண்டு கேட்டாள். தண்டட்டி இல்லாத மூளிக்காது ஊசலாடிக் கொண்டிருந்தது. “அப்பறம்.”

“அப்பறமென்னா...மெனக்கிட்டு கடைல போயி ரெண்டு உப்புக் கருவாடு வாங்கிட்ட வந்து பொரிச்சுக் குடுத்தே...”

“திங்காட்டிப் போடான்னு பத்திவிட வேண்டிதான அய்யாவுக்கு சவரட்டனையா செஞ்சு வெக்காட்டி அளக்குறது நின்னு போகப் போகுது...” சித்திரம் பிள்ளை பொம்பளைகளுக்கு இணையாகப் பேசினார்.

“ம்... எம்புள்ளைல... நா வளத்த நாயி... அதுக்கப்பறந்தே எனக்கே நிம்மதிப் பட்டுச்சு...” என்று முடித்த மயிலு “என்னாக்கா களி குட்டி குட்டியா இருக்கு கூழுகரச்சுக் கிண்டலியா...” என்றாள்.

“கிண்டுனதுதே... எங்க., ஒரு நெனப்புலயா இருக்க முடியுது...” முந்தானையை கண்களில் ஒத்திக் கொண்டு பருவதம் சொன்னார். கண்ணீல் நீர் தளும்பியது. “எங்க இருக்கானோ... என்ன பாடுவடுறா னோ... இதெல்லா ஆருகிட்டப் படிச்சான்னு தெரியலயே.. ஆரு குடுத்த

வாக்கோ... எந்த செென்மத்துப் பாவமோ.. பிள்ளைய காங்க விடாம சுத்துது...”

அக்காளின் கண்ணீரால் மயிலுக்கும் கண்கள் பணித்தது. கழுவிய கையோடு அக்காவிடம் போனாள். “யேன் அழுவுற... எதோ... பொல்லாத நேரம்... எல்லாமே நல்லவிதமாவே முடியும்... எனக்கு நம்பிக்க இருக்குக்கா...”

‘‘அப்பிடியா பேசுறாளுக.. என்னமோ நாங்களே அவன வழியனுப்பிச்சு விட்ட மாதிரில்ல... ஊரே வாயாறுது. நா... ஊருக்குப் பயப்படறதா... இல்ல ஒளிஞ்சிருக்க புள்ளயத் தேடுவனா....!”

“பேச மாட்டாங்களா... ஓம்புள்ள செஞ்ச நாயத்துக்கு இத்தோட யாச்சும் விட்டாங்களே... நல்லவேள வேத்து சாதியில கைவக்கெல... அந்த அளவுக்கு ஆர்செஞ்ச புண்ணிய மோன்னுட்டுப் போகணும்.. இல்லாட்டி இந்நேரம் குடும்பமே கம்பி எண்ணி... களி தின்னு கிட்டிருக்கும்..!” சித்திரம் பிள்ளை தீராத ஆத்திரத்தில் பொரிந்து தள்ளினார்.

“என்னா மாமா... நீங்களும் இப்படிப் பேசறீங்க... அவெ நம்ம புள்ள மாமா... அவனுக்கு தம்புத்தில இதச் செஞ்சிருப்பான்னா நெனைக் கிறீக...” மயிலு, மாயன் மேல் வைத்திருந்த திடமான நம்பிக்கையின் வெளிப்பாடாய் பேசினாள்.

“தம் புத்தியல செய்யாம... ஊர்லபோயி கடெ வாங்கிட்டு வந்து செய்றானாக்கும்..! அவெ ஆடுறப்பவே தெரியும் ஓர்த்தர் பேச்சையும் கேக்கறதில்ல. என்னா சொன்னாலும் எடுத்தெறிஞ்சு பேசப் பழகிட்டான்... ந்தா, இப்ப கண்ணக் கசக்கிகிட்டு மூக்கச் சீந்திக்கிட்டு கெடக்கால்ல... அவன ஒரு வார்த்த சொல்லப் பொறுக்க மாட்டா... இப்ப என்னாச்சு... படு... பட்டு மாயீ...!” வம்மம் தீந்தது போல பேசித் தீர்த்தார் சித்திரம்பிள்ளை.

“நா... ஆருக்குத்தே பேசட்டும்... அங்குட்டுப் பேசுனா... வீட்டுக்காரர விட்டுக் குடுக்காம பேசறயேன்னு அவெ... இங்குட்டுப் பேசுனா... இவரு... நா என்னாதே செய்ய... ஆரக் கொற சொல்ல...” சின்னப்பிள்ளை போல அழுதது.

“ஆரயும் குத்தஞ் சொல்லக் குடாதும்மா...” என்ற கிழவி, “இது கலிகாலம்ல... பொட்டச்சிக எவளாச்சும் ஒடுக்கஞ்சலுக்கமா சேல தாவணி போட்டு, மாராப்பு மறச்சுகிட்டு திரிறாள்களான்னு பாரு... வெங்கலாவுக்கு காவு குடுத்த மாதிரி திங்கு திங்குன்னுதே அலயிறாளுக... இதுல ஆம்பளப் பிள்ளையப் பெத்த நாமதே கொஞ்சஞ் சாக்ரதயா இருக்கோணும். அப்பிடியும் அம்ம வம்சத்தில இன்ன நாள் வரைக்கும் இப்பிடியெல்லா கண்டதுண்டா... இல்ல கேட்டதுதா உண்டா... என்னமோ அவெங் காலம்...” கிழவி நீட்டி முழக்கியபடி காலிச்சட்டி பானைகளை எடுத்துக் கொண்டு உள்ளே போனது.

RangaRakes tamilnavarasam.com

“சரி.. சரி... போனத விடுங்க... ஏம்மாமா.. லெக்க கண்டுபிடிச் சிட்டா களாமே... நீங்க எதும் போய்ப் பாத்துட்டு வந்தீகளா...” மயில் குரலை கிசுகிசுப்பாக்கி கேட்டாள்.

“மயலூர... இப்ப நாம என்னா செஞ்சாலும் தப்பாத்தே வரும்... ஏற்கனவே நாந்தே காரேத்தி அனுப்பிச்சு விட்டதா நெருக்குறாங்க... இது வேறயா... எதோ பழைய வத்தலகுண்டுலதே இருக்கானாம். எஞ் சின்னத் தாத்தெ மருமகெங்கிட்ட போயி இருக்கானாம். இந்தக் கெளையெல்லா எங்குட்டுத்தேந் தேடி புடிச்சானோ... தெரியல...”

“பாத்துட்டு வந்தீகளான்னு கேட்டே...”

“நிய்யுங் நொக்கா மாதரி அறிவு கெட்ட தனமாத்தே பேசுற... புள்ளயக் களவு குடுத்தவெ பேயா... ஆள்படை அம்போட... எங்குட்றா சிக்குவான்னு அலயுறான்... இதுல நிய்யுந் நானும் போயி, ராசாவப் பாத்து கொஞ்சிப் பேசிட்டு வந்தம்னா அப்பிடித்தே இருக்கும். இருக்க வெறில ஆணு பொண்ணு அத்தன வேரையும் கைலாசத்துக்குத் தே அனுப்புவானுங்க...”

“அவனுக்கு எப்பிடியெல்லா கலியாணம் முடிச்சுப் பாக்கணும்னு நெனச்சிருந்தே...! சித்தி சித்தப்பா, அத்த மாமான்னு ஆயிரஞ் சனமிருந்து வீரபாண்டி திருவிழாவா நடக்க வேண்டிய நாள்ல இப்பிடி பொலம்ப வச்சிட்டானே...” பருவதம் ஓயவில்லை.

“ந்தா பொலம்பல நிறுத்து... நமக்கு நம்ம புள்ள மாதிரி அவகளுக்கும் ஆச இருக்கும். என்னமோ வெறுங்கழுத, நிய்யே இம்புட்டு அழுதீன்னா... ஆயிரம் லட்சம்னு வச்சிருந்தவக என்னா பாட்டுப் பாடுவாக... அதியும் நெனைக்கணும்ல”

தடதடவென கதவு தட்டும் சத்தம் கேட்டது. அத்தனை பேருக்கும் திகிலடித்தது.

“ஆரூ...” மயில்தான் கேட்டாள்.

பருவதம் அழுத கண்ணீர் துடைத்து புருசனை ஏவினாள். “பாருங்க...”

அடுக்களையிலிருந்து கிழவியும் எட்டிப் பார்த்தாள்.

சித்திரம் பிள்ளை அழுத்திய அச்சத்தோடு மெல்ல நடந்து வந்து கதவை அழுத்திக் கொண்டு தாப்பாளை நீக்கினார்.

படாரென கதவைத் தள்ளிக் கொண்டு நாட்டாமை உள்ளே நுழைந்தார்.

# 5

கருஞ்சிறுத்தைக் கூட்டம் போல வானில் மேகங்கள் அணிவகுந்து வந்தன. வாயைப் பிளந்தும், கால்கள் நீட்டிய படியும் முன்னேறிக் கொண்டிருந்தன. பெருத்த கடல் ஆமையின் தழுவலிலிருந்து விடுபட்டு வந்த நிலா, கருஞ்சிறுத்தைக் கூட்டம் பார்த்து திகைத்தது. கடலாமை கொஞ்சங் கொஞ்சமாய் விரிந்து சிதைய, சிறுத்தைக் கூட்டத்தின் வாயில் நிலா விழுந்தது.

வீருசின்னுவின் பிடி தளர்ந்து, சோனைமுத்து எழுந்தான். வேஷ்டியை உதறிக் கட்டிக் கொண்டு சட்டையை எடுத்து அணிந்து கொண்டான். பூட்டிய கதவருகில் இருந்த தண்ணீர் வாளியில் உடம்புச் சுத்தம் செய்து முகம் கழுவிக் கொண்டான். இன்னமும் எழுந்திராமலிருந்த வீருசின்னுவின் அருகில் வந்து செருமினான். கண் மலர்த்திய அவள் தன் கைகளைக் கொடுத்து தூக்கச் சொன்னாள். அவன் தொட்டதும் எழுந்து முகமலம்பி வந்தாள். இடையில் ரெண் டொரு முத்தமும் தந்தாள். அதில் கிறங்கிப் போன சோனைமுத்து அங்கிருந்த இரும்புச் சேரில் உட்கார்ந்தான். கலைந்த தலையை திருத்தி கொண்டை போட்டுக் கொண்ட வீரு, வாசல் கதவைத் திறந்தாள்.

கருஞ்சிறுத்தைகளை சிதைத்து விட்டு பெருமித வெளியில் மிதந்த நிலவு, இவளின் முகத்தில் தண்ணென ஒளிக் கிரணத்தைப் பாய்ச்சிக் குளிர்வித்தது. உடம்பு சிலிர்க்க ‘ப்பா’ என முணுமுணுத்தாள். தெரு முழுக்க பாலாபிசேகம் செய்தது போல வெளேரென நிலவொளி பாய்ந்து கிடந்தது. ராத்திரியில் யாரும் அறியாமல் கட்டுக்கயிறு அவிழ்ந்த பசுங்கன்று, தாய்மடிப் பாலை மாந்தி வயிறு புடைத்து மயங்கி விழுந்தாற் போல பீச்சியடித்த வெள்ளை நிலவின் வெளிச்ச சுகத்தில் உயிர் ராசிகள் அத்தனையும் உறைந்து கிடந்தன.

வீருசின்னுவும் உள்ளே போகப் பிரியமில்லாமல் குளிர்ந்த நிலையில் நெஞ்சு பூரித்து நின்றாள். நேரமாகிப் போனதை உணர்ந்து வெளியே வந்த சோனைமுத்து நிலா வெளிச்சத்தில் கல் சிலை போல நின்றவளின் இடுப்பைத் தொட்டு சேர்த்தணைத்தான். சில்லென்றிருந்தது அவளது வயிறு.

“என்னா மூஞ்சீ...!” என்று சிணுங்கியபடி திரும்பியவள் அவனது நெற்றியில் முட்டினாள்.

“நேரமாச்சு...” மறுபடி இறுக்கினான்.

RangaRakes tamilnavarasam.com

“க்கும்..” அழுத்தத்திற்கு ஒலி எழுப்பியவள், அவனது சட்டைப் பைக்குள் கைவிட்டாள். காலி செய்தாள். பத்து ரூபாய்த்தாள் ஒன்றை அவன் கண்ணில் காட்டி பைக்குள் போட்டாள்.

“போதுமா...” என கன்னத்தில் முத்தமிட்டாள்.

“எனக்குப் பத்தாது... ஒனக்கு...?”

“எனக்கெல்லா இன்னிக்கிப் போதும்...” என்று தலையை ஆட்டி அழகு காட்டியவள், “எப்ப பாரு டவுள் மீனிங் பேச்சுதே...” என்றபடி தன்னை விடுவித்துக் கொண்டாள்.

“சாப்புட்டுப் போகச் சொல்லு...” ரெண்டுபேரும் திடுக்கிடும்படியாக உரசிக் கொண்டு வீட்டுக்குள் போனான் பன்னீர். வீருசின்னுவின் உடன்பிறப்பு. கட்டையான வளத்தியும் உருளை வடிவ உடலமைப்பும் அவன் விசேசம். தலையில் முடி தூர்ந்து போயிருக்கும் அது அவனுக்கு அடையாளம்.

“உள்ள வாங்க...” சோனைமுத்துவின் கைபிடித்து மறுபடி உள்ளே அழைத்துப் போனாள்.” இப்பிடித்தான பெசாசு மாதிரி பொசுக்குனு வருவ... எத்தன தடவ சொன்னாலும் புத்தில ஏறாது...” பன்னீரைக் கண்டித்தாள்.

“ஒரு விசயமாத்தேஞ் சொல்றே...” யாரிடமோ பேசுவது போலச் சொன்னான் பன்னீர். கையில் காப்பிக் கடைப் பொட்டலம் தொங்கிக் கொண்டிருந்தது. மறுபடி சோனைமுத்து இரும்புச் சேரில் அமர, தெக்கு மூலையில் கிடந்த மரஸ்டூலை எடுத்து வைத்து அதன்மேல். கடை பார்சலை பிரித்து வைத்தாள் வீரு., “சாப்பிடுங்க...”

“எனக்கெதுக்கு... வீட்ல போய்ச் சாப்புட்டுக்கறேன்...” மறுத்தான்.

“யே... இது வீடாத் தெரியலியா...”

“நீ சாப்புடு வீட்ல எதுனாச்சும் எடுத்து வச்சிருப்பாக..”

“எங்க வீட்லயும் இருக்கு... இது ஒங்களுக்காக வாங்கிட்டு வந்தது. நீங்கதா இங்கல்லா தண்ணி வென்னி பொழங்க மாட்டீகள்ல... சாமி கண்ணக்குத்தீரும்... தீட்டு...” என்றவள், “நா குடிக்கிற தண்ணியச் சொன்னே” என்று சிரித்தபடி தண்ணீர் பாட்டிலைக் கொண்டு வந்தாள். “இது ஒங்க தெருவுத் தண்ணிதே...”

“நீ ரெம்பத்தே இம்ச பண்ற...” என்று எச்சரித்தவன், எப்போ இவனை அனுப்பி வச்சா, என்ன உத்தரவு போட்டாள் என்று யோசிக்கையில், தான் வருகிறபோது பன்னீர் வழக்கம் போல வெளித் திண்ணையில் படுத்துக் கிடந்தான்.

“என்னா பன்னீரு... எங்கியும் போவலியா...” என எழுப்பினான் சோனை.

“இப்பதேங் வந்தேன்...” என்று சடாரென எழுந்தான்.

“ஒன்னியப் பாக்கணுந்தே வந்தே...” வாசலிலேயே தயங்கி நின்றான்.

“சரிங்க” என்றவன். “உள்ள வீரு சினு இருக்குதுங்க...” என்றான். முட்டிக் கொண்டிருந்த அலை கரை உடைப்புக்கு தயாராவது போல

தாகமெடுத்தது... தயங்கினான். “தண்ணி கொண்டு வரச் சொல்லு பன்னீரு...”

“உள்ள போங்க... சின்னு இருக்கு”

“அப்புடியா...” என்றவன், சட்டைப் பைக்குள் கைவிட்டு ஒருதாளை எடுத்து நீட்டினான்.

‘‘ஹ்ஹ்... இருங்க... இந்தா வந்திர்ரே...’’ என வெளியே கிளம்பினான்.

“சீக்கிரமா வந்துரு ஊங்கிட்டத்தே ஒரு முக்கியமான விசயம் பேசணும்...”

இவ்வளவுதான். ஒருவேளை தான் கொடுத்த பணத்திற்கு அவனாக பார்சலை வாங்கி வந்து விட்டானா... மூணு புரோட்டாவும் ஒரு ஆம்லேட்டும் இருந்தது.

“கடைல பெரிய தகராறுல்ல..” வழக்கம் போல தனது பாணியில் தலையை ஒரு வெட்டு வெட்டிப் பேசினான்.

“ரோட்டுக் கடைல என்னிக்கி தகராறு இல்லாம இருந்திச்சு... பிராந்திக்கடய ஊருக்குள்ள போட்டு என்னிக்கு ஏவாரம் பாக்க ஆரம்பிச்சாங்களோ, அப்பவே வெனதான..” வீருசின்னு தண்ணீர் பாட்டிலின் மூடியை திறந்து வைத்து, பொட்டலத்தைச் சுற்றியிருந்த சணலை உருவி தூர எறிந்து விட்டாள்.

சோனைமுத்து எதுவும் பேசாமல் புரோட்டாவைக் கிழித்துப் போட்டு சால்னாவை ஊற்றி ஊற விட்டான்.

“என்னாண்டு கேக்க மாட்டீகளா...” பன்னீர்.

“ஆரு... என்னயவா கேட்ட...” முதல் வில்லையை வாய்க்குள் திணித்தபடி கேட்டான் சோனை.

“உங்க பேச்சத்தான பேசுனாங்க... கடைல...”

“எம்பேச்சா...” இறங்கிய புரோட்டா தொண்டையை அடைத்தது. தண்ணீரைக் குடித்து உள்ளே இறக்கினான். வீருசின்னு வோடு வைத்திருக்கும் போக்குவரத்தை ரெம்ப ரகசியமாக வைத்திருந்தானே... இதுவரைக்கும் கசியாமல்தான் இருக்கிறது என நம்பி இருந்தான். காப்பிக் கடை வரைக்கும் வந்து விட்டதா... கலக்கம் வயிற்றில் கடபுடத்தது. அடுத்து வீட்டுக்குத் தெரிஞ்சிடுமே...

“ஒன்னய ஆரு அங்க போய்ப் பேசச் சொன்னது...” வீருசின்னு, சோனைமுத்துவுக்கு ஆதரவாகப் பேசினாள்.

“அய்யோ சாமி... நா எதும் பேசல வீரு... அவங்கதே ரப்பா பேசிட்டுத் திரிஞ்சாங்க...”

“ஆரு...” சோனைமுத்து கேட்டான்.

“ஆர்னு தெரில... அயலூர்க்கார சாட தெரிஞ்ச்சு...” கடக்கார்ருதே அம்மளக் கூப்புட்டு, பார்ரா பன்னீரு ராங்கா பேசுறாங்கென்னு ஒப்புச்சாரு... அப்பறந்தே... ஆரப்பா நீ ன்னு அமட்டுனே... டக்குனு அம்ம பெரியய்யா பேரச் சொன்னானுக...” கதை சொல்வது போலச் சொன்னான்.

“பெரியய்யான்னா...”

“நம்ம பெரீவரு... ஒங்கய்யா வத்தே...”

“எங்கய்யா பேரையா... என்னன்னு...” அதிர்ச்சியாய் இருந்தது.

“அதே.. அம்ம வீட்டுக்கு புதுசா வந்துருக்காங்கள்ல... அவுகதே... ஓடிவந்தவங்க...”

“ஆரு... மாயனா...”

“அவங்களப் பத்தித்தே இழுத்துப் பேசினாங்கெ...” ரெம்ப சாவதானமாக பன்னீர் சொன்னதும், சடக்கென நிமிர்ந்து உட்கார்ந்தான் சோனைமுத்து.

“அதப் பத்தித்தா பேசணும்னு ஒன்னய தேடி வந்தேன் ப்பா...” என்ற சோனை, “வீரு இத எடுத்துக்க... எனக்குப் போதும்...” என்றபடி புரோட்டாவை ஒதுக்கினான்.

“தொடவே இல்ல... இன்னங் கொஞ்சம் எடுத்துக்கங்க”

“வேண்டாம்...” என்றவன், மறுபடி ஒரு கை அள்ளிச் சாப்பிட்டு விரலைச் சப்பிக் கொண்டே பேசலானான்.

“வந்தவெ எப்பிடி ருக்கானுக...”

“எப்புடின்னா...”

“வலுவான வங்களா...”

“புரில...”

தன்னுடைய பேச்சு தெளிவில்லையா, அல்லது பன்னீருக்குப் பத்தலியா... விளங்கவில்லை. எப்படியோ விரிவாகப் பேச வேண்டி இருக்கு.. கையைக் கழுவ வேண்டுமா என யோசித்தான். விரல்கள் சுத்தமாகத் தானிந்தன. ஆயினும் எச்சில் மணத்தது. புரோட்டா வைத்த ஸ்டூல் இன்னும் அகற்றப்படாமலிருந்தது. “இத எடுத்தற வேண்டிதான...!” அதட்டியபடி கைகழுவி வந்தவன். பழையபடி சேரில் அமர்ந்தான்.

சன்னலில் நிலாவெளிச்சம் குறைந்து இருட்டு கூடி இருந்தது. மேகம் மறைத்திருக்க வேண்டும். உள் வீட்டில் எதோ தடதடவென உருட்டும் சத்தம் கேட்டது. விளக்குமாறை திருப்பிப் பிடித்தபடி வீரு வேகமாய் உள்ளே போனாள். “எலிச் சனியெந் தொல்ல தாங்க முடிலப்பா...”

“ஒக்காரு.. சொல்றேன்” என்று, மாயன் வந்து சேர்ந்த விபரத்தைச் சொன்னான். துப்பு கண்டுபிடித்து தேடிவந்தவர்கள் பற்றியும், வசந்தியின் அச்சம் பற்றியும் விவரித்தான்.

“ஆக... போக்குக் காட்டி... போற மாதரி போயிருக்காக! ” புரிந்து கொண்டவன் போலக் கேட்டான் பன்னீர்.

“அப்பிடித்தே நெனைக்கிறேன்..”

“நெசந்தா.. துப்புக் கெடச்சப்பறம் விட்டுட்டுப் போவாங்களா... அதே காவலுக்கு ஆள நேமிச்சுட்டுப் போயிருக்காங்க...”

“அதத்தேங்கேட்டே.... நேமிச்ச ஆள் எப்பிடின்னு...!”

“கேட்டாங்கெ... ஆய் ஊய்னு பேசவும் எனக்கு அவெங்க பேச்சு

ஒப்பல... மானாங்கனியா சம்பந்தமில்லாம கேக்கறாங்கெ... கோவம் வந்திருச்சு... அப்பபடி இங்க ஆருமே இல்லடான்டுதே சொன்னே...”

“ச்சேரி... இப்ப என்னா பண்ணலாம்.

“சொல்ங்க...”

“பெரச்சன முத்திக்கிரிச்சு... காலவிட்ட ஆழங் கண்டுகிட்டு போய்ட்டாங்க... நாளக்கி... இல்ல மறுநாளு எப்பிடியும் படை எடுத்துருவானுக...”

“அதெப்பிடிச் சொல்றீக... ஒரு சாதிக்காரவுக.. ரெண்டு பெரியாள்கள வச்சுப் பேசி தீத்துக்கற வேண்டிதான...”

“அப்பிடித் தெரியலியே... அப்பறமெதுக்கு வேவு பாக்க ஆளவிட்ருக் காங்கே... பெரிய வண்டெங்க... தம் புள்ளய மட்டும் பிரிச்சுக் கூட்டிப் போகணும்னுல பேசுனாங்கெ... நாந்தே தப்புப் பண்ணிட்டே... வீட்ட காமிச்சிருக்கக் குடாது... சங்கட்டமா இருக்கு...”

“பணக்காரவகளா...?”

“ஆ...மா.. டாட்டா பிர்லா..! ரேசன் கடைல அரிசிய வாங்கி அரச்சு, சீமென்ன வாங்கி லாரிக்கு சப்ள செய்றதுல நாலஞ்சு வீடு கட்டி வாடகைக்கு விட்ருக்காகளாம். மாப்ளைக ஒரு நாளைக்கு மாட்னாங் கென்னா.. இருக்க விட்ட வித்தாலும் காணாது. புள்ள குட்டிய அடகு வச்சுத்தே அவராதம் கட்டணும்... என்னமோ துள்ளூறாங்கெ...”

“வந்தவங்க கிட்டயே காசு வெளாண்டுச்சு எதோ ஒரு பெரிய அய்டியாவுலதே வந்திருப்பாங்க போல...”

“அதத்தேஞ் சொல்றே... நாம கொஞ்சம் சுதார்ப்பா இருக்கலாம்னு. ஒரு நாலஞ்சு பேரக் கைவசம் வச்சுக்கிட்டா நல்லதுன்னு நெனைக் கிறேன்.. நீ தே அய்டியா பண்ணி நிப்பாட்டிக்கணும்... புரிஞ்சுதா...”

“அது ஒண்ணும் பெரிசில்ல இப்பவே ரெடி பண்ணீரலாம்... வீட்டுப் பக்கம் திரிய விடணுமா.. வந்தவங்கெள ஆப் பண்ணனுமா...”

“ரெண்டுந்தே...” வீருசின்னு சொன்னது சரியாகப்பட்டது.

“செலவுக்கு வேணுமே...!”

“வாங்கிக்கலாம்.”

தலையைச் சொறிந்தான். “கண்ணுல காட்டணும்... சரக்கேத்தி விடணும்...”

“வீட்டுக்குப் போய்ட்டு வந்துரட்டா...”

கிளம்பியவனை ‘ஓர் நிம்சம்’ என்று நிறுத்திய வீரு, வெடுக்கென ஒரு தலைமடியைப் பிடுங்கி அவனது சுண்டு விரலில் சுற்றி விட்டாள். “வீட்ல போயி உருவிப் போட்ருங்க... பாத்து...” வழி அனுப்பினாள். ‘ராத்திரி பொழக்கத்தோடு வெளியே போகக் கூடாதாம். எடவழிச் செத்ததுக வழி மறிக்குமாம்...’ அவளது ஐதீகம்.

கதவை திறந்து வெளியில் வர, நிலாவைக் காணவில்லை. மேகம் ஒளித்து வைத்திருந்தது.

RangaRakes tamilnavarasam.com

# 6

காமாட்சி பவனத்திலிருந்து வீரபத்திரனும் சின்னராசுவும் தனியே வந்தார்கள். குளத்துக்குப் போய் விட்டு வரலாமென வீரபத்திரன் சின்னராசுவை இழுத்து வந்தான்.

ஊருக்கு மேற்கில் இருந்தது சின்ன குளம். நன்றாக ஆழப்படுத்தி சுற்றிலும் கரையை அகலப்படுத்தி மாட்டு வண்டி போகும்படி அமைத்திருந்தார்கள். மேல்ப் பக்கம் மடை ஏற்படுத்தி கீழே ரோட்டகலத்திற்கு கல்பாவி இருந்தார்கள். தோட்டம் துரவுகளுக்குப் போகிற வண்டி வாகனங்கள் மிதித்து நகட்டியதில் கல் வழு வழுப்பேறி இருந்தது. மலையிலிருந்து குளத்துக்கு தண்ணீர் வரும் ஓடை சம்சாரிகளின் பிரியத்தால் வாய்க்காலாய் குறுகிப் போயிருந்தது. வடக்கிலும் மேற்கிலும் செங்கல் சூளை. ரெண்டு சூளையிலும் கல் அடுக்கி கனன்று கொண்டிருந்தது.

இருவரும் அல்லா கோயில் வழியாக இறங்கி எலிமெண்ட்ரிஸ்கூலை கடந்து, சங்கிலி கருப்பணசாமி கோயில் பக்கமாக வந்தனர். குளக்கரைக்கு கீழே தார்ச் சாலை ஓரத்திலேயே சிலர் 'குத்த' வைத்திருந்தனர். அது மேற்கே வீரப்பய்யனார் கோவிலுக்குப் போகிற ரோடு. ஒவ்வொருத்தர் வாயிலும் சிகரட் கங்குகள் மின்மினிப் பூச்சியாய் ஒளிர்ந்து கொண்டிருந்தன. நிலா வெளிச்சம் அவர்களுக்கு இடைஞ்சலாய் இருந்தது.

''நாமளும் கீழேயே ஒக்காந்துருவம்...'' கால் கடுத்தது சின்னராசுக்கு.

“இம்புட்டுத் தொலவு நடந்தாச்சு. ஏறி நின்னா கொளம். இதுல சோம்பேறித்தனமா... அதும் நடைபாதைல ஒக்காராம் பாரு அவிங்க பொச்ச... பன்னிய விட்டுத்தே கறும்ப விடணும்... காலைல தோட்டந் தொரவுக்கு மனுசெ போக முடியுதா... ரோடு பூராம் முடிச்சு முடிச்சா... குமிச்சு வச்சிர்ரானுக... கலிங்கம் (மடை) வரையிலயும் மூக்கப் பொத் திட்டுத் தே போக வேண்டிருக்கு... நாகரீகங் கூடக்கூட மனுசனுக்கு சோம்பேறித்தனம் அதிகமாகி அக்குருமம் பெருகுது...” வீரபத்திரன் சத்தமாகவே சொன்னான். உரைக்கட்டுமென்று...

மறுபேச்சில்லாமல் ராசு கரையில் ஏறினான். கரை செங்குத்தாய் ஏறியது. காலை அகட்டி அகட்டி பிடிமானத்தோடு ஏறி வேண்டி வந்தது.

"ஆத்தரம் அவசரம்னா... இம்புட்டு செரமப்பட்டு மேல ஏற முடிமா..."

"பகல்ல ஆத்தரம் அவசரம் வராதா.. அப்பமட்டும் எப்பிடி ஒழுக்கமா மேல ஏறி எறங்குறீக..."

"அது..."

"ம்... அதேன்.. பகல்ல நாணஸ்தே... ராத்திரி மட்டும் குடும்பஸ்தே... போடாங்..." சிரித்தான் வீரபத்ரன்.

கரையேறியதும் குளம் அழகாய் ஜொலித்தது. சர்க்கஸ் கூடாரத்தின் மேலேயிருந்து வருகிற ஒளிப் பிரவாகமாய் நிலா வெளிச்சம் பரவி இருந்தது. ஊரையே படம் போட்டுக் காட்டுவது போல தென்னை மரங்களின் பின்னணியில் வீடுகள் தீப்பெட்டி தீப்பெட்டியாய்த் தெரிந்தன. செங்கல் சூளையின் புகை மேகம் போல தீப்பொறி பறக்க நிலாவை நோக்கிப் பயணித்தது. மேற்கு நோக்கிச் செல்லும் தார் ரோடும் புதுமையாய் வெளிச்சம் தடவித் தெரிந்தது. குளத்தில் தண்ணீர் பாம்புகள் தலை உயர்த்தி நீந்திக் கொண்டிருக்க, தவளை களின் ஹூங்காரம் காதைத் துளைத்தது.

குளத்துக்குள் பாதி இறங்கி, கரைச்சரிவில் குத்த வைத்தனர். கரை மண் பொரு பொருவென பாதத்தைச் சரித்தது. சின்னராசு சரிவில் வளர்ந்திருந்த ஒரு குத்துச் செடியின் அடிப் பகுதியை இறுகப் பிடித்துக் கொண்டான்.

"எல்லாச் செடியும் பெலமா இருக்காது ராசு... தம்பெலத்துல ஒக்காரு... இல்ல... பெறவாக்கில உருண்டு தண்ணிக்குள்ள நீச்சலடிக்க வேண்டிதே..." வீரபத்திரன் எச்சரித்தான்.

"ச்சே... எல்லாத்தியும் கண்டுக்கிறானே..." என்று எரிச்சலடைந்த ராசு, "நாம இம்புட்டு தூரம் மெனக்கிட்டு வாரம்.. ஒங்க நாட்டாம செஞ்ச கூத்து தெரிமா..." என்று சொல்லும்போதே சொல்லவிடாமல் சிரிப்பு மறித்தது.

வீரபத்திரன் சிரிக்கவில்லை. "அதேன் சாதியே நாறிக் கெடக்கு..." என்றான்.

"ஏன் வீரபத்ரா.. உம்மயச் சொல்லணும்...! காமாட்சியாத்தா சொல்றதுல ஒனக்கு நாயமாப்படுதா...?"

"எது...?"

"இல்லப்பா... என்னமோ நடந்திருச்சு... தப்புதே. அதமுன்னக் கூட்டியே தடுத்திருந்தா சரி... இப்ப இம்புட்டு நாளாயிருச்சு... இத கமுக்கமாப் பேசி... அட கலியாணத்தக் கூட பண்ணி வச்சா... என்னா... தப்பா... ஒரே சாதி தானப்பா."

"ஒரே சாதி தாப்பா... ஒத்த காசுக் காரனா..."

"அப்ப காசிருந்தா சாதி பாக்க வேணாங்கற...

"ரெண்டுந்தே வேணும்... காசு இருந்தா.. சாதி கூட மாத்திக் கலாம்..."

RangaRakes tamilnavarasam.com

‘‘சாதி மாத்தறதா.. மதந்தே மாற முடியும்.. சாதி மாற முடியுமா...”

“அந்தக்கா மேலயும் தப்பு இருக்கு...

“எப்பிடி....”

“ஆமா... வேல பாக்குறவன வேலத் தளத்தோட அனுப்பிச்சு விட்றனும்... வீட்டுக்குள்ள நொழைய விட்டு, வெவகாரமாய்ப் போச்சேன்னா.. ஆகத்தேஞ் செய்யும்.

“அப்ப கட்டி வச்சுரணுங்கறயா....

“சொல்றத புரியாமப் பேசக்குடாது... இம்புட்டு பேசறீல்ல... ஒவ்வீட்ல ஒந் தகுதிக்கு கொறஞ்சவனுக்கு பொண்ணு குடுப்பியா... மேம்பட்டவனுக்கு குடுப்பியா...?”

“வசதியா இருக்கத்தே பிரியப்படுவெ...”

“அப்பறமென்னா... சாதி... மயிரூ...”

“அப்பன்ன... சாதின்னு வந்தா... காசுதே மொதல்ல நிக்கிம்... சாதி வேற காசு வேற...” குழம்பினான் ராசு...

“எந்த சாதிக்காரனையும் எடுத்துக்க... சொந்த சாதிங்கறதுக்காக கோமணாண்டி கூட சம்பந்தம் வச்சுக்க மாட்டான். ஏன்னா.. அது கௌரவப் பிரச்சன...”

“சரி அத விடு... கூட்டிப் போயி இத்தன நாளு வச்சிருக்கவெ... வகுத்த நெப்பி சோலிய முடிச்சிருப்பான்ல... அப்ப ஒங்கவுரவம் கவுந்து போச்சுல்ல...”

“கூப்புட்டுப் போறவெ சூடஞ்சாம்புராணி போட்டு கும்புட்டுக்கிட்டா இருப்பான். எல்லாம் நடக்கத்தே செய்யும். ராசு... ராசப்பா... அதுக்குப் பெறவு நாம என்னா செய்றம்ங்கறத வச்சுத்தான் கவுரவம் நிக்கிம். தாயளி... அவெ சாமான அறுத்து எறிஞ்சு ஆளக் காணாப் பொணமாக்கிட்டம்னு வையி... இன்னாருகிட்ட வச்சுக்கிட்டா இதாண்டா கதின்னு... ஊரு பேசும்ல...”

“சேதாரம் ஆனாலும் பரவால்லங்கற...”

“ஜெயிச்சதப் பத்தித்தாண்டா பேசுவாங்க...”

ராசுவுக்கு வீரபத்திரனின் தீவிரம் பயத்தைக் கொடுத்தது. “அப்ப என்னதாம் பண்ணப் போற...”

“என்னக்கேட்டா, ராவோட ராவாப் போயி எடங்குடுத்து தங்க வச்சு காபந்து பண்ணி வச்சாம் பாரு... அந்தக் கூதியாங்கள மொதல்ல போட்டுத் தள்ளனும். மாமா வேலயாடா பாக்குற மயிராண்டின்னு அவெ வீட்ல இருக்க பொண்டு பொடுசுகள அவெம் முன்னாடியே கிழிச்சு நாசப்படுத்தணும். அதுக்குப் பெறவு எந்தப் பயலாச்சும்.. எடங்குடுப்பானா...”

வாயடைத்துப் போன ராசு, மெதுவாக எழுந்து சரிவில் இறங்கி குளத்து நீரில் காலலம்பினான். சடசடவென தவளைகள் நீரில் குதித்து

மறைந்தன. கரையேறி கீழிறங்கியதும் சைக்கிளில் காளவாசலுக்குப் போன ஒருத்தனைப் பிடித்து நிறுத்தினான் வீரபத்ரன்.

"என்னா.. மாமா... இந்ரேம்..." சைக்கிள்காரன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

"ம்... ங்னொக்கா கூப்புட்ருந்தா... அதேன் பாத்திட்டு வரோம்..." வீரபத்ரனின் குரலில் திடீரென வன்மமும் கொடூரமும் ஏறி நின்றது.

சைக்கிள்காரனுக்கு அந்தக் குளிர்ச்சியிலும் வேர்த்தது.

"இல்ல மாமா... இப்பத்தே ஒனரப் பாத்திட்டு வரே..." பவ்யமாகப் பேசினான்.

"ஒனரப் பாத்துட்டு வந்தா என்னா... ஊ... பிட்டு வந்தா என்னா... நேத்து வரேன்னல்ல... நேத்து எவென்ட்ட போன..."

அவனால் பேச முடியவில்லை. தொண்டை அடைத்தது. "அதேன்... இந்த மாசத்துக்கு வட்டி குடுத்திர்ரேம்.. மாமா..."

"குடு..." கையை நீட்டினான்.

"நாளக்கி..."

சொல்லி முடிக்கும் முன் சடாரென கன்னத்தில் அறைந்தான். "என்னிய என்ன வெம்பயல்ன்னு நெனச்சியா..."

"மாமா..."

"என்னாடா மாமா... பொண்டாட்டி கூடதான படுக்கற... வேற அக்கா தங்கச்சி... ஆத்தா சின்னாத்தா கூடல்லாம் படுக்கலேல்ல..."

"என்னா மாமா..."

"அந்த ஒனச்சியெல்லா இருக்குல்ல... அப்பறம் வாங்குன கடன, தேதிக்குக் குடுக்கணும்னு நெனப்பு மட்டுங் கெடையாது...?"

"இப்பிடியெல்லா பேசாதீக மாமா... சொந்தக்கார்னு தான..."

"சொந்தம்னா... எதுல சொந்தம்...? பணத்துலயெல்லாஞ் சொந்தங் கெடையாது மாப்ளேய்... காசு இருந்தாத்தே நா... மாமே... இல்லாட்டி ஏமே... வா, வீட்டுக்குப் போவம்... கணக்கு முடி.... ராசு... வாப்பா... கொஞ்ச நேரம்..." சைக்கிள்காரனை சைக்கிளோடு இழுத்துப் போனான் வீரபத்ரன்.

ராசுவுக்கே பயமாயிருந்தது. இப்பிடிப்பட்ட பயலா இருக்கானே... எந்தப் பாவத்துக்கும் அஞ்சாதவனோ... சேச்சே... அளவாத்தே வச்சுக்கணும்... பாவம் செங்க அறுக்கவனோட சங்க அறுக்கப் போறாம் போல...

"நா... வரணுமா..." விட்டால் வீட்டுக்கு ஓடிப் போகலாம்... முழிச்ச மொகமே சரியில்ல...

"ச்சும்மா வா..ராசு... நம்ம பயதே... எம் மாப்ள இன்னதே... போனதும் வந்துரலாம்..." எகத்தாளமாய்ப் பேசினான் அவன் பேசப் பேச சைக்கிள்காரனுக்கு உதறல் எடுத்தது.

RangaRakes tamilnavarasam.com

“நெசமா மாமா... சாமி சத்தியமா... நாளக்கி எப்பிடியும் காசக் குடுத்திர்றேன்... ஒரு நா.. மட்டும்... மாப்பு..” கெஞ்சியபடி சைக்கிளை நகரவிடாமல் இறுகப் பிடித்தான். வீரபத்திரன் உருட்ட, அவன் இழுக்க.. சைக்கிள் திணறியது.

வீரபத்திரன் நின்றான்.

“நாளைக்கும் மாப்பு கேக்க மாட்டீல்ல...”

“ம்ஹுூம்... கண்டிப்பா குடுத்திர்ரேன்..”

“வரலேண்ணு வையி... நாளைக்கு ஒவ் வீட்லதே படுக்க...” என்றவன், “சைக்கிளக் குடு... ஒரு சோலிக்கு போக வேண்டிருக்கு... காலைல ரூவாயக் குடுக்க வாரப்ப சைக்கிள வாங்கிக்க...”

அவன் கதறக் கதற சைக்கிளை ஓட்டிக் கொண்டு வந்தான் பின்னால் கேரியரில் உட்கார்ந்து வந்த ராசுவுக்கு உதறலெடுத்தது.

# 7

“வாங்.. நாட்டாமை..” சித்ரம் பிள்ளை கையெடுத்துக் கும்பிட்டார். மனசில் ஏகப்பட்ட கேள்வியும் பதட்டமும் ஏறி இருந்தது.

“கதவ, தாப்பா போடு...”

“ம்...” தலையாட்டி விட்டு கதவோடு மல்லுக் கட்டலானார்.

“வாங் மா..மா...” பருவதத்துக்கும் பேச வரவில்லை. மயிலுக்கும் குழப்பம். கிழவியும் தன் பங்குக்கு திரும்பிப் பார்த்து விட்டு அடுப்படியிலிருந்து வெளியில் வந்தது. “அய்யா.. வரணு” என்றது.

“என்னா..ங்க்கா... சௌக்கியமா...” என்றார் நாட்டாமை.

“நல்லாருக்கம்ங்யா...”

ஆட்டுக் குட்டியும் எழுந்து தடா புடாவென கழுத்துக் கயிறை இழுத்து பதட்டத்தோடு... 'மே..' என கத்தியது. வாலைத் தூக்கி சர்ரென ஒண்ணுக் கடித்து விட்டு, பொல பொலவென புழுக்கைகளைப் போட்டது.

ஒரு வழியாக கதவைச் சாத்தி விட்டு வந்த சித்ரம்பிள்ளை “பெஞ் சிய எடுத்துப் போடு...” என உத்தரவிட, மயிலுதான் வீட்டுக்குள் போய் எடுத்து வந்து விரித்து விட்டாள்.

“இதாரு, பூதிப் பொரத்துப் புள்ளதான...” அடுப்படியோரமாய் சேரை இழுத்துப் போட்டுக் கொண்டார். ஆட்டுரல் பக்கமிருந்து மூத்தர வீச்சம் வந்தது.

“ஆமாங்...”

“மாப்ள என்னா செய்றாரு...”

“தேனி கம்சங்கடைலதேம் வேல...”

“புள்ளீக...?”

“ஆணொண்ணு பொண்ணு ரெண்டு.”

“படிக்கீதுகளாக்கும்..”

“ஆ..ம் மாமா... பெரிசு ஒம்பத முடிச்சு. ஆளாகி வீட்ல இருக்கு... சின்னதுக ரெண்டும் வலயபட்டில படிக்குதுக”

“உள் ரூமுக்குப் போயிருவோமா...” சித்ரம் பிள்ளை கேட்டார். என்ன பெரச்சன... யோ..!

உக்காந்தவிட்டு எழுந்திரிக்க சள்ளையாக இருந்தது நாட்டாமைக்கு...” இருக்கட்டும்... ஒக்காந்தாச்சுல...”

காப்பி போடும்படி மனைவியிடம் சாடை காட்டினார். அக்கா, தங்கச்சிக்கு கண்சாடையில் சொன்னது. மயிலு அடுப்படிக்கு போக எத்தனித்தாள்.

“கொஞ்ச இருதாயி...” நாட்டாமை அவளை நிறுத்தி “மாயெ மொதல்ல ஓவ் வீட்டுக்குத்தே வந்தானா...” கேட்டார்.

மயிலுக்கு அவர் சொன்னதன் அர்த்தம் புரியவில்லை. குழப்பத்துடன் அக்காவை பார்த்தாள்.

“இல்ல தாயி... இந்தப் பிள்ளையக் கூட்டிக்கிட்டு மொதல்ல ஒன்னோட வீட்டுக்குத் தே வந்ததாகவும்... பெறகுதே எடம் மாறுனதாகவும் கேள்விப்பட்டேன்...'' என்று தோரணையுடன் பேசினார்.

“அடி யாத்தீ... அதாரு சொன்னது...? நானே செவனேன்னு கெடக்கே... எனக்கு இப்பிடி ஒரு பழியா... சும்மாவே வீட்ல கடுகு பொரியுது, உளுந்து தாளிக்குது. இதுல எதனாச்சும் சொல்லி பொழப்பக் கெடுத்துராதீக... மனசு கேக்காம... நானே, இம்புட்டு நாளாச்சே... ஒடம் பெறெந்த கடமைக்கி அந்த நாதாரிப் பயல வளத்த பாசத்துக்கு பாத்து வெசாரிச்சிட்டுப் போலாம்னுதே-அதும் இன்னிக்கித்தே வந்தே... சாமி சத்தியமா... எம்புள்ள மூணுக்கும் பொதுவா, அந்தப் பொம்பளப் பிள்ளைய நாங் கண்ல பாத்தது கூடக் கெடையாது... '' நெஞ்சில் கை வைத்து படபடவென பேசினாள்.

“சரி சரி... பொதுவாத்தேங் கேட்டே...”

“இல்லமாமா...” என்று பருவதம் வந்தாள். பொதுவர்த்தமா வேற ஆருங் கேட்டா பிரச்சன இல்ல மாமா... நீங்க பொதுவர்த்தமா கேக்கறதுங்கறது பொருந்தாதுல்ல... அவ அசலூர்க்காரி.. அவளும் ரெண்டு பொழப்பு பாக்குறவ... இது அவ புருசனுக்கு எட்டுச்சுன்னு வையிங்க... தப்பாகிப் போகும்ல...”

“இதுல என்னாம்மா தப்பு... ஒண்ணுக்குள்ள ஒண்ணு கேக்கத்தான செய்வாங்க... இதுக்கெல்லாஞ் சங்கடப்படக்குடாதும்மா...” ரொம்பவும் சாதாரணமாகச் சொன்னார்.

“காசு பணப் பெரச்சனையா... இருக்கு இல்லீன்ட்டுப் போக... பொண்ணு பொடுசு பிரச்சன... வீம்பழி வந்துரும்ல மாமா... நீங்க அறியாத ஓசனயா...” தங்கைக்காக வாதம் செய்தாள் பருவதம்.

“சரிச்சரி... பொறுப்பில இருக்கவங்கன்னா நாலொண்ணயும் விசாரிக்கத் தேஞ் செய்வாங்க... உண்டுன்னா உண்டுங்கணும், இல்லைன்னா இல்லைன்டு போயிரணு மயிலு... போ... போயி ஒரு தம்ளர் காப்பி போட்டுக்கிட்டு வா...” சித்திரம்பிள்ளை சமாதானமாய் பேசலானார்.

“இல்லீங்க மாமா... அன்னிக்கி அப்பிடித்தே ஊர்ல வந்து நாலஞ்சு பேரு... என்னமோ, களவாணிப் பயல உருட்ற மாதிரி வீட்டுக்கு வந்து அடாபுடான்னு கேள்வி மேல கேள்வி போட்டு தெருவையே அசிங்கப்படுத்திட்டுப் போய்ட்டாங்க... அம்மா கூட அன்னிக்கி இருந்திச்சு கேட்டுப் பாருங்க... நானும் ரெண்டு பொண்ணுக

பெத்துருக்கே... எனக்கும் அக்குசு இருக்கும்ல... எங்கிட்ட வந்தான்னா நா ஒளிச்சா வப்பெ... பொடனில ரெண்டு போட்டு இழுத்து வந்திருக்க மாட்டே... ரெம்ப அசிங்கமாப் போச்சு மாமா...”

அக்கா தங்கச்சி, இவ்வளவு தூரம் பேசுவார்களென நாட்டாமை எதிர்பார்க்கவில்லை. அசலூர் பிள்ளை, கொஞ்சம் கூசிப் பேசி சமாளிக்கும் என நினைத்தது பெரிய வம்பாகிப் போச்சே... இதுக்கு காமாட்சி தேவலை போல... கேட்டேவிட்டார்.

“பொறு தாயி, படபடன்னு பேசக்குடாது எதையும் பொறுமையா வாங்கிப் பேசணும். நீ இந்த எடத்தில இருந்தா கேப்பியா மாட்டயா...?”

ஏதோ பேச வந்தவளை கிழவி தடுத்தது.

“நம்ம வீட்ல நம்ம புள்ளைக்கி இப்பிடி ஒரு சம்பவ நடந்துச்சுன்னா, கையக் கட்டிக்கிட்டு கம்முனு கெடப்பமா.. சொல்லு...” மறுபடி கேட்டார்.

“சரிங்யா... விடுங்க... இவ எப்பவுமே இப்பிடித்தாங்யா...” என்று கிழவி மெல்ல துவங்கியது. “சிறுவயசுலருந்தே பொறுத்துப் பேச வராது.. என்னா.. வீட்டுக்காரத் தம்பி கொஞ்சம் சங்கடப்படும்.. அத நெனச்சுத்தே...”

“சரிக்கா.. கால்ல அடிபட்டா கண்ணுல தண்ணி வருதுல்ல... ஒரு ஒடம்பா, ஒரு சொந்தமா இருக்கப்ப கேள்வி வரத்தான செய்யும். இதுக்கெல்லாஞ் சங்கடப்பட்டா எப்பிடிக்கா... இதே அடுத்த சாதிக்காரெங்கன்னா... இந்நேரம் வெட்டு, குத்துன்னு கொல பழி ஆகியிருக்கும்ல... நாஞ் சொல்றதுல எதும் தப்பு இருக்கா...” மெதுவாக தனது ஆளுமையை செலுத்தலானார்.

“நா. என்னா சொன்னே...” சித்திரம்பிள்ளை சத்தம் போட்டார், “வீட்டுக்கு வந்தவங்களுக்கு மொதல்ல குடிக்க ஒருவா காப்பித் தண்ணி குடுக்கப் பழகிக்கங்க...” பேச்சை முடித்து வைப்பது போல பேசினார். இதனை பேந்த பேந்த முழித்தபடி பார்த்துக் கொண்டிருந்த ஆட்டுக்குட்டி தான் கத்துவதா வேண்டாமா என்ற குழப்பத்தில் மறுபடி படுத்துக் கொண்டது.

“இந்நேரத்ல எதக்கு காப்பி... இப்பத்தேங் காமாட்சி வீட்ல குடிச்சிட்டு வாரெ... வகுறு வேற சரியில்ல...”

காமாட்சி வீடு என்றதும் அனைவரும் உசாரானார்கள். சன்னலுக்கு வெளியில் திரிந்த நிலா கூட அத்தனை பேரின் புத்தியிலும் மினுக்கிடவில்லை.

“பையன பாக்கப் போனிகளாம்ல...” அடக்க மாட்டாமல் பருவதம் கேட்டு வைத்தாள்.

“ம்... போயிருந்தம்ல.. பழைய வத்தலகுண்டுலதே இருக்கான்.” உம்மையிலே ஒங்களுக்குத் தெரியாதா... என கேட்க நினைத்தார். இனி அதுக்கொரு பாரதம் பிறக்கும். வந்த விசயத்தை மட்டும் ஒப்பித்து விட்டுப் போய்விடலாம் என வாயை அடக்கிக் கொண்டார்.

“நல்லாருக்கானா...”

“புது மாப்ள இல்லியா... ஜம்முன்னுதே இருக்கான்.”

“எதும் விசாரிச்சானா...?”

“அவெ எதுக்கு விசாரிக்கப் போறான்... இனிமே நாம எதுக்கு...?” சித்திரம்பிள்ளை கசப்பாய் பேசினார்.

“அவெ என்னா வெளியூர்ல வேலைக்கா போயிருக்கா வெசாரிச்சு லெட்டரு போட...” பருவதத்திற்குச் சாதகமாகப் பேசினார் நாட்டாமை.

“சொல்லுங்க மாமா... பெத்த புள்ளைய இப்பிடி கரிச்சுக் கொட்ற தகப்பன ஒலகத்துல பாக்க முடியுமா...”

“கரிச்சுக் கொட்றாக... அவெஞ்செஞ்ச வேலையால ஊர்ல தலகாட்ட முடிதா... பொழப்புக்குப் போன எடத்துல இப்பிடி ஒரு பொச கெட்ட வேலையச் செஞ்சிருக்கானே... நாளப்பின்ன எவனாச்சும் நம்பி வேல குடுப்பானா... இல்ல, சொந்தமா தொழிலு செஞ்சு பொழைக்கத்தே வக்கு இருக்கா... இல்ல நீ என்னா நஞ்சையும் புஞ்சையும் வச்சிருக்க சம்சாரியா... வெறும்பய ஒரு நாப் பாட்டுக்கு குடும்பமே ஒழச்சுத் தீக்கணும். இதெல்லாந் தேவயா...”

“நாம பேசவும், ஓசிக்கவும் வயசிருக்குயா... அவெ எளரத்தம் புசுக்குன்னு செஞ்சுட்டான்.”

“நம்பிக்க போச்சே பெரிய்யா... நாணயஞ் சிந்திருச்சே... பெறக்கவா முடியு...?”

“அதவுடு... உள்ளூர்ல பகையாயிடுச்சே...” என்ற நாட்டாமை,” அதே எனக்கு மெத்தக் கவலயா இருக்கு. ஒரு எனத்துல சேந்து நின்னு செயிச்சுக் காட்ட வேண்டிய நாம.. இப்ப ஒருத்தன ஒருத்தே அடிச்சுக்கிட்டு அழியப் போறமேன்னுதே... இந்த பதினஞ்சு நாளா வேதனயா இருக்கு...” உண்மையிலேயே வருத்தம் கொள்வது தெரிந்தது. யாரும் பேசலில்லை.

“அவுக வீட்ல என்னா சொல்றாக...” மயிலு மெதுவாக ஆரம்பித்தாள்.

“காமாச்சி வீட்லயா... ஏற்கனவே சாமியாடிப் பொம்பள... இன்னைக்கி ஆடுன ஆட்டமெல்லாம் பாத்தேன்னா... ஒனக்கு ஊனுல ஒறக்கம் வராது.. ஒரு வகைல நாயமா இருந்தாலும் நடப்ப அறிஞ்சு பேசணும்ல...”

அவர் சொல்லச் சொல்ல பயம் மிகுந்தது. 'காசுக்காரி கூச்ச நாச்சம் பாக்காத பொம்பளை... நெனச்சத சாதிக்கக்கூடிய ஆள்பலம்... கொளவிக் கூட்டுல கையை வச்சிட்டியேடா மகனே...' மனசுக்குள் புலம்பினர்.

மறுபடி அவரே தொடர்ந்தார். “ரெம்பக் கோவ மாத்தே இருக்காங்க. பத்து பதினஞ்சு நாளா தேட வச்ச கோவம். இன்னிக்கி கண்டுபிடிச்சும் கெடைக்கலையேன்ன வெறி; எல்லாம் மொத்தஞ் சேந்து நிக்கிது.”

“சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டீகள்ல...” மயில் கிசுகிசுப்பாய்க் கேட்டாள்.

பேசாமல் தலையை மட்டும் ஆட்டினார் நாட்டாமை.

“நீங்களே சொன்னீங்க.. நாட்டு நடப்புத் தெரிஞ்சு நடக்கணும்னு... இத்தன்நாள் ஆகிப் போச்சு... கழுதைகள சேத்து வச்சு... தாலியக்கட்டி பத்தி விட்றலாம்ல...”

மற்றவர்கள் எதும் பேசவில்லை. நிதானமாக நாட்டாமை பேசலானார். “இது சின்னப்புள்ள கூட சொல்றதுதானம்மா... மகவயித்துல கருக்கூடுனாலும் பரவால்ல அத அழிச்சுட்டு காரியம் பாப்பேன்னு சவால் விட்டு நிக்கிறா காமாச்சி... அத சொல்லத்தா வந்தே... ஒவ்வொரு ஊர்லயும் அவெவெ ஒண்ணுசேந்து நிமுந்து நிக்கிறாங்கெ... இந்த ஊர்ல மட்டும் இப்பிடி கண்டதுக்கெல்லா... கன்னக்கோல் வச்சு சாதிய அழிச்சிறப் போறம். ரெண்டு நாள்ல மகள இழுத்து வரணும்னு பேசிக்கிறா... அவங்க பிள்ளைய என்னா வேணா செஞ்சுக்கட்டும். ஓம் புள்ளயக் காப்பாத்தற வேலய நீங்க பாருங்க.. வெட்டி வீம்பு பண்ணி புள்ளய எழுந்துராதீக... அம்புட்டுதே...”

RangaRakes tamilnavarasam.com

# 8

நாட்டாமை வெளியே போனதும் கதவைச் சாத்தினார் சித்திரம்பிள்ளை. வீடே குப்புறக் கவிழ்ந்தது போல அமைதியாயிருந்தது. ஆளுக்கொரு பக்கம் அமர்ந்து கிடந்தனர். திடீரென பருவதம் புலம்ப ஆரம்பித்தாள். மாயனுக்காக இருந்த வெரதம், அவனை வளத்த வளப்பு, அவனது புத்திக் கூறு... அக்குசு.. என்று ஒவ்வொன்றாய்ச் சொல்லிச் சொல்லி மருகினாள். கூடவே விசும்பலும் அழுகையும் கூடி வந்தது. சேரில் உட்கார்ந்திருந்த சித்திரம் பிள்ளைக்கு கோபம் உச்சிக்கு ஏறியது.

“சும்மா.. இரு...”

இருக்கவில்லை பருவதம்.

“சொன்னாக் கேளு...”

கேட்கவில்லை. பிலாக்கினம் தொடர்ந்தது.

விசுக்கென எழுந்தார். ஆட்டுக்குட்டியை மேய்ச்சலுக்கு பிடித்துப் போகும் கயறு சிக்கியது. பல்லைக் கடித்துக் கொண்டு நாலு ‘வாங்கு’ வாங்கினார். பழைய கயறாகையால் அடி, நன்கு பதிந்து விழுந்தது. தடுக்க வந்த மயிலுக்கும், மாமியாருக்கும் தலா ஒரு அடி விழுந்த பிறகே நிறுத்தினார்.

அப்பவும் கூட அய்யோ வலிக்கிதே என அழவில்லை பருவதம். ‘அய்யோ மகனே... அடிக்கறதக் கேக்க நாதியத்தவளா யிட்டனே...” என்றுதான் புலம்பினாள். அங்கிருந்த யாருக்குமே பருவதத்தின் அந்த நடவடிக்கை பிடிக்கவில்லை.

‘‘பொறந்தப்பவே அன்னஞ்சி நாயக்யரு சொன்னாரு... குச்சனூருக்கெல்லா தேடிப் போக வேண்டா... குச்சனூரானே வீட்ல புள்ளயா வந்திருக்கான்னு... அத தமாசா நெனச்சுட்டே.... குடும்பத்தப் பூராம் காலி பண்ணத்தே தலசா பொறந்திருக்கான்...” சத்தம் போட்டு விட்டு உள் ரூமுக்குள் போய் தாழ் போட்டுக் கொண்டார் சித்திரம் பிள்ளை.

“அழுகாதக்கா... அக்கம் பக்கத்து வீடெல்லா என்னமோ ஏதோன்னு வந்துரப் போறாங்க... இருக்க அசிங்கம் பத்தாதா...” மயிலு, பருவதத்தைத் தேற்றினாள்.

தாழ் போட்ட ரூமுக்குள் தூங்கிக் கொண்டிருந்த குழந்தைகள்– மாயனின் தம்பி தங்கைகள் அய்யோ அம்மா என்று அலறின. மயிலுக்கு

துணுக் கென்றது. உள்ளே போன மாமா கையில் கயிறோடல்லவா போனார்.

"அய்யோ அக்கா.. மாமா நம்மள மோசம் பண்ணிட்டாரே... என்று பருவதத்தைத் தாண்டிக் குதித்து அடைத்த கதவைத் தட்டு தட்டோவென தட்டினாள். கிழவியும் பருவதமும் நெகாத் தெரியாமல் முழிக்க, "கயறோட மாமா கதவச் சாத்திக்கிட்டாருக்கா..." என விளக்கியதும் மூவரும் சேர்ந்து கதவை உடைக்கலாயினர்.

இடியாய் விழுந்த தாக்குதலில் கதவு விம்மிப் புடைத்து அதிர்ந்தது. உள்ளே இருந்த குழந்தைகள் மேலும் பயத்தில் அலறின. உள்ளேயிருந்த பல்பு பீசாகிப் போனதால் இருட்டில் கதவை சட்டென திறக்க முடியாமல் படுத்திருந்த பிள்ளைகளை பல தடவை மிதித்து விட்டார். மிதிபட்ட குழந்தைகளின் அலறல் பீதி கலந்து அதிகரிக்க, கதவின் தட்டலும் முன்னிலும் உரத்து விழுந்தது.

"கதவ ஒடச்சுடாதீங்க கழுதைகளா..." உள்ளுக்குள்ளிருந்து சத்தம் குடுத்தார் சித்திரம் பிள்ளை. அது யார் காதிலும் விழவில்லை. ஒரு வழியாய் கதவைத் திறந்த போது பெண்கள் மூன்று பேரும் வேர்த்து விறுவிறுத்து இருந்தார்கள். முகமெல்லாம் மயிர்க் கற்றைகள் வியர்வையில் நனைந்து ஒட்டிக் கிடந்தன. சேலை மாராப்பு தாறுமாறாகக் கிடந்தது. ஒவ்வொருவருக்கும் மூச்சு மேலும் கீழுமாய் இரைந்து கொண்டிருந்தது. திறந்தகதவு வழி வந்த வெளிச்சத்தில் பிள்ளைகள் அழுகை நிறுத்தினர். எழுந்து வெளியே வந்தவர்கள், கண்களைக் கசக்கியபடி பாட்டியின் மடியிலும், அம்மாவின் தோளி லுமாய்ச் சாய்ந்து கொண்டனர்.

"என்னா மாமா... இப்பிடீ...? என்னமோ நெனச்சே உங்கள... இப்பிடியா கூறு கெட்டதனமான வேலயச் செய்றது நல்லாவா இருக்கு..." மயில் ஆங்காரமாய்ச் சத்தம் போட்டாள். ரூமுக்குள் போய் விட்டத்தைப் பார்த்தாள். கையெட்டும் உயரத்தில் தகரம் முட்டியது.

வெளியே யாரோ கதவைத் தட்டுகிற சத்தம் கேட்டது.

சித்திரம் புள்ளைக்கு கண் தெரியாத கோபம் வந்தது. இம்புட்டு நேரம் கத்தி கூப்பாடு போட்டு விட்டு, கடசியில் தன்னையே திட்டுகிறார்களே... பொண்டாட்டியாய் இருந்தால் இந்நேரம் செவுலு பிஞ்சிருக்கும்.

"என்னா.. என்னா.." புரியாது போல் கேட்டார்.

உள் ரூமுக்குள்ளிருந்து வெளியில் வந்த மயிலு "கயற எங்க..." என்றாள்.

"கயறா... உள்ள தொங்குது..."

"தொங்குதா... விட்டத்தில இல்லியே..."

"விட்டத்திலியா... ஆணில தொங்குது பாரு..." என்றவருக்கு மயிலின் சத்தத்திற்கான காரணம் புரிந்தது.

வெளியில் கதவு தட்டும் சத்தம் தொடர்ந்து கேட்டது.

"யே... யார்னு போய்ப் பாருங்க... ஊரே கூடி இருக்கப் போவுது. அசிங்கம்.. நா என்ன மசுத்துக்குத் தொங்கணும்... அப்பிடி வேற நெனப்பு இருக்கா... பிச்சுப் புடுவே..."

கிழவி கதவைத் திறந்தது. நினைச்ச மாதிரி பக்கத்து வீட்டுக்காரர்கள் நாலைந்து பேர் நின்றிருந்தார்கள்.

"என்னாம்மா.. என்னா.."

கிழவியால் கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை. கதவை விரியத் திறந்து விட்டது. அனைவரும் உள்ளே வந்தனர். கேலிச் சிரிப்பில் எல்லோரையும் விழுங்கியபடி நிலாவும் வீடு நிறைத்து உள்ளே வந்தது.

# 9

“வேற ஒண்ணுமில்ல... இருட்ல, ஆட்டுக்குட்டி கயற அவுத்துகிட்டு உள்ரூமுக்குள்ள போயிருச்சு... அது பிள்ளிக மேல ஏறி மிதிச்சிருச்சு.. கூறு கெட்டதுக, ஒறக்கச் சடவுல காச் மூச்சுன்னு கத்தி ஊரக் கூட்டீருச்சுக...” பருவதம் பக்கத்து வீட்டுக்காரர்களிடம் காரணம் சொன்னார்.

வெளிக்கதவு திறந்து விட்டதால் காத்து முழுமையாய் வந்து போனது. வீடு பூராமும் புகுந்து வெக்கையை விரட்டி விட்டது. அடுப்பு லைட் வரைக்கும் எல்லா லைட்டும் எரிந்ததால் வீடே பிரகாச மாக இருந்தது. வழக்கம் போல ஆடு ஆட்டுரலை ஒட்டியபடி ஏது மறியாத முடக்கிழமாக அசை போட்டுக் கொண்டிருந்தது. உள்ளுக் குள் கனிந்த கோபமும், அயல் மனிதர்களின் வருகையால் கூச்சமுமாய் கண்களைச் சிமிட்டிக் கொண்டே உள்ரூமின் நிலைப் படியில் உட்கார்ந்திருந்தார் சித்திரம் பிள்ளை. பிள்ளைகள் இன்னமும் தோளில் சாய்ந்த நிலையில் உறங்கிக் கொண்டிருந் தனர்.

‘‘ஒக்கார்ங்க...’’ நின்றிருந்தவர்களைப் பார்த்து மயிலு சொன்னாள்.

“இருக்கட்டும்மா... இல்ல.., கே...மான்னு சத்தம் வரவும் என்னமோ ஏதோன்னு ஆகிப் போச்சா...” டீச்சரம்மா கனத்த உடம்பை முந்தானையால் இழுத்துப் போர்த்தியபடி சொன்னார்.

“ம்...!”

“இங்கன கட்டிருந்த ஆடு, உள்ள எப்பிடி போச்சு...” கவுண்டரம்மா கேட்டது. பொது மதில் வீடு. எந்த சத்தம் வந்தாலும் “ஆணியா அடிக்கிறீக... அங்குட்டு மணலா உதுருது...” என்று வீடு நுழைந்து விடும்.

“அகத்திக் கீரைய உள்ரூம்புக்குள்ளதே வச்சிருப்பம் அந்த எர வாட புடிச்சு நொழஞ்சிருச்சு...” பருவதமே பதில் சொன்னாள். மடியில் படுத்திருந்த பெண்ணின் தாவணியைத் திருத்தியபடி.

“கதவு படபடன்னு தட்ற மாதரி சவுண்டு கேட்டுச்சு அதேம் பதறிப் போய்ட்டே...” டீச்சரம்மா மறுபடியும் கேட்க, மூணாவது வீட்டு சிவகாமிக்கு தான் ஏதும் கேக்காமலே இருக்கமே என்று சங்கட்டமாயிருந்தது. என்ன கேட்பதென யோசனையில் இருந்தாள்.

“அதூ... உள்ரூம்புல லைட்டு இல்ல. பல்பு பீசாப் போச்சு, ஆடு உள்ள நொழஞ்சது தெரியாம நா, தாப்பா போட்டுட்டே. இருட்டுல நெகாத் தெரியாம ஆடு அங்கிட்டும் இங்கிட்டும் ஓடுனதுல பிள்ளீகள மிதிக்க, அதுக அலற... வெளிய இவக என்னமோ ஏதோன்னு கதவத் தட்டீருக்காக...” சித்திரம் பிள்ளைதான் முடித்து வைக்க வேண்டி இருந்தது.

“அப்ப... நீங்க உள்ளதே இருந்தீகளா...” கவுண்டரம்மா சந்தேகத்துடனயே கேட்டார்.

“ம்..” ஒற்றைச் சொல்லில் பதில் சொன்னார்.

“அதான... நாங்கூட காமாச்சி கீமாச்சி எதும் ரகள பண்ண வந்துட்டாளோன்னு ஓடிவந்தே...” சிவகாமிக்கு தன் குறை தீர்ந்தது. சரியான கேள்வியாய் கேட்டு விட்ட திருப்தி.

“அவுக எதுக்கு வந்து ரகள பண்ணப் போறாக... மாயெம் மாதரி ஒரு மாப்ள கெடச்சாப் பத்தாது..? நாங்களும் வந்து இத்தன வர்ச மாச்சே, அந்தத் தம்பி வாரதுந் தெரியாது போறதுந் தெரியாது. இந்தக் காலத்தில இம்புட்டு அமதியா எந்தப் புள்ளயப் பாக்க முடியும். ” சாக்கு தைக்கிறவரின் பொண்டாட்டி சுசீலா ஆட்டத்தை துவக்கி விட்டாள். எது பேசப் படக்குடாது என்று பயந்தார்களோ அது பூவச்சு பொட்டு வச்சு கிளம்பி விட்டது. எப்படி அதை முடிப்பதென வீட்டாள் யாருக்கும் தெரியவில்லை.

“அப்பிடியா சொல்ற சுசீலா... ரேசங்கடைல அவளுக்கு அரிசியும், சீமெண்ணெயும் அள்ளிச் செமந்து போட்டானே பாவி... ஏமம்னு பாத்தானா சாமம்னு பாத்தானா...”

“அவெ சேந்தப்பறந்தானக்கா, இத்தன வீடு வாசல வாங்கிப் போட்டாக...”

“அந்த நன்னி விசுவாசம்லா இருக்கணும்ல...”

“மொதல்ல இவனச் சொல்லணும்க்கா... ஒனக்கென்னா கொறச்சல் மொன்னையா மூக்கரையா... அர்ச்சுனெம் மாதிரி அம்சமானவன்ல... இல்ல, ஒர்த்தன மாதிரி ஒழைக்கப் பயந்தவனா சீமெண்ண நாத்தம் புடிச்ச இவெ மக இல்லாட்டி ஒலகத்துல பொண்ணுக்கு அருவமா...?”

“அதெல்லா விடு... இவெ என்னா வேத்தாளா... மொறக்கி... சரியத்த வெந்தான...”

“அவ அதவா நெனைக்கிறா... என்னமோ அவளுக்கு பசியாத கஞ்சியும். பவுடர் மங்காத மொகறையும் வாச்சிருச்சாம்... ரெம்பத்தே பகுமானம்..”

“ஆமா.. இவ கெடந்த கெடப்பெல்லா... ஊரு அறியாது பாரு... எம் மாமனாரு தோட்டத்துல பருத்திக்களைக்கு வந்தவ, சோறு கொண்டு வந்த தூக்கு வாளில பருத்தியக் களவாண்டு வழிக்கடைல

போட்டப்ப கையிங்களவுமா பிடிச்சது எம் புருசெ... என்னமோ ரேசங்கட வந்துச்சோ... மணம் பெத்தாளோ... எத்தின் நாளக்கி...?"

எண்ணெயில்லா சட்டியில் கடுகு பொரிந்த மாதரி சடசடவென பேச்சுகள் சரங்கோத்து வெடித்தன.

"சரி சரி... நாம பாட்டுக்கு வாய் புளிச்சதா மாங்கா புளிச்சதான்னு ஆளுக்கொண்ணா பேசிறக்குடாது. என்னாருந்தாலும் சம்மந்தகாரவுக... இன்னிக்கி அடிச்சுக்கிட்டாலும் நாளைக்கி கூடிக்கிருவாக..." அமைதிப்படுத்தினார் டீச்சரம்மா.

"நாம என்னா தப்பாவா சொன்னம்... ஊர்ல நாட்ல பேசிக்கறதப் பொதுவர்த்தமாத்தான பேசுனம்... இவக நல்லார்ந்தா ஒன்னக்காட்டியும் என்னக்காட்டியும் ஆரு சந்தோசப்படப் போறா... என்னாக்கா.." கவுண்டரம்மா தனக்கு கீழ் வயசிருப்பவர்களைக் கூட அக்காவாகத்தான் விளிக்கும்.

"என்னமோ மனசுல பட்டத சொல்றம். சுதார்ப்பா இருந்துக்க... சூதுவாது தெரியாம இருக்காதீங்க..." சுசீலாக்கா முடிக்கிற மாதிரி சொன்னதும், பருவதத்திற்கு பீதி அதிகமானது.

மறுபடி புலம்பல் புறப்பட்டது, "தல நாளைல புள்ளயப் பெத்து இப்பிடி தலையில கல்லத் தூக்கிப் போட வாச்சிருக்கானே யக்கா... இந்த ரெண்டோட மூணா அவனும் பொட்டக் கழுதையா இருந்தாக் கூட, எவனாச்சும் ஒருத்தெங் கையில புடிச்சுக் குடுத்துப்புட்டு நிம்மதியா இருந்திர்க்கலாமே... எடுவட்டபய கடவுளு எனக்கூன்னு இப்பிடிச் சோதிக்கிறானே..." மூக்கைச் சீந்தி மூடி வைத்த அழுகையை மறுபடி திறந்து விட்டது பருவதம். மடியில் படுத்திருந்த கனகு முழிச்சுப் பார்த்தது. எழுந்து அப்பா பக்கத்தில் உக்கார்ந்து கொண்டது.

"போ... போம்மா.. போய்ப்படு... பள்ளியொடம் போணும்ல சித்திரம் பிள்ளை மகளின் தலையைக் கோதி விட்டார். அரைப் பார்வையில் அனைவரையும் பார்த்துவிட்டு, "சோதி...?" என்று தங்கையைக் கேட்டது. பாட்டியின் தோளில் அது நிம்மதியாக தூங்கி கொண்டிருந்தது. "நீ... படுமா.. அதுவரும்..." பாட்டி சொல்ல, என்னா கூட்டம் எதுக்கு முழிச்சுகிட்டிருக்கீங்க என்று கேட்கவெல்லாம் இல்லை. அண்ணன் ஓடிப் போனதிலிருந்து இது சகஜமாகிப் போயிருந்தது. மண்டிகால் போட்டு உன்னி, எழுந்து உள் வீட்டின் இருட்டுக்குள் நுழைந்தது கனகு.

"பெரியவ எட்டுதான படிக்கிறா..." டீச்சரம்மா கேட்டது.

"ம்... அவ எட்டு... சின்னது ஆறு...' மயிலு சொன்னாள்.

"ம்... பொம்பளப் பிள்ளைகளுஞ்சரி... ஆம்பளப் பயகளுஞ் சரி இந்தக் காலத்தில எதியும் நம்ப முடில ஆத்தா..." சுசீலா.

"கட்டுப்பட மாட்டேங்கிதுக... எவ்வீட்ல ஒண்ணு இருக்கே... ஏழு படிக்கிது, இப்பவே ஆருட நீ...ங்கறா... வருந் நாளைல என்னா செய்யக் காத்திருக்கானோ..."

“என்னாவா... ம்... மணி பதினொன்னாகப் போகுது... டீச்சரம்மாவின் வீட்டுக்காரர் மேல் துண்டோடு அக்குளைச் சொறிந்தபடி வந்தார். “வாரே...” டீச்சர் பதில் சொல்ல... "ஆத்தாடி அம்புட்டு நேர மாச்சா...! ” என்றபடி ஒரொர்த்தராக விடைபெற்று கிளம்பினர்.

“ஒக்கார்ங்க சார்...” சேரைக் காண்பித்தார் சித்திரம் பிள்ளை. அவரும் வாத்தியார்தான்.

“இல்லல்ல... போனவளக் காணாமேன்னு வந்தே... வேறொண்ணு மில்ல..."

“இல்..ல... பிள்ளைகதே.. உறக்கத்தில அலறுச்சாம்...” டீச்சரம்மா தன் கணவனுக்கு செய்தி சொன்னார். “போவமா... ச்செரி வர்ரம்... ச்சும்மா சும்மா எந்நேரமும் அதெயே நெனச்சு ஃபீல் பண்ணி பொலம்பாதீங்க... நடக்கிற எதுவும் நம்ப கைல கெடையாது... எல்லாம் விதிவிட்ட வழி. இருக்க பிள்ளைகளப் பத்தி யோசிங்க...” பாடம் சொல்வது போல பேசிவிட்டு டீச்சர் நகர வாத்தியார், சித்திரம் பிள்ளையை ரகசியமாக அழைத்தார்.

“சார்...” அருகில் போனார்.

“சொல்ல சங்கட்டமாத்தே இருக்கு... அனேகமா உங்களுக்கும் தெரிஞ்சிருக்க வாய்ப்பிருக்கு...” என பீடிகை போட்டவர், “ஒங்க சம்மந்தியம்மா... ஒரு வேன் ஏற்பாடு பண்ணி இருக்காங்க தெரியுமா...?”

“வேனா... எதுக்கு...?”

“மகள தூக்கீட்டு வாரதுக்குத்தே... அந்தம்மா போகப் போறது இல்ல... கமிசங்கட லோடு மேன்களப் பேசி இருக்காங்க...” மெதுவாய் பேசினாலும் அது எல்லாருக்கும் கேட்டது.

கேட்கும் போதே குலை பதறியது. லோடு மேன்கள் காசுக்காக எதையும் செய்வார்கள். “நாம என்னா செய்ய முடியுஞ்சார்... நாமளே அவகள அண்டிப் பொழைக்கிறவங்க... டீச்சர் சொன்ன மாதரி நடக்கறது நம்ம கைல கெடையாது... அவெவெ வாங்கி வந்த விதிப்படி அனுபவிக்கட்டும்...” நிராயுத பாணியாகப் பேசினார் சித்திரம் பிள்ளை.

“இவ்வளவு வெனயமில்லாம இருக்கீங்களே... அந்தப் பிள்ளையைத் தூக்கும் போது ஒங்க மகெ சும்மாருப்பானா... சூடான ரத்தம்... இருக்கத்தே விடுமா...”

“துள்ளத்தேன் செய்வா... அதான நம்மள தூசியிலுங் கேடா நெனச்சு போய்ட்டான்...”

“அத விடுங்க... அங்க துள்ளுனா... சேதாரம் செஞ்சுருவானுக... ரெம்ப மோசமான கூட்டம்..”

இப்பவே நெஞ்சுக்குள் கத்தி சொருகின மாதிரி இருந்தது சித்திரம் பிள்ளைக்கு. “நாம என்னய்யா பண்ண முடியும். ஒரு ராத்திரிதே இருக்கு...”

“நான் ஒண்ணு சொன்னா கேப்பீகளா...”

மொத்தக் குடும்பமும் கையெடுத்துக் கும்பிட்டது.

“எப்பிடியாச்சும் நீங்க ஸ்பாட்டுக்குப் போயிரனும்”

“போயி...”

“போயி, ஒங்க மகனையும் அந்தப் பிள்ளையையும் வத்தலக்குண்டு போலீஸ் ஸ்டேசனுக்கு அழச்சிட்டுப் போயிருங்க...”

“போலீஸ் டேசனுக்கா...”

“அதுதே பாதுகாப்பு.”

“அங்கனயும் காசு குடுத்தாங்கன்னா...” டீச்சர் புதுசாய்க் கிளப்ப, அவரால் பதில் சொல்ல முடியவில்லை. “அத, அப்புறமா யோசிப்பம்... மொதல்ல இதச் செய்யட்டும்...”

இருந்தாற் போல ஆடு கத்த ஆரம்பித்தது. அந்த அகால வேளையில் அந்த கத்தல் கூடுதல் பயத்தைக் கொடுத்தது. “ஆமாக்கா... எவ் வீட்டுக்கார்ரு சொல்வாரு... எதாச்சுலும் அடிதடிக்கின்னா லோடு மேன்களத்தே சம்பளம் பேசி கூட்டிட்டுப் போவாகளாம்... இந்த நெலமைக்குக் கொண்டு வந்து விட்டுட்டானே... எடுவட்டபய...”

“அய்யோ... பிள்ளையே... என் கண்ணால இதெல்லாம் பாக்கணும்னு வச்சிட்டியே... அவெஞ் சாதகத்தப் பாரு... பாருன்னா கேக்குறாளா... சாமக் கோடாங்கி சொன்னதுலருந்து எல்லாமே... வர்சயா... வந்துகிட்டே இருக்கே...” கிழவி புலம்ப, பருவதம் தாயாரை அதட்டினாள் “ஆமா, சாதகத்தப் பாத்து, ஒன்னய சாத்தி வெக்கெ வேண்டிதே...”

“ஆத்தாளும் மகளும் பேச்ச நிர்த்துங்க... எப்பப் பாத்தாலும் கசகசன்னு வீட்டவே எழவெடுத்த வீடா மாத்திப் புடுவீக...” அதட்டிய சித்திரம் பிள்ளை, வாத்தியாரிடம்

“நீங்கதே சார் ஓசன சொல்லணும் ஒண்ணும் ஓடல...” என்றார்.

“வேற ஒண்ணுமில்லீங்க... ஒங்க சகல - இந்தம்மா புருசெ கம்சங்கடைல வேலை பாக்குறார்னு சொன்னீங்கள்ல...”

“ஆமாங்க சார்.. ஓ... வீட்டுக்கார்ருதே...” மயில் முன்னால் வந்தாள்.

“லோடு மேன்ல அவருக்குத் தெரியாத ஆள் இருக்க மாட்டாங்கள்ல... அவங்கள்லயும் ரெண்டு நல்ல ஆளுக இல்லாம போக மாட்டாங்க... அவங்ககிட்டப் பேசி ஒண்ணோ ரெண்டோ ஆளுகளக் கூப்பிட்டுக் கிட்டு, விடியக்காலைல வெள்ளன அவங்களோட போலீஸ் ஸ்டேசன் போயி நின்ரனும்... “இது பூராவும் இந்த நிமிசத்தில இருந்தே ராவோட ராவா நடந்தா நல்லது.”

“இப்பவே கௌம்பவா...?”

“பின்ன... அய்யரக் கூப்புட்டு நல்ல நேரம் பாத்துட்டுப் போங்க...”

மயில் பதறினாள். “மாமா, சொன்னா டக்குன்னு கௌம்பணும்... பொறப்படுங்க...”

RangaRakes tamilnavarasam.com

“நானுமா...”

“போங்க... பொம்பளப் பிள்ளையா எப்படிப் போகும்...” வாத்தியார் விடாமல் விரட்டினார்.

“இல்லிங் சார்.. வீட்ல இருக்குது ஆம்பளைனு நா ஒரே ஆளு... ஏற்கனவே டெய்லி எதுனாச்சும் வில்லங்கம் வெவகாரம்னு ஆள் வந்துட்டே இருக்கானுங்க... இதுல நானும் போய்ட்டா...”

“பரவால்ல... இன்னிவரைக்கும் துப்பு கெடைக்காததால ஓங்ககிட்ட வெவகாரம் பண்ணாங்க... இப்பத்தான் பொதையல் இருக்க எடம் தெரிஞ்சிருச்சில்ல இங்க எதுக்கு வாராங்க... வந்தா நாங்கெல்லா இருக்கம்ல... பாத்துக்கறம்...”

“ஆத்தா... சீலக்காரி... ஏனாத்தா இப்பிடிப் போட்டு சோதிக்கிற... ஒவ் வெளாட்டத் தாங்கக் கூடிய சத்தி எங்களுக்கில்லம்மா...” கிழவி வானத்தைப் பார்த்துக் கும்பிட்டதும் நிலா உச்சி வானத்தில் ஏறி நின்றது.

# 10

டீச்சரின் வீட்டுக்குள் நுழையும் போது காலைக் கெந்திக் கெந்தி நடந்து வந்தார் சித்திரம் பிள்ளை. வீடு, பெரிய்ய வீடாயிருந்தது. தரையெல்லாம் ஜில்லென கண்ணாடிக்கல் பதித்தது போல பளபளத்தது. பாதத்தில் ஏறிய குளிர்ச்சி உடம்பெங்கும் பரவி உச்சந் தலை முட்டியது. லைட்டு கூட நெலா வெளிச்சம் போல வெளேரென இருந்தது. காமாச்சியக்கா வீட்டில் கூட இத்தனை சோடனை இல்லை. அதப்போய் சோடு போட முடியாது. எலிப் பொந்து போல பொடவு பொடவாய் நீண்டுகிட்டே இருக்கும். ரேசன் கடைக்கினே கட்டுன வீடு அது.

இங்கே ரெண்டு பக்கமும் மெத்தை போட்ட நாற்காலிகள் நீளநீளமாய் போட்டிருந்தார் வாத்தியார். கடீ டேபிள் கண்ணாடி போட்டு இருந்தது. அதுக்குப் பக்கம் ஓராள் உக்காரும் சாய்மான சேர் அதில்தான் சார் உக்காந்திருந்தார்.

“உக்கார்ங்க...” சார் பனியன் போட்டு இருந்தார்.

சித்திரம்பிள்ளைக்கு எங்கே உட்காருவது என்று புரியவில்லை நீளமான சேர்கள். பக்கமா 'ஒக்காரவா... தூரமாவா...

ரெண்டாம் முறையும் ஒக்கார்ங்க' என்றதும் நின்ற இடத்திலேயே உட்கார்ந்தார். மெத்தை தூக்கியடித்தது. வேட்டிக்கு மேல் ஜில்லென குளிர்ச்சி ஏறியது. மதிலெல்லாம் வழுவழுப்பாய் இரும்பால் அடிச்சது போல கெட்டியாய் இருந்தது.

“ரூம்பே சில்லுனு இருக்கு...”

“ம்... மார்பிள் தரை... பொதுவா கிளேமேட்டே கூலிங்காத்தான இருக்கு... ” என்றவர் என்னா நொண்டுறீங்க...?” எனக் கேட்டார்.

சார் கேட்டதும் வெக்கம் வந்துவிட்டது சித்திரம் பிள்ளைக்கு... "ஒண்ணுமில்லங் சார்... நாய் கடிச்சிர்ச்சி...” என்றார்.

“நாய் கடிச்சிருச்சா... என்னிக்கி..”

“இப்பத்தா...”

‘‘இப்பத்தானா... இங்க வர்ரப்பயா...’’ ஆச்சர்யத்துடன் கேட்டார்.

“ஆமாங் சார்...!”

“என்னாங்க கொடுமயா இருக்கு... இப்ப நாய்ச் சத்தங் கேட்டதே... ” வாத்தியாருக்கு அதிசயமானவராய் தெரிந்தார் சித்திரம் பிள்ளை.

“அதான் சார்... அம்மா கூப்ட்டாங்களா... உடனே சட்டையப் போட்டுட்டு வெளிய வந்தா ஒரே கரச்சலு... கேட்ருப்பீங்க... நாலு அஞ்சு நாயி. ஒண்ணோட ஒண்ணு மாத்தி மாத்தி கொலச்சு

கொதறிக்கிட்டே இருக்கு... தாண்டி வர முடில... கழுதிக ஒரெடத்தில நிண்டு சண்ட போடுதுங்கிறீங்களா... ராட்ணம் சுத்துன மாதரி அங்க இங்கன்னு சுத்தி வந்துகிட்டே இருக்குதுங்க... உள்ள பூந்து நொளைஞ்சு வந்துரலாம்னா... ஒண்ணொண்ணும் வாயப் பொளந்து வாச்சி வாச்சியா பல்ல நீட்டிக்கிட்டிருக்கு... நீங்க பாத்துருக்கணும் பயந்துருப்பீங்க..." கதை சொல்லும் சுவாரஸ்யத்துடன் சொல்லிக் கொண்டே வந்தார். அவர் சொல்லச் சொல்ல வாத்தியாருக்கு அது படமாய் விரிந்தது. விவரித்த பாணி சிரிப்புக் காட்டியது.

"அப்பறம் என்னாதே செஞ்சீங்க... பேசாம ஓடீ வந்து லாங் ஜம்ப் பண்ணி வந்திருக்கலாம்ல..." சிரித்தார்.

சித்திரம் பிள்ளை வாத்தியார் சொன்னது புரியாமலே தொடர்ந்தார். "பெறவு பாத்தே வசம்மா ஒரு கல்லு சிக்குச்சு, எடுத்து விட்டே ஒரு விடு. அம்புட்டுத்தே கந்து கந்தா பிச்சு ஓடிருச்சுக... அதுல ரெண்டு சள்ளவாரி நாயிக சண்ட போட்டுகிட்டே எங்காலடில வந்து விழுந்துருச்சுக, ஓங்கி ஓதச்சதுல.. பல்லா நெகமான்னு தெரீல... நறுக்குன்னுபதிஞ்சிருச்சு..."

"ச்ச்... ரத்தம் வந்திருச்சா..."

"பெருசா வர்ல... முள்ளுகுத்தன மாதரி லேசான எரிச்சல்..." சொல்லிக் கொண்டே காயத்தைப் பார்த்துக் கொண்டார்.

"டீச்சர்.." வாத்தியார், மனைவியை அழைத்தார்.

''ஒங்களுக்கும் டீச்சரா...'' சித்திரம் பிள்ளை வாய் பிளந்து கேட்டார்.

"ஆ..மா.. டீச்சர்தான அவுங்க..." என்றவர் "மாயெ அப்பாவுக்கு காயம் பட்ருக்கு டிங்சர் இருந்தா கொண்டு வாங்க...' என்றார். சித்திரம் பிள்ளைக்கு ஆச்சரியமாய் இருந்தது. பொண்டாட்டிய இப்பியெல்லாங் கூப்புடுவாங்களா.. சரி சரி பத்தாயிரம் இருவதாயிரம் சம்பாரிக்கிறவங்க, மரியாத இருக்கும்ல...

"இல்ல சார்.. மருந்தெல்லா வேணாம்... த்துணூண்டு சுண்ணாம்பு இருந்தாப் போதும்."

"நாய்க்கடிக்கு தான... அவங்க சுண்ணாம்புதா போட்டுக்குவாங்க... '' சொல்லிக் கொண்டே டீச்சரம்மா பிளாஸ்டிக் டப்பாவில் சுண்ணாம்பு கொண்டு வந்தார். அதை சித்திரம் பிள்ளையிடம் தந்துவிட்டு, வாத்தியாரிடம் ஏதோ ஒரு கவரைக் கொடுத்தார். உள்ளே போய்விட்டார்.

''சுண்ணாம்பு செப்டிக் ஆயிடாதா...'' வாத்தியார் கேட்க பதிலில்லை.

டப்பா சுண்ணாம்பு களிம்பு போல வழுவழுப்பாய் இருந்தது. நகத்தில் கிள்ளி எடுத்து கடிவாயில் இழுகினார்.

"அவ்ளோதான் சார். சரியாப் போகும்'' டப்பாவை ஓரமாய் வைத்தார்.

"நாளைக்கிப் போயி டி.டி. ஊசி போட்டுக்கங்க..."

"தொப்புளச் சுத்தீல்ல போடுவாங்க... பதினாறு ஊசியாம்ல..."

“இப்ப மூணாக் கொறச்சிட்டாங்க..”

“பெரியாஸ்பத்திரிக்குல்ல போகணும்... இப்ப கானா வெலக்குக்கு கொண்டுட்டு போய்ட்டாங்கெ...”ளே!!..

“சரி... ஒடம்பு முக்கியமில்லியா...

கொஞ்ச நேரம் மௌனம் நிலவியது. சித்திரம் பிள்ளை உடைத்தார். “சார்.. வரச் சொன்னீகளாம்...” நாளைக்கு மயிலு புருசனை தயார் செய்து, லோடு மேன்களை கூட்டிக்கொண்டு மாயனை சந்திக்கப் போவது சம்பந்தமாக வீட்டில் பேசிக் கொண்டிருந்தனர். அப்போதுதான் மறுபடியும் டீச்சர் வந்து, சார் அழைப்பதாகச் சொன்னதும் என்னவென்று கேள்வி எழுப்பாமல் ஓடி வந்தார். படிச்சவங்க சும்மாகூப்புட மாட்டாங்க என்ற நம்பிக்கை இருந்தது. வீட்டிலும், என்னன்னு கேட்டுட்டு வாங்க” என அனுப்பினர்.

“நாளைக்கு மாயனப் பாக்கப் போறீங்கள்ல...”

‘‘நீங்க தான சார் சொன்னீங்க...’’ வேற தகவல் எதும் வந்திர்ச்சா...

“அதத்தான் கேக்குறேன்... போறீங்கள்ல...”

“ஆமா சார்.. ஒங்க யோசன தப்பாகுமா..?”

“லோடு மேன்களப் பாக்கணும் ஸ்டேசனுக்குப் போகணும், தேவப்பட்டா வக்கீலப் பேசணும்.

“வக்கீ..ல்... வக்கீலுமா சார் வேணும்...”

“தேவப்பட்டா...”

“ஆமா சார்...”

“பணம்... இருக்கில்ல...” சொல்லி விட்டு அவரது கண்களைப் பார்த்தார் வாத்தியார்.

அவரால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. என்னதான் நடக்கும் என்பதும் யூகிக்க முடியவில்லை... இருந்தாலும்..

“இருக்கு சார்..” என்றார்.

“எவ்வளவ் வச்சிர்க்கீங்க...”

“ஒரு.. எர நூறு... முன்னூறு இருக்கும்...”

“போதுமா...?”

“வெள்ளாட்டங்குட்டி ஒண்ணு இருக்கு சார்.. அதக் குடுத்தா... ஒரு ஆயிரம் சில்ர வரும்...”

“அது இப்போதைக்கி ஆகுமா...” துரத்தி துரத்தி கேள்வியாய் கேட்க சித்திரம் பிள்ளையால் பதில் சொல்ல முடியவில்லை. இயலாமை போட்டு இரும்பாய் நசுக்கியது. உடல்வலி, மனவலி தாள முடியாமல் தவித்தார்... “சார்...” அழுகையின் விளிம்பில் நின்றார்.

“சரி... இந்தாங்க... இதப்பிடிங்க...” டீச்சர் கொண்டு வந்த கவரை நீட்டினார். “ரெண்டாயிரம் ரூவா இருக்கு... லேட் பண்ணாம வேலயப் பாருங்க...”

சித்திரம் பிள்ளைக்கு இருப்பிடமே தெரியவில்லை. அத்தனையும் கண்முன் சுற்றியது. தடுமாறினார். நிலைக்கு வந்தபோது கண்கள்

எரிந்தன. உறக்கச் சடவா என நிதானிக்குமுன் கண்களிலிருந்து நீர் வடிந்தது. எரிச்சலின் விளைவா என்பதும் தெரியவில்லை. உடம்பு ஒடுங்கி நடுங்கியது. அறையின் குளிரா என்பதும் புரியவில்லை. கைகளை தலைக்கு மேல் உயர்த்திக் கும்பிட்டார். விட்டால் காலில் விழுந்து விடுவார் போலத் தெரிந்தது. வாத்தியார் வேகமாய் வந்து அவரை மறுபடி சேரில் அமர்த்தி விட்டார். தாரை தாரையாய் கண்களில் நீர் வந்து கொண்டே இருந்தது.

"நீங்க... எங்க சாமி... தெய்வம்... ஆட்டுக்குட்டிய வித்து ஒடனே தந்துருவேன்..." கைகளைப் பிடித்துக் கொண்டு சொன்னார்.

"மொதல்ல ஒங்க மகன கூப்புட்டு வாங்க. அவெங்கிட்ட நா வாங்குற வழில வாங்கிக்கறேன்..."

"சார்... நா... அன்னாடங்காச்சி... என்னால என்னா முடியும்னு புரியல. அதனாலயே உசுர விட்றலாம்னுதே கயற எடுத்துக்கிட்டு வீட்டுக்குள்ள போனே... சிறுசுக மொகத்தப்பாத்து திரும்பிட்டே... காசு இல்லேன்னா மானம் ரோசம் இருக்கக் குடாது சார்..."

"சரி சரி... கண்டதப் பேசி நடக்க வேண்டியத விட்ற வேணாம்... மடமடன்னு வேலயப் பாருங்க..."

"சார்... எங்க வகைலயும் பணம் பெருத்தவங்க நெறையா இருக்காங்க சார்... ஆனா ஒருத்தன் கூட சப்போட்டா பேசல சார்... எம் மகெஞ் செஞ்சது தப்புத்தே... குத்தந்தே... இன்னொர் வழில பாத்தா... அவனுக்கென்னாசார் கொறச்சலு... அழகு இல்லியா... அம்சம் இல்லியா... தெம்பு இல்லியா தெறம இல்லியா..."

"பைசா இல்லீல்ல..."

"அதான சார்... அப்பறம் என்னா சார்... சாதி... சனம்..."

"அய்யா, ஒண்ணத் தெரிஞ்சுக்கங்க... ஜாதி சனம்ங்கறதெல்லா... ஒரு ஏற்பாடுதே... நெசமாவே பைசா இருக்கவெ, பசை இல்லாதவெங்கறதுதே உண்மையான சாதிப் பிரிவு. எந்த சாதியிலாச்சும் ஏழையும் பணக்காரனும் சம்பந்தம் பண்ணி இருக்காங்களா... ஆனா பாவ்லா காட்டு வாங்க, எதுக்குன்னா தங்களோட கௌரவத்த பாதுகாக்க. அரசியல்ல மதம்னு சொல்லி சண்டய ஆரம்பிச்சு விட்டு ஓட்டு கேக்குற மாதிரி சாதியச் சொல்லி தன்னக் காத்துக் கிறத்தா..."

"நீங்கள்லா என்னா சாதின்னு தெரியாது..."

"இது மனிதாபிமானம்... இத சாதில சேத்துராதீக..." என்ற வாத்தியார், "ஒரு விசயந் தெரிமா... நானும் டீச்சரும் வேற வேற சாதி..."

"மெய்யா சார்..."

"ம்... நாங்களும் காதல் கல்யாணம்தான். ரெண்டு பேரும் ஸ்டாப்ஸ் ங்கறதால சில விசயங்கள் பலிக்கல. மொத்தத்துல பொருளாதாரத்தில பலமா இருக்கவனுக்கு சாதி, மதமெல்லாந் தடையில்ல..."

"சாதி நம்மளக் காப்பாத்தாதுன்னு எனக்கு எப்பவோ தெரிஞ் சிருச்சு சார். வெம்பய பிள்ளைக்கு கார வீட்டுச் சம்பந்தங் கேக்குதான்னு நடுத் தெருவுல வச்சுக் கேட்டன்னைக்கே... நா வெள்ளாளப் பய இல்ல... வெம்பயதான்னு முடிவு பண்ணிட்டேன்..."

*வெளியில் வந்தபோது மறுபடி நாய்ப் பயம் இருந்தது. ஊரடங்கிக் கிடக்க, சாக்கடைக்குள் எதோ சண்டைச் சத்தம் கேட்டது. எட்டிப் பார்த்தார். பூனைக்குட்டி சைசில் இரண்டு பெருச்சாளிகள். நீள நீளமான மீசை யோடு. கூரான பெரிய பற்களைக் கொண்டு முட்டுவதும் விலகி நின்று வாய்சத்தம் கொடுப்பதுமாய் வெள்ளாடுகள் போல மோதிக் கொண்டிருந்தன.*

# 11

வீரு சின்னுவின் வீட்டை விட்டு வந்ததும் தெருவோரத்தில் சிறுநீர் கழிக்க உட்கார்ந்தான் சோனைமுத்து. சுரீரென எரிச்சலோடு ஒண்ணுக்குப் போனது. எழுந்த பிறகும் காந்தல் தீரவில்லை. தொப்பிளைச் சுற்றியே கொதிப்பு தங்கியிருப்பதாய் உணர்ந்தான். சூடு பிடிச்சுக் கிடுச்சு போல... அப்பிடியே பின்னால் வளைந்து கைகளை நீட்டி உடம்பு முறுக்கி சோம்பல் விரட்டினான். மல்லாந் தவன் கண்களில் ஆகாயம் பெரிய ஐஸ்கட்டியாய் தெரிய எதையோ தேடினான்.

அது ஒரு தனி உலகமாக இருந்தது. பூமியைப் போல மொங்கு முடிச்சாக இல்லை. எல்லாமே பளிங்குகளால் ஆகி இருந்தன. ஐஸ் பெட்டிக்குள் அலைவது போல வழுக்கிக் கொண்டு திரிந்தன. மேகங் களும் நட்சத்திரங்களும். தாடி வைச்ச சாமியார் போல வெளுத்த தலையுடன் விசுக்கட்டி விசுக்கட்டி என்ற நடையுடன் ஒரு இடத்தில் நில்லாமல் குறுக்கும் நெடுக்குமாய் திரிந்து கொண்டிருந்தன மேகங்கள். நட்சத்திரங்களோ, பெருங் கொண்ட பணக்காரன் வீட்டுக்குள் ஆணியடிச்சு மாட்டிய மின்சார விளக்குகள் போல ஆடாமல் அசையாமல், பொட்டான் பொட்டானென முழித்துக் கொண்டிருந்தன. இத்தனை ஆரவாரங்களுக்கிடையில், குடித்துவிட்டு நடந்து போகிற அழகான பெண்ணைப் போல நிலா, மேகத்தில் முட்டியும் மோதியும் போய்க் கொண்டே இரந்தது.

மாயனும் வசந்தியும் வந்த நாளில் நிலா இல்லை. ஒரே இருட்டுதான். நட்சத்திரங்கள் மட்டுமே; குளத்தங்கரை அழகர்சாமி கோயில் விளக்குபோல எரிந்து கொண்டிருந்தன. லட்சக்கணக்கான தீப ஒளிகள். எதோ பொத்தல் விழுந்த கிடுகு பந்தலைப் போல வானம் கிடந்தது.

“ஒரு ராத்திரி மட்டும் தங்கிவிட்டு போய் விடுவதாக சொல்லித்தான் வந்தார்கள். கையில் ஆளுக்கொரு தோள்பை வைத்திருந்தனர். அப்பவும் வசந்தி மாயனுக்குப் பின்னாலே மறைந்துதான் இருந்தாள். தோப்புக்கு போய்விட்டுத் திரும்பும்போது வழிக்கடையின் மரப்பெஞ் சில் உட்கார்ந்திருந்தார்கள். ஆரோ சொன்னார்களாம்; சோனமுத்து இந்த வழிதா வருவான்னு. லெக்காய் பிடித்துக் கொண்டான். காப்பி வாங்கித் தரக்கூட அப்போ, இவனிடம் காசில்லை. மாயன்தான் வாங்கிக் குடுத்தான்.

சுக்கு வாடன்பட்டி பெத்தனாச்சி மில்லில் வேலை பார்க்கும் போதும் அப்படித்தான். யாரிடம் காசில்லைன்னாலும் இருந்தாலும், மாயன்தான் முதலில் காசெடுத்துத் தருவான். செலவு பண்றத கணக்குல வைக்கக் கூடாது என்பான். அதுபோல தன்னிடம் இல்லை என்றால் அடுத்தவரிடம் கேட்கவும் தயங்க மாட்டான். எல்லாருக்கும் அவனைப் போல மனசிருக்காது. அதைப் பத்தியும் தப்பு சொல்ல மாட்டான். இருந்தா குடுப்பாங்கள்ல... என்று சாதாரணமாய்ச் சொல்லி விட்டுப் போய் விடுவான்.

அந்த மில்லில் வேலைக்குச் சேர்ந்த போது இங்கேயிருந்து தினமும் போய்வர சிரமமாயிருந்தது இவனுக்கு. மூணு ரூபாய் சம்பளத்திற்கு அஞ்சு ரூவாய் பஸ்சுக்காக செலவழிக்க வேண்டி இருந்தது. அதிலும் ‘ஓவர் டைம்’ செய்யச் சொல்லி நிறுத்திக் கொண்டார்கள் என்றால், மில்லிலேயே படுத்திருந்து, மறுநாள் சிப்ட்டும் பார்த்து விட்டுத்தான் ஊருக்கு வர முடியும். அதுமாதிரி நேரத்தில் மாயன்தான் சோறு தருவான்.

பிறகுதான் அங்கேயே ரூமெடுத்து தங்குகிற ஏற்பாடு நடந்தது. சோறு தண்ணி மட்டும் மாயன் வீட்டில், எதோ ஒரு வகையில் சொந்தமாகிப் போனான். கொஞ்ச நாளில் மில்லுக்குப் பக்கத்திலேயே குடிசை வீடுகள் குறைந்த வாடகைக்கு கிடைக்க, மாறிக் கொண்டான். இருந்தாலும் உணவு பழக்கம் தொடர்ந்தது.

மில்லில் ஏற்பட்ட பிரச்சனைகளைத் தொடர்ந்து அந்த வேலையை விட வேண்டியதாயிற்று. ஆனாலும் கடிதங்கள் வழியாகவும் கோயில் பெரிய கும்புடுகளுக்காகவும் ஒரிரு முறை போக்குவரத்து இருந்தது. கொஞ்ச நாள்தான் இடைவெளி ஜாஸ்தி.

மாயன், இப்படிச் செய்வான் என்று சோனைமுத்து எதிர்பார்க்கவில்லை. மில்லில் எத்தனையோ பேருக்கு புத்தி சொல்லி இருக்கிறான். அவனே ஓடுகாலியாய்ஊரூராய் அலைய வேண்டி வந்திருக்கிறதே... “கே.கே. பட்டி, சீலையம்பட்டில ரெண்டு மூணு நாளா இருந்திட்டம். இந்த எடம் யாருக்கும் எட்டாது... ஒரு நா, கூடுனா ரெண்டுநாள்... நைட்டு மட்டுங்கூட கழிச்சிட்டா வேறஎடம் யோசிக்க தோதுவா இருக்கும் சோனெ...” தணிவாய்ப் பேசினான் மாயன்.

கடைசியில் அந்தப் பெண் வசந்தி, தங்கச்சி முத்துமணி வளத்திதான் இருந்தது. கொஞ்சம் சதைப் பிடிப்பு. கழுத்தில் சின்ன சங்கிலியும், காதில் பேசரியும் போட்டிருந்தது. சங்கிலி தங்கமா... வசதியான வீடாம்ல... தங்கமாத்தான் இருக்கும்.

“இன்னைக்கில்ல... நாளைக்கில்ல.. வர்சம் பூரா இங்கியே கூட இருங்க...!” வேகமாய் வாக்கு குடுத்தான் இவன். வசந்தியின் மூடிக்கிடந்த முகம் சூரியனாய் பிரகாசித்தது. சோனைக்கு அந்த வடிவு மேலும்

உற்சாகம் தந்தது. “எந்தப் பிரச்சனை வந்தாலும் நா... முன்னுக்கு நின்னு பாத்துக்குவேன்... வாங்க...” என்று அழைத்து வந்தான்.

வீட்டில் அப்போதைக்கு எதும் சொல்லவில்லை. நாலைந்து நாளைக்குப் பிறகுதான் அம்மா குமுறத் தொடங்கியது.” ஒல வாய மூடுனாலும் ஊர் வாய மூட முடியாதடா...”

‘‘ம்... கொசவ பாளையத்துல சொல்லி பெருசா செய்யச் சொல்லட்டா...” நக்கலாகச் சொன்னான்.

“இந்த மாதிரி வில்லங்கமான விவகாரங்களத் தாங்கற அளவுக்கு நம்மள்ட்ட சத்து இல்லடா மகனே...” என்றது” பொம்பளப் பிள்ள பிரச்சன. ஒருத்தெ இல்லாட்டி ஒர்த்தே ரோசப் பட்டான்னா... நம்ம பொழப்பு நாறிப் போகும்... நம்ம வீட்லயும் புள்ளைக இருக்குதுப்பா... ” எச்சரித்தது.

“கொஞ்ச நாளக்கித் தாம்மா... தொரவு காவல் வேல கெடச்சிருச்சின்னு வையி... தனி வீட்ல தள்ளி விட்றலாம். ஒண்ணுக்குள்ள ஒண்ணுதாம்மா... பெருசா சண்ட சத்தம் வர சான்சு இல்ல... இல்லாட்டி இன்னவரைக்குமா சும்மாருப்பாங்க...” இவன் ஒரு கணக்குப் போட்டிருந்தான்.

ஆனாலும் வசந்தி எல்லோரிடமும் பிரியமாய்ப் பழகியது. மாயனைப் போல காசு விசயத்திலும் தாராளமாய்த் தான் இருக்கிறது. பாவம்... நண்பனுக்கு நாம செய்ய வேண்டிய கடன்...

இன்னிக்கு அவங்க ஊர்லருந்து வந்தவங்களும் மொதல்ல வித்தியாசமாய் பேசல... அதனாலதான் அவங்கள வீட்டுக்கு கூப்பிட்டு வந்து பேச விட்டான். போகும்போது எதுக்கு அம்புட்டு ஆத்தரத் தோட போகணும்... நாமதா நாளைக்கு அவக அம்மாவோட வந்து அழச்சிட்டு போங்கன்னுதான சொன்னம்... அப்பறமு எதுக்கு ஊருக்குள்ள உளவாளிய விட்டுப் போயிருக்காங்க... பன்னீர் எதேதோ சொல்லி பதறுறான். பணம் வேணுங்கிறான்... எல்லாமே தினுசு தினுசா இருக்கு... யார்கிட்ட காசு இருக்குன்னு விசுக்காரமா வந்திட்டம்...?

வேகமான நடை யோசனையின் தீவிரத்தில் வேகம் குறைந்து மிதமானது. கால்கள் கடை வீதிப் பக்கம் நடந்தன. ஓட்டல்கள் பெட்டிக் கடைகள் தவிர, எல்லாக் கடைகளும் மூடிக் கிடந்தன. ரோட்டின் இருபுறமும் தெருவை நிறைக்கும் விளக்கொளி. கடேசிக் கடையில் கொத்து புரோட்டா ராகம் பாடிக் கொண்டிருந்தது. கடைகளில் கூட்டம் ரெம்பக் குறைந்திருந்தது. பன்னண்டு மணி வரைதான் கடை இருக்கும்.

யாரோ ஆள்கள் வந்திருப்பதாய் பன்னீர் சொன்னானே.. யார் அது... பாத்துவிட வேணுமென்ற ஒரு வேகம் எழுந்தது. கடை வீதியில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தான். சட்டைப் பையை தடவிப் பார்த்தான். பத்து ரூபாய் இருந்தது. எதாச்சும் ஒரு ‘கட்டிங்’ அடித்தால் இன்னமும் வேகம் கிடைக்கும்...

யாரிடம் காசு கேட்பது... நிச்சயமா வீட்டில் முடியாது. கேட்டாலும் தர்ர நிலமை இல்லை. வீட்டுக்குப் போனா மாயன்ட்டதா கேக்கணும். வசந்திதாங் குடுக்கும். எவ்வளவோ வாங்கியாச்சு. கேக்காமலேயே வீட்டுச் செலவெல்லாம் செய்யிது. வெக்கமில்லாம நாமளும் கை நீட்டி விடுறம். தங்கவச்சதுக்கு வாடக வசூல் செய்ற மாதிரில்ல இருக்கு... அவங்க போகறதுக்குள்ள வாங்குன காச ஒப்படைச்சிரணும்... இல்லாட்டி அதுவே முள்ளாக் குத்தி கிட்டிருக்கும். யார்ட்டப் போய்க் கேக்க... எம்புட்டு தேவப்படும்... யார் குடுப்பா...

கடைவீதி ரோட்டிலேயே இலக்கு இல்லாமல் சுற்றிச் சுற்றி வந்தான் சோனைமுத்து.

# 12

காமாட்சி பவனம் இன்னமும் உறங்கவில்லை. வெளிவிளக்கு அணைக்கப்பட்டு உள்ளே மட்டும் ஒரே ஒரு பல்பு எரிந்து கொண்டிருந்தது. தரை பார்த்து நடக்க ஒரு கைபேட்டரி மட்டும் வைத்துக் கொண்டனர். வெளிக்கதவு முழுதும் அடைத்து விடாமல் பாதிக்கதவு திறந்திருந்தது. ரேசன் கடையில் இருந்து சைக்கிளில் மண்ணெண்ணை கேன்கள் வந்தன. சைக்கிளோடு உள்ளே நுழைந்தன. கேனை இறக்கி தாவாரத்தில் வைத்ததும், ஒராள் தூக்கிக் கொண்டு அரங்கு ரூமுக்கு போனான். ரூமுக்குள் கேன்களை சரிபார்த்து இறக்கிக் கொண்டிருந்தாள் காமாட்சி. அவள் சொல்லச் சொல்ல கேன் மூடியைக் கழற்றி ரெப்புவதும், வரிசைப்படுத்தி நிறுத்தவுமாய் இன்னொருத்தன் வேலையில் இருந்தான். அடுத்த அறையில் ரேசன் அரிசி, சீனிச் சாக்குகளில் மாற்றப்பட்டு அட்டியல் போட்டு அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கோதுமை ரெம்பக் குறைச்சலாய் ரெண்டு மூணு மூட்டைகள் மட்டுமே கண்ணுக்குத் தெரிந்தன.

“லேய்... சிந்தாம ஊத்துடா... ஒரு பொட்டு சிந்தினாலும் வீடெல்லாந் நாறி, வச்சிருக்க அரிசி பருப்பெல்லாம் வீச்ச மெடுத்துப் போகும்... நெதானமா ஊத்து.” பெரிய்ய புனல் வாங்கிக் கொடுத்திருந்தாள். ரெம்பநாள் சர்வீஸ்காரனைப் போல சுறுசுறுப்பாகவும், நறுக்காகவும் வேலை பார்த்தான் அவன். காமாச்சியின் எதிர்பார்ப்பின் படி ஒரு சொட்டுக் கூட சிந்தவில்லை. ஆனாலும் வீடு நாற்றமெடுத்துக் கொண்டிருந்தது.

ஒவ்வொரு வாரக் கடைசியிலேயும், வாங்காத ரேசன் கார்டுகளுக்கான பொருள்கள். இவளது வீடு தேடி வரும். என்ன சோலி தொந்தரவுகள் இருந்தாலும் அன்னைக்கு மட்டும் யாரையும் வெளியே விட மாட்டாள். எத்தனை பேர் இருந்தாலும் எல்லாருக்கும் வேலை வைத்திருப்பாள். பகலிலேயே பெரும்பகுதி சரக்குகள் வீடு வந்து சேர்ந்து விடும்.

ரேசன் கடைகள் ஒரே இடத்தில் இருந்தபோது வேலைக்கு தோதுவாய் இருந்தது. தினசரி குறிப்பிட்ட நேரத்தில் வேலை முடிந்துவிடும். அலச்சல் இல்லை. அரிசி கோதுமை புடைக்க மட்டும் தனி ஆள் தேவைப்படும். அதும் வீட்டுக்குள்ளேயே நடப்பதால் கங்காணி கூட அவசியமில்லை. இருந்தாலும் அருகிலிருந்து வேலை

வாங்குவது போல இருக்காது. அதற்காகவே அந்த வேலையை ரேசன் கடை லீவில் வைத்துக் கொள்வாள். அதுக்கெல்லாம் மாயன் ஆத்தா பருவதம்தான் தோதுவானவள். காலை நீட்டி சுளகைப் பிடித்து உட்கார்ந்து விட்டாளானால், சாம ஏமம் பாக்காது வேலை முடித்து விட்டுத்தான் எந்திரிப்பாள். கெட்டிக்காரி.அவளைக் கொண்டுதான் அவள் புருசனும், மகனும் வேலைக்கு வந்தார்கள்.

கவுன்சிலர் தேர்தலுக்குப் பிறகு வாரடுக்கு ஒரு கடை வேணும் என்கிற மாதிரி செயித்து வந்த லோலாயிகள் (கவுன்சிலர்களுக்கு காமாட்சியாத்தாளின் செல்லப் பெயர்) செஞ்ச வேலையால் நாலா பக்கமும் கடைகள் பிரியலாயிற்று. அலச்சல் அதிகமானது. வேலையாள்களும் கூடுதலாக தேவைப்பட்டது. எத்தனை பாரமானலும் சைக்கிளிலேயே வைத்துத்தான் லோடு அடிக்க வேண்டும்.

கூடுதலாய் இருக்கு என்பதற்காக ஆட்டோவோ டெம்போவோ கொண்டு வந்தால், குடும்பத்தைக் கவிழ்த்து விடுவார்கள். திடீர் திடீரென வருகிற செக்கிங்கில் சைக்கிள் போனால் நூறு எரநூறுதான் நஷ்டம்... ஆட்டோ டெம்போ சிக்கினால்... கேசும் பெரிசாகி விடும். இத்தனைக்கும் மாசத்துக்கு இத்தனை என்று கேசும் குடுத்து வருகிறாள். ஆனாலும் திடீர்னு வந்து நிறுத்தி, பேப்பரில் அவனுக பேரு வந்தாத்தாத் தாவந்தீரும். கொஞ்சமும் விசுவாசமில்லாத பயலுக... அப்பிடிப் பயலுகளுக்குத்தே கடவுளு கண் பாக்குறான்... பைக்கென்னா... பவுசென்னா... பொண்டாட்டி மார்களுக்கு நகையென்னா... நட்டென்னா...

புலம்பிக் கொண்டே இருந்த காமாட்சியாத்தாள் ஒட்டையன் கொண்டு வந்த கேனை நிறுத்தினாள்.

“ஆத்தா...” என முழித்தான்.

“எத்தன விட்ருடா” கேனை தூக்கிக் காட்டினாள் முக்காலுக்கும் கீழே இருந்தது மண்ணெண்ணை.

“தெரியலாத்தா..”

“தெரியாம மசுர் புடுங்கவா வந்த”

“அப்பெந்தேங் குடுத்து விட்டாரு...” கருத்தக் கண்ணனை கடையில் நிறுத்தி இருந்தாள். மொத்தமாக பில் வாங்கி இருந்தாலும் எண்ணை ஊத்துகிற இடத்தில் ஆள் நிக்காவிட்டால் ஊத்துறவன் கவுத்தி விடுவான்.

“அந்த மனுசெ எங்கருக்காரு...”

“எண்ணெ டேங்குகிட்ட தான்த்தா...”

“மிசினு கிட்டதே நிக்கிறாரா... இல்ல எங்கிட்டும் பெறக்கித் திங்க கெளம்பிட்டாரா...”

‘‘நா வாரப்ப அங்கதான்த்தா இருந்தாரு...’’ ரெம்பவும் எச்சரிக்கையாகப் பதில் சொன்னான்.

RangaRakes tamilnavarasam.com

“சரிவா...” உள்ளே வேலை பார்த்துக் கொண்டிருந்தவனை அழைத்து கதவைப் பூட்டி, காவலுக்கு இருக்கச் செய்தாள். “இர்ரா வந்திர்ரேன்... கேன் வந்தா இங்குன ஓரமா வாங்கி வையி...” என உத்தரவிட்டு விட்டு ஒட்டையனைப் பார்த்து, “நீ வாடா... அந்த கேனத் தூக்கிட்டு வாடா... கொஞ்சம் அசந்தா ஆளக் கொன்னுருவாங்கெ போலருக்கே... வட்டிக்கி வாங்கி வாசிக்கி வாங்கி ஏவாரம் பாத்தா... எவண்டா எண்ணெ ஊத்தறது...” ஒட்டையனைக் கேட்டாள்.

“வீரய்யன்த்தா...”

“ஆரு அந்த மழுவனா..? ஒங்க பய..!”

“ஆமா...த்தா...”

“அவனுக்கு இருக்குடி வேட்டு... மனசுல என்னமோ ஜில்லா கலெக்டருன்ன நெனப்பு... ஏய் வீட்டப் பாத்துக்கங்கடி... ஆரும் வந்தா இருக்கச் சொல்லுங்க... வாடா வேகமா...”

சைக்கிளை எடுத்துத் திருப்பினான்.

“வண்டி ஓட்டத் தெரிமாடா...”

“ஆத்தா...”

“டிவிஎஸ் வண்டி ஓட்டுவியா...?”

“பைக்கே ஓட்டுவேன்த்தா...”

“ம்... அம்ம வண்டிய எடுத்துவா...” சாவியை நீட்டினாள். வெளியில் படுதா போட்டு மூடி இருந்த 'எக்ஸெல்' வண்டியை ஒட்டையன் ஸ்டார்ட் செய்ய, மண்ணெண்ணைக் கேனுடன் காமாட்சி பின்னால் ஏறி உக்கார்ந்தாள்.

வண்டி புறப்பட்டதும் வீட்டுக்குள் டெலிபோன் மணி அடித்தது.

## 13

வண்டி ஒரே சீரான வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது. ஊர் மொத்தமும் அமைதியாயிருப்பது போலத் தோற்றமளித்தது. தெருக்களில் ஆள் நடமாட்டம் சுத்தமாய் இல்லை. பலசரக்குக் கடைகளின் வெளித் திண்ணைகளில் படுத்திருப்போரும், வெளிச்சம் குறைந்த சந்துக்குள் நின்றபடியே சிறுநீர்க் கழிக்கும் வழிப் போக்கர்களும் தவிர வேறு அசங்கல்கள் இல்லை. மாட்டாஸ்பத்திரியை ஒட்டிய திருப்பத்தில், யாரோ ஒரு பெண், தெரு விளக்கின் கீழ் தனது குழந்தையை உட்கார்த்தி வைத்து, ‘ஆய்’ போக, வைத்துக் கொண்டிருந்தாள். வண்டிச் சத்தம் கேட்டு உறக்கச் சடவோடு கொட்டாவி விட்டபடி திரும்பிப் பார்த்தவள், வண்டி அவளைக் கடக்கும் வரை கிடை மட்டத்தில் பார்வையை செலுத்தியபடியே இருந்தாள்.

ஒட்டையன் வண்டியை ரொம்பவும் பதனமாகச் செலுத்திக் கொண்டிருந்தான். ஆத்தாளை வைத்து வண்டி ஓட்டுவது பெருமையாக இருந்தது. அதேசமயம் பயமாகவும் இருந்தது. எந்த நேரம் என்ன வசவு வருமென அனுமானம் சொல்லவே முடியாது.

முதுகுக்குப் பின்னால் மண்ணெண்ணை கேன் அழுத்தியது. பள்ளம் பார்த்துப் போனாலும், குறை குடமாய் இருந்த கேனில் இருந்து கூத்தாடிய எண்ணை கசிந்து அவனது முதுகுச் சட்டையை நனைத்து உடம்பில் சிலுக்கச் செய்து அடுத்த நிமிசம் எரிச்சலை உண்டு பண்ணியது. ஆத்தாளுக்கும் சீலை நனைந்திருக்கும்.

“ஆத்தா...கேன, எங்காலடில வச்சுக்கிடட்டா..” அக்கறையுடன் கேட்டான்.

எதிர்காற்றும் நிலவுக் குளிர்ச்சியும் அறைந்ததில் காமாட்சிக்கு அவனது பேச்சு சரிவர விழவில்லை. “என்னாடா...” என்றாள்.

“இல்லாத்தா... கேனு, அங்கன எடஞ்சலா இருந்தா... எங் காலடில வச்சுக்கலாமேனு சொன்னே...”

“கண்ணுங் கருத்துமா வண்டிய மட்டும் ஓட்டப் பாரு... எதெத எங்கெங்க வக்கெணும்னு எனக்குத் தெரியும்...!” இருவருக்கும் இடையில் சுவராய் நின்ற கேனை, ஒருகை இறுகப் பிடிக்க, மறுகை வண்டியிலிருந்த கைப்பிடியைப் பற்றிக் கொண்டது. கேனுக்குள்ளிருந்த எண்ணை ‘சலப் சலப்’ எனக் குலுங்கியபடியே இருந்தது.

RangaRakes tamilnavarasam.com

கூட்டுறவு வங்கியின் வளாகத்தின் தென் பகுதியில்தான் மண்ணெண்ணை விநியோகம் நடக்கிறது. வங்கிக்கு எதிர்ப் பக்கமிருந்த பிராந்திக் கடையில் 'இங்கே பார் வசதி உண்டு' என்று பளிச்சென எழுதப்பட்ட பலகைக்குத் தனியாக ஒரு லைட் போட்டிருந்தார்கள். வாசலில் சைக்கிள்களும், பைக்குகளும் ஒன்றிரண்டு நின்றிருந்தன. வங்கியின் முகப்பு வாசல் பூட்டப்பட்டிருந்தது. மேலே இருந்த பெயர்ப் பலகையில் விளக்குகள் எரிய, வங்கி இருண்டிருந்தது.

"வண்டிய எங்கன நிறுத்தட்டும் ஆத்தா..."

"ம்... நடுரோட்ல நிறுத்து... ஸ்பாட்டுக்கே கொண்டுப் போடா..." வங்கியின் பின்பக்கமாகத் தான் இந்த நேரத்தில் விநியோகம் நடக்கும். வங்கியைச் சுற்றி முள் கம்பி வேய்ந்திருந்தனர். வேலியை ஒட்டி காட்டுச் செடிகள் அடர்த்தியாய் வளர்ந்து கம்பிகளில் படர்ந்திருந்தன. வேலியை ஒட்டிச் சென்ற வண்டிப் பாதையில் ஒட்டையன் செலுத்தினான். வங்கியின் பின்பக்கம் வீடுகள் குறைச்சலாயும், வெளி அதிகமாகவும் இருந்தது. ஓரமாய் வண்டியை நிறுத்தி பூட்டினான். வங்கிக் கட்டிடத்தின் பின்புற உச்சியில் ஒரு ட்யூப் லைட் நெட்டு குத்தாய் நின்றிருந்தது. அதுவும் இப்போது அணைக்கப்பட்டு இருந்தது. அந்தச் சுவரை ஒட்டித்தான் மண்ணெண்ணை பங்க் அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு மேல் கூரையும் கம்பி வேலியும் தனியாக இருந்தது. கூரையின் கீழ் டார்ச். லைட் வெளிச்சமும் ரெண்டொரு ஆட்களின் நடமாட்டமும் அருவமாய்த் தெரிந்தது. நிலா அங்கே ஒத்துழைக்கவில்லை.

வண்டிச் சாவியை ஆத்தாளிடம் கொடுத்து விட்டு கேனைத் தூக்கிக் கொண்டு முன்னால் நடந்து வந்தான். முள்வேலிக் கம்பியில், சிறு இடம் அகலப்படுத்தப்பட்டு ஓராள் நுழையுமளவு இடைவெளி இருந்தது.

"குனிஞ்சு வாங்காத்தா..." மேலும் கீழுமாய் ஓடிய கம்பிக்குள் குனிந்து காலை நீட்டி ஊன்றி, உடம்பை வளைத்து உள்ளே நுழைந்தபின் மறுகாலை உள்ளிழுத்துக் கொண்டான்.

உள்ளே இருந்து 'போஸ்', ஒரு கேனோடு வெளியேறி வந்தான்.

"ஒதுங்குடா... ஆத்தா வருது..." ஒட்டையன்.

"ஆத்தாவா..."

வேலிக்குள் தலை நுழைத்து வந்த காமாட்சி, "ஆர்ரா போசா..."

"ஆமாங்த்தா..."

"எத்தன பேர்ரா..."

"பெரியவரச் சேத்து அஞ்சு பேர்த்தா..."

"யே... ன்னம் நாலுவேர் இல்ல... அந்த மனுசெங் கூப்ட்டாராக்கும்...!"

"ம்...!"

“கூட்டஞ் சேந்து குடி கவுழாம இருந்தாச் சரி... போயி வீட்ல நில்லு... ந்தா வாரே...” என்றவள், “கேனக் கொண்டா” என்று போசிடம் இருந்த கேனை தூக்கிப் பார்த்தாள். “சரி போ...” திரும்பவும் குடுத்துவிட்டாள்.

மோட்டார் போட்டு இயக்கினால் சத்தம் வருமென்று பங்கின் சக்கரத்தில் கைப்பிடியை சொருகி, 'சுரேசை' சுற்ற விட்டிருந்தார்கள். அதும் ஒரு மாதிரியாகச் சத்தம் குடுக்கத்தான் செய்தது. மீட்டரைப் பார்த்து கேனை நிரப்பிக் கொண்டிருந்தான் முனியாண்டி.-ரேசன் கடை சிப்பந்தி. கருத்தக்கண்ணு டார்ச்லைட் அடித்தபடி கேன் எண்ணிக்கையை சொல்லிக் கொண்டிருந்தார். பில் போடும் பாண்டியன் ஒவ்வொரு கேனுக்கும் பில்லைக் கடித்துக் கிழித்துக் கொண்டிருந்தான். அவனிடம் தான் கொண்டு வந்த கேனை ‘ணங்’ கென வைத்தாள் காமாட்சி.

எதிர்பாராத இந்த நிகழ்வால் திடுக்கிட்ட பாண்டியன் கோபம் மேலிட, “என்னாமா... பொம்பளயா நீ... பேயி மாதிரி வந்து நிக்கிற... பயந்து போய்ட்டே....” அதுவும் கிசுகிசுப்பான சத்தத்தில்தான் பேச வந்தது.

“ஆரு பேயின்னு பாரு பாண்டி....” என்றவள், “இது எத்தன லிட்ரு” என்று கேட்டாள். கருத்தக்கண்ணுவும் டார்ச்லைட் வெளிச்சத்தை அதன் மேல் பரப்பினார். கேனை த்தூக்கிப் பார்த்த பாண்டியன், “எத்தன விட்டரு....?” என்று எதிர்க்கேள்வி கேட்டான்.

“எனக்குத் தெரியாது... ஊத்துனது நீதான... சொல்லூ...”

குறைச்சலாகத்தான் தெரிந்தது. இருட்டில் நம்பரை சரியாக பாக்கவில்லையா... நுரை கட்டி நிரம்பி கொப்பளித்து வந்ததா... எப்படியோ பூதம் புறப்பட்டு விட்டது.

ஊற்றிக் கொண்டிருந்த முனியாண்டியும் வாங்கிப் பார்த்தான் “பத்துதே...”

“பத்து லிட்டரு...?”

“பெறகு... கையிலியா அளந்து ஊத்தறம்... மிசின் தானம்மா அளக்குது... கேன் பெரிசும்மா... ஒவ் வீட்டுக் கார்ருந்தான நிக்கிறாரு... ” முனியாண்டி விட்டுத் தராமல் பேசினான்.

“இதுமட்டும் பட்றைல வச்சு நீட்னமாக்கும். பெரிசா ஆக... என்றவள், பத்து லிட்டர்ங்கறேல்ல.. அளந்து காட்டு...” காமாட்சிக்கு ஆங்கார மிருந்தாலும் இடம் பொருள் கண்டு கிசுகிசுப்பாகத்தான் பேசினாள். பாண்டியனுக்கு இந்த நேரத்தில் விவகாரத்துக்கு வரணுமா... ஓடிப்போன மகள விட்டுப்புட்டு ஒரு பொம்பளயாள எப்பிடி மத்த விசயத்துல சரியா நிக்கெ முடிது... தானும் சரிக்குச் சரி நின்றால்தான் ஜெயிக்க முடியும்.

“ஆருமா கொண்டு வந்தது?...”

இவனிடம் இந்த வாம்மா போம்மா பேச்சுத்தான் காமாட்சிக்கு பிடிப்பதில்லை. பண்ணக்காரி மாதிரில்ல கூவுறான். தொழிலுக்காக எவெளவெங்கிட்டயெல்லா மொகஞ் சகிச்சுப் போக வேண்டி இருக்கு...

"ந்தா. நிக்கிறான்ல... ஒங்கபய... ஓட்டையந்தா.."

சாதியை சாட்சியாக நிறுத்தினாள். மேலும் தொடர்ந்து "சொல்லு... கீழ சிந்திட்டான்னு கூட சொல்லு... இல்ல வித்துட்டான்னு கூடச் சொல்லூரப்பா..."

''சரியாத்தா... வாங்கிக்க...'' முனியாண்டி சமாதானத்திற்கு வந்தான்.

"என்னா சரித்தா... என்னா பிச்சையா போடுற..."

"ஊத்துறேன்ட்டான்ல... பிரச்சயை விடும்மா... இந்நேரத்துல இந்தக் கத்து கத்துவ...'' பதட்டமாயிருந்தது பாண்டியனுக்கு. ஊர் கூடிவிடுமோ...

"அது சரி... நாங்கத்துறேன்...? ஓங் களவானித்தனத்த சொன்னா கத்துறேனாக்கும்.. ம்....?... இதெல்லா எங்கிட்ட வேணாம். ஆமா..."

களவானிப் பட்டம் பாண்டியனுக்கு இன்னமும் கோபத்தை அதிகப்படுத்தியது. ஏற்கனவே காமாட்சியின் அடாதுடியான பேச்சும், யாரையும் மட்டு மரியாதையில்லாமல் கூப்பிடுவதும் அதும் தன்னொத்த இனத்தாரை இன்னமும் அடா புடாவெனப் பேசுவதும் கணக்கு வைத்துக் கொண்டிருந்தான். எந்தெந்த நேரத்தில் அதனை மட்டந்தட்ட வேண்டும் என்று பட்டியல் போட்டு கிடைக்கிற வாய்ப்பெல்லாம் தவற விடுவதில்லை. ஆனால் அதையும் மீறுகிற வன்மமும் வாய்த் துடுக்கும் அந்தம்மாளிடம் தூக்கலாய் இருக்கிறதே...

"ஆ..மா... நாங்க களவானி... நீங்க... அரிச்சந்திரெம் பரம்பரையாக்கும். செய்றதே ஈனப் பொழப்பு... இதுல அவுசாரி யாரு... தேவ்டியா ஆரு... எல்லா ஒண்ணுதே... எல்லா மட்டையும் ஒரே குட்டைலதா..." வெடுக்கென சொல்லிவிட்டு, "யே... ஊத்தி விட்றா... ஆளப்பாத்து... அரசாளணுண்டா..." முனியாண்டியை உதைத்தான்.

"பாண்டியா... வார்த்த ஓவராப் பேசுற... வேணா, ரெம்ப நாளாவே ஓம் பேச்சு சரியில்லப்பா... ஒங்காளுகப் பயகளுக்கு ஒரு மாதிரியும் மத்தவகளுக்கு ஒரு மாதிரியும் நிய்யி நடந்துகிட்டு வார... தெரியாம இல்ல... ஏவாரிகன்னா அல்லாரும் ஒண்ணுதே..."

கருத்தக்கண்ணுவுக்கு... தான் எந்த இடத்துல நுழைய என்று விளங்காமலிருந்தது.

"என்னா பாண்டியா... நேரங்காலந் தெரியாம பேசிட்ருக்க... ஒரு பேச்சுல மூடி.." என்றார்.

பாண்டியனுக்கு இவர் மேல் ஏதோ ஒரு மரியாதை இருந்தது. ஒருவேளை எல்லாரையும் போல காமாட்சியிடம் 'தோண்டு' வாங்குகிற லிஸ்டில் இருப்பதாலா...

RangaRakes tamilnavarasam.com

“இல்லிங்க.. கணாப்ல... ஒங்க வீட்டுக்காரம்மா பேசறதக் கேட்டீங்கள்ல... நாங்க களவானியாம்...! எண்ணை கொறயுதப்பான்னு சொன்னா... ஒண்ணுக்கு இரண்டு லிட்டரக் கூட வாங்கிட்டுப் போகவேண்டிதான... அதவிட்டுப் புட்டு, ஒஞ்சாதிக்காரனுக்கு அப்பிடிச் செய்யிற. மத்தவங்களுக்கு இப்பிடிச் செய்யிறங்கறதெல்லா, தேவயா...? இத எங்க பயலுக காதுல பட்டா என்னா ஆகும்..?” நீளமாய் பிரசங்கம் செய்யலானான். இந்த இழி தொழிலையே விட்றலாம்னாலும் முடியவில்லை. ஆபீசர்களுக்குத் தவறாமல் கப்பம் கட்ட, கட்சிக்காரனுகளுக்கு கேக்குறப்ப வெல்லாம் இல்லீங்காம எடுத்துத் தர... முதலையின் முனிப் பல்லில்சிக்கிய கதையாகிப் போனது. நேர்மையாய் இருக்க அனுமதிக்காத வேலை...

“அம்புட்டு வக்கணயாப் பேசுறாவ. கேன்ல ஊத்தறப்ப மட்டும் கண்ணு மூடிக்கிருச்சாக்கும்.. இது இன்னிக்கி மட்டுமில்லப்பா.. அனுதெனமு நடக்கிறதுதே, நானும் வேணா வேணாம்னே விட்டுட்டே...

“சரி காமாச்சி, விட்ரு, அதே ஊத்துறேன்ட்டான்ல...” கருத்தக்கண்ணு வெள்ளைக் கொடி பிடித்தார்.

“ஆமா... விட்ரு, நீங்க ஒழுக்கமா பாத்துக்கிட்ருந்தா... நா என்னத்துக்கு இந்த நடுராத்திரில வரப்போறே...”

“சரி சரி... அகால நேரத்துல பேச்சக் கொற...”

“ஆமா, நாந்தேம் பேசுறே... ஒங்களுக் கெல்லா ஒண்ணுந் தெரியது... நாம் பேசுறேன்னா... துட்டு ஏந்துட்டு.. வட்டிக்கி வாங்கி வாசிக்கி வாங்கி... போட்டுப் பாத்தாவுல்ல தெரியும்...?”

“லே... முனியாண்டி... அந்தம்மாக்கு ஒரு கேன் புல்லா புடிச்சு விட்றா... சத்தம் போட்டு பொழப்பல மண்ணள்ளிப் போட்றப் போகுது...”

காமாட்சியைக் கட்டுபடுத்த வழியறியாமல் சரணடைந்தான் பாண்டியன்.

“ஆம்பளயா, வெவரமா நின்னு, வாங்கிவிடுங்க” என்று காமாட்சி வீட்டுக்கு வர,

மறுபடியும் போன் வந்தது.

பழைய வத்தலக்குண்டிலிருந்து பேசுவதாகச் சொன்னதும்... நெஞ்சு படபடக்க முழுசும் வாங்கியவள், “ஓட்டையா... டேய்.. போடா.... போய், அந்த ஆம்பளைய ஒடனே வரச் சொல்லு” என மறுபடி ஓட்டையனை ரேசன் கடைக்கு விரட்டினாள்.

## 14

வீட்டை விட்டு வெளியில் வர பயமாயிருந்தது சித்திரம் பிள்ளைக்கு. வாத்தியாரிடம் பேசியதிலிருந்து ஒரு படபடப்பும் பதட்டமும் உடம்பில் ஏறிக் கொண்டது. மாயன் அந்தப் பிள்ளையோடு போன நாளில் கூட ஒரு குறுகுறுப்பும் அவமான உணர்ச்சியும்தான் இருந்தது. மகன் மீது ஆத்திரமும் கடைசி வரை யாரிடமும் சொல்லாமலேயே அவனது காரியத்தை நடத்திச் சென்றதில், தன்னுடைய இயலாமையும் அதனை தான் பெற்ற மகனே வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்ட கூச்சமும் வீட்டுக்குள்ளேயே முடக்கி விட்டது. ஆனால் காமாச்சியக்காதான் என்னமோ தன் குடும்பமே முன்னால் நின்று ரெண்டு பேரையும் அட்சதை போட்டு ஆசீர்வாதம் குடுத்துஅனுப்புன மாதரி இந்த ரெண்டு வாரமா பண்ணுற அழிம்புக்கு அளவே இல்லை.

அவர்கள் ஓடிப்போன அன்னிக்கி அரிசி புடைக்கப் போன பருவதத்தை அம்புட்டு இம்சை செய்திருக்கிறார்கள். அவளே அவங்கள அனுப்பிச்சு விட்டு வேலைக்கும் வருவாளா.. “எம்புட்டுத் தகிரியம்டி.... ஓட்டி விட்டு ஔவு பாக்க வந்திருப்ப...”ன்னு வாயில வந்தபடி பேசி அனுப்பிச்சிருக்காக, சேலையப் பிடிச்சு உருவி, அகமானஞ் செஞ்சதா, கூட வேல செய்றவக சொன்னாங்க... ஆனா பருவதம் வாய் தெறக்கல. ஆனா, அந்தக்கா புத்திக்கு, அடிச்சும் கூட போட்டுருக்குந்தா... ஆனா இவதா வாயே தெறக்க மாட்டேங்குறா...

என்ன நடந்தாலும் நாம எதும் செய்ய முடியாது... ஒண்ணு, அவங்க பொம்பளப் பிள்ளையப் பெத்தவங்க, ரெண்டு... காசு பணம் படச்சவங்க. நாமளே அவகள அண்டிப் பொழைக்கிற அன்னக்காவடிக... அவங்க சொன்ன மாதரி... சாதி ஒண்ணா இருந்தாலூம்... சாப்புடுற சோத்துலருந்து உடுத்துற சட்ட துணி வரைக்கும் வேறதான...

அனுதினமும் வந்து வேவு பார்ப்பதுவும், கண்ட கண்ட ஆளுகள் மூலமாக வீம்பேச்சுக் குடுத்து வாயப் புடுங்குவதும் நடந்து கிட்டேதான் இருக்கிறது. வீட்டிலிருக்கும் சின்னப் பிள்ளைகளக் கூட விடுறதில்லை... ‘எங்க போறம்னு ஒங்கிட்டச் சொன்னானா... வீட்ல என்னா பேசுறாக... அண்ணெ ராத்திரி வந்தானா... வேற ஆராச்சும் புதுசா வீட்டுக்கு வந்தாங்களா... ங்கொம்மா யாருக்கும் சோறு கொண்டுட்டுப் போறாளா... துட்டு குடுத்து விடுறாளா” என்று பச்சை மண்ணுகளிடம்

கேட்பதும் மிரட்டுவதும்... இதெல்லாங் கூட பயமாயிருக் கவில்லை - என்னென்ன செய்வார்கள் என்று எதிர்பார்த்திருந்ததால் மனசு கெட்டிப் பட்டுப் போனது போலிருக்கிறது.

இன்றைக்குத்தான் இப்போதைக்குதான் பயம் உறுத்துகிறது. எதற்கென விளங்கவில்லை. ஒருவேள இத்தன நாள் துணி தொவைக்கிற கல்லப்போல, எந்தச் சங்கடமுமில்லாம, சடமாக் கெடந்ததாலயா...? இப்போ வாத்தியார் பேச்சு உசுப்பிவிட்டு உயிர் குடுத்துருச்சோ... உசிர் பிடிச்சதால உடம்புல உதறல் கௌம்பிருச்சோ ஆண்டவா... நீ தேம்.. பாத்துக்கணும்..!

மயிலைக் கூட்டிக் கொண்டு மெயின் பாதையில் போகாமல் சந்து பொந்துகளிலேயே நடத்தி வந்தார் சித்திரம் பிள்ளை. நிலா வெளிச்சம் பெத்தமகளைப் போல முழு ஒத்துழைப்புக் குடுத்தது. சப்பரதீபம் போட்டது போல இண்டு இருக்கெல்லாம் வழி காண்பித்தது. அவர்கள் இருவரும் நடந்து வந்த சத்தம் அந்த அகால நேரத்தில் அத்தனை துல்லியமாகக் கேட்டது. பாதத் தூசு சிதறும் சத்தமும் தெளிவாய்க் கேட்டது. அது இவருக்கும் இன்னமும் கலக்கத்தை அதிகரித்தது.

காமாட்சி பவனத்தில் லைட் எரிவது தூரத்திலேயே தெரிந்தது. உள் லைட்டும் வெளியிலும் கூட எரிந்து கொண்டிருந்தது. வெளியில் வண்டி நின்றிருந்தது. ஏதோ பெரிய ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது என்பது உறுதியானது. ஆக, வாத்தியாரும் டீச்சரும் சொன்னது சரியாகத்தான் இருக்கிறது.

“யேம் மாமா... ஒங்க சம்மந்தகார்ரு வீட்ல இம்புட்டு லைட்டு எரியுது...? நீங்க வர்ரம்னு சொல்லியிருக்கீங்களாக்கும்... அதேன் வாசல்ல மோட்ரு சைக்கிள்லாம் நிறுத்தி வரவேற்பு குடுக்க ரெடியா இருக்காங்கபோல...” மயிலு கிண்டலடித்தாள்.

இந்த கிண்டலுக்கு வேறொரு சமயமாய் இருந்தால் மயிலு தப்பி இருக்க முடியாது. “ஆ..மா.. ங்நொக்காவுக்குத் தொணையா ஒண்ணயக் கூட்டிக்கிட்டு வந்தேன்ல, அதுக்கு பால் பழங்குடுத்து, மறுவீடு அழைக்க நிக்கிறாங்க...” என போட்டிருப்பார். இப்போதோ மூச்சு விடுகிற சத்தம் கூட மூணாம் பேருக்கு கேட்டு விடுமோ என்று கிசுகிசுக்கிறப்ப கிண்டல் வருமா... அப்படியே அவளை மடக்கி ஆசாரித் தெருப் பக்கம் நடத்திப் போனார்.

“என்னென்ன பிளான் போட்டு, ஏது பண்ண காத்திருக்காங்களோ... ஈஸ்வரா...”

“நம்ம சாதில எப்பிடி மாமா இப்பிடி ஒரு குடும்பம் தப்பி வந்துச்சு...? ஈங்கறதுக் கெல்லா வீச்சருவாலும் வேல்கம்பையுந் தூக்குற ஆளுக கூட இப்ப, படிச்சு பட்டம் வாங்கி நாகரீகமா, நாலு பேரப் போல நீதிக்கிக் கட்டுப்பட்டு நடக்கற நாள்ல... வெள்ளாளப் பயல்னு சொல்லிக்கிட்டு இம்புட்டு வேதாளம் புடிச்சு அலயறாகளே...”

“அடுத்தவகளக் குத்தஞ் சொல்லி நம்மளத் தூக்கி வச்சுக்கறக் குடாது மயிலூ... ங்நொக்கா மகெ, என்னத்த வங்கம் வகையா நடந்திருக்கான்...? பொழப்புக்கு வேல குடுத்தான்னா, வேலயச் செஞ்சு கூலிய வாங்கிட்டு வரமாட்டாம... நம்பின வீட்டுக்குள்ள வெதநெல்லத் தூக்குனா வீட்டுக்காரெ சும்மா விடுவானா... ஊருக்கு ஒரு நாயம், நமக்கொண்ணா...?”

ஒரு பக்கம் யோசிக்கும் போது அதும் சரியாத்தான் தெரியிது... அதுக்காக இப்பிடியா... ஆனைக்கு வெறிபிடிச்சு அலையிற மாதிரியா...? மனுச மக்கள வேணும் வெளயும்னு பாக்க வேணாம்...? சரி, வேணும்னாத்தே இம்புட்டு வில்லங்கமும் வீம்பும் புடிச்சு இந்த அர்த்த ராத்திரில திரிய மாட்டாங்களே... மனசுக்குள் பேசியமயிலு,

“யேம் மாமா.. இம்புட்டு நடந்துருக்கு... கொஞ்சங்கூட இதுபத்தி முன்னக் கூட்டியே ஆருக்கும் தெரியாதா...”

“எது... இவெ, ஓடிப் போறதா...”

“இல்ல... ரெண்டு பேரும் இஷ்டப்பட்டது..”

“என்னா.. நிய்யும் அவக பேசற மாதரியே பேசற... அல்லும் பகலும் அறுவத்தி நாலு நாழியலும் அங்கனயே இருக்குற, அவங்க வீட்டுக்கே தெரியல.. அம்மளுக்கு என்னத்த தெரியப் போவுது...? என்னா...! பங்கரையாத் திரிஞ்சவெ பளிச்சின்னு அலஞ்சான். சரி, புத்தி வந்திருச்சு போலன்னு சந்தோசப் பட்டம்.. அதென்னான்னா.. இப்பிடி பொத குழில தள்ளத்தான்னு இப்பத்தான தெரியிது.” விசுக்கெனக் கோபித்தார்.

“அவன மட்டும் சொல்லாதீங்க மாமா.. சக்கரம் உருளாம வெறும் வண்டி மட்டுமே நகலுமா..?” மாயனை அவளால் விட்டுக் கொடுக்க முடியவில்லை.

“நீயும் ங்நொக்காளும் சொலவட சொல்லியே வண்டிய ஓட்டுங்க.. குடும்பங் குண்டியத் தூக்கீரும்...” கடுப்பாய்ப் பேசினார்.

அதன்பிறகு ரெண்டுபேரும் பேசவில்லை. மெயின் ரோட்டுக்கு வந்த பிறகும் பஸ் ஸ்டாப்பில் நிற்க மனமில்லை. மெதுவாக தேனிக்கே நடக்கலானார். பகல் போல பிரகாசமாய் இருந்தது ரோடு, ரோட்டின் ரெண்டு பக்கமும் ரசாயன விளக்குக் கம்பங்கள், நிலா வெளிச்சத்தின் சாயலே தெரியா வண்ணம், ‘பொரு பொரு’வென வெளிச்ச சிதறலைக் கொட்டிக் கொண்டிருந்தது. அண்ணாந்து பார்த்தால் மட்டுமே, வானமும் வானத்தில் முழு அழகாய் நிலாவும் இருப்பதை அறிய முடியும்.

# 15

கான்வென்ட் ஸ்கூல், வி.பி.எஸ் ஜின்னிங் பாக்டரியைக் கடந்து நடக்கையில் பெரிய போஸ்டாபீஸ் வாசலிலும் சென்ட்ரல் பேங்கின் முகப்புப் பரப்பிலும் நிறையப் பேர் படுத்து உறங்கிக் கொண்டிருந்தனர். தலைமாட்டில் பந்து பந்தாய் மூட்டை முடிச்சுக்கள். பெரியவர்கள் இரண்டு பேருக்கு நடுவில் சின்னஞ்சிறுசுகள்... மல்லாக்க, ஓரமாய், குப்பறக்க என பல கோணங்களில் உருண்டு உறங்கிக் கிடந்தனர். அடிக்கடி கார்களும், லாரிகளும் ஆட்டோக்களுமாய் ஓடி. இரவை உசுப்பிவிட்டுக் கொண்டே இருந்தன.

மயிலுக்கு இங்கே உறங்கி உருண்டு கிடப்பது யார் என விளங்கவில்லை. உறக்கச் சடவிலும் கூட உறுத்திக் கொண்டிருந்ததைக் கேட்டாள்.

“அம்மளப் போல அப்ராணிகதே... நாடோடிங்க. பகல்ல ஏதாச்சும் பெறக்கிச் செஞ்சு கஞ்சியக் குடிச்சுட்டு, ராவுல இப்படி சிக்குன எடத்துல சாஞ்சு காலத்தக் கழிக்க வேண்டிதே...” பச்சாதாபத்துடன் சொன்னார் சித்திரம்பிள்ளை.

“மழ வந்தா...?”

“மழ... வந்தா...? நனையாத எடமாப் பாத்து - தேடி ஓடுவாங்க... இல்லாட்டி எதியாச்சும் களவாண்டு, போலீஸ்ல ஆப்பட்டு... ஸ்டேசனுக்குள்ள நிம்மதியா ஒக்காந்துக்கற வேண்டியதே...”

சுந்தரம் திரையரங்கு விலக்கில் காக்கிச் சட்டைகள் நாலைந்து பேர் லத்திக் கம்போடு நின்றிருந்தார்கள். சித்திரம் பிள்ளையின் கால் பின்வாங்கியது. பேசாமல் ஒரு ஆட்டோவில் வந்திருக்கலாம்... நம்மளத்தே ரவுண்டு கட்ட நிக்கிறாக போல. மயிலுவுக்கு குளிரடித்தது. சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். மாமன் மேல் கோபம் வந்தது. மூணு மைலு இந்நேரத்துல நடக்க வச்சுட்டாரே... கால் கடுத்தது.

“மயிலூ...” சித்திரம்பிள்ளை கிசுகிசுப்பாய் கூப்பிட்டார்..

“என்னா மாமா...”

“அங்க பாரு...” காக்கிச் சட்டைகளைக் காட்டினார். “போலீசு...”

“போலீசா...” பல்கிட்டிக் கொண்டது. நடந்து கொண்டே உற்றுப் பார்த்தாள். வித்தியாசமாய் தெரிந்தது. “என்னா மாமா... சின்னச் சின்ன பயல்களா இருக்காங்க... மாயனப் போல...” என்றவள். “இவங்க

RangaRakes tamilnavarasam.com

போலீசு இல்லமாமோவ்... ஓம்காடு... எங்க ஊர்லருந்து கூட ராசாத்தியக்கா மகெ, பாலெங்கூட வேல பாக்குறான்ல...'' உற்சாகமானாள்.

"ஆமா... நகர் நலப் பணியாளர் செட்டு போல..." சித்திரம் பிள்ளையின் இதயத் துடிப்பு சீரானது. "ஏம் மயிலூ... ஓவ் வீட்டுக்கார்ரு இன்னவரைக்கும் கடைல இருப்பாரா...'' இருந்தால் கையில் ஒப்படைத்து விடலாம்... எவ்வளவு நேரம் ஆகிறது...

''சந்தயன்னைக்கின்னா இருப்பாரு... மத்த நாள்ல இந்த நேரத்துக்கெல்லா வீட்டுக்குப் போயிருப்பார்ல..."

சிகப்புத் துண்டு உருமாவோடு இரண்டு பேர் ஏதோ ஒரு வால் போஸ்டரை ஒட்டிக் கொண்டிருந்தார்கள். உதவிக்கு பசைவாளியும், ஒட்ட வேண்டிய போஸ்டருமாய் மேலும் இரண்டு பேர் உடனிருந்தனர்.

"மயிலூ... ந்தா, செவப்புத் துண்டு ஆளுக... இவங்களுக்கு ஓம் புருசனத் தெரியும்ல..."

தேனி பசார் முழுவதும் சிவப்பு, பச்சை, மஞ்சள் என்று கலர்த் துண்டுகளின் அடையாளத்தில், சுமைப் பணித் தொழிலாளர்கள்; கடை வாரியாக சங்கம் அமைத்து கலர்த் துண்டுகளில் தங்களை அடையாளப் படுத்திக் கொள்வது கண்கூடு. மயிலு புருசன் சிகப்புத்துண்டு சங்கத்தில் இருக்கிறான்.

இவர்கள் அவர்களை அணுகுவதற்கு முன்பாகவே பசைவாளியுடன் வந்தவர், "என்னா தங்கச்சி....!" என்று வந்தார்.

"குருசாமி அண்ணனா.....?"

"ஆமாம்மா... என்னாமா இந்நேரத்துல..." என்றவர் திரும்பி தன் சகாக்களிடம் "நம்ம பூதிப்பரத்துக் கார்ரு சம்சாரம்" என அறிமுகம் செய்தார்.

"ஆர் எஸ் பி கடை ஆளா... சரி சரி..." ஞாபகப்படுத்திக் கொண்டார்கள்.

"அவரு வீட்டுக்குப் போய்ட்டாராண்ணே..."

"இன்னவரைக்குமா.. நிப்பார ஓவ் வீட்டுக்காரெ... நாளைக்கி நம்ம சங்கத்தில இருந்து ஒரு ஆர்ப்பாட்டம்... அந்த வேலையா நிக்கிறம்..."

"நானு. எங்கக்கா வீட்டுக்கு வந்தே... நேரமாயிருச்சு... காரேத்தி விட வந்தாரு... இது... எம் மாமா... அக்கா வீட்டுக்கார்ரு..." சித்திரம் பிள்ளை கும்பிட்டார்.

"வாங்க..." என்றவர். "இந்நேரம் கடசீ பஸ்சு கூட போயிருக்குமே... சித்த வெள்ளன வந்திருக்கலாம்ல... இல்லாட்டி படுத்தெந்திரிச்சு காலம்பறவாச்சும் கெளம்பலாம்ல.."

அதே நேரம் கையில் சிகப்பு நிறப் பையுடன் கெந்திக் கெந்தி நடந்து வாந்தார். தோழர், முருகவேல். அவரும் பூதிப்புரத்துக்

RangaRakes tamilnavarasam.com

காரர்தான். கம்யூனிஸ்ட் கட்சியில் வேலை பார்ப்பவர், அவரைப் பார்த்ததும் சிகப்பு துண்டு ஆட்கள் உற்சாகமடைந்தனர்.

“தோழர் வந்துட்டாரு... வாங் தோழர்.. வாங்க...” ஆளாளுக்கு தங்களின் இருப்பை காட்டினார்கள்.

எல்லோருக்கும் சிரித்தபடி பதில் சொன்னவர். மயிலைப் பார்த்து விசாரித்தார். பெரிய ஊரில் அடுத்தடுத்த தெரு போல, பூதிப்புரமும் வாழையாத்துப் பட்டியும். அதிலும் முருகவேலுவுக்கு தாலுகா முழுவதும் தெரியாத மனிதர்கள் இருப்பது அரிது. அத்தனை சகஜமான -பிரபலமான மக்கள் ஊழியர்.

மயிலு ஊருக்கு போக வேண்டியதைச் சொன்னாள்.

‘‘நானுங் கெளம்பிட்டேன் தோழர்... ரெண்டு வேருமே வர்ரீகள...”

சித்திரம்பிள்ளை கைகளை கட்டிக் கொண்டு “இல்ல சார்.. அந்தப் புள்ள மட்டுந்தா... பாத்து கூட்டிட்டுப் போங்க...” என்றார்.

“இவரு எங்க கட்சிக்கார்ரு மாமா.. வீட்டுக்கார்ருக்கு ரெம்பப் பழக்கம்...”

“லோடுமேன் சங்கமா...” வாத்தியார் சொன்னது சரியான நேரத்தில் ஞாபகம் வந்தது.

முருகவேல் தோழர், அவர் எது குறித்துக் கேட்கிறார் என விளங்கவில்லை. பொதுவாக, “ஆமா!” என்றார்.

“காமாட்சி யக்கா ஏற்பாடு செஞ்சவங்க இவங்களா... என்று மயிலுவிடம் கிசுகிசுத்தார்.

எடம் பொருளு தெரியாம கேட்ட மாமன் மீது கோவங் கோவமாய் வந்தது மயிலுக்கு. உடனிருந்தவர்களுக்கும் அவரது பேச்சு புரியவில்லை. ஆனாலும் எதோ ஒரு சரியில்லாத வேலையில் சிக்கி இருக்கிறார்கள். என்பது அவர்களது படபடத்த பேச்சிலும், தரையில் கால் பாவாத தன்மையிலும் தெரிந்தது.

மயிலு சுருக்கமாக விசயத்தைச் சொன்னாள். இவக ஊரு வாத்தியார் ஒருத்தர்தே சொன்னாரு... லோடுமேன் அடியாளுகள வச்சு, பிள்ளைகள பிரிக்கப் போறாகளாம். அதத்தே பக்குவமில்லாம கேட்டாரு...” என்றாள்.

“யேமா... எம்புட்டுப் பெரிய வார்த்தய எந்த நேரத்ல வந்து ரெம்ப ஈசியாப் பேசிட்ருக்க... எங்களப் பாத்தா ஒனக்கு அடியாளுகளாத் தெரியிதாக்கும்...” போஸ்டர் ஒட்டிக் கொண்டிருந்த ஒரு தோழர் சுள்ளெனக் கோபித்தார்.

குறுக்கே புகுந்த தோழர் முருகவேல், சமாதானப்படுத்தி, லோடுமேன் சங்கம்ங்கறது ஒரு சங்கம் மட்டுமில்ல... ‘பாரம் ஏற்றுவோர். பாரம் இறக்குவோர். எடை செய்பவர்கள், கமிசன் கடை, வெல்லமண்டி, ஜின்னிங் பாக்டரி, பலசரக்குக் கடை, அரிசிக்கடை, பஸ்ஸ்டாண்டு லோடுமேன் என்று பல இடங்களில் வேலை நடப்பதாக சொன்னார்.

RangaRakes tamilnavarasam.com

இவர்கள் தங்களுடைய வேலைகளை முறைப்படுத்தவும், பாதுகாக்கவுமே அமைப்பாகச் சேர்ந்து இருப்பதாகவும் சொல்ல வேண்டி வந்தது. அவரது பேச்சும் தொழிலாளர்களின் கோபமும் சித்திரம் பிள்ளைக்கு இன்னமும் பதட்டத்தைக் கூடுதலாக்கியது.

"அய்யா, பெரீவரே... ஒண்ணுமட்டும் தெரிஞ்சுக்கங்க... நாங்க மட்டுமில்ல, எந்தத் தொழிலாளியும் இப்பிடி எடுவெட்ட பொழப்புக்கு வரமாட்டான். கூலிக்கு வேலதான் செய்வான். அடியாளா வெல்லா வரமாட்டான். அதெல்லா விருத்திக்கி உதவாத-காயடிச்ச பொலிகாளை களத்தான் தீனி போட்டு வளத்து வச்சிருப்பாங்க... அதுகளுக்கும் வேல குடுத்துக் கிட்டே இருக்கணும். இல்லாட்டி அதுக. வளத்தவனயே காவு கேக்கும். அதனால இப்பிடி யெல்லாம் வாய் கொள்ளாமப் பேசாதீங்க..."

"சரிங் தோழர்... எல்லாமே பிரச்சாரந்தான... அவரு அனுபவத்திலயா சொல்லுறாரு... இத்தான் பட்டுக்கோட்டை "காலி என்றும் கூலி என்றும் கேலி செய்யும் கூட்டமே...ன்னு பாடி வச்சார்" என்ற முருகவேல், சித்திரம் பிள்ளையிடம் "எங்களமாதிரி தொழிலாளிகிட்ட யாராச்சும் பிரச்சனைனு வந்தா, அவங்கள உக்கார வச்சுப் பேசி, சேத்து வக்கெத்தாம் பாப்பாங்க... ஏன்னா, நாம எல்லாருமே ஒரே வர்க்கமில்லியா... அதனால இங்கருந்து அடியாளா யாரும் வரமாட்டாங்க தோழர்... மனச சேதப்படுத்தாம வேலயப் பாருங்க..." என்றார்.

சித்திரம் பிள்ளை மேலும் குழம்பினார். தான் என்ன செய்ய வேண்டும்... வாத்தியார் ஒண்ணு சொல்லி விட்டார். இவரு, அடியாள்களே கெடையாதுங்கறார். பேசித் தீத்தறலாங்கறார். யார்கிட்ட யார் போய்ப் பேசறது... காமாச்சியக்காகிட்ட பருவதமா, நானா... பேசீர முடியுமா... நெனச்சாலே நெஞ்சுக்குழி தவ்வுது... நடக்கிறத பேச மாட்டாரா.. தோழரு...! ஊர்க்கண்ணுல படாம அர்த்த சாமத்துல அரண்டு ஓடி வர்ரவனப் பாத்து முட்டிப்பாருன்னா... ஆகுற காரியமா...

தேனி பஸ்டாண்டில் ஆட்டோ கிடைத்தது. மயிலுவுடன் தோழரும் ஏறிக் கொண்டார். புறப்படுகிறபோது மயிலு மாமனைத் தனியே அழைத்து தோழருக்கு கேட்காவண்ணம் சொன்னாள். "மனசப் போட்டுக் கொழப்ப வேணாம். பாத்துப் பதனமா வீட்டுக்குப் போய்ச் சேருங்க. நா என் வீட்டுக்கார்ருகிட்ட நாம பேசினாப்ல சொல்லி விடியங்குள்ள அனுப்பிச்சு வச்சிர்ரேன். வாத்தியார் சொன்ன மாதிரி நம்ம பிள்ளய நாமதே காக்கணும்" என்றவள் தோழரை ஓரப்பார்வை பார்த்துக் கொண்டே மேலும், ''கச்சிக்காரவக அப்பிடித்தேம் பேசுவாக... வரேன்..." என்று விடை கொடுத்தாள்.

RangaRakes tamilnavarasam.com

மறுபடி தனியாளாக ஊருக்கு நடந்து போக தைரியமில்லை சித்திரம் பிள்ளைக்கு. பஸ் இருந்தால் ஏறிக் கொள்ளலாம் என்ற நினைப்புடன் பஸ் ஸ்டாண்டின் முகப்புக்கு வந்தார். திண்டுக்கல் பஸ் ஒன்று புறப்பட தயாராய் உறுமிக் கொண்டிருந்தது.

திடீரென ஒரு யோசனை உதித்தது. இந்த வண்டியில் ஏறி பழைய வத்தலக்குண்டில் இறங்கி மாயனைப் பார்த்து வந்து விடலாமா...

வேறெதும் யோசிக்கவில்லை புறப்பட்ட வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார்.

## 16

சைக்கிளை மிதிக்க மிதிக்க வீரபத்திரனுக்கு சுகமாக இருந்தது. பூப்போல உருண்டது சைக்கிள். வீடுகளற்ற அந்த வனவெளியில் தூய வெளிச்சம். குழந்தையின் தளிர்விரல் ஸ்பரிசம் போல மென்மையாய் கண்களை நிறைத்தது. சுகந்தமாய் வீசும் மெலிதான காற்றும், அதனிசைவாய் அசையும் மரங்களின் அசைவும், வாலிப பருவத்தை மீட்டெடுத்துத் தந்தது. வீரப்பய்யனார் கோயில் வரைக்கும் தார் ரோடு போட்டிருக்கிறார்கள். நிலா வெளிச்சத்தில் அது சினிமா செட்டிங்ஸ் போட்டது போல அழகுற விளங்கியது. ரோட்டின் இரண்டு பக்கமும் கரும்புத் தோட்டங்கள். ஓங்கி வளர்ந்த கரும்பின் சோகைகள் சலசலத்துப் பேசுவதும், வேலிப் புதருக்குள்ளிருந்து உடும்பும், முயலும் ஓட்டப்பந்தயம் நடத்துவதும் காணக் கிடைக்காத காட்சி. சைக்கிளின் இருக்கையில் உட்கார்ந்து ஓட்டியவன் உற்சாக மிகுதியில் பள்ளி மாணவனைப் போல ஏறி நின்று வேக வேகமாக அழுத்தலானான். சைக்கிள் அவனது உணர்ச்சிக்கெல்லாம் ஈடு கொடுத்து குமரிப் பெண் போல கிண்ணென ஓடியது.

பின்னால் உக்கார்ந்திருந்த சின்னராசு தான் அலறினான் “கிறுக்கா புடிச்சிக்கிடுச்சு... பைத்தியக்காரெம் மாதிரி ஒட்ற...” அலற அலற சைக்கிள் லம்பி லம்பி வேகமெடுத்து ஓடியது.

காளவாசல்காரனிடம் சைக்கிளைப் பிடுங்கியதும், சைக்கிளை ட்ரையல் பார்க்க ஓட்டினான். ‘ரேஸ் சைக்கிளைப் போல கச்சிதமாக வைத்திருக்கிறான் காளவாச மாப்ளை...’ என வாய்திறந்து பாராட்டினான்.

ஊர் வரை ஓட்டி வந்தவன்திடுமென வந்த வழியே மறுபடி திருப்பி ஓட்டினான்.

“ச்சும்மா கொஞ்ச தூரம் ஓட்டிட்டு வரலாம். சைக்கிள் ஓட்றது நல்ல எக்சசைசாம்ல...” விளையாட்டுப் போல பேசிக் கொண்டே திரும்பவும் குளத்தங்கரையோரமாய் போகவும் சின்னராசு துள்ளிக் குதிக்க ஆரம்பித்தாள்.

“யேப்பா... எக்சசைஸ் பண்ற நேரமா இது... திருப்பப்பா சைக்கிள...”

அவனது சிணுங்கலும் பரிதவிப்பும் சொரிந்து கொடுக்கிற சுகானுபவமாய் இனித்தது வீரபத்திரனுக்கு. இன்னும் அந்த அலறலைக் கேட்க வேணுமென்ற ஆவல் பீறிட, சைக்கிளில் உட்கார்ந்த

நிலையிலிருந்து எழுந்து நின்று குதித்து குதித்து ஓட்டலானான். எதிர்பார்த்தது போலவே அலறல் மிகுந்து ஒலிக்கலானான். சைக்கிளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். மேடு பள்ளங்களில் ஏறி இறங்கியதில் அடிவயிறு கொட கொடத்தது. மூத்திரப்பை நசுங்கி நீர் வெளியேறியது போல, சொட்டு சொட்டாய் மொழிங்காலில் சொட்டியது.

‘இடுக்கு’ களம் வரை வீரபத்திரனின் வேகம் இருந்தது. வேகம் தணிந்த சமயம் பார்த்து கீழே குதித்து விட்டான் சின்னராசு. போதாத காலம், குதித்த இடத்தில் ஊசிக்கல் கிடந்தது. அது அவனது வலது பாதத்தில் குத்திச் சாய, ஒரு நொடியில் வலி உச்சந்தலைக்கு ஏறி கண்ணிலும் நீர் துளியைக் காட்டி விட்டது.

குதித்தவன், ‘அய்யோ...’ என்று அலறியபடி நகரக் கூட முடியாமல் நடுரோட்டில் அப்படியே உட்கார்ந்து விட்டான். குத்தியகாலை நகர்த்துவதற்கு ஒரு சிலநிமிடங்கள் தேவைப்பட்டது. பூவசரசங்காய் சைசில் அந்தக் கல் இருந்தது ஊசியாய் சீவப்பட்டது போல பளபளத்தது அந்த சீனிக்கல்.

“என்னாச்சு... ராசு...” சின்னராசுவின் சத்தத்தில் சைக்கிளைத் திருப்பி, ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி அவன் பக்கமாய் உட்கார்ந்தான் வீரபத்திரன்.

“வெளாட்டுக்கு அளவு வேணாமா...”

“முள்ளா...” ராசுவின் காலைப் பிடித்து திருப்பினான். கல்லை எடுத்துப் பார்த்தான். “காய மாயிருச்சா...” உள்ளொடுங்கிய பாதத்தை அழுத்தித் தேய்த்து விட்டான். பள்ளமான இடத்தில் விரல் பட்டதும் சுளீரென்றது. கால் சுண்டியது. அதே வேகத்தில் பரபரவென தேய்த்தான். பாதம் சூடேறியது. உஷ்ணத்தில் வலி சமனப்பட்டு குறைந்ததும் காலை இழுத்துக் கொண்டான்.

“ஒரு நேரம் போல ஒரு நேரம் இருக்காதுப்பா... சின்னப்பிள்ளத்தனமான காரியத்தெல்லா விட்ரு...” எழுந்து, தார் ரோட்டை விட்டுக் கீழிறங்கி ஒண்ணுக் கடித்தான். வேஷ்டியெல்லாம் மண்ணாகி இருந்தது.

“சின்னப் பிள்ளத்தனமா குதிச்சது ஆரு...? சொன்னா நிப்பாட்டு வம்ல... பெரிய இவென்னு நெனப்பு... ஓடுற சைக்கிள்லருந்து குதிக்கிறப்ப கீழ என்னாருக்கு ஏதுருக்குன்னு பாத்துல்ல குதிக்கணும்... கல்லுங்கப் போயி சரியாப் போச்சு... ஒடமுள்ளா இருந்தா... எலும்பச் சேத்து ஏத்திருக்கும்ல...”

“பொச்ச அமுக்கிக்கிட்டு வீட்ல கெடக்க மாட்டாம இந்நேரத்துல ஒங்கூட வந்தேம் பாரு... என்னய முள்ளு மட்டுமா குத்தும்...” முகத்தில் வேதனையும் உள்ளத்தில் கொதிப்புமாய் சொல்லிவிட்டு நடந்தான் சின்னராசு.

“ந்தா... இதேன் எனக்குப் பிடிக்காது... என்னமோ நானே தள்ளி விட்ட மாதரி பேசற... நா எங்க போயிரப் போறே... மிஞ்சிப் போனா

வர்சப் புளியமரம் போவனா... அட, வீரப்பய்யனார் கோயிலுக்கு மேலயா போயிரப் போறம்... சத்தமாச் சொன்னா நிப்பாட்டிட்டுப் போறேன்... பூரா மிஸ்டேக்கையும் ஓம் மேல வச்சுக்கிட்டு...”

“கோயிலுக்குப் போறேன்னு மொதல்லயே சொல்லீர்ந்தா ஏறி இருக்க மாட்டேன்ல...” காலை ஊன்றி மிதிக்கையில் சுருக் சுருக்கென தைத்தது.

“சைக்கிளு கைக்கு வந்தப்பெறகுதான அய்டியாவே வந்துச்சு... பௌர்ணமி பூசைக்கு என்னா செஞ்சு வச்சிருக்காங்கன்னு பாத்துட்டு வந்திர்லா ஏறு...” மறுபடி அழைக்க,

“ஆளவிடு சாமி... நா வரல...” உறுதியாக மறுத்துவிட்டு காலைக் கெந்தியபடியே நடக்கலானான். முத்துராமலிங்கம் மோட்டார் தோட்டம் வந்ததும் வீரபத்திரனும் சைக்கிளை விட்டிறங்கி உருட்டி வந்தான். கிணத்து மேட்டில் பயிரழித்து செங்கல் சூளை போட்டிருந்தார். குளக்கரை ஒட்டிய தோட்டமாகையால் கிணற்றில் நீர்ப்பிடிப்பு நன்றாயிருந்தது. வெள்ளாமைபோட்டு மல்லுக்கட்டி ஒய்ந்ததும், சாத்தூர், கோவில்பட்டி பக்கம் போய் அட்வான்ஸ் கொடுத்து செங்கல் அறுக்க ஆள்பிடித்து வந்தார். பச்சைக்கல் அடுக்கி அவர்களுக்கு வீடு போட்டுத் தந்திருந்தார். அந்த வீட்டிலிருந்து லைட் வெளிச்சம் தெரிந்தது. அதைப் பார்த்த வீரபத்திரன் சைக்கிளை நிறுத்தி ஸ்டாண்ட் போட்டான்.

“ராசு... ஒர் நிம்சம்.. உள்ள போனதும் வந்திர்ரேன்...” சைக்கிளை ஸ்டாண்ட் கூடப் போடாமல் அப்படியே சின்னராசுவின் மேல் சாத்திவிட்டு ஒரே பார்வையாய் வேட்டை நாய் போல, வேலிப் புதரை விலக்கிக் கொண்டு வண்டிப்பாதை வழியே வேகு வேகென நடந்தான்.

“இங்க போய் என்னத்த தூக்கிட்டு வரப் போறானோ...’ தன் மீது சாய்ந்த சைக்கிளை நிமிர்த்திய ராசு, “வீரபத்ரா.. வெரசுனு வந்துரப்பா... எனக்கும் பொண்டாட்டி புள்ளைக இருக்கு...” என்று சொல்லியபடி ஸ்டாண்ட் போட்டு சைக்கிளின் கேரியரில் உக்கார்ந்து காயம்பட்ட பாதத்தை தடவிப் பார்த்தான். வலி குறைந்திருந்தது.ஆனாலும் ஊசி குத்தின தடம் போல சின்னதாய் தோல் கிழிந்திருந்தது. நகத்தால் நோண்டினான். மெலிதான எரிச்சல் வெளிப்பட, எச்சிலைத் தொட்டுக் கழுவினான்.

செங்கல் சூளையில் நாய் குரைக்கும் சத்தம் கேட்டது.

இன்னம் சோறு சாப்பிடல, காமாச்சியாத்தா வீட்ல குடிச்ச காப்பித் தண்ணி, வீட்டுல இன்னைக்கும் ஏழ்ரையாகப் போகுது... பத்து மணிக்கு மேல ஊர்ல ஒனக்கு என்னா சோலின்னு கேக்குற வளுக்கு, என்னத்த பதில் சொல்றது...? எவனாச்சும் வந்து வென வச்சுடுறாங்கெ... கடச்சோலி, சொந்த வேல, எதையும் பாக்க முடில... சாதீல எல்லாரையும் போல மெம்பரா இருந்திட்டுப் போகாம,

பொறுப்புன்னு ஒண்ண ஏத்துக்கிட்டு லோல்பட்ட பொழப்பாத்தே இருக்கு. நிம்மதியா கடைல ஒக்காந்து ஏவாரம் பாக்க முடில... அவள இவெ இழுத்துட்டுப் போய்டான், இவள அவெ இழுத்திட்டு ஓடிட்டான்னு... ஓடுனவங்கள ஔவு பாக்குற வெக்கங்கெட்ட வேலயாப் போச்சு... சீ...

கேரியரின் இரண்டு பக்கமும் கால்களைப் போட்டுக் கொண்டு சின்ன வயசில் விளையாடியது போல, நிறுத்திய சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்தான். கிறு கிறுவென வேகமாய் சக்கரத்தை சுற்றவிட்டு பெடலை பின்பக்கமாய் அதே வேகத்தில் சுழற்ற ஒருவிதமான ரீங்காரம் கேட்டது. அது அந்த இரவுப் பொழுதின் அமைதியைக் கிழித்தது. குளத்தங்கரை ஆலமரம் றெக்கை விரித்த மயிலைப் போல படர்ந்திருந்தது. மரத்தின் உச்சியில் நிலா வட்டவடிவ ஸ்டிக்கர் பொட்டுப் போல வாகாய் படிந்திருந்தது. நிலவொளி வாங்கிய குளத்துத் தண்ணீர், தரையில் விழுந்த கெண்டை மீனைப் போல மூச்சு விட்டு அலம்பியபடி இருந்தது. ஆலமரத்துப் பறவைகளின் முக்கலும் முனகலும் அவ்வப்போது கிணுகிணுத்தன. அந்த நேரத்தில் கூட ரெண்டுபேர் மேற்கே சைக்கிளில் போய்க் கொண்டிருந்தனர். சத்தமாய்ப் பேசியபடி வந்த அவர்கள், சின்னராசுவைக் கண்டதும் பேச்சறுந்து, தொடர்ந்தனர்.

ரெம்ப நேரமானது போலத் தெரிந்தது. வீரபத்திரன் போன திசை நோக்கி எட்டிப் பார்த்தான். லைட் வெளிச்சம் அணைந்திருந்தது. என்னாச்சு... கதவக் கிதவ அடச்சிட்டாங்களா... இம்புட்டு தொலவுக்கு பைனான்ஸ் பண்றானே தில்லு, தெம்பு இல்லாட்டி நடக்குமா...? நட்ட நடு சாமத்லயும் நின்னு சைக்கிளப் புடுங்கற தெனாவட்டு இருக் கப் போய்த்தே நீடிக்க முடியுது... கள்ளப்பயல மிஞ்சிட்டானே...

டி.வி.எஸ். எக்ஸெல் ஒன்று வேகமாய்க் கடந்தது. கடந்த வண்டி நின்றது. "ஆர்ப்பாதூ... ராசுவா... சின்ராசா..." சிவனுப் பிள்ளையின் குரலாய் இருந்தது.

சைக்கிளை விட்டுக் கீழிறங்கினான். "ஆமாங்... பெரிய்யா..."

வண்டி 'ர்ர்ர்ர்' என அனத்தியது.

"என்னா, வெளிக்கி வந்தியா...?"

"வீரபத்திரெ சூளைக்குள்ள போயிருக்காரு... வரவும் போகணும்.."

"வீரபத்ரனா.. ஈஸ்வரெ மகனா..."

"ம்.. அவெந்தா பெரிய்யா..."

"அட... கந்து போடுறவெந்தான... காவலுக்கு நிப்பாட்டிட்டானா... அறிவு கெட்ட பெலே... போடா வீட்டுக்கு, வெளக்குப் பிடிக்கச் சொல்லாமப் போய்ட்டாம் பாரு..." அடுத்த வார்த்தைகளை காற்றில் உதிர்த்தபடி வண்டியைக் கிளப்பினார்.

உடம்பெல்லாம் அதிர்ந்து உஷ்ணம் ஏறியது. நெற்றிப் பொட்டில் குவிந்த வெப்பம் விண் விண்ணென்றது. அவமானத்தால் உடல்

கூசியது. ஒருகணம் என்ன செய்வதென விளங்கவில்லை. சூளையில் நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. வீரபத்திரன் திரும்பி வருகிறான் போல.

சைக்கிளின் ஸ்டாண்டை விடுவித்து, கிளப்ப தயாரானான் அதற்குள் ஓட்டமும் நடையுமாய் வந்துவிட்டான் வீரபத்ரன். சைக்கிளைப் பிடுங்கினான். முகத்தில் வியர்வை கொப்பளித்தது. அதைவிட கோபம் குதித்துக் கொண்டிருந்தது. ராசுவைக் காட்டிலும் கோபம். சட்டை பட்டன்கள் தாறுமாறாக மாட்டப்பட்டிருந்தன.

“அந்த நாட்டாமத் தாயளி. என்னா வேல செஞ்சிருக்காந் தெரிமா....!” மூச்சு வாங்கியது வீரபத்திரனுக்கு.

ராசு எதையும் கேட்க தயாராயில்லை.

“காவி வேட்டி கட்டிக்கிட்டு, கெழட்டு நாயி... காட்டிக் குடுக்குற வேலபாக்குதே...” தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தான் அவனோடு போகணுமா என்று சின்னராசு யோசித்துக் கொண்டிருக் கையில், “ஏறு ராசு...” என்று ஆணையிட்டான் பேச்சில் செயலில் கோபம் மிகுந்திருந்தது.

தான்பட்ட அவமானத்தை வெளிப்படுத்த வாய்ப்பே தராமல், அடுத்த கட்டத்துக்கு இழுத்துச் செல்லப்படுகிற துயரம் குறித்து கேள்வி எழுப்ப முடியாத நிலமை சின்னராசுவுக்கு.

“காமாச்சியக்கா வீட்லருந்து பெருசு, மாயெ வீட்டுக்கு போயிருக்காரு... அங்க என்னத்த சதி வேல பண்ணான்னு தெரில.. நாட்டாமக் கூதியான் கூட்டிக்குடுற வேல பாக்குறதுல நம்பர் ஒண்ணுன்னு தெரிஞ் சிருச்சு. இன்னிக்கு அந்தாள் கால இணுங்குனாத்தே சரிப்படும்... ஏறப்பா...”

தானாக ஏறினானா... வீரபத்திரனின் குரல் ஏற்றி விட்டதா எனத் தெரியவில்லை. பழையபடி சைக்கிளின் பின்கேரியரில் உட்கார்ந்திருந்தான் சின்னராசு. சீட்டை இறுகப் பிடித்தபடி.

## 17

பூதிப்புரம் நோக்கி ஆட்டோ பயணித்துக் கொண்டிருந்தது. இரண்டாம் ஆட்டம் துவங்கி விட்டதால், விலக்கிலிருந்த சினிமா தியேட்டர்களில் வெளி விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன. உள்ளே படம் ஓடுகிற சத்தம் தெளிவில்லாமல் கேட்டது.

முருகவேலும், மயிலும் தவிர பூதிப்புரத்திற்கு இன்னொரு டிக்கட் ஏறியது. அந்தப் பெண் ஊர்காலப்பன் கோவில் தெருவாம். ஆளுக்கு பதினைந்து ரூபாய். பெண்கள் இருவரையும் பின் சீட்டில் உட்கார்த்தி விட்டு, முருகவேல் டிரைவரோடு அமர. அந்தப் பெண்ணோ, "அட வந்து ஒக்காரப்பா... ஒரு ஊர்க்காரெ... தாயா புள்ளயா போவம்.." என்றாள். பின் கொசுவம் வைத்த சேலை உடுத்தி இருந்தார். முடியை அள்ளி தலையில் பின்பக்கமாய் பெரிய கொண்டை போட்டிருந்தார். நெற்றியில் பெரிய அகலமான வட்டப் பொட்டு. வாயில் வெத்திலை வாசனை.

"இல்ல... டிரைவர் தோழரோட பேசிட்டு வரலாம்னுதே..."

"இங்கன இருந்து பேசுனா கேக்காதாக்கும்..." காலை ஒடுக்கி உட்கார்ந்து தோழருக்கு தாராளமாய் இடமளித்தார்.

"என்னாங்ணே கூட்டம்...!" மயிலு கேட்டாள்.

"ஒரிசாவுல கிறிஸ்தவங்களப் பூராம் கோயில இடிச்சு கொல பாதகம் செய்றாங்க... அதக் கண்டிச்சு 'மதச்சண்டை வேண்டாம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் நிவாரணம் தரணும்னு கேட்டு ஆர்ப்பாட்டம்..." அவர்களுக்கு புரிகிற வகையில் சொல்லலானார்.

"எதுனாச்சும் ஒரு கூட்டம் கும்பல்னு, தம்பி நடத்திட்டுதா இருக்கு... அது நம்ம நாட்ல இருக்கா இல்ல பாக்கிஸ்தான்ல இருக்கா... " அந்தம்மா கேட்டார்.

"நம்ம இந்தியாவுல தாம்மா..." பம்பாய்க்குப் பக்கம்..."

"ச்... கலிகாலந் தம்பி... அழிமானம் ஆகித்தே அடங்கும்."

''மசூதிய இடிச்ச நாள்லருந்து இதே பாடாப் போச்சு...'' இல்லியாண்ணே... மயில்.

"அதுக்கு முந்தியும் இருந்துச்சுமா... இப்ப ரெம்பக் கூடுதல்..."

''என்னாண்ணே... ஒரு சாதிக்குள்ளேயே ஒத்தும இருக்க மாட்டேங்கிது... இதுல எல்லா மதமும் ஒண்ணு கூடணுங்கிறீக... ஆகுற காரியமா...'' தன் பிரச்சனையை உலகத்துப் பிரச்சனையாக உருவகித்துப் பேசினாள்.

RangaRakes tamilnavarasam.com

“ஆகும்மா... ஆகாமயா உலகம் இவ்வளவு வளந்திருக்கு...?”

“அப்பறம் எதுக்கு நீங்க இன்னம் பொண்டாட்டி புள்ளய பாக்காம, இன்னமும் மைக்கப் புடிச்சுக்கிட்டு அலயறீக..”

ஆட்டோ டிரைவருக்கு இது சுவாரஸ்யமானதாக இருந்தது. இல்லாவிட்டால் பக்கத்து வீட்டு பொரணியும், சதி வேலைக் கானதிட்டமுமாகத் தான் பேச்சுப் போக்கு வரும். இது ஒரு வித்தியாசமான பேச்சாகத் தெரிய வண்டியை நிதானமாக ஓட்டிப் போனார்.

“புள்ள குட்டிய பாக்கலன்னு ஆர் சொன்னது...” என்று சிரித்த தோழர், “யம்மா உலகத்தில எல்லாத்திலியுமேரெண்டு வகை இருக்கும். இல்லியா...?”

“ம்... நல்லது கெட்டது... முட்டாளு அறிவாளி”

“ஆமா... உலகம் பூராவும் அமைதியா இருக்கணும் அப்பத்தான். மனித குலம் மேலும் மேலும் முன்னேறிப் போக முடியும்னு ஒரு கூட்டம் பாடுபடுது. இன்னொரு பக்கம் எப்பப் பாத்தாலும் அடிதடி சண்ட சச்சரவு நடந்துகிட்டே இருக்கணும்னு பாடுபடுற கூட்டம் ஒண்ணு.”

“எதுக்கு அப்பிடி...?”

“எல்லாம் ஏவாரந்தே... அவங்க பொருள விக்கத்தே”

“கத்தி கப்படாவா செய்றாங்க... நம்ம வாழயாத்துப் பட்டி மாதரி...”

“அம்ம ஊர்ல தயாரிக்கறது பண்ணருவா, வீச்சருவாள். இதெல்லா விவசாயத்துக்கான கருவி... ஏன்னா நம்ம நாடு விவசாய நாடு... ஆனா அவங்க செய்றது அணுகுண்டு, டாங்கி, போர் விமானம்னு நாட்டோட நாடு மோதற சமாச்சாரம்...”

“அத விக்கெனும்னா சும்மா இருக்கவன தூண்டி. விட்டு ஒலப்பிளாட்டம் பண்ணி சண்டைக்கே இழுக்கறதாக்கும்...”

“அத மட்டுமில்ல... பக்கத்து நாட்டுக்கு ஓசியா குடுத்து பங்காளிய பயமுறுத்துறது...”

“ஆ..மா... எதிர்க்க இருக்கவெ கை ஓங்கி நிக்கிறப்ப நாமளும் ஈடா நிக்கணும்னு நெனப்பான்ல...”

“அந்த நெனப்புதான் அவங்களுக்கு லாபம். இது மட்டுமில்லாம நாட்டுக்குள்ள வந்து ஒத்துமையா இருக்கற பலதரப்பட்ட சனங்களுக்குள்ள கலவரத்தத் தூண்டி விடுறது. சாதிக்குள்ள புகுந்து சிண்டு முடிஞ்சு விடுறது...”

“ஓகோ... இப்டீ...ஈ பண்ணி எப்பப் பாத்தாலும் துப்பாக்கியுங் கையுமா திரிய விடுறதா...”

“அதான நடக்குது...”

“அரசாங்கம் என்னாதேஞ் செய்யிது...?”

“அரசாங்கத்த நடத்தறதே அவங்கதான...!”

“ஏவாரிகளா...?” அப்ப பிரதமரு மொதலமைச்சரு...'' ஆட்டோக்காரர் முதலாவதாக வாய் திறந்தார்.

“அவங்க ஏஜெண்டுக மாதரி....!”

சிரித்தான். ‘‘இதுக்குத்தாண்ணே உங்களப் புடிச்சு உள்ள போடுறாங்க...”

“இல்ல தோழர்... அதப் பேசுனா இன்னிக்கிப் பூராவும் பத்தாது... உண்ம அதான...”

“எதுக்கு இப்பிடிச் செய்றாங்க...”

“அதேன் தோழர் சொல்றார்ல... ‘அவங்க மட்டும் நல்லாருக்கணும். நாட்ல அனுதெனமும் ஆளாளுக்கு அடிச்சுக்கிட்டுச் சாகணும்னுதே...”

“அதப் புரிஞ்சுக்காமத்தான் நம்ம சனங்க நான் சாதி இந்து, முசல்மானு, ஏசு கிறிஸ்துன்னு வீம்பு பண்ணிக்கிட்டு திரியிறாங்க... இத புரிய வக்கிற வேலயத்தான் நாம செய்ய வேண்டி இருக்கு...”

“இது எப்பத்தான் தீரும்...?”

“பாடு படுற ஜனங்கள் பூராம் ஜாதி பாக்காம மதம் பிரிக்காம ஒண்ணாச் சேரணும்...”

“அது முடியுமா...”

“மொதலாளிங்க நிக்கிறாங்கள்ல...”

“எல்லாச் சாதியிலயுமா...”

“ஆமாம்மா... தோழர் சொல்றத யோசிச்சுப் பாத்தா தெளிவாத் தெரிதுல்ல... எந்த மொதலாளிகளாச்சும் ஒண்ணு சேந்து சாதி மாநாடு நடத்துறாங்களா... இன்ன சாதி மொதலாளிகள் சங்கம்னு வக்கிறாங்களா... நாம நடத்துனா வந்து நன்கொடை தந்து நாசமாப் போங்கன்னு வாழ்த்து வாங்க...”

தோழர் முருகவேல் சிரித்தார்.

இன்னும் எளிமையாய் சொல்ல முயற்சித்தார். பாடுபட்டு பெறப்படுகிற பலாபலன்கள் வசதிகள் அத்தனையும் விரல் விட்டு எண்ணி விடக் கூடிய சிலரே அனுபவிப்பதும், அவர்கள் இதனைப் பற்றி சிந்திக்காத வகையில் மொன்னையான கல்வியும், கேளிக்கை ஊடகங்களையும், மனிதர்களை வகைப்படுத்தி பிரித்தாளுகிற சூழ்ச்சி செய்து மேலும் மேலும் தங்களை வளப்படுத்திக் கொள்வதையும் சொன்னார்.

“அப்ப, சாதி மதமெல்லா மொதலாளிங்க ஊதி விடுற சங்குங் கறீங்க...” ஆட்டோகாரர் கேட்டார்.

“ஆமா தோழர், மனுசெ தோன்றுனது கொரங்குல இருந்து இல்லியா.. அப்ப நாடார் கொரங்கு, செட்டியார் கொரங்குன்னு தனித்தனியாவா பெறெந்தான்...? எல்லாம் பின்னால வச்சுக்கிட்டதுதான... ஒரு பேச்சுக்கு வச்சுக்குவம். நம்மள மாதரி உழைக்கிற சனங்க எல்லாரும்... அய்யர்லருந்து அடிமட்டத்து வரைக்கும், ஒரு ஜாதி,

அதே போல மொதலாளிக பூராம் ஒரு ஜாதின்னு வச்சுக்குவம்... எது பெருசு...?”

மூன்று பேரும் வேறு வேறு கோணங்களில் யோசித்தனர்.

“யே... யப்பா... நெனைக்கவே பிரமிப்பா இருக்கே...”

“ஏம்ப்பா, அம்புட்டுப் பேற ரெண்டா வகுந்தா ஊரு தாங்குமா...”

“அதுக்காகத்தான ஆளுக்குத்தக்கன பேசி நமக்குள்ள சச்சரவப் பெருக்கி அவங்களப் பத்தி யோசிக்க விடாம... நொங்கு திங்கிறாக...”

“ரைட்... அப்ப சண்ட சச்சர வெல்லா தானா கெளம்புறதில்ல...”

“ஆமா... நேரத்தப் பாத்துக் கெளப்பி விடுறதுதே...”

“அப்படீன்னா... சாதி பாத்து எந்தக் காரியமு நடக்கறதில்லிங்கறீங்களா...” மயிலு உறக்கம் கெட்டவள் போல பேசினாள்.

“கரெக்கெட்டுத் தேம்மா... இப்ப இந்த நூல் மில்லுக்கார்ரும் நாங்களும் ஒரு சாதிதே... என் வீட்ல அவரோ... அவர் வீட்ல நானோ சம்பந்தம் பேச முடியாதுல்ல...” ஆட்டோகாரன் கேட்க,

“அது.. வர்க்கம். பணக்கார வர்க்கத்துக்குள்ளதான் நடக்கும். சாதிக்குள்ள கல்யாணம்ங்கறப்ப வர்க்கப்பார்வை வந்துருதுல்ல...”

“அப்ப எங்கக்கா மகெ சம்பந்தம் பண்ணீர்க்க வீடு; பணக்கார வர்க்கமா... அதேன் ஒட்டாம... அட்டூழியம் பண்றாகளா...?” மயிலு பளிச்செனக் கேட்டாள்.

அதற்குள் வாழையாத்துப்பட்டி விலக்கம் வந்து விட்டது. தோழர், மயிலை வீட்டில் கொண்டு போய் விட்டு விடுவதாகவும், ஆட்டோ பூதிப்புரம் போகட்டும் எனவும் சொன்னார்.

ஆட்டோக்காரன் சிரித்தபடி சொன்னார், “என்னா தோழர், இப்பத்தான் நாம எல்லாரும் ஒரே வர்க்கம்னீங்க... மூன்றுபேரும் சிரித்தனர். “வாங்க சேர்ந்து விட்டுட்டு வரலாம்” வாழையாத்துப் பட்டிக்குள் ஆட்டோ நுழைய, தோழர் மயிலுக்கு பிரச்சனையை தெளிவாக்கினார்.

“அவங்கள நாம அப்பிடி பாக்க வேண்டியதில்லம்மா... கொஞ்சம் வசதி உள்ளவங்க. அவ்வளவுதான். அவங்கள நாம எதிரியாகவும் பாக்க வேண்டியதில்ல... பேசுற விதமாப் பேசினா... அவங்கள சமாதானப் படுத்தீரலாம். நம்ம நாட்ல இதுதான் பெரிய பிரச்சன. பொட்டிக் கடக்காரன் கூட தான் ஒரு மொதலாளின்னு நெனச்சுக்கிறதும், அவன மத்தவங்க எதிரியா பாக்குறதும்... பெரிய அறியாமை...”

மயிலு வீட்டில் லைட் எரிந்தபடி இருந்தது. 'போய்ட்டு வாங்க...' என்று அனைவருக்கும் விடை கொடுத்து விட்டு, வீட்டுக்குள் நுழைந்தாள் மயிலு.

டி.வி. பார்த்துக் கொண்டிருந்தான் மயிலுவின் புருசன் கோபால். பிள்ளைகள் போர்வை போர்த்தி உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

படித்த புஸ்தகமும் நோட்டுகளும் சிதறிக் கிடந்தன. சாப்பிட்ட தட்டுகள் அடுப்புப் பக்கம் குவிந்து கிடந்தது. சட்டியில் மிச்சமிருந்த சாப்பாட்டை திரட்டி தண்ணி ஊத்தி வைத்தாள். குழம்பை மோந்து பாத்தாள். ஸ்டவ் அடுப்பில் தீக்குச்சி கிழித்துப் போட்டு குழம்பை சூடு பண்ணி வைத்தாள். லைட்டை அமத்திவிட்டு ஜாக்கெட்டிலிருந்து அக்கா வீட்டுப் பணத்தை எடுத்து துணிப் பெட்டிக்குள் வைத்தாள். ஒரு தாளை மட்டும் எடுத்துக் கொண்டு புருசனிடம் வந்தாள். இன்னமும் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தான். சத்தம் நிறுத்தப்பட்டு ஊமைப்படமாய் ஓடிக் கொண்டிருந்தது. வெள்ளைக் காரிகள் முக்கால் உடம்பு தெரிய நடந்து காட்டிக் கொண்டிருந்தாள்கள். கொஞ்சங்கூட கூச்ச நாச்சமில்லாமல் அங்க மெல்லாத்தியும் வளைத்து நெளித்துக் காட்டினார்கள்.

“இந்நேரத்துல வராட்டி காலம்பற வர வேண்டிதான” டி. வியிலிருந்து பார்வையை எடுக்காமல் பேசினான்.

அவனிடம் ரூபாயை நீட்டி, “கட தொறந்திருக்கு போயி ஒரு "சப்பட்ட" வாங்கிட்டு வாங்க...” என்றாள்.

நம்ப முடியாமல் பார்த்தான். “நெசமாவா...?” விசுக்கென எழுந்தான். எப்பவாவது இப்படி நடப்பதுண்டு. பணத்தை வாங்கியவன் அவளை இறுக கட்டிப் பிடித்து முத்தங் கொடுத்தான்.

நிலா இன்னமும் கரைந்து போகாமல் ஒளி கொடுத்துக் கொண்டிருந்தது. மரக்காமலை அந்த நேரத்திலும் அச்சுத் துணுக்காய்த் தெரிந்தது. அதன் கீழே யாரோ வைத்த நெருப்பு இடுப்பைக் கீறியது போல சிவந்து கிடந்தது. மயிலு சொன்னபடி கடை திறந்திருந்தது. மயிலுக்கு கொஞ்சூண்டு ஊத்தினான். உறங்கப் போகையில் அவனுக்கு சில வேலைகளைச் சொன்னாள்.

“இப்பவே போகட்டுமா...”

கணக்குப் போட்டுப் பார்த்தாள், “கொஞ்ச நேரம் தூங்குங்க... ஒரு மணி நேரத்தில எழுப்பி விடுறேன்...” என்று அவளும் படுத்தாள். உறக்கம் பிடிக்கவில்லை.

RangaRakes tamilnavarasam.com

# 18

மூத்த மகன் வந்து கதவைத் திறந்தான்.

"முருகேசனா... தூங்கீட்டீகளாப்பா..." நாட்டாமை கேட்டுக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தார்.

எரிச்சலாயிருந்தது அவனுக்கு. "இப்பதேம்ப்பா படுத்தம்....!"

"ரெம்ப நேரமா கதவு தட்னனே..." சத்தமில்லாமல் பேசியவர் மிதியடியை கழற்றிவிட்டு கதவை 'பட்டா' போட்டு சாத்தினார்.

"சின்னவெந் தொறப்பான்னு இருந்தே..."

வாசலை ஒட்டி இருந்த சின்னவன் செல்வராசின் அறை இன்னமும் அடைத்திருந்தது. ''புதுக் கல்யாணம் முடிச்சவன். எப்பிடி எந்திரிப்பான்... தனக்குள் சொல்லிக் கொண்டவர், பட்டாசலையில் சட்டையைக் கழற்றிப் போட்டார். மேற்கே சமையல்கட்டும் அடுத்தொரு ரூம்பும் இருந்தன. ரூமில் பெரியவன் முருகேசன் குடும்பமும் சமையல் கட்டில் நாட்டாமையின் சம்சாரமும் உறங்குவார்கள்.

கிழவிக்கு ஒரு வருசமாக முடியவில்லை. கபம் கட்டிக் கொண்டு இரவானால் இளைப்பு வந்து விடுகிறது. அதனால் பொழுது சாய்ந்ததும் சமையல் கட்டின் கனகனப்பில் முடங்கி விடுவாள். இல்லையானால் சாமத்திலும் ஏமத்திலும் அவள்தான் கதவு திறப்பாள். உறங்காவிழி.

மேல் மாடியில் நடுவுளவுன்கள் ரெண்டுபேரும் இருக்கிறான்கள். தேனி கமிசன் கடை அவர்கள் பொறுப்பு. ஒம்பது மணிக்கு கடை அடைத்து வந்தார்களென்றால் சாப்பிட்டு பத்து மணிக்கு கதவைச் சாத்தி விடுவார்கள். வெளியே வெட்டுக்குத்தே நடந்தாலும் விடிந்த பிறகுதான் முழிப்பு. கதவு திறப்பு.

பெரியவன் முருகேசனும், சின்னவன் செல்வமும்தான் தோட்டந் துரவுகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆளரவங்கேட்டு பின்பக்கத்து கொட்டத்தில், பசுமாடு ஒன்று, "ம்ம்..மா..." என்று சத்தங் குடுத்தது.

"மாடுகளுக்குத் தண்ணி வச்சாச்சா..." கேட்டுக் கொண்டே கொல்லைக்குப் போய் கால் கழுவிக் கொண்டார். மாட்டுக் கொட்டத் தில் கால் வைக்கும் போது சுத்தம் வேணும். லட்சுமி வாசம் செய்யும் இடம். இதனாலேயே ராப்பொழுதில் பையன்களை கொட்டத்தில்

இறங்கவிட மாட்டார். சின்னஞ்சிறுசுகள்... கட்டுப்பட்டு நிக்கெ முடியாது என்று தானே பார்த்துக் கொள்ளுவார். கிழவியோ மருமக்கமார்கள் 'குளித்து விட்டுத்தான் கொட்டத்துப் பக்கம் வரவேண்டுமென, அவர்கள் வீடு நுழைந்த நாளிலேயே சொல்லி விடுவாள். வீட்டுக்கு விலக்கானால் எட்டியே பார்க்கக் கூடாது... சாணியள்ள, கூட்டிச் சுத்தம் செய்ய... வேலைகளுக்கு தண்ணி கட்டுக்காரன் ராமு வந்துவிடுவான்.

"ராமுப்பய வச்சதுதேம்ப்பா..." பால் கறந்து முடித்ததும், உப்பு கலந்து தண்ணி காட்டி விட்டுப் போவான். இவர் சாமத்தில் எழுந்து ஒருதரம் 'காடி'யெல்லாம் சுத்திப் பார்த்து, தீவனம் பரசி விடுவார். கன்றுகளைப் பிரித்து தனியிடத்தில் கட்டி, அதுகளுக்கு அருகம்புல்லை வாக்கூட்டில் சொருகி, மாட்டி விடுவார்.

கொல்லையை விட்டு வந்ததும் நேரே கொட்டகைப் பக்கம் போனார். முருகேசனும் பின்னாலேயே வந்தான். இவரைப் பார்த்ததும் மாடுகள் அத்தனையும் தடபுடவென எழுந்து நின்றன. பச்சைப் புல்லின் மணமும் சாணி நெடியும் கலந்து நாசியை நிறைத்தன. நிலா வெளிச்சத்தில் கன்றுகள் முகத்தைத் தூக்கி நிலாவோடு பேசுவது போல, கண்களை பாதி மூடியபடி கிடந்தன.

துண்டை தலையில் உருமாசுத்தி, வேஷ்டியை வரிந்து கட்டிக் கொண்டு கொட்டத்துக்குள் இறங்கினார் நாட்டாமை. முருகேசன் பருத்தி விதை அரைக்கும் ஆட்டுரலில் உட்கார்ந்து கொண்டான். சிமெண்ட் தகரம் போட்டு கீழே கருங்கல் தளம் போட்டு ரெம்பவும் சுத்தமாய் வைத்திருந்தார். நாட்டாமை கீழே கிடந்த சாணியைப் பூராவும் வழித்து ஓரமாய் மொத்தஞ் சேத்து வைத்தார். மாடுகளுக்குள் புகுந்தும் செய்ய வேண்டி இருந்தது. முதல் 'ஈத்து' போட்டிருந்த வெள்ளைப் பசுவின் அடிவயிறெல்லாம் சாணி அப்பியிருந்தது. ஊடே புகுந்தபோது அது வேட்டியில் ஒட்டியது. "நாறக்கழுதே... ஊய்..." என்று திட்டியபடி சிந்திக் கிடந்த சீமைப் புல்லின் கட்டையை எடுத்து அதன் அடிவயிற்றை வழித்து விட்டார். ராமுப் பயல் வந்தால் தண்ணி ஊத்தி கழுவி விடுவான்.

காடியில் தீவனம் இல்லாததால் ஒவ்வொரு மாடும் இவரது கையை நக்கின. வெதுவெதுப்பாகவும் சொரசொரப்பாகவும் இருந்தன. நாக்குகள் "பொறு...பொறு" வெளியில் வந்து கையைக் கழுவிவிட்டு போர்த்தி வைத்திருந்த சீமைப்புல்லை ஒரு கொடங்கு அள்ளி தலைக்கு மேல் உயர்த்தியபடி மாடுகளுக்குள் புகுந்தார். புல்லைப் பார்த்ததும் அவரை காடிக்கு வரவிடாமல் தலையைத் தூக்கி அவர் கையிலிருப்பதைப் பறிக்க நாக்கைச் சுழற்றி நெருக்கித் தள்ளின...

''ந்தேய்.. தேய்... தீவனங்கண்டு மாசக்கணக்கான மாதிரி அவதியப்பாரு..." ஆட்டுரலில் இருந்தபடியே சத்தங் குடுத்தான் முருகேசன். கொட்டத்துக்குள் நுழையும் நிலையில் இல்லை அவன்

என புரிந்து கொண்ட நாட்டாமை. தீவனத்தை மாடுகளுக்கு எட்டாத உயரத்தில் தூக்கிப் பிடித்துக் கொண்டு... 'வரேன்ல... ஒங்களுக்குந்தான். தள்ளு தள்ளு. தள்ளிக்க...'' என்று மாடுகளுடன் பேசிக் கொண்டே காடியில் வீசிவிட்டு, எல்லா மாடுகளுக்கும் கிடைக்கிற மாதிரி தீவனத்தை பரசி விட்டார். புல் கடிக்க ஆரம்பித்ததும் அமைதியான மாடுகள், வாலைச் சுழற்றி ஈக்களை விரட்டலாயின. கொஞ்ச நேரம் நின்று அவை புல் கடிப்பதை வேடிக்கை பார்த்தார் நாட்டாமை.

"காமாட்சி வீட்டுக்கா போயிர்ந்தீங்க...? உட்கார்ந்திருந்தபடி கைகளை சோம்பல் முறித்துக் கேட்டான்.

"ம்..." என்று மாடுகள் பக்கமிருந்த கவனம் மாறாமல் பதில் சொன்னார்.

"இம்புட்டு நேரம் என்ன வேலன்னுதே..." என்றவன். "அந்தக் கெடாரியப் புடிச்சு வெளிய கட்டுங்கப்பா எடஞ்சலா இருக்கும் போல நிக்க எசவில்லாம தட்டலியிது...'' என யோசனை சொன்னான்.

"அதத்தேன் நெனச்சேன்..." என்றபடி அந்தப் பசுவின் கயிறை அவிழ்த்தார். அது, தீவனத்தை விட்டு வரமறுத்தது. 'வா, கழுதே...' என்று அடித்து வாலை முறுக்கித் தள்ளி இழுத்து வந்தார். குளுதாணிப் பக்கம் நிலா வெளிச்சத்தில் கட்டிப் போட்டார். பிறகும் அது கொட்டத்துப் பக்கம் போகவே கழுத்தை ஆட்டி கயிறை இழுத்தது. "பொறுபொறு.." அதற்கு ஒரு கை புல்லை அள்ளிப் போட்டதும், குளுதாணிக்குள் வாய் விட்டது. கன்றுகளை மாற்றிக் கட்டி தீவனம் இட்டு காலைக் கழுவிக் கொண்டவர். தலைத் துண்டைஅவிழ்த்து துடைத்துக் கொண்டே பட்டாசலைக்கு வந்தார்.

"ஆமா கழுத... அங்கதேம் பஞ்சாயத்து என்னா பயக, புடிக்கல..." மகனின் கேள்விக்குப் பதில் சொன்னார்.

"கண்டு பிடிச்சிட்டாகளாம்ல..."

"நானும் போயிருந்தேன்ல... மாப்ளகாரெங் கூட இழுத்த வழிக்கு வருவாம் போல, பொண்ணுதே ஆத்தாளக் கணக்கா ஒரே வீம்பு. மாட்டேன்னு ஒரே முடிவாத்தா இருக்கா..."

"பதினஞ்சு நாளாச்சா..."

"ஆகும்ல... ஒளிஞ்சுகிட்டவங்களப் பிடிக்க முடிமா...?"

"பாத்தும் ஒண்ணுந் நடக்கலியே..."

"என்னா நடக்கணும்... நாம நெனைக்கிறப்படி எதும் நடக்காது.. அடிச்சு இழுத்து வர முடிமா..? அசிங்கமில்லியா...! ஆறப் போட்டுத்தேம் பாக்கணும்..." திண்ணையில் தூசி தட்டிவிட்டு உட்கார்ந்தார்.

"இப்ப ஓடிப் போயிருச்சுங்கறது அசிங்கமில்லியா..."

"அது முடிஞ்ச கத..."

“இருந்தாலும் அசிங்கந்தான...”

“அசிங்கம்னு பாத்தா அசிங்கந்தே... வேறாள் கூடவா போயிருச்சு... எனத்தாந்தானன்னு வச்சுக்கிட்டா அசிங்கமில்லதே...”

“அப்ப கல்யாணத்தக் கட்டி வச்சிர வேண்டிதான...”

தலையாட்டியபடி மௌனமாயிருந்தார். மூத்தவனின் அறைக்கதவு திறந்து, மருமகள் சேலைத் தலைப்பைச் சரி செய்தபடி கொல்லைக்குப் போய்த் தாழ் போட்டது.

“எனக்கெல்லா அதுதே அய்ப்ராயம். ஆனது ஆயிருச்சு... இனி, கழுத எவனோ ஒருத்தன்ட்ட கெஞ்சிக் கெதறி கட்டி வச்சு அவெங் கால்ல விழுகறதக் காட்டியும், ஓவ் விதி இம்புட்டுத் தானாத்தான்னு, பொட்டியக் கட்டி அனுப்பிச்சு விட்றலாம்... கேக்க மாட்டேங் கறாகளே...”

“வேறென்னா செய்யப் போறாகளாம்... ஊரே உலகமே சிரிச்சுப் போச்சு, இனி மகளக் கூட்டி வந்து வீட்டுக்குள்ள வச்சு வேடு கட்டி காக்கப் போறாகளாக்கும்...” கொல்லையிலிருந்து வெளியில் வந்த மருமகள், புளிச்சென எச்சிலைத் துப்பிவிட்டு மேலும் பேசியது. “அந்தளவுக்கு அடுத்த சாதிக்காரன இழுத்துட்டுப் போகலேன்னு மணம் பெத்துக்க வேண்டிதே... இல்லாட்டி வம்சா வழி பூராமுமில்லக் காறி துப்பிக்கிட்டிருக்கும்....!”

“சொன்னாத்தே ‘தரம்’ வேணுமாம்...”

“ஆ...மா... இவக தரந் தெரியாதாக்கும்... நம்ம வயலுக்கு நெல்லு பெறக்க வந்த கத தெரியாதா... இந்தம்மாளும் திருப்பூர்ல கட்டிக் குடுத்துருக்கறவளும் இதுக்கு முந்தி என்னா செஞ்சாகன்னு ஊருக்குத் தெரியாது பாருங்க... வீடு வீடா ஓசிக்கஞ்சி வாங்கி, ஓசிச்சேல உடுத்தி விசேச வீட்டுக்குப் போனதெல்லா மறந்திடுவாங்களாக்கும்... இன்னிக்கி எதோ அரிசி வித்து, சீமெண்யை வித்து ரெண்டு வீடு வாங்கிட்டாகளாம்.. ரெம்பத்தே பவுசு....!”

“ச்... அதெல்லா நாம சொல்லக் குடாதும்மா... எல்லா அவெவெ நேரங்... காலம்...”

“சரி மாமா... இவன கைப்பிடிச்ச நேரம் நல்லா இருந்துச்சுனு வையிங்க, ரெண்டு வருசத்துல இவங்களப் போல நாலு வீடு வாங்க மாட்டாங்"களா...”

“உம்மதே, காசு பணத்தக் கட்டியா போட முடியும் போற நேரம் போகும், வார நேரம் வரும்... நாம பொதுவாளுக... அடிபட்ட காலுக்கு வைத்தியம் சொல்லத்தே முடியும்... ரெம்பச் சொன்னா... ஓவ்வீட்டு பொண்ணுன்னா.. குடுக்கணும்னு சொல்லுவியாங்கிறாக...”

அந்த வார்த்தை மூத்த மருமகளை கரண்டாய்த் தாக்கியது,” சொல்ல வேண்டி..தே... அம்ம வீட்லதே கோயில் மாட்ட பெத்துவச்சிருக்க மாக்கும்...இவளப் போல இவெ மகளும் திரிவா... இப்பிடி வாய் கொள்ளாம பேசிப் பேசித்தே சோகுகண்டுக்கிட்டா...

இத்தோட அங்க போறத விட்ருங்க மாமா... போதும்.. மானங்கெட்டவ. ஆரப்பாத்து பேசுறா... ஒங்க வீட்டு பொண்ண குடுக்கவாம்... இவள மாதரி ஊய்க்காலி மாட்டவா பெத்து வச்சிருக்கம்னு நெனச்சா...”

“நானும் அதத்தேம்ப்பா சொல்றே...” என்ற முருகேசன், “இத்தன நாள் இருந்தீங்க செஞ்சீங்க... இப்ப வயசாச்சு... இதுக்குப் பெறகு ராத்திரி பகலுன்னு பாக்காம அலச்சல் தேவையா? இப்பத்தே வாலிபந் திரும்புதா... ஊர்ல என்னென்னமோ நடக்குது. நீங்க வெளீல போய்ட்டா, திரும்பர வரைக்கும் கெதக்கு கெதக்குன்னுதே இருக்கு... வேண்டாம்பா இந்த சனியம் புடிச்ச வேல விட்ருங்க..”

விசயம் வேறெங்கோ பயணிக்கக் கண்டு மௌனமானார் நாட்டாமை. “சரி சரி... காலம்பற பேசிக்லாம் படுங்க படுங்க... போங்க..” விரட்டினார்.

“ஆ...மா...” என்ற சலிப்போடு கணவன் மனைவி இருவரும் தங்கள் அறைக்குள் புக, நாட்டாமை கயித்துக் கட்டிலைப் போட்டு தலை சாய்த்தார்.

கதவு தட்டப்பட்டது. ‘தடதட’.. தட.. தடதட.”

“யார்ப்பா...” நாட்டாமை முக்கி முனகி எழுவதற்குள் முருகேசனே வந்து திறந்தான். சின்னவனின் அறைக்கதவும் திறக்க, செல்வமும்மைனர் செயினின் புதுக் கருக்கோடு வெளியில் வந்தான்.

ஒட்டையனும், போசும் வாசலில் நின்றிருந்தனர். “அவசரமாம்ங்யா... காமாச்சியாத்தா கூப்பிட்டு வரச் சொன்னாங்க...” கை கட்டி சொன்னார்கள்.

“இந்நேரத்துல என்னா அவசரம்...’ முருகேசன் கேட்டான்.

“தெரியலீங்யா...”

“இப்பத் தான்றா வந்தே...”

“ஏதோ போன் வந்துச்சு போல... அவசரமா கையோட கூட்டி வரச் சொன்னாங்க...”

‘‘கையோட கூட்டி வர, அவரென்னா ஆட்டுக்குட்டியா...? அவசரம்னா அவகள இங்க வரச் சொல்லு...” சின்னவன் செல்வம் சத்தம் போட்டான்.

“இங்க எதுக்கு கரச்சலு...” என்று சின்னவனை அமைதிப்படுத்தினார் நாட்டாமை.

ஒட்டையனும், போசும் அதற்கு மேல் எதும் பேசவில்லை. நிலா வெளிச்சத்தில் எக்செல் வண்டி நின்றிருந்தது. அதன் சைடு கண்ணாடி யில் முகம் பார்த்துக் கொண்டது குட்டி நிலா.

# 19

தன்னால் எதையும் சாதிக்க முடியாது என்ற முடிவுக்கே வந்துவிட்டான் சோனைமுத்து, நடந்து நடந்து கெண்டங்கால் வலியெடுத்தது. யாராச்சும் பார்த்தால் கிறுக்குப் பிடிச்சுப் போனதாகத் தான் பேசுவார்கள். ஆன மலையான் கோயிலுக்கும், அன்பு டீக்கடைக்குமாய் ஆயிரந்தடவை நடந்தாயிற்று. அதுக்கு பதிலா கோயிலை சுத்தி இருந்தாலாச்சும் நேத்திக் கடன் கழிஞ்சிருக்கும். நிலா ஒண்ணுதான் நெழல் மாதரி கூடவே வந்து கொண்டிருந்தது.

வீருசின்னு வீட்டிலிருந்து இறங்கி வந்ததிலிருந்து உக்காரவில்லை. நினைச்ச நிமிசத்தில் கண்ட இடம். பாண்டியன் சைக்கிள் கடை. கடை மாதரி தெரியாத வடிவத்தில் அது இருந்தது. வெளித் திண்ணையை கொஞ்சம் நீட்டி விட்டிருந்தார். மேலே கூரையெல்லாம் கிடையாது. கடை திறக்கும் போது சாமான்களெல்லாம் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வரும். அடைக்கும்போது உள்ளே போய்விடும்.

கடைக்காரர் வாத்தியார் வேலை பார்க்கிறார், பொண்டாட்டியும் டீச்சர். பள்ளிக்கூடம் முடித்து வந்ததும் தான் கடைதிறப்பார். பூராமும் சிறுபிள்ளைகள் ஓட்டக்கூடிய குட்டி சைக்கிள்கள். காவண்டி, அர வண்டி, முக்கா வண்டி, மூணு சக்கர வண்டி கூட வச்சிருக்கார். டீச்சர் மொட்டை மாடியில் பொம்பளைப் பிள்ளை களுக்கு டியூசன் எடுப்பார்கள். அதனால் ஏழு மணிக்கெல்லாம் கடையை அடைத்து விடுவார். அதுக்கு மேல பிள்ளைகள் படிக்கப் போகணுமாம். காசுக்கு ரிமாண்டெல்லாம் கிடையாது. வர்ற காசை கல்லாவில் போட்டு வைப்பார். நல்லா படிக்கிற பிள்ளைகளுக்கு சிலேட் புஸ்தகம் வாங்கித் தருவார்.

திண்ணையில் உட்கார்ந்து காலைக் கட்டிக் கொண்டான். நடந்த காலுக்கு அந்த இறுக்கம் இதமாயிருந்தது. புது வத்தலக்குண்டிலிருந்து ஒன்றிரண்டு ஆட்டோக்கள் வந்து ஆட்களை இறக்கி விட்டன. கடேசி பஸ் போன பிறகு இவர்களுக்கு (ஆட்டோகாரர்களுக்கு) கொண்டாட்டம்தான். பஜார் தெரு கடைசீ வரைக்கும் போய்த் திரும்பின ஆட்டோ அதன் கடூரமான சத்தம் அமைதியைக் குலைத்தது.

கடையின் வாசல் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. சடக்கென ஒதுங்கி உட்கார்ந்தான். வடசட்டி ஒன்றை அலம்பாமல் ஏந்தியபடி

RangaRakes tamilnavarasam.com

டீச்சர் வெளியில் வந்தார். திறந்த கதவுக்குள்ளிருந்து டியூப் லைட் வெளிச்சத்தின் ஒளி வெளியிலும் படர்ந்தது.

உட்கார்ந்திருந்த இவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ஓரமாய் சாக்கடையில் குனிந்து சட்டியைக் கவிழ்த்தார். "யாரு... சோன ராஜ்ஜா..." வெறும் சட்டியுடன் நிமிர்ந்தவாறு கேட்டார்.

குரல் கேட்டு வேகமாய் எழுந்தவன், "ஆ.. மாங் டீச்சர்" என்றான். அவனுக்கு நாலாப்பு சொல்லித் தந்தவர். அன்னைக்குப் போலவே இப்பவும் உடல்கட்டு மாறாமல் அச்சாக இருந்தார். முகத்தில் கண்ணாடி மட்டும்தான் கூடுதல். பேசுகிறபோதே அவருக்கு கன்னத்தில் குழிவிழும். பார்க்கப் பார்க்க ஆசையாய் இருக்கும்.

கதவோரத்தில் காத்திருந்தவர் போல பேச்சு சத்தம் கேட்டதும் வாத்தியார் வெளியில் வந்தார். "ஆர் மா...?" பளீரென்ற வெள்ளை வேட்டியும், பால் போல பனியனும் உடுத்தியிருந்தார்.

"சோன ராஜு..." சொல்லி விட்டு டீச்சர் வீட்டுக்குள் போய் விட்டார்.

"என்னாப்பா... சௌக்யமா.."

"நல்லார்க்கேன் சார்.."

"என்ன, இன்னேரம்...?" மணி பார்த்தார்.

"ஓராளத் தேடி வந்தேன் சார்..."

"ஆளத்தேடுனியா...! அஞ்சு பவுன் தங்கத்தத் தேடுன மாதரியில்ல அங்கைக்கும் இங்கைக்குமா அலஞ்சு கிட்ருந்தியேப்பா..."

அட ஆண்டவா... இதுபோல எத்தன பேர் பாத்திருப் பாங்களோ... "அதெல்லா இல்ல சார்.."

"ம்... டீ.. குடிக்கிறியா..?"

"டீயா..."

"நாங்க குடிக்கப் போறம்..."

"வேண்டாம் சார்... ஒரு அஞ்சு ரூவா இருந்தாக் குடுங்க..."

"என்னத்துக்கு...? கட்டிங்குக்கு கொறையுதாக்கும்." எந்தவிதக் கையிருப்புமில்லாமல் பேசினார்.

"சார்... அதெல்லா இல்ல சார்..." சட்டைப் பையைக் கவிழ்த்துக் காண்பித்தான்.

"சிகரெட் வாங்கவா..."

ஆமெனச் சொல்ல முடியாது..." ஃபிரண்டு வந்தான்னா டீ சாப்பிடத்தான் சார்..."

வாத்தியார் சொல்லுகிற சில்லரை வேலைகளை எல்லாம் தப்பாமல் செய்வான். வேலைத் தளத்திலிருந்து வரும் போது காய்கறி எதும் கையிலிருந்தால் டீச்சரோ வாத்தியாரோ நின்றிருந்தால் கொடுத்துவிட்டுப் போவான். அதனால் சகஜபாவம் குறையாமல் இருந்தது.

வீட்டுக்குள் போய் வந்தவர், “இந்தா பெசல் டீ சாப்டு...” என்று பத்து ரூபாய்த் தாளைத் தந்தார்.“கதவ அடச்சிரட்டா...”

“தாங்க்ஸ் சார்” தலையை ஆட்டியதும், வாத்தியார் கதவைச் சாத்தினார்.

பன்னீர் வந்து நின்றான்.

வாங்கிய பணத்தை சேப்பில் வைத்துக் கொண்டு திரும்பியவனுக்கு பன்னீரின் திடீர் வருகை துணுக்கிட்டது.

“இப்பிடியாப்பா அரவமில்லாம வந்து நிப்ப...” என்று கடிந்து கொண்டான்.

“காசு ரெடியாயிருச்சா...” பன்னீர்.

“வீட்டுக்கே போகலியே...!”

“யே...?”

‘‘யேன்னா...!’’ கேட்டவன், ‘‘அங்க என்னா தண்டட்டியா இருக்கு...” என்றான்.

“பெறகு...?”

“பெறகு...? பெறகுதே...” தலையில் சுண்டிக் கொண்டான்.

“வாத்தியார்ட்ட எதோ வாங்குன மாதிரி தெரிஞ்சிச்சு...”

“அதான பாத்தே... வாட புடிக்காம இருக்கியேன்னு” சேப்பிலிருந்த பத்து ரூபாய்த் தாளை எடுத்து நீட்டினான்.

“பத்து ரூவாயா... இதெல்லாம் வச்சு ஒண்ணும் பண்ண முடியாது... கொறஞ்சது முன்னூறு ரூபாயாச்சும் வேணும்.. சேத்துக் கேளு...”

‘‘இதுனாலதாண்டா நீ ஊருக்கு வெளிய இருக்க, மனுச மக்களப்புரிஞ்சு பேசுனும் பன்னீரு... எதோ பிரியத்ல பத்து ரூவா தர்ராருன்னா... வேரோட புடுங்கச் சொல்ற...’ சோனைமுத்துவுக்கு கோபம் வந்தது.

எதோ ஒரு வீட்டில் அடைக்கோழி வெருண்டு ‘கக்கக்கக்’ என ஒலி எழுப்பியது.

சோனைமுத்துவின் கோப வார்த்தைகள் தனக்கானதல்ல என்பது போல பேசினான் பன்னீர், “அவரென்னா இல்லாதவரா...? இருப்புப் பணக்கார்ருதான, பிள்ளையுமில்ல குட்டியுமில்ல சும்மா கேக்க வேண்டிதான... குடுப்பாரு...’’ குடுத்து வச்சிருப்பவன் போல பேசினான்.

“பன்னீரு... ஒன்னையும் என்னையும் திண்ணைல நிக்க விட்டதே பெருசு... சும்மா கேளுங்கற...?”

“அப்பறம் நா என்னா சொல்லட்டும், உங்க வீட்லயும் இல்லீங்கற... இருக்க வீட்லயாச்சும் கேக்கலாம்ல... கடனாத்தே கேக்கணும். நாளப்பின்ன குடுத்துக்க வேண்டியதே... கேட்டுப் பாத்தா, குடுத்தா சரி... இல்லேன்னா போறாரு...!”

சோனைமுத்து இதுவரைக்கும் அறியாத நியாயத்தை பேசினான் பன்னீர். குழப்பமாக இருந்தாலும் அதிலும் ஒரு பாய்ண்ட் இருப்பதாகத் தெரிந்தது. கடனாக கேட்டால் தப்பு இல்லியே...

RangaRakes tamilnavarasam.com

"என்னா சத்தம்..." கேட்டபடி மறுபடி வாத்தியார் கதவைத் திறந்து வந்தார். பன்னீரைக் கண்டதும் நிலைப் படியிலேயே நின்று கொண்டார். "இவெந்தே ஓம் பிரண்டா" என்றார்.

"இல்ல சார்... வேற விசயம்...!"

தலையை ஆட்டியவர், "சரி சரி எந்த விசயம்னாலு மெதுவாப் பேசுங்க... ராத்திரி நேரம். அடுத்தவங்கள உறங்க விடுங்க..."

அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே இடையில் சோனைமுத்துவைக் கிள்ளினான் "கேளு கேளு..."

சொல்லிவிட்டு வாத்தியார் உள்ளே போகத் திரும்பிய சமயம், "சார்'' என அழைத்தான் சோனைமுத்து. குரல் கொஞ்சம் பிசிறடித்தது.

உள்ளே ஒருகாலும் வெளியில் ஒரு காலுமாய் நின்ற வாத்தியார். தலையைத் திருப்பிப் பார்த்தார்.

தயக்கத்தோடு திணறினான்.

"ஒரு சின்ன உதவி சார்.." பன்னீர் முந்திச் சொன்னான்.

"உதவியா...?"

"ஒண்ணுமில்ல சார்.. ஒரு முன்னூறு ரூவா, வேணும் இதுவரையிலும் அவரிடம் இத்தனை அதிகமான தொகை கேட்டதில்லை.

"ஒண்ணுமில்லாத முன்னூறு ரூவாயா..." தெளிவாய்க் கேட்டார்.

"அர்ஜண்டு சார்... அவசரம்..."

"ரெண்டும் ஒண்ணுதே... இதும் ஓம் பிரண்டுக்கு டீ வாங்கித் தரவா...?" பன்னீரைப் பார்த்தபடியே கேட்டார். டீச்சர் பார்த்தால், 'கேடிப்பயல வாசல்ல நிறுத்தி என்னா பேசுறீங்க' என திட்டுவார்.

"இல்ல சார்... இது வேறொரு காரியத்துக்கு.."

"நல்லது... எங்கிட்ட இப்ப இல்லியே... சரி சரி.. என்ன பேசுனாலும் மெல்லப் பேசுங்க... உறங்காட்டி டீச்சருக்கு பீ.பீ. ஏறிடும்.." கதவைத் தாளிட்டுக் கொண்டார்.

சோனைமுத்துவுக்கு அசிங்கமாய்ப் போனது. மனசு படபடவென துடித்தது. அவமான உணர்ச்சியில் பூச்சி ஊர்ந்தது.

"தர மாட்டாரு... எனக்குத் தெரியாதா... பணக்காரெங்கெப் புத்தி..? முன்னூறு. மூணு நூறு ரூவா... அது கூட இல்லாம வறும புடுச்சு கெடக்காங்களாக்கும்... மாசம் இருபதாயிரம் முப்பதாயிரம் சம்பளம் வாங்கி கம்மாத் தண்ணீலயா கொண்டுக்குப் போயி போடுறாங்க..." பன்னீர் கறுவினான்.

கேட்டிருக்கக் கூடாது... கேட்டது கூடத் தப்பில்லை. அவரும் இல்லை என்று சொன்னதும் தப்பில்லை. பன்னீர் முன்னால் இல்லை என்று சொன்னதைத்தான் அவனால் தாங்க முடியவில்லை. இருந்தாலும் விட்டுக் குடுக்காமல் பேசிட வேண்டுமே... எச்சிலை முழுங்கினான். "சரிப்பா... நட்ட நடு ராத்ரில நீ குடுப்பியா" யாரையும்

சடக்குன்னு பேசீரக்குடாது...” சொன்னபடியே படியிறங்கினான் சோனைமுத்து.

“நாந்தேங் குடுப்பே... இந்தா பிடி....!” என்று இரண்டு நூறு ரூபாய்த்தாள்களை தந்தான் பன்னீர்.

வாத்தியார் மேலிருந்த கோபமெல்லாம் அப்படியே பன்னீர் மேல் திருப்பிவிட்டான். “ஆழம் பாக்குறியாக்கும்....? ம்...? இப்ப நொட்றத, அப்பவே நொட்டீர்க்கலாம்ல... அதாண்டா, எதையும் வக்கிற எடத்துல வக்கெணும்....!” கண்கள் சிவக்கச் சொன்னான்.

“வீரு சின்னுதேங் குடுத்து உட்டுச்சு...”

“பின்ன நிய்யா உருட்டிக் கொண்டாரப் போற...” என்று இன்னமும் கடுமையாகப் பேச நினைத்த சமயம்

“வணக்கம் தோழர்...” சலாமிட்டபடி ஆட்டோவில் வந்து இறங்கினார் குமார் தோழர். முழங்கால் வரை தொங்கும் துணிப்பையும், ஒடுக்கமான பிரேம் போட்ட மெல்லிய கண் கண்ணாடியும், ஒடிசலான உடல் வாகும் கொண்ட மனிதர். படபடவென கூச்ச நாச்சமில்லாமல் யாரிடத்திலும் பேசுவார். அதுதான் அவரை ஒரு இடத்தில் நிற்கவிடாமல் பரபரப்பாய் இயக்கிக் கொண்டிருந்தது. அரசு பயங்கரவாதம் என்று அரசின் மாய்மாலங்களைத் திட்டிக் கொண்டிருக்கையில், மதவெறிக் கும்பலின் அட்டகாசத்தை விளாசுவார். பாசிசம் ஒழிக்க பாடுபட பாட்டாளிகள் திரள வேண்டும் என்று முடிப்பார். இறுதியில் தாங்கள்தான் உண்மையான ஒரிஜனல் கம்யூனிஸ்ட் என்று அடிக்கடி சொல்லிக் கொள்வார் ஆனாலும் ஏழை பாழைகளோடான பழக்கம் அதிகம்.

சோனைமுத்துவும், பன்னீரும், அவரோடு அம்மன் கோயில் வழியே சாம்பல் மேட்டைக் கடந்து வயலில் இறங்கினார்கள். ஆளுக்கொரு பக்கமாய் குத்த வைத்துக் கொண்டனர்.

ஊரை ஒட்டிய நிலம், ஊரின் சாக்கடைத் தண்ணீர் பாய்ச்சி சீமைப்புல் வளர்ந்து கிடந்தது. வரப்பில் ஏறி உட்கார்ந்து இருந்தனர். வாய்க்காலில் தவளைகளின் கெக்கரிப்பும், சில் வண்டுகளின் ரீங்காரமும் அலாதியாகக் காட்டின. சீமைப் புல்லின் காரத் தன்மைக்கு பாம்புகள் நிறையத் திரியுமென சொல்லி இருந்தார்கள். எங்கும் நிறைந்த பேரொளியாய் நிலா வெளிச்சத்தைப் பரப்பி இருந்தது.

சுருக்கமாக விபரம் சொல்லி முடித்தான். சோனைமுத்து. வித்தியாசமாய் தோழர் பாராட்டிப் பேசினார்.

“இனிமேல் இதுதேந் தோழர் நடக்கும்..! சாதியோட சாதி சேர்றது சாதி மறுப்புன்னா, ஒரே சாதிக்குள்ள பணக்காரெ - அதும் மொதலாளி வீட்டிலேயே கைவைக்கறது. சினிமாவுல பாத்துருக்கம். நிஜத்திலேயே நடந்துருக்குன்னா... அதுக்கு நாம உயிரா இருக்கணும் தோழர். இது நம்ம வர்க்கப் பிரச்சன.. ஜாதிய பாக்க வேண்டிய தில்ல...” என்று உணர்ச்சி ததும்ப பேசினார் குமார்.

RangaRakes tamilnavarasam.com

"சாயங்காலம் சுமுகமாத்தே பேச்சு நடந்துச்சு தோழரே... பொம்பளப் பிள்ளையக் கூட்டிக்கிட்டுப் போறவக. தாயாரோட வந்து கூப்பிட்டுக் கிட்டுப் போங்கன்னுதேஞ் சொன்னம். அப்ப, சரின்னு போனவங்க, இப்ப அவங்க அடியாள்கள ஊருக்குள்ள எறக்கி விட்டுட்டுப் போயிருக்காங்க தோழரே..."

"இதுதேந் தோழர் வர்க்க குணம்ங்கறது, பிரச்சனை சுமுகமா முடிஞ்சா தங்களோட கௌரவத்துக்கு இழுக்கு, அடிதடியோட துவக்கி முடிக்கிறது... தங்களக்கண்டா பயக்கனும்னு நெனைக்கிறது நிலபிரபுத்துவத்தோட மிச்சம்..." என்று ஸ்டாலின் காலத்து கதை ஒன்றைச் சொல்லலானார். பன்னீர் எழுந்து விட்டான். "கொசுக்கடி தாங்கல.." தள்ளி நின்றவன் பேச்சில் குறிக்கிட்டான்", தோழர் அண்ணாச்சீ... நம்மள்க்கு அறிகுறி தெரிஞ்சிட்டா சடார்னு நாமளும் தயாராயிரணும்.. அவங்க ரெண்டுபேரா... நாம நாலு பேரோட நிக்கணும். அப்பன்னாத்தே ஜெயிக்க முடியும்..."

"கரெக்ட் தோழா.. நாம எந்த ஆயுதத்த எடுக்கணும்ங்கறத, எதிராளிதா கத்துக்குடுப்பான்..."

சோனைமுத்துவுக்கு அது சரி என்றே பட்டது, மாயனுக்கும் வசந்திக்கும் செய்யக்கூடிய விசுவாசம் இதுவாகத்தான் இருக்க முடியும். நாளை காலை விடிகிற பொழுது வாழ்க்கையில் இதுவரை பார்க்காத பொழுதாகத்தான் இருக்கப் போகிறது. சந்தோசப்பட்டான்.

"இன்னொரு யோசனை" தோழரும் எழுந்தார். "ஜோடிக ரெண்டும் இப்ப யார் வீட்ல இருக்காங்க...?"

"எங்க வீட்லதேந் தோழரே..."

"இனி அவங்கள எடம் மாத்தணும்"

"இந்நேரத்துலயா... இப்ப வேவா..."

"அதுதே நல்லது... எதிரிகளோட குறிய நாம காலி பண்ணிக்கிட்டே இருக்கணும்."

"இந்நேரத்தில எங்க கூட்டிட்டுப் போறது..."

"அத நீங்கதே பாத்துக்கணும். ஆனா, அவங்க இங்கியேதான் இருக்காங்கங்க மாதரி நம்மளோட பாதுகாப்பு வளையத்த எதிரிக்குத் தெரியறாப்ல நடத்தணும்." எதோ ஒரு யுத்தத்திற்கான வரைபடம் தயார் செய்வது போல குமார் பட்டியல் போட்டார்.

"அதெல்லா நாம் பாத்துக்கறேன்.." என்ற பன்னீர் 'என்னா, இந்த நேரம் பாத்து கைல தம்பிடிதே பொழங்கல...'' கையைப் பிசைந்தான்.

"நாம என்னைக்கி தோழர் காசோட வேலயச் செஞ்சம்...? வேலய ஆரம்பிங்க தோழர்.. பணம் தானா வரும்... நாங்க ரெண்டு மூணுபேர் உங்களுக்கு தர்ரம். அவங்கள எப்பிடி எப்பிடி பயன்படுத்தணுமோ, பயன்படுத்திக்கங்க... "சரியா தோழர்.."

மூன்று பேரும் வாய்க்காலில் இறங்கி சுத்தம் செய்து கொண்டு ஊருக்குள் நடந்தனர்.

ஊரின் விலக்கில் இறங்கிய சித்திரம் பிள்ளை வேகு வேகென நடந்து சோனைமுத்துவின் வீட்டுக் கதவைத் தட்டினார்.

நிலா சோர்ந்து போய் வெளிச்சத்தை சுருக்கிக் கொண்டது.

RangaRakes tamilnavarasam.com

# 20

இரண்டாவது ஆட்டம் சினிமா முடிந்து ஆட்கள் வந்து கொண்டிருந்தார்கள். சரசரத்த செருப்போசையும், பார்த்த படம் குறித்த சிலாகிப்பும், சிரிப்புமாய் இரவுக்கு மீறிய பேச்சொலியில் மிதிபட்டுப் புழுங்கியது இரவு. மேகங்களுக்குள் உள்நீச்சல் போட்டு தன்னை மறைத்துக் கொண்டிருந்தது நிலா. தெருவில் படுத்திருந்த கிழட்டு நாய்கள், உறக்கம் தொலைத்த கோபத்தில் உறுமிக் கொண்டிருந்தன. உல்லாசம் பொங்க ஓடி விளையாடும் வாலிப நாய்கள், அந்த உறுமலை போருக்கான அழைப்பாய் அனுமானித்துக் கொண்டன. உடல் சிலிர்த்து நின்று, முன்னங்கால்களால் மண்ணைப் பறித்து தூசு கிளப்பி முகம் விரைத்து போருக்குத் தயாராயின. கோபத் தின் அடையாளமாய் வால் மட்டும் தடதடவென துடித்தது.

அந்த நேரம் மேற்கிலிருந்து வேகமாய் வந்தது டிவிஎஸ் எக்செல் வண்டி. அதன் ஹெட்லைட்டின் வெளிச்சம் வெளிர் மஞ்சள் நிறத்தில் மோட்டார் பம்ப் செட்டிலிருந்து வெளியேறும் நீர்க் கற்றையாய் பீச்சியடித்தது. போசும், பட்டையனும் உட்கார்ந்து போனார்கள். நாட்டாமை “பின்னால, வாரேன்” என அனுப்பி இருந்தார். வாலாட்டிக் கொண்டிருந்த வாலிப நாய்கள், தங்கள் இலக்கை மாற்றி, எக்செல்லைப் பார்த்துக் குரைத்தன. அதில் வேகமெடுத்த சில நாய்கள் வண்டியைத் துரத்த ஆரம்பித்தன.

பின்னால் உட்கார்ந்து வந்த போசு,“அட்ஜேய் சாகப் போற டேய்...” என்று காலை குறுக்கிக் கொண்டு துரத்தி வந்த நாய்களை எச்சரித்தான்.

காமாட்சி பவனத்தின் வாசலில் வண்டியை நிறுத்தினார்கள். மதிலில் சாய்ந்து ஒரு சைக்கிள் நின்று கொண்டிருந்தது. அதன் மேனி எண்ணெய் போட்டு பளபளத்தது.

வீட்டுக்குள் இரும்புச் சேர்கள் விரித்துப் போட்டுக் கிடந்தன. ஆத்தா, ஒரு காலைத் தொங்கவிட்டு, குத்திட்ட மறுகாலில் தலையைக் கவிழ்த்திருந்தாள். வீரபத்திரன் சின்னராசு, கருத்தக்கண்ணு மூன்று பேரும் திசைக் கொருவராய் உட்கார்ந்திருந்தனர். சின்ன ராசுவுக்கு வயிறு. பசித்து அடங்கி, வேறு எதோ ஒரு தொந்தரவு தொடங்கி இருந்தது. சிலசமயம் வாந்தி வருவது போல குமட்டலும் எடுத்தது. எல்லாவற்றையும் மீறி கண்கள் சொருகிக் கொண்டு, தலை

தள்ளாடியது. இரண்டு முறை குப்புற விழ... இருந்தான். அதன்பிறகு சேரை மதிலை ஒட்டி இழுத்துப் போட்டுச் சாய்ந்து கொண்டான்.

“வக்காள்ளி... இனி இந்த வீட்டுப் பக்கமோ, இல்ல சாதி, சனிமென்னு எந்தப் பய வந்து கூப்புட்டாலும்... அதனால கோடி ரூவா வருமானம் வந்தாலும்... ஆளவிடுறா சாமின்னு கும்பிடு போட்டு ஓடிப் போயிறணும்” என்று சங்கல்பம் செய்து கொண்டான்.

வீரபத்திரனோ அடிபட்ட மிருகம் போல வெறி ஏறி, ஒரு பாய்ச்சலுக்கான வேகத்தோடு உட்கார்ந்திருந்தான். காமாச்சி, கருத்தக் கண்ணு, நாட்டாமை என அத்தனை பேர் மீதும் தனித்தனியே குற்றச் சாட்டும் கோபமும் இருந்தது. வெடித்துக் கிளம்பத் தயாராய் இருக்கும் எரிமலை போல உள்ளுக்குள் கொதித்துக் கொண்டிருந் தான்.

கருத்தக்கண்ணுக்கு தனிப்பட்ட அபிப்ராயம் இருந்தாலும், அதனை காமாச்சியின் குரலோடு இணைத்துத்தான் வெளிப்படுத்தும் நிலையில் இருந்தார்; என்றாலும் ஒரு அசிங்கம் முகத்தில் ஒட்டிக் கொண்டிருப்பது போல, ஆசூயை தென்பட்டது.

காமாட்சியின் மனநிலையோ அவளே அறிய முடியாமல் இருந்தது.

வீட்டுக்குள் நுழைந்த ஒட்டையன், “பெரிய்யா வருரேன்னாரு...” எனச் சொல்லிவிட்டு வெளியேறி நகர்ந்தான்.

“வீட்லதே இருந்தாரா...” வீரபத்திரன் கேட்டான்.

“வீட்லதேங்யா இருந்தாரு...” பதில் சொன்ன கணத்தில் நழுவி வெளியில் வந்தான். எதையாச்சும் வில்லங்கமாய்க் கேப்பார். பதில் சொன்னால் அசிங்கமாய் வைவார். என்னா சொன்னாலும் வசவுதான். இப்படிபட்ட ஒரு நெலமை அந்தாளுக்கு அல்வா சாப்பிடுற மாதிரி. ஒலகத்த காக்க வந்த ஏசுசாமியவிட தான்தா பெரியாள்னு நெனப்பு. வெளியே வந்து போசிடம் பீடி வாங்கி புகைத்தான் ஒட்டையன்.

உள்ளே மறுபடி டெலிபோன் மணி கிணுகிணுத்தது. உட்கார்ந்திருந்த அத்தனை பேரும் சுறுசுறுப்பாகினர்.

கருத்தக்கண்ணன் தான் எடுத்தார். வத்தலக்குண்டிலிருந்துதான் போனாம்.

“சொல்லு” என்றார்.

இப்ப, புதுசா ஒரு கச்சிக்காரர வேற சேத்துகிட்டு எதோ பிளான் பண்றாக மாதிரி தெரியுது என்றது.

“கச்சிக்கார்ரா” விளங்காமல் கேட்டார்.

“ஆமாங்யா, கொக்கிப் பார்ட்டி”

“கொக்கியா... கம்மூனிஸ்ட் கச்சியா...”

“க் காங்யா... மூணு வேரும் சாம்பக் காட்டுப்பக்கம் எறங்குனாங்யா... அங்குட்டுத்தான சாராய ஊறல் பொழங்குற எடம்...”

“சரி...” கருத்தக்கண்ணுக்கு எதும் புரியவில்லை "சாராயம் குடிக்கப் போறாங்கெலாக்கும்... என்னாதேஞ் சொல்ற...”

“அப்பிடி இல்லீங்யா... சாராயங் காச்சுற வெங்கள செட்டப் பண்ணப் போறாங்கன்னு நெனைக்கிறேன்...”

கருத்தக்கண்ணு விடமிருந்து ரிசீவரை வாங்கிய வீரபத்திரன், “யென்னாவாம்” என்றான் தோரணையோடு.

"ஆரோ கம்யூனிஸ்ட்டு காரங்க ரெண்டு பேரக் கூட்டிக்கிட்டு சாராயங் காச்சரவங்களப் பாத்து எதோ ஏற்பாடு நடக்குதாம்...” கருத்தக்கண்ணு தனக்குப் புரிந்ததைச் சொன்னார்.

“யேய்... நீங்க என்னா செய்றீங்க...” பெருத்த குரலில் வத்தலகுண்டுக்கே கேக்கிற மாதிரி பேசினான் வீரபத்திரன். தங்களைத்தான் கூப்பிடுகிறார்களென ஒட்டையனும் போசுவும் பாதி பீடிக் கட்டையுடன் உள்ளே ஓடிவந்தனர்.

காமாட்சி மிதிபட்ட நாகமாய் தலை உயர்த்திப் பார்த்தாள். “வீரபத்துரா... இது, ஆந்தகத்தக் கூட அஞ்சுற நேரம்... சவுண்டக் கொறடா சாமீ...” என்றாள்.

“ஏண்டா, அங்க ஒக்காந்துகிட்டு ரன்னிங் கமாண்ட்ரி குடுக்குறீகளா.... முக்குறான்... பேள்றான்.. கழுவுறான்னு..? நீங்க என்னாடா செஞ்சீங்க... ரெண்டுபேர் போயிருக்கீங்களே, எவெங்கிட்ட யாச்சும் ஒரண்டை இழுத்தீங்களா... இழுத்துருக்கணும்டா... அதக்கண்டு அவனுகளுக்கு பேதிக்கு போயிருக்கணும்டா...”

எதோ பதில் வந்தது.

“இங்க பாரு... பதிலுக்கு பதில் சொல்லக் குடாது.”

... ... ...

“ரெண்டு பேர்பத்தாட்டி, அங்குன ஒரு நாலு பேரக் கூட ரெடி பண்ணு. அதும்பத்தாட்டி சொல்லு... இங்கருந்து அனுப்புச்சுருவம்... காசப்பத்தி நீ என்னா மயித்துக்குடா கவலப்படுற...”

“காசு பத்தாட்டி கேள்றா...! காசக் கேட்டுத்தே போன் பண்ணனும்... ச்சும்மா கோனுச்சுக்கிட்டு நிக்கிது குனிஞ்சுகிட்டு வர்றானுகன்னு வார்த்த வரக்குடாது...”

“அசலூர்ல... ஆள் பிடிக்க முடியுமாங்யா...”

“இம்புட்டு நாய மயிரு பேசுறவன அனுப்பிச்சு விட்டது எந்தப்பு. கட்டிட்டு வாடான்னா குத்திட்டு வரணும் அதே எனக்குப் பிடிக்கும்... முடிஞ்சாப் பாரு. முடியாட்டி காரேறி வந்துர்ரா சாமி... என்னா...?”

அங்கே அவனுக்கு தன்மானப் பிரச்சனை யாயிருக்க வேண்டும். “இம்புட்டு நக்கலடிக்காதீங்கய்யா... ஒருத்தன சாய்க்கறதக்கு ரெம்ப நேரம் ஆகாது.”

“ஆயிருச்சேடா... ரெம்ப நேரந்தான ஆயிடுச்சு மொண மொணன்னு ஒப்பிச்சுக்கிட்டு தான இருக்க. உன்ன எதுக்கு நிப்பாட்டிட்டு வந்தம்...? இந்நேரம் ஊரு கலங்கி இருக்க வேண்டாம்... பொண்ண கூட்டிட்டு

வந்திர்ரம்...னு, அங்கருந்து அவங்க போன் அடிச்சிருக்கணும்ல...” என்றவன். “ந்தா பாரு.. விடிய நாலு மணிக்கி நாங்க வந்துருவம்... ஆமா, நாலு பேரா நாப்பது பேரான்னு ஓங்கிட்ட சொல்ல வேண்டியதில்ல. வந்தா... ஊரையே கலக்கீ... கெண்டமீனு கெளுத்தி மீன்லருந்து அயிரக் குஞ்சக்கூட விடுறதில்ல... க்காள்ளி, இன்னிமேல் அந்த ஊர்ல எந்தப் பயலும், இப்பிடி ஓடுகாலிகளுக்கு ஒரு மடக்கு பச்சத் தண்ணி கூடக் குடுக்கக் குடாது. ஆ...மா... ரணகளம் ஆக்கிப் புடுவம்... நீங்க மட்டும் உசுர பத்தறமா புடிச்சு வச்சுக்க...” பேசி முடிக்கையில் தொண்டை வறண்டு இருமல் வந்தது.

“இம்புட்டு சொல்லீட்டடீங்கள்ல... இனி போன் பண்ண மாட்டே... அப்பாதயே காப்பிக் கடைல வச்சு ஒர்த்தே வம்பிழுத்துட்டுப் போயிருக்கான். அவன வச்சே ஆட்டய ஆரம்பிக்கிறம் பாருங்க...

ரிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்த போது, அத்தனை பேரும் வீரபத்திரனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். ‘கண்ணை மூடிக் கொண்டே பேசிக் கொண்டிருந்தோமோ.... பேசியதில் வியர்த்துப் போன முகத்தை வேஷ்டியின் முனையால் துடைத்துக் கொண்டான்.

“கொரங்குவால்ல கொள்ளியக் கட்டி விட்ட மாதிரி காரியத்தக் கெடுத்துப் புட்டியேடா...'' காமாட்சி தலையில் அடித்துக் கொண்டாள்.

வீரபத்திரனுக்கு அவள் யாரைத் திட்டுகிறாள் என்பது உடனடி யாகப் புரியவில்லை.

“என்னாக்கா...?”

“ஈரத் துணியப் போட்டு கோழிய அமுக்குன மாதிரி கமுக்கமாப் போயி காரியத்த முடிச்சுரலாம்னா, தேன் ராட்ல கல்லெறிஞ்சு கலச்சு விட்டுட்டியேடா... ஊரச் சாட்டி உசுப்பேத்திட்டியே... சேர்ரதெல்லாம் இப்பிடியா செவலிங்கமாச் சேரணும்...” மறுபடியும் தலையில் கைவைத்தபடி உட்கார்ந்து கொண்டாள் காமாட்சி.

“என்னாக்கா கிறுக்குத்தனமா ஒளர்ற...”

“ஆர லூசுங்குற...” என்றபடி சின்னராசு எழுந்தான். இதுதான் அவனைச் சாய்க்க சரியான சந்தர்ப்பம். “ஏம்பா குசுவுன தடந் தெரியாம... எம்புட்டு ஜாக்ரதையா ரெண்டு பேர நிப்பாட்டி வச்சம்... அசங்கலப் பாத்து தாக்கல் சொன்னா, அருவமில்லாப் போயி செந்தூக்கா தூக்கிட்டு வந்திர்லாம்னு அய்டியாப் பண்ணி வச்சிர்ந்தா.. எதோ பாக்கிஸ்தான் காரனுக்கு படை அனுப்புற மாதரி டமாரமடிச்சு டம்மியாக்கிட்டியேப்பா... இதுக்குத்தே ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டுன்னாங்கெ...”

சின்னராசுவின் சீண்டலில் வீரபத்திரன் இளைப்பு வந்தவனைப் போல மூச்சு வாங்கிப் பல்லைக் கடித்தான்.

ஆமாமா.. புத்தி மட்டந்தே...”

“ஆரையும் குத்தஞ் சொல்லிப் பிரயோசனமில்ல...” என்று குறுக்கிட்ட கருத்தக்கண்ணு, “அதவிடுங்க, இம்புட்டு பேச்சுக்கு அங்கன என்னா குந்தக் கேடு பண்ணப் போறானுகளோ... நல்லதோ கெட்டதோ பேசியாச்சு. மாப்ள சொன்ன மாதரி நாலு மணிக்கு கௌம்பீரணும். விடியங்குள்ள ஊர மிதிச்சாத்தே உபத்திரவமில்லாம எதாச்சும் செய்ய முடியும். லேட் பண்ணப் பண்ண நம்ம தலைல நாமளே மண்ணள்ளிப் போட்டுக்ங்கிற வேண்டிதே...”

“இம்புட்டுப் பயக்குறவங்க என்னத்துக்கு அர்த்த ராத்திரில என்னயக் கூப்புட்டு ஒப்பிக்கணும்..? சத்தமில்லாம சீர்செனத்திய கட்டிக்கிட்டு சாரட்டு வண்டில பொண்ணு மாப்ளய அழச்சுக்கிட்டு வந்திருக்க வேண்டிதான... பண்ணயம் பாத்த பரதேசி. பவுனத்தூக்கி வச்சுக்கிட்டு பவுசு காட்டிகிட்டு இருக்கான். அடிச்சு வகுந்து போடாம. கொக்கு தலையில வச்ச வெண்ணெ உருகி கண்ணு மூடி நிக்கிமாம் கவக்குன்னு புடிக்கவாம்... என்னமோ போங்க...” எகத்தாளமாய்ப் பேசினான்.

“வீர புத்ரா... பவுனு பண்டம்னா அடிச்சு வாங்கலாம் ஒதச்சும் வாங்கலாம். பொம்பளப் புள்ளடா... மானம்டா...”

“அந்த நொட்டியத்தே சொல்றே... மானமே போச்சு அத ரத்தங் கக்க வச்சாத்தே திருப்ப முடியும்ங்கறே...”

“கூதறத்தனமா பேசாதடா... நீங்க போடுற ஆட்டத்துல அவிங்க புள்ளய வேற பக்கம் கடத்தி விட்டாங்கென்னு வையி... இன்னம் பத்துநாள் அலயவா...” காமாட்சியின் இந்தக்கேள்விக்கு வீரபத்திரனால் சட்டென பதில் கூற முடியவில்லை.

“கெடைக்கலன்னா நேத்து வரைக்கும் காவக்காத்தவன - எடங்குடுத்தவன புடுச்சுக்குற வேண்டிதே...”

“ம்... அவெங்கூட மல்லுக்கட்டி ஊர்க்காரன பகச்சுக்கணும்ங்கற...”

“எல்லாமே நோவுதான். வலிக்காம புள்ள பெத்துக்க முடியாது... பிய்யி பேழத்தா முடியும்...”

“பெரீவர வாராரு...” ஒட்டையன் ஓடிவந்து தாக்கல் சொன்னான்.

நாட்டாமையும் அவரது மூத்த மகன் முருகேசனும் காமாட்சி பவனத்திற்குள் கால் வைத்தனர். வீடு முழுக்க மண்ணெண்ணையின் கார நெடி கமறியது.

# 21

வெகு நேரமாய் கதவைத் தட்டியும் பதிலில்லை. சித்திரம் பிள்ளைக்கு யார் பேரைச் சொல்லிக் கூப்பிடுவது எனத் தெரியாததால் வெறுமனே தட்டிக் கொண்டிருந்தார். உண்மையில் தனது மகன் இந்த வீட்டில்தான் இருக்கிறான் என்பதை கண்ணால் பார்க்காமல் அவன் பேரைச் சொல்லித் தட்டுவது சரியல்ல. தப்பு. வேறு யாருடைய பெயரையும் சொல்லிக் கூப்பிடவும் தயக்கமாயிருந்தது.

1. அவர்களது பெயர் ஞாபகத்தில் வரவில்லை

2. ஒருவேளை தனது மகன், இந்த வீட்டில் இல்லை என்றால்... இந்த நேரத்தில் வந்து கதவு தட்டி....

மாயன் மில்லில் வேலை பார்த்த சமயம் ஒன்றிரண்டு தரம் இங்கே வந்திருக்கிறார். அதற்கப்பறம் சோலி இல்லாமல் போனது. வீடு ரோட்டுக்கு மேல்புறமாய் தூரத்தில் இருக்கிறது. ஒருவேளை தனியாய் வந்த மலைப்பா.. அடுத்த தட்டலை கொஞ்சம் பலமாக்கினார். அதன் எதிரொலி போல வாவரங்காச்சி மரத்தில் அடைந்திருந்த சேவலொன்று உறக்கம் கலைந்து கூவியது.

“யாரூ...” வீட்டுக்குள்ளிருந்து பொம்பளைப் பிள்ளையின் குரல் வந்தது.

நாளாகிப் போனதால் அந்தக் குரலின் சொந்தக்காரரை இனங்காண இயலவில்லை. ஒருவேளை அது தனது மருமகளாய் (!) இருக்கலாமோ... அந்த எண்ணம் எழுந்ததும் உடம்பெல்லாம் புல்லரித்தது. மடித்துக் கட்டியிருந்த வேஷ்டியை இறக்கி விட்டுக் கொண்டார்.

தோளில் கிடந்த துண்டை கையில் எடுத்துக் கொண்டவர், “நாந்தே ஆயி...” பெரிய வீட்டுப் பிள்ளைகள அழைக்கிற அதே சொல் தானாய் வந்து விழுந்தது.

“நாந்தேன்னா...” உள்ளேயிருந்து கேட்ட வார்த்தையில் சந்தேகமும் கொஞ்சம் பயமும் கலவையாய் ஒலித்தது. என்றாலும் கதவு திறக்கவில்லை. தனது பெயரைச் சொல்லவோ, மாயனின் தகப்பனார் என்று சொல்லிக் கொள்ளவோ இவருக்கும் துணிவு வரவில்லை.

“யாருங்க...” ஆண்குரல் கேட்ட நிமிசத்தில் தாள் அகல, கொஞ் சமாய் கதவு திறந்தது. வெளியில் நின்ற சித்திரம் பிள்ளையின் உருவம் பிம்பமாகத் தெரிந்தது.

“பேரக் கேக்றம்ல...” எரிச்சலுடனும் அய்யாச்சாமி- சோனைமுத்துவின் தந்தை கேட்டதும்.. “மாயெ அப்பா... சித்ரம்பிள்ள... தேனிலருந்து

வாரெ...” ஒவ்வொரு வார்த்தையையும் மதிப்புமிக்க பொருளின் மேனியைக் காட்டுவது போல எழுத்து எழுத்தாகச் சொன்னார்.

கதவு விரியத் திறந்தது.

“லைட்டப் போடு”

குண்டுபல்பின் வெளிச்சம் பளீரெனப் பரவியதும் வீட்டினுள்ளிருந்த அனைவருக்கும் கண் கூசியது. கதவுக்குப் பின்னால் இத்தனை பேர் இருப்பார்கள் என்று எதிர்பார்க்காததால் சித்திரம் பிள்ளை உடம்பு ஒரு ஆட்டம் ஆடி நின்றது.

“வாய்யா...” அய்யாச்சாமி சுபாவமாய் வரவேற்றார். “நீங்கதான...” அவருக்குப் பின்னால் அவர் மனைவி லட்சுமி. அடுத்து நின்றது மாயன். சட்டையை கழற்றிப் போட்டு வெற்றுடம்போடு நின்று கொண்டிருந்தான். மகனைக் கண்ட வினாடியில் சித்திரம் பிள்ளைக்கு ரத்தம் சூடேறிப் பாய்ந்தது கைகளும் கால்களும் பரபரத்தன. கண்களில் கசிவும், தொண்டையில் கேவலும் புறப்பட்டு அழுகையில் முட்டி நின்றது. ஓடிப்போய் மகனை கட்டிக் கொண்டார். உடல் குலுங்க அழுதார். அத்தனைபேரும் விக்கித்துப் போய் நிற்க, மாயன் கண்களிலும் நீர் முத்துக் கோர்த்தது.

“அப்பா...” குரல் பிசிறடிக்க அழைத்தவன், வேறெதுவும் பேசத் தோன்றாமல் மரம் போல நின்றான்.

திறந்த கதவு வழியாக காற்றும் கொஞ்சம் நிலா வெளிச்சமும் வந்தது. அதோடு கொசுக்களும் வீட்டிற்குள் நுழைந்து பாரபட்சமில்லாமல் அனைவரையும் ஆசையாய்ப் பிடுங்கின. வாவரங்காச்சி மரத்திலிருந்தோ, பூவரசு மரத்திலிருந்தோ ஆந்தை ஒன்று அமர்ந்து நிதானமாய் ஓலக்குரல் எழுப்பியது. உடனே லட்சுமி ஓடோடிப் போய்க் கதவைச் சாத்தினார்.

“ரைட்டு ரைட்டு...” சித்திரம் பிள்ளையின் தோளைத் தட்டி சமாதானம் செய்தார் அய்யாச்சாமி.

துண்டுக்குள் முகம் புதைத்திருந்த சித்திரம் பிள்ளை, தெளிவடைந்தவராய் கண்களைத் துடைத்துக் கொண்டார். அய்யாச்சாமியையும் லட்சுமியம்மாளையும் பார்த்து பெரிசாய்க் கும்பிடு போட்டார். “நல்லாருப்பீங்க...” மறுபடி கண்கள் பணித்தன.

“ஒக்காருங்.. ஒக்காருங்க...” மரஸ்டூல் ஒன்றை எடுத்து வரச் சொல்லி உக்கார வைத்தனர்.

“சாப்டீங்களா...” அய்யாச்சாமி..

ஆமென தலையாட்டியவர், “நீங்கள்லாம்...?” என்றார்.

“வீட்ல... நல்லாருக்காங்கள்ல...” மாயன் மெல்லக் கேட்டான்.

அதற்கும் தலையாட்டினார்.

“இந்த நேரத்தில... இங்கதே வந்தீங்களா... வேறெதும் சோலியா...?” அய்யாச்சாமி பக்கமாய் நின்று கேட்டார்.

“வேறென்னா சோலி...” பளிச்சென வாய் திறந்தார்.

“அதே பெத்த மனசுங்கறது. பத்து நாளா காங்கலேன்னலும் துடிச்சுப் போய்த் தேடி வந்துருச்சு பாரு...”

“இது நமக்குத் தேவையாப்பா...?” மகனைப் பார்த்துக் கேட்டார். கேள்வியில் ஆயிரக்கணக்கான தகப்பன்மார்களின் அபயக் குரல் ஒலித்தது. மாயனுக்கு பின்னால் சுவரில் சாய்ந்து நின்றிருந்த வசந்தி, அந்தக் கேள்வியில் இன்னும் தன்னை மறைத்துக் கொண்டாள்.

“எம்புட்டு கருத்தான பயல்னு பெருமப்பட்டுக் கிட்டிருந்தே... ஒரு நாழியல்ல... அம்புட்டும்...” அதற்கு மேல் பேசாதபடிக்கு வசந்தி அவரது கண்ணில் பட்டாள். பேச முடியவில்லை.

“இன்னிய பிள்ளைகளுக்கு... பின்னு பெறகுன்ன ஓசனயே வர்ரதில்லயே...” லட்சுமி பேசினார்.

“பெத்தவக... பொறந்தவகள யாச்சும் யோசிக்க வேணாமா...” காமாச்சியக்காளின் அட்டூழியத்தைப் பகிர்ந்து கொள்ள நினைத்தவர், வசந்தியின் முன்னால் வார்த்தைகள் அறுபட்டு தவித்தார்... “வயசா போச்சு... ரெண்டு பேருக்கும் தே சொல்றே... எங்கிட்டச் சொல்லலாம்ல...” ரயில் வேறு பாதையில் ஊர்ந்தது.

“அதெல்லா ஆரு கேக்குறா, டிவியும் சின்மாவும் வந்தப்பறம், ரெம்பக் கெட்டுப் போயிருச்சுக... கட்டுப்பட மாட்டேங்குதுக..” லட்சுமியம்மாளுக்கு என்ன பிரச்சனை எனத் தெரியவில்லை.

அப்பாவின் வருத்தம் மாயனை ரொம்பவும் சங்கடப்படுத்தியது. எப்பவும் தன்னிடம் அதிகம் பேச மாட்டார். தன்னுடைய விருப்பத்திற்கு எதிர்ப்பும் காட்ட மாட்டார். அப்படிப்பட்ட அப்பாவை அழக் கண்ட குற்றம் அவனை இம்சித்தது.

“சரி சரி... ஆனது ஆகட்டும், எனக்கும் இப்பத்தே தெம்பா இருக்கு. அந்தப் பிள்ளையோட வீட்டாளுக வந்து நேத்து கூப்புட்டாங்க... பொம்பளயாள்கள கூட்டிட்டு வந்து அழச்சிட்டுப் போங்கன்னு சொல்லி விட்டம். யேன்னா வந்தவங்க பூராம் ஒறமொறக் காரங்கதேன்னாலும் அட பெத்த தகப்பனே வந்து கூப்பிட்டாலும் பொம்பளப் பிள்ளய அனுப்பிச்சிர முடியாதுல்ல... சரிதான...” அய்யாச்சாமி ஒப்பித்தார்.

“அதுக்காகத்தே நானே வந்தே...” என்று காமாட்சி பவனத்தின் திட்டத்தையும், மாயனையும், வசந்தியையும் பிரித்து அழைத்துப் போக இருப்பதையும் சொன்னார்.

“ஊர் பூராம் அடியாள்கள நிப்பாட்டி இருக்காங்க... இங்கயும் கூட நாலஞ்சு பேர நிப்பாட்டி இருக்கதாக் ‘கேள்வி’ எதும் அருவந் தெரிஞ்சதா...”

எல்லாரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டனர். அவர் சொன்னது நம்ப முடியாமல் இருந்தது. ஒரு ராத்திரியில் இம்புட்டும் நடக்குமா...நேத்து வரைக்கும் கூட ஒரு பயம் இருந்தது. யாராவது பார்த்து துப்புச் சொல்லி விடுவாங்களோ, அடுத்து எங்கே போய்

RangaRakes tamilnavarasam.com

ஒளிவது என்ற யோசனையும் இருந்தது. சாயங்காலம் பஞ்சாயத்து பேசியதில் நிம்மதியும் சந்தோசமும் கூடவே அடுத்த கட்டம் பற்றிய ஆலோசனையும் வந்து போனது. அதற்குள் இப்படி ஒரு இடியா... மாயனுக்கு கிறுகிறுத்தது.

வசந்தி இதனை எதிர்பார்த்தாள். அவ்வளவு லெகுவாக அம்மாவும் அப்பாவும் இதை விட மாட்டார்கள் என்பதை அறிவாள். இன்னமும் காணாமே என்ற எதிர்பார்ப்புதான் இருந்ததே தவிர மாயனைப் போல மேம்போக்கான நினைப்பு இல்லை. சாதாரண வாய்ச் சண்டைக்கே தொங்கல் தொடுக்கு இல்லாது. அத்துப் போகுமளவு பேச்சும் செய்கையும் இருக்கும். 'நம்மளக் கண்டாலே நாலு தெருவு தள்ளி நடக்கணும். அப்பத்தான் நிம்மதியா நாம தொழில் செய்ய முடியும்! ங்கறது அம்மாவின் பொதுக்கணக்கு. இங்கேயெல்லாம் நிறையப் பேரத்தான் அனுப்பிச்சு வச்சிருப்பாங்கள்.

''நாமதான் கூப்பிட்டுப் போங்கன்னு சொல்லிட்டமே...'' லட்சுமியம்மாள் அப்பாவித்தனமாய் கேட்டார்.

“அப்டியா...” என்ற சித்திரம் பிள்ளை “எங்கூரு வாத்தியாரு சொன்னாரு... ஒடனடியா போலீஸ் ஸ்டேசனுக்கு கூட்டிட்டுப் போயி திருப்பூட்டிருங்க, அதுதே பிள்ளைகளுக்கு பின்னும் பெறகும் நல்லதுன்னாரு...”

“போலீஸ் ஸ்டேசனுக்கா...” கலவரமடைந்தார் லட்சுமியம்மாள். 'துணிமணியத் தூக்கிட்டுக் கௌம்புங்கடா சாமி...' என்று கிளப்பிடத் தயாரானார். 'நாளப்பின்ன நாங்க ஊருக்குள்ள இருந்து பொழைக்கணும்... போலீசு கீலீசு வந்தா... புள்ள குட்டிக பேரு என்னாகும்...' தனக்குள் புலம்ப தொடங்கியவர் ஒரு முடிவுக்கு வரத் தயாரானார்.

'ஆந்த கத்தும் போதே நெனச்சே... வராத ஆவத்து வரப் போகுதுன்னு...'' சித்திரம் பிள்ளையைப் பார்த்து சொல்லிக் கொண்டிருந்தபோது சாத்தி இருந்த வாசல் கதவு திறந்தது. சோனையனும் தோழர் குமாரும் உள்ளே வந்தார்கள்.

வாசலோடு நின்ற பன்னீர் தனி அழைப்பு வராமல் உள்ளே நுழைய விருப்பமில்லாமல் இருந்தான். உள்ளே நுழைய அவர்கள் பிரியப்படுவார்களா எனத் தெரியவில்லை. கதவு நீளத்தைத் தாண்டி கால் வைக்க முடியாது. கூப்பிட்டால் போவம்... பீடியைப் பற்ற வைத்து புகையை இழுத்து விட்டான்.

கழற்றிப் போட்ட செருப்புக்களோடு தான் நிற்பதை அறிந்ததும் அதிர்ந்தான். வாசலில் கிடந்த செருப்புக்களை ஓங்கி உதைத்துத் தள்ளி விட்டு வாவரங்காச்சி மரத்தண்டில் போய் சாய்ந்து கொண்டான்.

எந்தச் சலனமுமில்லாமல் மரம் அவனைத் தாங்கிக் கொண்டது.

RangaRakes tamilnavarasam.com

## 22

பிள்ளைகள் முழித்துக் கொண்டன. பெரியவள் எழுந்து கொல்லைக்குப் போனாள். சின்னது முழித்தபடியே உருண்டு கொண்டிருந்தது. லட்சுமியம்மாளுக்கு எரிச்சலாயிருந்தது. வழில போன சனியன வான்னு கூப்புட்டு வந்தமாதரி இருக்கு இவெஞ் செஞ்ச வேலை... என்று மகனை கடுகடுவெனப் பார்த்தாள்.

யார் யாரோ வீட்டுக்கு வர்ராங்க.. என்னன்னத்தியோ பேசறாங்க... அழுக, ஆத்தரம், கோவம்... நம்ம வீட்ல நாம ஒரு நேரம் சந்தோசமாப் பேச முடில, எடுக்க முடில... ரவ்வும் பகலும் கச்சூகச்சுன்னு ஒரே பஞ் சாயத்தா...? இங்கயும் ஒரு ஆளான பொண்ணு ஒண்ணு இருக்குங்கற நெனப்பு இல்லாம அப்பனும் மகனும் இப்பிடித் திரியறாங்களே... சினேகமாம் சிநேகம்...! எதுக்கும் ஒரு லிமிட்டுத்தான. கலியாணங்காச்சி முடிச்சு வர்ராகளா...? நல்லா கூப்புடு நாலு நாளு கறி புளிய எடுத்துப் போட்டு விருந்து வச்சுத் திங்கவிடு... இன்னம் கூடுதல் சினேகமா துணி மணியக் கூட எடுத்துக் குடுத்து மகராசனா அனுப்பி வையி... அது, பேர் சொல்லும். மரியாதய குடுக்கும். ஆனா, களவாணிப் பொருள வீட்ல வச்சு காபந்து செய்யலாமா...? பொம்பளப்பிள்ள விசயம்.நாளைக்கி எசகு பிசகா ஆயிருச்சுன்னா.. அசிங்கம்ல... இன்னாரு வீட்ல நடந்துச்சுன்னுதான பேச்சு வரும். இதெல்லா ரெண்டு மட்டை களுக்குமே ஏந்தே தெரிய மாட்டேங்குது... நாமளும் பொண்ணு பொடுசுகள வச்சிருக்கம். சண்ட சத்தம் அதிகமாயி எவனாச்சும் நம்ம வீட்டுப் பிள்ளைகள இழுத்துப் பேசுனா... எங்க போயி முட்டிக்கறது...? நாண்டுகிட்டுத்தேஞ் சாகணும்...!'

கொல்லைக்குப் போய் வந்த பெண் திரும்பி வந்தாள். குவிந்திருந்த ஆட்களை ஒதுக்கிக் கொண்டு அறைக்குள் போக முடியாமல் தேங்கித் தேங்கி நின்றாள்.

"கொஞ்சந்தே ஒதுங்கிக்கங்களே... பிள்ள வீட்டுக்குள்ள போய்க் கிறட்டும்." இடித்து சொன்ன சொல்லில் ஆளாளுக்கு விலகி வழி விட்டனர். தோழர் குமார் கூடுதல் அக்கறையுடன் "சத்தமில்லாம பேசுனம்னா... பிள்ளைகளோட தூக்கத்துக்கு எடஞ்சலில்லாம இருக்கும்....!'' என்று தொட்டு அனுப்பி வைத்தார். அது லட்சுமியம்மாளுக்குப் பிடிக்கவில்லை. மகள் பின்னாலேயே போய் வீட்டுக்குள் படுத்துக் கொண்டார்.

RangaRakes tamilnavarasam.com

“என்னாம்மா...” கிசுகிசுப்பாய் கேட்டாள் மகள்.

“ம்... மாயண்ணனோட அப்பா வந்திருக்காரு...”

“இந்நேரத்துல என்னாவா....?”

“அவக ஊர்ல பெரிய பிரச்சனையாம்...”

“அவரும் இங்கதே இருக்கப் போறாரா...” சின்னவள் கேட்டாள். அவளும் முழிச்சு விட்டாள் போல.

லட்சுமியம்மாளுக்கு பதில் சொல்ல ஆயாசமாயிருந்தது. இது அப்படியே இழுத்துக் கொண்டே போகும்...” என்னமோ நாளைக்கி போலீசுக்கு போகப் போறாங்களாம்...'' என்று முடித்துக் கொண்டாள்.

போலீஸ் என்றதும் பிள்ளைகள் இரண்டு பேருக்கும் தூக்கம் மளாரென கயிறறுந்த காளையாய் ஓடிப் போனது.

“நம்ம வீட்டுக்கும் போலீசு வருமா....?” பெரியவள் கேட்டாள்.

“ம்.. ங்நொய்யாவும், ங்நொண்ணனும் ஆடுற கூத்துக்கு போலீஸ் மட்டுமா வரும், பட்டாளங் கூட வரும்... பேசாமத் தூங்குங்க...”

“அவுக வந்தப்ப நிய்யுந்தானம்மா கூப்புட்டு வச்ச...”

உம்மதான். அப்பவே இந்தப் புத்தி இல்லாமப் போச்சு. பட்ட பெறகுதான பள்ளம் எது பழுது எதுன்னு புரியுது...”

“இந்த ஐடியா யார் குடுத்தா...” தோழர், சித்திரம் பிள்ளையிடம் துருவித் துருவிக் கேட்டார்.

சித்திரம் பிள்ளைக்கு பேரைச் சொல்ல தயக்கமாக இருந்தது. ஊரச் சொன்னாலும் பேரச் செல்லக் குடாதும்பாங்க. தடுமாறினார். பாதகமில்லை. “வாத்தியார்.”

‘‘வாத்தியாரா...'' சோனைமுத்துவுக்கு சுருக்கென்றது. எந்த வாத்தியாரைச் சொல்கிறார். குழம்பியது.

“எங்கூர்க்கார்ரு... எங்க வீட்டுக்கு எதுக்க இருக்கவரு....!”

“பழக்கமா..”

“நல்ல மனுசெ... விசயம் நம்மள மீறிப் போறப்ப நாம அரசாங்கப் பாதுகாப்பத் தேடிப் போறதுதே நல்லதுன்னாரு...”

“என்னா... தோழரே..?” சோனைமுத்து வினா விடுத்தான்.

“அதுஞ் சரியாத்தா தெரிது...” என்றவர், “அடிப்படைல சரிதா... ஆனா நடைமுறைனு பாக்குறப்ப... இடிக்கிது...”

“எப்டீ....?”

“ஸ்டேசன்ல பூராம் கட்டடப் பஞ்சாயத்து தான நடக்குது.!”

சித்திரம் பிள்ளைக்கு இருந்த ஒரு பிடிமானமும் இற்று விழுந்தது.

“காசு இருக்கவனுக்குத்தான காக்கிச்சட்டை காவலுக்கு வர்ரான்... ”

“தோழரு எப்பவுமே கண்ண மூடிக்கிட்டுத்தேம் பேசுவாரு...” சோனைமுத்து குறுக்கிட்டான்.

RangaRakes tamilnavarasam.com

“அதேன் நீங்கள்லாம் வருவீங்கள்ல...” அய்யாச்சாமி சட்டென நாளைய வேலைக்கு ஆள்ச் சேர்த்தார்.

“அது பாத்துக்கலாம்... ஏன்னா பகல்லதான போக முடியும். இப்போதைக்கி மொதல் வேல... இவங்கள எடம் மாத்தணும்...” என்று புதுத் திட்டத்தை சொன்னார்.

மாயன் வசந்தியின் கைகளை இறுக்கி, சாந்தப்படுத்தினான். அவளது கை நடுக்கம் கொண்டிருப்பது போலத் தெரிந்தது.

“காமாச்சி யக்காவோட ஆளுக வந்துருவாங்களா...” சித்திரம் பிள்ளைக்கும் நடுங்கியது. அங்கே, ஊர்ல என்னா நடக்குதோ... பொறுப்பில்லாம இங்க வந்து தொலச்சுட்டேன்... பொம்பளப் பிள்ளைக என்னா பண்ணுதுகளோ... மயிலு, அவ புருசன்ட்ட எதும் பேசினாளா... புருசெங்காரெ என்னா கணக்குல கௌம்புறானோ... எப்ப வர்ரான் எந்தப் பக்கம் வர்ரான்... இவங்க சொல்ற மாதரி அந்த காமாச்சி பேயி எந்த ரூவத்துல என்னா செய்யக் காத்துருக்காளோ... சேற்றுக்குள் சிக்கிக் கொண்டது போல தத்தளித்தார்.

“வந்துருவாங்க இல்ல, வந்துட்டாங்க...”

“போகும் போதே ஒரு நாலஞ்சு பேர இங்க விட்டுட்டுதேம் போயிருக்காங்க. நம்ம பன்னீர்ப் பயல் கூட அவககிட்ட தகராறு செஞ்சிட்டு வந்திருக்கான். வேணும்னா அவனக் கூப்புட்டுக் கூடக் கேளுங்க. வெளிலதே நிக்கிறான். கூப்புடவா... பன்னீரு...” சோனைமுத்து கூப்பிட, தோழர் மறித்தார்.

அப்ப முன்னக் கூட்டியே ஆள் அமத்திட்டுத்தே வந்திருக்காங்க... வாத்தியார் சொன்னது சரியாத்தா இருக்குது. அங்க வேற ஆள்கள கௌப்பிக் கிட்டிருக்காங்க... இப்ப என்னா செய்ய, மாயன மட்டும் கௌப்பிட்டுப் போறதுங்கறது சரியா வராது. நடக்கவும் நடக்காது. இங்கனையே ரெண்டு பேரும் கையோட கைய பின்னிக்கிட்டு நிக்கிதுக... பிரிக்க முடியுமா...”

“எப்படியும் விடியறதுக்குள்ளாற பெரிய ஏற்பாட்டோடதே வருவாங்கன்னு நெனைக்கிறேன்...” தோழர் கணக்கு போட்டுச் சொன்னார்.

“வந்து...?”

“வந்து, மகள அழச்சிட்டுப் போவாங்க..”

“போகட்டும். அதத்தான சாயங்காலம் சொல்லி விட்டம்.” அய்யாச்சாமி கண்களை சுருக்கிக் கொண்டு சொன்னார். எல்லாமே தினுசு தினுசாய் நடக்கிறது. புரிந்தது மாதரியம்... ஒண்ணுமே அறிய முடியாத இருட்டு மாதிரியும்...

“யே... லட்சுமி... கொஞ்சம் தண்ணி கொண்டு வா...” மனைவியை அழைத்தார்.

“சாயங்காலம் மகள மட்டுமா கூட்டிட்டுப் போகச் சொன்னீங்க...?”

“ரெண்டு பேரையிந்தே...”

“ரெண்டு பேரையும் கூப்புட எதுக்கு அடியாளுக... ஆத்தா அப்பெம் போதும்ல...”

“அப்பன்ன... மகளமட்டும் கூட்டிட்டு போகப் போறாங்களா...”

“இம்புட்டு நேரம் என்னாப்பா, பேசிட்ருக்கம்...” சோனைமுத்து சலித்துப் போய்ச் சொன்னான்.

“எதுக்கூ...”

“அதுதே வர்க்க குணம்ங்கறது” என்று நீண்ட பிரசங்கம் செய்யத் தொடங்கினார் குமார். அய்யாச்சாமிக்கு இப்பவும் புரியவில்லை. “ரெண்டு பேருமே... ஒரே இனம்... ஒரே சாதி... தான...’

“அதெல்லா நீங்களும் நானுமாத்தேம் பேசிக்கிறணும். நடக்கறதப் பாருங்க...”

பன்னீர் மூலமாக தயாரிக்க வேண்டியவைகளை சொன்னான் சோனைமுத்து. பூதிப்புரத்திலிருந்து மயிலு புருசன், லோடு மேன்களோடு வர இருப்பதற்கான வாய்ப்புக்களைச் சொன்னார் சித்திரம் பிள்ளை.

தன்னுடைய ஏற்பாடுகளை விவரித்த தோழர். அத்தனையையும் இணைத்து வடிவங்கொடுத்த அவர், முதலில் வசந்தியையும், மாயனையும் வேறு வீட்டுக்கு மாற்றி விடுவது மிக மிக உத்தமமானது என்றார். அதுவும் இந்த நிமிசமே நடக்க வேண்டும். அதுவே பெரிய அசம்பாவிதம் நடப்பதை தடுக்கும் என்று பதட்டத்தோடு திட்டங்களை விவரித்தார்.

சித்திரம் பிள்ளைக்கு இதை சாக்காக்கி மாயனை ஊருக்கே இழுத்துப் போய்விடலாமா என்று பலவிதங்களில் முயற்சித்தார். அதற்கான எந்த வழியும் கிடைக்கவில்லை.

போலீஸ் ஸ்டேசனுக்கு போவது சம்பந்தமாக நாளை பேசிக் கொள்ளலாம் என்ற குமார். அனேகமாக போலீசே நம்மைத் தேடி வரக் கூடும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

ஆளாளுக்கு ஒவ்வொரு அபிப்ராயத்தைச் சொன்னாலும் ஆவென சுழித்து ஓடுகிற ஆற்றில் குதிக்கப் போகிற அச்சம் இருந்தது. எங்கே சுழி, என்ன ஆழம்...? வேகம் எப்படி..... எதும் தெரியவில்லை.

சோனைமுத்துவின் தாயார் லட்சுமியம்மாளுக்கு மட்டும் நிம்மதி “நம்ம வீட்டப் பிடிச்ச சனி, இந்த நிமிசத்தோட ஒழியுது....!”

கதவைத் திறந்து வெளியே வந்து பன்னீரைத் தேடிய போது, அவனைக் காணவில்லை. தூரத்தில் நாய்களின் குரைப்பு ஒலி கூடுதலாய் ஒலித்தது.

## 23

காமாட்சி வீட்டுக்குள் இவ்வளவு பேர் இருப்பார்களென நாட்டாமை எதிர்பார்க்கவில்லை. தோளிலிருந்த சால்வையை எடுத்து துண்டாக கழுத்தில் போட்டு, தொங்கலை முதுகுப்பக்கம் வீசி விட்டார். காமாட்சி பவனித்திற்குள் நுழைந்ததும் எழுந்த மண்ணெண்ணெயின் கார நெடி, வீரபத்திரனையும் சின்னராசுவையும் கண்ட மாத்திரத்தில் காணாமல் போனது.

“வாங்கய்யா…” எத்தனையோ பிரச்சனைகள் நெஞ்சில் கிடந்து சுற்றினாலும் வரவேற்க தவறவில்லை. “வா தம்பீ” முருகேசனையும் வாயாற அழைத்து உட்கார பெஞ்சு காட்டினாள்.

எப்படி இத்தனை நாற்றத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று ஆச்சரியமாய் இருந்தது. மூக்கெல்லாம் சுரு சுருவென உறுத்தியது. இப்போதுதான் சிந்தியது போல, காலில் ஈரம் தட்டுப்பட்டது. யாராச்சும் பீடி பத்த வச்சு, எஞ்சிய தீயை அணைக்காமல் கீழே போட்டு விட்டார்களென்றால் வீடே எரிந்து போகும் போலிருக்கிறது.

வீடு பெரியதாக இருந்தாலும் அடசலாய், கசகசவென்று துணிகளும், காலி சாக்குப் பைகளும், கேன்களும் குவியல் குவியலாய் கிடந்தன. பெஞ்சும், நாற்காலியும், திண்டுகளும் முடிச்சுகளுமாய் ஒழுங்கில்லாமல் சந்தைக் கடையாய் பரப்பிக் கிடந்தது. குறுக்கும் நெடுக்குமான துணிகாயப் போடும் கொடிக் கயறுகள். உள் அறைகளும் இருட்டடித்துக் கிடந்தன. நிலாவின் குளிர்ச்சிக்கு எதிரான வெப்பத்தை மேலே சுற்றிக் கொண்டிருக்கும் மின்விசிறிகள் கொடுத்துக் கொண்டிருந்தன.

“அங்கருந்து போன் வந்துச்சு மாமா…” கருத்தக்கண்ணு உடனடியாக பிரச்சனைக்கு வந்தார்.

“எங்கருந்து” எனக் கேட்டவர், “சரி சரி…” என புரிந்து கொண்டவராய் தலையாட்டி விட்டு, மறுபடி, “யார் பண்ணது…? “அவுங்க” வீட்லருந்தா…” என விசாரித்தார்.

“அவுக வீட்லருந்து எதுக்குப் பண்றாக… அல்லாத வீட்லருந்து…!” என்று கடுப்படித்த வீரபத்திரன், "நாம நிப்பாட்டிட்டு வந்தம்ல… அவெந்தான் பண்ணுனான்… வெவரமாச் சொல்லுங்க மாமா… ஒறக்கச் சடவுல இருக்காரு நாட்டாமய்…”

வீரபத்திரனின் எகடாசி நாட்டாமை மகனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. இவன ஒராளுன்னு உட்கார வச்சி சமதையா பேசுறாங்களே... பெரிய தேவ்டியாப்பய... எப்பிடி சகிச்சுக்கறாங்க... வீட்டிலிருந்து புறப்படும் போதே, அப்பா ஒரு கண்டிசனோடுதான் தன்னை அனுமதித்திருந்தார். 'எதுக்கும் கோபப்படாமல் இருக்கணும். சில்லன்டித்தனமான பேச்செல்லாம் கூட வரலாம். எதிர்த்துப் பேசி அசிங்கப்பட வேண்டாம்...' உட்கார்ந்திருந்த பெஞ்சியின் கைப்பிடியை இறுக்கித் தன்னை சமன் செய்து கொண்டான்.

"கையாள்னு சொன்னா சட்டுன்னு புரியும்... எப்ப பண்ணுனான்..." என்றார்.

"இப்பத்தான்."

"ரெண்டு மூணு தரம் பண்ணீட்டான். இல்லாத்தா " சின்னராசு தன் கடன் தீர்ந்தான்.

அப்போது மேலே இருந்த தகர சார்ப்பில் பொத்தென யாரோ குதிக்கிறாப்போல சத்தம் கேட்டது. தொடர்ந்து கையுய் கையுய் என்று சண்டையும், தகரத்தைப் பிராண்டித் தாவிக் குதிக்கிறதுமாய் பூனைகளின் கரச்சல் பெருசாய் எழுந்தது. பேச முடியவில்லை.

"யேய்... ஒட்டையா... போசு, எங்கடா இருக்கீக... அந்த பூனச் சனியங்கெளப் பத்தி விடுங்கடா... இருக்க கும்மர்ச்சம் பத்தாதுன்னு இதுக வேற... நாளைக்கி சோத்துல இம்புட்டு மருந்தவச்சுக் கொன்னு போட்றணும். ராவானா லச்ச தாங்க முடில..."

ஆத்தாவின் கட்டளைக்கு முன்னமே, இரண்டு பேரும் 'ச்சூய்.. ச்சூய்' என்று கைகளைத் தட்டியும் வாய் சத்தம் கொடுத்துப் பயமுறுத்தியும் விரட்டலானார்கள். திடுதிடுவென தகரம் அதிர ஓடிய பூனைகள் ஆளுக்கொரு சுவரில் ஏறி நின்று பளிங்குக் கண்களால் அவர்களைப் பார்த்துக் கோபித்தன. பிறகு நாக்கைச் சுற்றி, முன்னங்காலால் முகத்தைத் துடைத்து விட்டு இருட்டுக்குள் ஒன்றின் பின் ஒன்றாய் ஒரே திக்கில் ஓடி மறைந்தன.

"அல்லர்ர் வீட்லயும் இப்பிடித்தே... காமாச்சி... இங்கயாச்சும் பரவால்ல வெரட்னா ஓடிருது. அம்ம வீட்டுப் பக்கமெல்ல சின்னப்புள்ள அழுகற மாதிரி கத்திக் கூப்பாடு போட்டு தூங்கவிடாது... விடு, அதுக்காக மருந்து கிருந்து வச்சிராத... பூனப்பாவம் ரெம்ப பொல்லாது..." என்று புத்தி சொன்ன நாட்டாமை மேட்டருக்கு வந்தார். "சரி சொல்லுங்க, என்னா தகவல்... என்னா சொன்னா..."

"அங்க, ஊர் பூராம் ஆளுகள குமிச்சு வச்சுக்கிட்டிருக்காங்கெளாம்..." கொஞ்சம் கூட ஆடாமல் அசையாமல், கூசாமல் கொள்ளாமல் பொய் சொன்னான் வீரபத்ரன். யாருக்கும் அதனை மறுத்துப் பேசவும் தோன்றவில்லை.

நாட்டாமைக்குத் தான் விளங்கவில்லை. “எதுக்கூ” என்றார்.

“ம்... நமக்கு வரவேற்பு குடுக்கத்தான்... நாளைக்கி பொண்ணு மாப்ளய அழச்சிட்ட வரப்போறம்ல... அதுக்கு.”

“ஓ...” ஒரு எழுத்தில் ஆமோதித்தார் நாட்டாமை முருகேசனுக்குத் தான் வீரபத்திரனின் மேதாவித்தனமான பேச்சை சகிக்க முடியவில்லை.

“ஊர்க்காரங்க ஆளுகள நிப்பாட்டி இருக்காங்களாக்கும்... தலயச் சுத்தி மூக்கத் தொடாம நேர வரலாம்ல...” கேட்டே விட்டான்.

“தவறுதே... என்னமோ நமக்கு அப்பிடியே பழகிப் போச்சு... படிப்பு கொஞ்சம் கம்மிதான... மன்னிச்சுக்கணும்...”

நாட்டாமை மகனைப் பார்த்தார். இதுக்கு மேல பேசமாட்டேன் என்று, பார்வையிலேயே சத்தியம் செய்து கொடுத்தான் முருகேசன்.

“நெசந்தான கருத்தகண்ணூ...”

“உம்மதேம் மாமா.. ரெண்டு மூணு தடவ பண்ணீட்டான். ஆளுக ரெடி பண்ணிக்கிட்டிருக்காங்களாம். ஆரோ ஒரு கச்சிக்காரவுகள வேற கூப்பிட்டுருக்காங்க போல...”

“சாராயங் காச்சி ரவங்க...”

“ம்...ஊறல் போட்றவங்க கிட்டயும் பேசுனதாத் தகவல்...”

“ரெண்டு பேரும் சண்ட போட்டத சொல்லுங்க அப்பத்தே நெசம்னு நம்புவாரு...”

“சண்டையா... ஆராரு...”

“நம்பபய கூடத்தே... எவனோ ஒரு, ஊர்க்காரப்பய இவன ஆள்த் தெரிஞ்சு வம்பு பண்ணீர்க்கான்...”

‘‘கூதறப்பய... இன்னாருன்னு காட்டிக்காமத் தான, அவன இருடான்னம்.”

“ஆ..மா.. அவனும் தொணம்பட்டி அடிச்சு, நாந்தா கருத்தக்கண்ணு வீட்லருந்து வேவு பாக்க வந்துருக்கே... சாமியோவ்னு முச்சந்தீல நின்னு கூவிருக்கான்... இன்னம் பச்சப் பிள்ளையாத்தான இருக்கீங்க...”

சின்னராசுவுக்கு வீரபத்திரன் மீது சந்தேகம் வந்தது. இத்தனைவேகமும் வீராப்புமாகப் பேசுகிறானே... நமக்குத் தெரியாம... காளவாசல் போன மாதிரி... ‘கடைக்கி’ எதம் போய் ஊத்திட்டு வந்திட்டானா...? இல்ல நாட்டாம மேல இருக்க காண்டா...? எப்பிடித்தே சோடிக்க கத்துக்கிட்டாங்கெளோ...

“பெறகு எப்பிடிப்பா... அவனுகளுக்கு ஆளத் தெரியும்...?”

“தண்ணியக் கிண்ணியப் போட்ருப்பான்யா... வீராதி சூரன்னு சும்மா சூக்காட்டிப் பேசீருப்பான்...” காமாட்சியும் நாட்டாமைக்குச் சாதகமாய்ப் பேசினாள்.

காமாட்சியின் பேச்சு அவன் எதிர்பாராததாய் இருந்தது. “அதெல்லாஞ் செய்ய மாட்டான்க்கா... கண்டிசனாவுல்ல சொல்லீட்டு வந்திருக்கே... போன்ல நீயும் பேசுன. பேச்சு எதாச்சும் கொழறிப்

RangaRakes tamilnavarasam.com

பேசுனானா...? அதெல்லா நாம சொன்னா, மில்ட்ரிக்காரெம் மாதிரிதா நிக்கணும்.!"

எதோ ஒரு திட்டம் போட்டு விட்டான் எனப் புரிந்தது நாட்டாமைக்கு. நடத்தட்டும். முடிஞ்சால் போவம்... முடியாவிட்டால் சொல்லி விடுவோம் என்ற நிலைக்கு வந்தவர்.

"அப்பறம்... எப்படி..." என்றார்.

"எப்டீன்னா... சோஸ்யக் காரனத்தேங் கேக்கணும்!"

வீரபத்திரனின் இந்தப் பேச்சு வாசலில் நின்றிருந்த போசுக்கு சிப்பாணி மூட்ட தன்னையறியாமல் 'க்கும்' என நகைத்து விட்டான். அந்த சத்தம் வீரபத்திரனுக்கு உற்சாகத்தையும், நாட்டாமை தரப்புக்கு கோபத்தையுமான மனநிலையினை ஏற்படுத்தியது.

"அப்ப... ஜோஸ்யக் காரனவே கூப்பிட்டு வந்திருக்க வேண்டிதான... எங்கள வேற என்னாத்துக்கு இந்த நேரத்துல கூப்பிட்டு உசுர வாங்கணும்..." முருகேசன் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் பேசிவிட்டான்.

"என்னா இந்த நேரத்துல...?" என்றபடி சேரை விட்டு வேகமாய் எழுந்தான் வீரபத்திரன். "என்னாப்பா இந்த நேரத்தில..." மறுபடி அதே வார்த்தையைக் கொண்டு பேசத் துவங்கியதும், கருத்தகண்ணு இழுத்துப் பிடித்து உட்கார வைத்தார்.

"எதுக்கு இப்பிடி டென்சனாகுற..."

"பின்ன என்னாங் மாமா... இந்நேரத்துல என்னான்னா... என்னா அர்த்தம். இந்நேரத்துல, தண்ணியடிக்கவா கூப்புட்டம்... இல்ல, தேவ்டியா வீட்டுக்கு இழுத்தமா...? நாட்டாமன்னா என்னா... எந்த நேரம்னாலும் சாதில ஒரு பெரச்சனன்னா ரெடியாத்தே இருக்கணும்...!"

"அப்ப... நீ, தேவ்டியா வீட்ல போயி தகராறு பண்ணிட்டு நின்னாலும், அங்க வந்து பைசல பண்ணி, காசு வாங்கிக் குடுக்கறதும் நாட்டாம வேல...?"

"லேய்... முருகா.." என நாட்டாமை அடக்கியும் முருகேசனுக்கு ஆத்திரம் அடங்கவில்லை.

"சாதிப் பேரக் காப்பாத்தணும்னா அதியுந்தேஞ் செய்யணுந்தம்பி... ஒண்ணு சொல்லட்டுமா...! காமாச்சியக்கா இருக்கேன்னு பாக்குறே... தடவிப் பாத்துக் கூடத்தேந் தீர்ப்பு சொல்லணும்..."

வீடே வெப்பமயமாய்த் தகித்தது. அத்தனை பேரின் நெஞ்சினிலும், அவரவர்க்கான விகிதாச்சாரப்படி அனல் பறந்தது. பேச்சின் போக்கை அனுமானித்த காமாட்சி தன்னுடைய பிரச்சனை தடம் மாறிச் செல்வதை உணர்ந்தவளாய், சடாரென எழுந்து வீரபத்திரனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள். சாதாரணமான அடிதான் என்றாலும்... உயர்ந்து கொண்டிருந்த வெப்ப சக்தியை மட்டுப்படுத்தி இறக்க வேறு வழி தெரியவில்லை அவளுக்கு.

RangaRakes tamilnavarasam.com

“எங்க நின்னு, என்னாடா பேசுற... நாங்களே இத்துப்புத்தாப் போயிருக்கம்... ஓம் பொச்சரிப்புக்கும் புல்லரிப்புக்கும் நாங்கதேங் கெடச்சமா...”

கன்னத்தில் விழுந்த அடியில் ஸ்தம்பித்த வீரபத்திரன். உடனே சகஜ நிலைக்கு வந்தான். இதை ஒரு விசயமாகவே பொருட்படுத் தாமலிருப்பதே விழுந்த அடிக்கு மாற்று. சரியானது என்று கணத்துக்குள் தீர்மானித்து, தனது நாட்டாமைக்கான எதிர் பிரச்சாரத்தைத் தொடர்ந்தான்.

“பின்ன, என்னாக்கா... இந்த நேரத்தில போயி கூட்டிக் குடுத்தவெ... ஓட்டி விட்டவெ வீட்ல போயி போட்டுக் குடுக்க மட்டுந் தெரியுது... ஒரு பொட்டப்புள்ள பொழப்பு கெட்டுப் போன வீட்டுக்கு வர்ரதுல மட்டும் வலிக்கிதா...”க்கும்”

நாட்டாமைக்கு பிடிக்குள் சிக்கிய மாதரி இருந்தது. எங்கேயோ தொட்டு, சித்திரம் பிள்ளை வீட்டுக்குப் போனதை பிடித்து விட்டானே... அதெப்பிடி.. இந்த தப்பிளிப் பயலுக்கு னீஸ் கெடச்சது... கொலகாரப் பயலா இருக்கானே... பாவி!”

“யேய்.. விட்றா மாப்ள.. அடுத்து நடக்கறதப் பேசு...” கருத்தக்கண்ணு தள்ளி விட்டார்.

“நானும் அதத்தான் பேசறே மாமா... இந்த நேரத்துல எதுக்கு சித்திரம் பிள்ள வீட்டுக்குப் போனாரு...”

இந்த நேரத்தில் வாயடைத்துக் கிடப்பது தனது குடும்பத்துக்கு இழுக்காகும்... என்ற நினைப்பில், “யேன்.. அவங்களும் நம்ம ஜாதி தான...” என்றான் முருகேசன்.

“அது தெரிது தம்பீ.. பைசலு நடக்குறப்ப எதிரி வீட்டுக்கு எதுக்குப் போகணும்...?” சின்னராசு. இன்னமும் பேசாமலிருந்தால் நம்மை மறந்து விடுவார்கள் என்ற நிலையில் தன்னை பதிவு செய்தான்.

“அவரு ஒங்களுக்குத்தே எதிரி... நாட்டாமைக்கு எல்லாருமே ஒண்ணுதே...”

“ஓகோ... அப்புடியா... நாங்கூட துட்டு வாங்கப் போனாரான்னு கேட்கலாம்னு இருந்தே... கேட்டா... எங்கக்கா இன்னொர்க்க... அடிக்கும்... அவரு ஒங்காளா...” நுணுக்கமாக ஊசி சொருகினான் வீரபத்திரன்.

“ஏண்டா, நீ திருந்தவே மாட்டியா... எல்லாத்திலயும் ஒன்னிய மாதரியேவா நெனைக்கிறது... தப்பு வீரபத்ரா தப்பு. சிந்துன வார்த்தைய என்னைக்கும் பெறக்க முடியாது. இப்பன்னு இல்ல... என்னையனு சொல்லல... என்னிக்குமே அளந்து நெதானமாப் பேசிப் பழகு. வயசு இருக்கு உனக்கு. எம்புட்டோ காரியம் பாக்கி இருக்கு... நா வெறும் ஆளு இல்லேங்கறத சேத்துப் பேசு... நாட்டமங்கறத மனசுல வாங்கிப் பேசு...” திடீரென பொங்கிப் பேச ஆரம்பித்தார் நாட்டாமை. உள்ளங்காலில் இருந்து உஷ்ணம் ஜிகுஜிகுவென தலைக்கு ஏற, யாரும்

RangaRakes tamilnavarasam.com

நிறுத்த முடியாத வேகத்தில் அதே சமயம் நிதானமாகவும் தொடர்ந்தார்.

"மறுபடி மறுபடி சொல்றேன் இது பெரிய பிரச்சன கெடையாது... ஒரு சாதில ஒரு ஒறமொறைல நடந்துபோன ஒரு கெட்ட விசயம். அவெ அப்பிடி செஞ்சிருக்க குடாதுதே... நடந்துருச்சு... மனுசன மீறி எத்தனையோ நடக்குது... திடீர்னு தீப்பிடிக்குது... மழகொட்டி வீடுவாசல அழிச்சிருது... என்னா செய்றம்.. நாளப் பின்ன வராம இருக்க வேலைகளப் பாக்கறம்... மழ பெஞ்சதுக்காக மானத்த குத்திக் கிழிக்கப் போறேன்னா தீந்துருமா... அது முடியத்தேம் முடியுமா...? அதுபோல இது ஒரு மீறுன காரியம்... எதமா பதமாப் பேசித் தீத்துக்கலாம்... அதவிட்டுட்டு ஆளுக்கொரு கத்திய தூக்கிகிட்டு நின்னா... வெட்டியா அழிஞ்சு சாக வேண்டிதே..." குளிரெல்லாம் போய் பேச்சின் விளைவாய் முகம் வியர்த்தது நாட்டாமைக்கு.

"நிறுத்துங்க பெரிய்யா... இந்த சவங்கத்தனமான பேச்சுத்தே எப்பவும் பிடிக்காது எனக்கு... மழ, நெருப்புன்னு எங்களுக்கும் பேசத் தெரியும்..." என்ற காமாட்சி, "அந்த கூலிக்கார மூதேவி வீட்டுக்கு போயி என்னா பேசீட்டு வந்தீங்க... அதச் சொல்லுங்க..." பிடியாய் பிடித்துக் கொண்டாள்.

"என்னா சொல்லிக் குடுத்து வந்திருக்கீங்கன்னு கேளுக்கா... இவரு குடுத்த ப்ளான்லதே அவெங்க துளுத்துக்கிட்டு நிக்கிறாங்கெ..."

"என்னாம்மா அவெங்கூடச் சேந்து கூறுகெட்ட தனமாப் பேசற..."

"தெளிவாத்தேம் பேசுறம் மாமா... நீங்கதே இதுல கொக்கி மாட்டி விடுற மாதரி தெரியிது..." கருத்தக்கண்ணு முகம் கொடுக்காமல் பேசினார்.

"என்னத்த கொக்கி போட்டு விட்டே..."

"பின்ன... நாட்டாமங்கிறவரு ரெண்டு தரப்பையும் ஒரே எடத்துல வச்சுப்பேசி நாயஞ்சொல்லு வாங்க...! நீங்க என்னா செஞ்சீங்க...? இங்க பேசிப்புட்டு அங்க எதுக்குப் போறீங்க..."

"கருத்தக்கண்ணூ... திருப்பித் திருப்பி பேசுனதவே பேசக்குடாது. அன்னைக்கிருந்து நான், ரெண்டு பேரையுமே கூட்டி வச்சுப் பேசணும்னுதா சொல்லி வர்றே... நீதான ஒத்துக்க மாட்டேன்ன...?"

"அதனால, ஊடுசால் போனீகளாக்கும்...!"

"அது ஊடுசால் கெடையாது. ஒரு வகையறாக்குள்ள சச்சரவு வராம தீத்துற முடியுமான்னு முயற்சிதேம்பண்ணுனே. சச்சரவு வந்திருச்சுனு வையி... அடுத்த சாதிக்காரெ வந்து கால விட ஆரம்பிச்சுருவான்..."

"அதத்தான நானுஞ் சொல்ல வர்ரேன்... ஒரு சாதின்னு இருந்தம்னா ஒழுக்கஞ் சளுக்கம் வேணும். இப்பிடி ஓடிப் போற கேசுகள ஒண்ணொன்னா கால ஒடிச்சுப் போட்டாத்தே. அடுத்த ஆளு வந்து

வாலாட்ட மாட்டான். நீங்க சொல்றாப்ல. ஆழம் பாக்க கால விடவும் மாட்டான். அதச் செய்ய மாட்டாம, ரோட்ல பிச்சையெடுக்கறதியும், பெறக்கித் திங்கறதையும் பெருமக் கூதியா பெரிய வீடு நொழய விட்டம்னா நாளைக்கு நமக்கு கீக் கொண்ட சாதிக்காரனும் நோண்டிப் பாக்கத் தான செய்வாங்கெ…"

"அதனாலதேஞ் சொல்றே… இத கமுக்கமா முடிச்சு சாதி மானத்தக் காப்பாத்துங்கடான்னு கதறுறேன்…"

''சுருக்கமாச் சொன்னா கலியாணத்த முடிச்சு வெக்கச் சொல்றீங்க…?"

"பின்ன…?"

"அது அவங்க ஆத்தா அப்பெ இஷ்டம்." விடாமல் வீரபத்திரன் துரத்தித் துரத்திப் பேசினான்.

"அப்பன்ன… நீ எதுக்கு இப்ப மூக்க நொளைக்கற…"

"ம்..! நீங்க வந்திருக்கீங்கள்ள…? ஏன்னா விசயம் சவைக்கு வந்திருச்சு. அதால நீங்க வந்திருக்கீங்க… வீட்டோட இருந்தா நீங்களோ, நானோ வரத் தேவையில்லீல்ல…"

நாட்டாமையும் வீரபத்திரனும் எழுந்து நின்று வாதம் பண்ணியது காமாச்சிக்குப் பிடிக்கவில்லை. ஒரு இடத்தில் தன்னை ஊமையாக்கி, தன் பிரச்சனையை யாரோ பேசுவதை ஒத்துக் கொள்ள முடியாது.! அவளும் எழுந்து நின்றாள். எந்த சமயம் உள்ளே நுழைவது என காத்திருந்தாள்.

"மொற தவறிக் கேக்கலியேப்பா…!" நாட்டாமையே காமாட்சிக்கு வழி கொடுத்தார்.

"எது மொற…?" சட்டையைப் பிடித்துக் கேட்பது போல சடாரெனக் கேட்டாள் காமாட்சி.

''என்னாது…'' தடுமாறினார். நாட்டாமை அதைக் கண்ட முருகேசன் அவருக்கு உதவுவது போல பேசினான். "மொறன்னா… கட்டிக்கிற மொறதான… அண்ணந்தம்பி வகைல வரலீல்ல… அதான.. ப்பா.."

"தம்பீ ஆணும் பொண்ணும்னாலேயே கட்டிக்கிற மொறதா வரும்… அய்யாவும் மகனும் என்னத்தப் பேசுறீங்க… புதுசா பேசறம்னு நெனப்பூ..? மொற இருந்தா மட்டும் போதுமா… தரம்…தராதரம் வேணாமா…

"என்னாம்மா தரம்… பொடம் போட்டு வாங்குன தங்கமே மறு நாளைக்கே மச்சங் கொறையுதுங்கறாங்க.. மொடக்குத் தண்ணி, உள்ள போயி கீழ வாரதுக்குள்ள மேலோகம் போற மனுசப்பய பொழப்புல… பொழைக்கிற வெதத்திலதாம்மா தரம் கெடைக்கும்."

"அப்பிடியா… அப்ப நாளைக்கு ஏவ் வீட்ல வந்து பொண்ணு கேப்பான். அடுத்த நாளு ஓவ் வீட்ல வந்து பொண்ணுக் கேப்பான்… குடுத்திரலாமா…"

கொஞ்சம் யோசித்தார். "வீரபத்திரா அப்பிடியெல்லா ஊகமா பேசக்குடாது.. இப்ப இருக்க பெரச்சனய வச்சுத்தேம் பேசணும்.

"பிரச்சனைன்னா... நடந்தது, நடக்கப் போறது எல்லாத்தியுந்தே பேசணும்..."

களைத்துப் போனார் நாட்டாமை, "வீரபுத்ரா... சாதிக்காரனாப் பேசு. தப்பில்ல... வெறியனா பேசக்குடாது..."

"ஓகோ.... அப்ப... நீங்கள்ளாம் மெப்பனைக்குத்தே பதவில இருக்கீங்களா... இங்கோருங்க நாட்டாமய், எது ஒண்ணுலயும் எறங்கக்குடாது, எறங்குனா வெறித்தனமாத்தே எறங்கணும். இல்லியா.. அமுக்கிப் புடுச்சுக்கிட்டு வீட்ல கெடக்கணும்..."

முருகேசன் துள்ளி எழுந்தான். "பொழுதின்னிக்கிம் அசிங்கமாவே பேசற... நீ... நாட்டாமன்னா கிள்ளுக் கீரையாப் போச்சா...மருவாதி..." விரலை ஆட்டி எச்சரித்தான்.

சின்னராசுவுக்கு என்ன வந்ததெனத் தெரியவில்லை. "பொறப்பா... இம்புட்டுத் துள்ளுறவெ... அவெங் கேட்ட கேள்விக்கி பதிலச் சொல்லு... ஒவ்வீட்ல பொண்ணு கேட்டா குடுப்பியா... மாட்டியா..." கிடுக்கிப் பிடியாய் கேள்வி வைத்தான்.

கொஞ்ச நேரம் எல்லாமே உறைந்து நின்றது. "நீ சும்மாரு முருகேசா..." என மகனை அடத்தி விட்டு நாட்டாமை பேச விழைந்தார்.

"என்னா சும்மா இர்ரா... கேள்விக்கு பதிலச் சொல்லு ஊர்க்காரெம் பூரா, நாசமாப் போகணும் நீ மட்டும் காரியத்தனம் பண்ணனுமா... பதில் சொல்லு..." வீரபத்திரன் நாட்டாமையே பேசவிடாமல் குறுக்கிட்டான்.

"எங்க வீட்டு பிள்ளைகளலெல்லாம் கட்டுப்பாட்டோட வளக்குறம் தெரிமா..." முருகேசன் முழங்கினான்.

"அப்ப, நாங்க... எங்க பிள்ளைகள தப்பிலித்தனமா வளக்குறமாக்கும்...?" கருத்தக்கண்ணு ஆவேசமாக எழுந்தார். "மாப்ள, நீ சொன்னதுல பழுதில்லடா... இந்தாளு சொல்லித்தா அந்தப் பிச்சக்கார நாயிக அங்க செலம்பாட்டம் ஆடுதுக... நீ யெல்லா பெரிய மனுசனாயா... ச்சீ..."

"அதுமட்டுமில்ல மாமா... அவங்களுக்கு காசே இந்தாளுதான் தந்து விட்ருப்பான். வெந்த கஞ்சிக்கு வெஞ்சனம் இல்லாத பயலுக்கு, அடியாள நேமிக்கிற அளவுக்கு ஏது காசு... இந்தாள் ஏற்பாடுதே..."

நாட்டாமை மகனுக்கு இதுக்கு மேலேயும் அவமானப்பட முடியாது என்ற நிலை வந்தது. "ஏண்டா... ஊர் பூரா காறித் துப்பி கழுத மேல ஏறுன படுவா... ஆரப்பாத்து அவெ இவெங்கிற... ஊட்டியத் திருகி ஒடப்புல போட்ருவே..." என்றபடி வீரபத்திரனை அடிக்க, சேரைத் தூக்கினான். சின்னராசு ஓடிவந்து முருகேசனைப் பிடித்துக் கொள்ள, வீரபத்திரன் ஒரு சேரை எடுத்து முருகேசனின்

RangaRakes tamilnavarasam.com

தலையில் அடித்தான். மண்டை உடைந்து ரத்தம் வந்தது. மகன் அடிபட்ட கோபத்தில் நாட்டாமை வேட்டியை வரிந்து கட்டினார்.

தனது முதலாளியம்மா வீட்டில் நடக்கும் ரகளை கண்டு ஒட்டையனும் போசுவும் செய்வதறியாது முழித்தனர். யார் பக்கம் நின்றாலும் தங்களைஅடுத்தசாதிக் காரனாகத்தான் பாவிப்பார்கள். அவர்களாகவே தீர்த்துக் கொள்ளட்டும் என்பது போல, விசயம் வெளியே தெரியாமலிருக்க கதவைச் சாத்தி விட்டு வாசலில் நின்றனர்.

நாட்டாமையும் அவரது மகனும் அடிவாங்கக் கண்டு, அலறி அடித்து மேகம் தேடி ஓடிப் பதுங்கியது நிலா.

RangaRakes tamilnavarasam.com

# 24

கொண்டங் கால்கள் சில்ல்...லென குளிர்ந்திருந்தது. துணி மறைக்காத கைகளும், முகமும் கூட குளிரேறியது. தலை முடியைக் கோதி விட்டான் மாயன். அதுமட்டும் வேர்க்கவா செய்யும்...?

நிலா, தாயைப் போல வழி நடத்தியது. எந்தத் தடங்கலுமின்றி நடக்க ஒளி கொடுத்தது. நட்சத்திரங்களைப் பூராவும் விழுங்கி விட்டதைப் போல தனி மதர்ப்புடன் பவனி வந்தது. பனிப்பாறையில் ஓடிவரும் கண்ணாடிச் சில்லுப் போல வழுக்கிக் கொண்டு இவர்களுடனேயே அதும் வந்தது.

சோனைமுத்துதான் அவர்களை கூட்டி வந்தான். மாயனும் வசந்தியும் நிலவொளியில் நடந்தாலும், இருட்டுக்குள் நடப்பதைப் போலத்தான் தடுமாறினார்கள். இருவரும் உரசிக் கொள்ளும் நொடியில் மட்டும் வெப்பம் கிட்டியது.

மாயனுக்கு, தான் எல்லாவற்றையுமே தப்புத் தப்பாகச் செய்வதாய் உணர்ந்தான். தன் ஒருத்தனுக்காக எத்தனைபேர் சிரமப்பட வேண்டி இருக்கிறது. பாவம் வசந்தி... பசலைச் செடியாய் வளர்ந்த பிள்ளை. கஷ்டம்ங்கற வார்த்தைக்கே அர்த்தம் தெரியாத பொழப்பு. இப்பிடி ஊர் உறவு இல்லாத இடத்தில், தனக்காக தம் பேச்சு ஒண்ண மட்டுமே நம்பி வந்து இப்படிச் சிரமப்படணுமா... இந்தக் கிறுக்குத் தனத்தத்தான் காதல்னு சொல்றாங்களா... அப்போதுதான் புதுசாய்ப் பார்ப்பது போல, நடந்து தன்னோடு வந்தவளைப் பார்த்தான்.

சோனைமுத்துவின் வீட்டை விட்டு, தெரு இறங்கி ஒரு மடக்கு வீதியில் நடந்து கொண்டிருந்தனர். அது ஒரு சின்ன கடை வீதி போல ஒழுங்கு இருந்தது. எல்லாக் கடைகளிலுமே தென்னங்கிடுகு கூரை போட்டு கடையின் நீளத்தை தெருவுக்கு இழுத்திருந்தனர். ஒவ்வொரு கூரைக்குள்ளும் தலை இல்லா முண்டம் போல யாராவது ஓராள் போர்வைக்குள் முடங்கிக் கிடந்தார்.

கூரையிலிருந்து நிலா வெளிச்சம் ஒழுகி, தரையில் ஓடி அதன் தோற்றத்தை மாற்றி இருந்தது. அந்த வெளிச்சம் வசந்தியின் தலையில் துவங்கி, உடலெங்கும் உருகி முலாம் பூசியது போல இருந்தது. அவள் போட்டிருந்த சுடிதார் கூட இயல்பு நிறம் மாறி ஒளிராத ஒரு கடினத்தன்மை பெற்றிருந்தது.

நீண்ட முகமும் உயரமான நெற்றியும், அவளது அய்யாவின் நெடு நெடுவென்ற கைகளும், ஒடுங்கிய தோள்பட்டையும், வெளிறிய

RangaRakes tamilnavarasam.com

உடம்பும் அவளை ஒரு சித்திரமாய்க் காண்பித்தது. சிரிக்கும் போது பற்கள் கூட நீளமானதாகவே இருக்கும். அந்தச் சிரிப்பு தான் மாயனை ஈர்த்தது. எதற்கெடுத்தாலும் சிரிப்புத்தான். முழுப் பற்களும் பளிச்சிட, கண்கள். புருவத்தை மீறி உயர்ந்து நிற்க சிரிப்பாள். சிரிக்கும் போது உடல் சாமியாடி போல முன்னும் பின்னுமாய் ஆடி அழகு சேர்க்கும்.

ரேசனிலிருந்து வரும் சரக்குகளை சரிபார்த்து வாங்கி வைப்பதும், விற்ற பொருளுக்கு கணக்குப் பார்த்து பணம் வாங்குவதும் வசந்திதான். அவள் பிறந்த பிறகுதான், வீட்டு தரித்திரம் ஒழிந்ததாம். முதலில் சில்லரைக் கடைகளுக்கு ஏவாரம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ரைஸ் மில் ஒன்றைப் பேசி அரிசியை பாலிஷ் குடுத்து, பெரிய கடைகளுக்கு மூட்டை மூட்டையாய் ஏத்திவிட்டனர். மண்ணெண்ணை க்கு எப்பவுமே டிமாண்ட்தான். லாரிக்காரர்களுக்காகவே வீட்டில் போன் வாங்கி வைத்தனர். இந்த இடத்தில் இன்ன நம்பர் லாரி நிற்கிறது என்று போன் வந்ததும், மாயன் சைக்கிளும், பைக்கிலுமாய் சண்டிங் அடித்து சம்பாதித்துக் கொடுத்தான். அந்த ஓட்டமும் நடையுமான வேலைப்பாடு இருவரையும் அதிக நேரம் சேர்ந்திருக்கச் செய்தது. வசந்தியின் அருகாமைக்காகவே காற்றாய்ப் பறந்து பொருளைக் கொண்டு வந்தான். சரக்குகள் கைமாறுகிறபோது அவளது மூச்சுக் காற்றும், மேனி வாசமும் அவனைக் கிறுக்கனாக்கின.

'உறுத்தா வேல செய்வதாக' காமாட்சி அத்தை சான்று கொடுத்தது. 'என்னாருந்தாலும் எனப்பய எனப் பயதே...' என கூடுதல் பிரியமும் வைத்திருந்தது. சமயத்தில் சோறும் போட்டது அத்தை. அது இன்னமும் கூடுதல் பழக்கத்திற்கு வழிவிட்டது. உறங்குற நேரம் போக மீதிப் பொழுதெல்லாம் மாயனுக்கு காமாட்சி பவனமே கதி.

பேசிப் பேசி கிறங்கி, ஒருநாள் தைரியமாக தேனியில் சினிமா பார்க்க முடிவு செய்தனர். டிக்கட் வாங்கி தியேட்டருக்குள் நிம்மதியாக உட்கார முடியவில்லை. படம் துவங்கிய இருட்டில் தோளை இறுக்கிப் பிடித்து அணைத்தான். அவ்வளவுதான். இருவருக்கும் வியர்த்துக் கொட்ட ஆரம்பித்தது. படத்தை பாதியிலே விட்டு விட்டு வீடு வந்து சேர்ந்தார்கள். அதன்பிறகு செல்லமாய் அடிக்க, கிள்ள, உரச, சமயத்தில் கன்னத்தில் மட்டும் முத்த... என்று பொழுது ஓடியது. சோழவந்தானிலிருந்து வசந்தியை பொண்ணு பார்க்க வந்தபோதுதான். வீட்டை விட்டு வெளியேற முடிவு செய்தனர்.

ஊரில் நிறையப் பேர் இதுபோல ஓடிப் போவதும் ஒன்றிரண்டு நாளில் அப்பா அம்மாக்கள் தேடிப் பிடித்து சமாதானம் பேசி கல்யாணம் முடித்து வைப்பதுமாக நடந்திருக்கிறது. அதும் ஜாதி மாறிப் போன, சாந்தியும், ராஜேசும், புவனாவும் வீரனும், சந்தோசமாய் வீடு வாங்கி சவரட்டனையாய் வாழுகிற போது... என்று கணக்குப்

போட்டார்கள். கே.கே. பட்டியில்தான் கணக்கு தப்பாகிப் போனது. வரச் சொல்லி தைரியம் கொடுத்த நண்பன், கை உதறி விட நல்ல வேளையாய் சோனைமுத்து தாங்கிக் கொண்டான்.

கடை வீதி முடிவில் குறுகலான சந்து மேலேறியது. அதில் ஏறுகிறபோது சோனைமுத்து மாயனை ஒட்டி வந்து சொன்னான். "தப்பா நெனச்சுக்காத மாயா... வேற வழி தெரில.. இப்ப உங்கள வீருசின்னு வீட்டுக்குத்தே கூட்டிட்டுப் போறேன்.."

வசந்திக்கு அது இன்னொரு அதிர்ச்சியாய் இருந்தது. மாயனைப் பார்த்தாள். அவனும் விதிர்த்துப் போன நிலையில்தான் இருந்தான். மாயன் சோனைமுத்துவைப் பார்த்தான்.

"ஒ... இஷ்டம் சோன..."

"வேற வழி தெரியாமத்தேன்.. மாயா... எல்லாமே ஸ்பீடா. நடக்குது... நின்னு யோசிக்க முடில..."

'மாட்டுக் கறி திங்கிற வீடுன்னானேனே...' கவுச்சி நாத்தம் இருக்குமா... உள்ள நொழையவே முடியாதே..." எப்பிடி தங்க... வசந்தி அங்கலாய்த்தாள். 'மாதாரி வீடோ... அவளுக்கு கால்கள் பின்னின. நடை தளர்ந்தது.

"வீடெல்லா குடியானவக வீடுமாதரி சுத்த பத்தமாத்தே வச்சிருப்பா... மொதல்லயே சொல்லீர்ந்தா நல்லார்ந்திருக்கும்..." பேசிக் கொண்டிருந்த போதே வீடு வந்து விட்டது.

சோனைமுத்து கதவைத் தட்டினான். இரண்டு தட்டலுக்குப் பிறகு ஜாக்ரதையாக தாழ் விலக்கும் சத்தம் கேட்டது. கதவும் நிதானமாக அங்குலம் அங்குலமாகத்தான் திறக்கப்பட்டது.

"ஆர்...?"

"நாந்தே வீர்சின்னு... வெரசாத் தொற..." படரெனக் கதவைத் தள்ளினான். உள்ளே போனதும் லைட்டைப் போட்டான். "வா மாயா.. வாம்மா... " சோனைமுத்துதான் அழைத்தான்.

கதவை ஒட்டி நின்றிருந்தாள் வீருசின்னு. வசந்தியை விடவும் கூடுதலான வளர்த்தி. அதற்கேற்ற உடல்வாகு. பின்கொசுவம் வைத்து சேலை உடுத்தி இருந்தாள். கூந்தலை அள்ளி மடித்து கொண்டை போட்டிருந்தாள் கூம்பு ரேடியா போல நீட்டிக் கொண்டிருந்தது. நெற்றியில் ஸ்டிக்கர் பொட்டு, கண்களில் கண்மை இழுகல். கையில் ரப்பர் வளையல்...

"வாங்..." வீருசின்னுவால் பாதிக்கு மேல் பேச முடியவில்லை. நெஞ் சடைத்துப் போயிருந்தாள். மூச்சு விடவே கஷ்டமாயிருந்தது வீருசின்னுக்கு...

சோனைமுத்து விபரம் சொன்னான். "இன்னிக்கி நைட்டு மட்டும் இவங்க இங்கன இருக்கட்டும். காலம்பற தோது பாத்து ஸ்டேசன்ல போயி மால மாத்திர வேண்டிதே... என்னா மாயா..."

மாயன் எதும் சொல்லவில்லை. காமயகவுண்டன் பட்டியிலேயே அந்த நண்பன் சொன்னான். ‘பேசாம டேசனுக்குப் போயிர்ரா... வயசு இருக்கில்ல... சிம்பிளா முடிச்சிரலாம்...னு. ஆனா, பேப்பர்ல போட்டாங் கன்னா அசிங்கமாயிருமேன்னு பயந்து, விட்டாச்சு. இப்போ பழையபடி அதே நெலமதேன்... பாப்பம்... இதுதே நடக்கணும்னு இருந்தா நடக்கட்டும்... வேதாந்தி போல எண்ணங்கள் மாயனை ஆக்ரமித்தன.

சின்ன்ன வீடாக இருந்தது வீருசின்னுவின் வீடு. அது இரண்டு கட்டு. உள்ளே ஒரு அறை. முன்புறம் ஆக்குப்பரை கொல்லை சேத்து... வசந்தி எதிர்பார்த்தபடி எந்த வாசனையும் இதுவரைக்கும் எழவில்லை. வீடே வெறிச்செனக் கிடந்தது. தன்னுடைய வீட்டைப் போல அம்பார அம்பாரமான குவியல், அவியல் வாசனை கூடக் கிடையாது. அடுப்பை ஒட்டி நாலைந்து அலுமினியச் சட்டிகளும் இரண்டு ரப்பர் குடங்களும் மட்டுமே இருந்தன. மற்றபடி ஒரு ஈய போனி டம்ளர்தான். வாசல் கதவுப் பக்கம் சதுரித்து சிமிண்ட் பூசி பாத்திரம் விலக்க, பாத்ரூமும் அதுதான் போல... அங்கே ஒரு இரும்புவாளி. தண்ணீர் கப்பு... இவ்வளவே. இதில் குடும்பம் நடக்கிறதா...’

“என்னாங்... திடீர்னு கூப்புட்டு வந்திட்டீக... எப்பிடித் தங்க வக்கெ... விரிக்கச் செய்யவாச்சும் ஒரு பாய் படுக்க இல்லியே சாமி...” சோனைமுத்துவின் காதில் கிசுகிசுத்தாள் வீருசின்னு.

கட்டிய துணியோடுதான் வீட்டிலிருந்து கூப்பிட்டு வந்துவிட்டான். மாற்றுத்துணி கொண்டு வரவில்லை. அவர்களது பைகள் வீட்டில் கிடக்கிறது. அதை எடுத்து வரக்கூட தோன்றவில்லையே... எல்லாமே அவசரம். எதைத்தான் யோசிப்பது.

“சரி சரி விடு. இன்னிக்கி எங்க ஒறங்கப் போறாங்க. சிவராத்திரிதான்... மணி ரெண்டு, மூணாகும்ல... இனி எங்க வீட்ல போயி எதையும் எடுத்து வர நேரங் கெடையாது. சமாளிச்சுக்கட்டும். தோழரக் கடவீதில நிக்கெச் சொல்லீர்க்கே... ஒங்கண்ணெ பன்னீரத்தேங் காணாம். அவனக் கண்டு ஆக வேண்டீதப் பாக்கணும்.”

“பன்னீரு இப்பத்தான இங்கருந்து போனான்... அவனாக்கும்னுதே நெனச்சு பயந்துக்கிட்டே கதவத் தொறந்தேன்...! மாயனும் வசந்தியும் இன்னமும் நின்று கொண்டேதான் இருந்தார்கள்.

“இங்கெ எதுக்கு வந்தான்.”

“தெரீல... போகும் போது சூரிக்கத்திய வேற இடுப்புல சொருகி கிட்டுல்ல போறான்.”

“கத்தியவா...” மூன்று பேருமே அலறினர். மாயன் தனது இடுப்பைத் தடவிப் பார்த்துக் கொண்டான்.

“கிருச கெட்ட பெய... இவனுக்கு எதுக்கு இந்த வில்லத்தனம். தண்ணி நின்னி போட்ருந்தானா... சரி, நாம் பாத்துக்கறேன்... நீ இவங்கள மட்டும் சாக்ரதயாப் பாத்துக்க... தங்கச் செலைகள நம்பி

விட்டுட்டுப் போறே... பங்கம் வந்துராம பாதுகாத்துக்க... இனிஅந்தப் பய எங்கிட்டு கிறுக்குப் புடுச்சு அலயறானோ... அவன எங்கிட்டுத் தேட...” புலம்பிக் கொண்டே வெளியேறினான்.

கதவை சாத்தி தாழ் போட்ட வீருசின்னு, வாடிய கீரைக் கொடியாய் பயந்து போயிருந்த வசந்தியைப் பார்த்தாள். “அதொண்ணுமில்ல ஆயி... அவெ எப்பவுமே அப்பிடித்தே... லூசுப் பய... ராத்திரி நேரம் பூச்சி பொட்டு காத்து கருப்பு அண்டக் குடாதுன்னு அத ஒரு சாங்கியத்துக்காக இடுப்புல வச்சிருப்பான்... மத்தபடி பிரிக்கினிப்பய... ” என்று சொல்லி தேற்றிவிட்டு பெருக்குமாறை எடுத்துக் கொண்டு உள் வீட்டுக்குள் போனாள்.

மேலே தகரம் போடப்பட்டிருந்தது. கையெட்டும் தூரத்தில் தகரம் முட்டியது. சுற்றிலும் மண்சுவர். மண் தெரியாமல் சுத்தமாய் சுண்ணாம்பு அடித்து பளீரென இருந்தது. கொல்லையை ஒரு படல் மறைத்து, படலை ஒட்டி மண் திட்டு. திண்ணை போல நான்கு பேர் உட்கார தோதுவாய் இருந்தது. அங்கே உக்காரலாமா என்று வசந்தியை அழைத்தான்.

வேண்டாமென தலையசைத்தாள். இன்னமும் ஒரு அசூயை அவள் மனசில் ஓடிக் கொண்டிருந்தது.

“ஒங்களப் பத்தி அய்யா அவக சொல்லீர்க்காக... எல்லாம் நல்லபடியா முடியும்... நம்பிக்கையா இருங்க. மனசப் போட்டு ஒலப்பாதீங்க... எளவயசு கொஞ்சூண்டு கலக்கம் இருக்கத்தேஞ் செய்யும்.. ஒண்ணும் வராது...” சொல்லிக் கொண்டே தகரப் பெட்டியை திறந்து மூடினாள். சற்று நேரத்தில் வெளியே வந்த வீருசின்னு, “உள்ள போங்க சாமி... போங்க ஆயி...” என்று அனுப்பினாள்.

இருவரும் தயங்கித் தயங்கி நுழைந்தனர். உள்ளே புதிய சேலை ஒன்று விரிக்கப்பட்டு மேலே ஒரு தலையணை போட்டு அதும் சேலையால் மூடப்பட்டிருந்தது.

“புதுச் சேலதே ஆயி... விரிக்க வேறொண்ணும் இல்ல யில்ல... சங்கடப்படக்குடாது. முன்னக்கூட்டியே தெரிஞ்சிருந்தா, பாயி தலாணி கூட எடுத்தாந்திருப்பே..ன். இதும் புதுசுதே... தீவாளிக்கி எடுத்தது உடுத்தவே இல்ல.. பொங்கலுக்குதே உடுத்தணும்னு இருக்கேன். சித்த ரேம் படுத்து எளப்பாருங்க... விடிஞ்சிரும்... ஒங்க காலமும் விடியாமப் போகாது... விடியும்...” என்று பேசியபடி சாமி படத்திற்குப் பின்னால் இருந்த ஊதுபத்தியை எடுத்து வந்து கொளுத்தி வைத்தாள். மேலே தகரத்தின் எதோ ஒரு சொருகலில் இருந்து கொசுவத்தி ஒன்றை உருவி அதையும் பற்றவைத்து ஸ்டாண்டில் சொருகி வைத்தாள்.

“இனி கொசுவு கிசுவு அண்டாது... போய்ப் படுங்க என்றவள், வாழைப்பழம் கொண்டு வந்து கொடுத்தாள். “சாப்பிட்டுருக்க

மாட்டீங்க... வெறும் வகுத்தோட படுக்கக் குடாது, இது அவங்க வாங்கிட்டு வந்தததுதே, சும்மா சாப்பிடுங்க... உரிச்சுத் தரட்டா...”

அவர்களால் ஒண்ணும் பேச முடியவில்லை. கையெடுத்துக் கும்பிட வேண்டும் போல உணர்ச்சி மிகுந்த நிலையில் இருந்தனர். வசந்தி முன்னே போக மாயன் பின் தொடர்ந்தான்.

“கதவக் கூட சாத்திக்கங்க. பனியடிக்கும்.. நா இங்கனதே இருப்பே. நீங்க கம்மன்னு தூங்குங்க... ஆரும் வரமாட்டாங்க... வந்தாலும் என்னய மீறி நொழய முடியாது என்று கணீர் கணீரென பேசினாள். இருந்தாலும் சேக்கர் மிசினைப் போல உடம்பில் உதறல் ஓடியது.

பெரிய வீட்டுச் சமாச்சாரம்... வெளிக்கதவைத் தாளிட்டு, கதவில் சாய்ந்து உட்கார்ந்து கால் நீட்டிக் கொண்டாள். முதுகுக்குப் பின்னால் உலக்கையும், வலது கையில் விறகு கீறும் அரிவாளும் பிடித்திருந்தாள்.

# 25

ஆட்கள் திமு திமுவென லாரியில் வந்து இறங்கினார்கள். ஒரு லாரி நகர, அடுத்து வேனிலிருந்து பெண்கள். சேலை சரிவர உடுத்தியும் உடுத்தாமலும், கொசுவத்தை மடித்து சொருகிக் கொண்டும் கையிலேந்தி மாரில் வீசிப் போட்டும் மண்டபத்திற்குள் நுழைந்தனர். மண்டபம் கொள்ளாத கூட்டம். ஆனாலும் லாரியும் வேனும் மாறி மாறி வந்து ஆட்களை குவித்துக் கொண்டே இருந்தன. சாப்பாட்டுக் கூடத்திலும் நெரிசல். வந்தவர்கள் யாரும் பொண்ணு மாப்பிள்ளை பற்றியோ, கல்யாணம் நடந்ததா, தாலி ஏறிடுச்சா என்ற விசாரிப்போ இல்லை. பந்தி பந்தியாக நடந்து கொண்டே இருந்தது. இலை நிறைய சோறும், காயும், அப்பளமும், பாயாசமுமாக வழிய வழியக் கேட்டுக் கேட்டுச் சாப்பிட்டார்கள்.

மயிலும் அவளது புருசனும் பந்தி பரிமாறிக் கொண்டிருந்தனர். இன்னொருபக்கம் பருவதம் அக்காவும் மாமாவும் வரிந்து கட்டி சாம்பார் வாளியோடு அலைந்து கொண்டிருந்தார்கள். ஒரு ஆள் செம்பு நிறைய பாயாசம் கேட்டான். ஓடிப்போய் மயிலு ஊத்திக் குடுத்தாள்.

ஊர் பந்தி நடக்கிற எடத்துல இப்படி எல்லா தனித்தனியா வெளம்பக் குடாது...” என்று பாயாச வாளியை பிடுங்கிக் கொண்டு போனாள் காமாட்சி. நல்ல அரக்குச் சிகப்பில் பட்டுச் சேலை கட்டி நிஜமாகவே காமாட்சியம்மனைப் போல இருந்தாள். மயிலு பயந்து போனாள். கழுத்து நிறைய நகையும், இடுப்புக்கு ஒட்டியாணமும் பூட்டி அவளும் பந்தி விளம்பிக் கொண்டிருந்தாள். கையில் வீச்சரிவாளோடு அவளது புருசன் அடுப்படியில் உட்கார்ந்து வாழை இலை நறுக்கிக் கொண்டிருந்தார்.

“சாப்பாடு பத்தல. அரிசி மூட்ட எங்க இருக்கு...” என்று கேட்டபடி அவதி அவதியாய் ஓடி வருகிறான் மாயன். உடம்பெல்லாம் வேர்த்து வழிகிறது.

மயிலுக்கு கோபம் வந்தது. “கலியாண மாப்ள மணவறைக்கிப் போகாம... என்னாடா இப்பிடி....” என்று சத்தம் போடுகிறாள்.

அவன் மறுபடியும் “அரிசி மூட்ட எங்க இருக்கு?” என்றே கேட்கிறான்.

“ரேசன் கடைக்கு ஓடு... மூட்டயத் தூக்கிட்டு வந்து ஒலைல கொட்டு...” என்று காமாட்சி சொல்ல காற்றாய்ப் பறக்கிறான்.

RangaRakes tamilnavarasam.com

''கல்யாண மாப்ளய இப்பிடி வேல வாங்குறீகளே...'' என்று காமாட்சியைத் திட்டுகிறாள் மயிலு.

“வந்துருவான். வந்துருவான்...” என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே ரேசன் கடை லாரி வந்து நிற்கிறது. ஒரு மூட்டை அரிசியை முதுகில் சுமந்தபடி சமையல் கட்டுக்கு ஓடுகிறான் மாயன். மயிலுக்கு குலை பதறுகிறது. “கிருச கெட்டபய... எந்த நேரம் என்னா செய்யணும்னு தெரியாம இப்பிடித் திரியிறானே...” இதை அக்காளிடம் சொல்ல வேண்டி அக்காவையும் மாமனையும் தேடுகிறாள். அவர்களும் சமையல் கட்டுக்குள்தான் இருக்கின்றார்கள். “அட லூசுகளா, என்னாடி குடும்பம் இது..?” அக்காளைத் திட்டுகிறாள். “எல்லாம் நம்ம வேலதான... இந்தா முடிஞ்சிருச்சு...” என்று அடுப்புக்கு விறகு அள்ளிப் போடுகிறாள். மாயன் தூக்கி வந்த அரிசி மூட்டையை தலை குப்புற உலை கொதிக்கும் அண்டாவில் சாய்க்கிறான். காலுக்கு கீழே தீக்குண்டம். பதறுகிறாள் மயிலு. “என்னாடா வெளயாட்டு... பாத்துடா, வேற ஆரும் செய்ய மாட்டாகளா வாங்கடா முகூர்த்தத் துக்கு நேரமாச்சு...” அவன் கையை பிடித்து இழுக்கிறாள்.

“நாங்கள்ளாம் ரெடியாத்தே இருக்கம் மயிலு.. நீ போயி சேலய மாத்தீட்டு வா...” மாமன் சொல்லுகிறார். அவரும், அக்காவும் நிஜமாகவே புதுத்துணி உடுத்தித்தான் இருக்கிறார்கள். அக்கா ஜிலுஜிலுவென பட்டுச் சேலை மினுங்க சோறைக் கிண்டிக் கொண்டி ருந்தது. மாமாவும் பட்டு வேட்டி சட்டையில்தான் சாம்பாருக்கு உப்பு வார்த்துக் கொண்டிருந்தார். மாயன் மட்டும் கைலி வேட்டி உடுத்தி இருந்தான்.

“நீ வாடா...” மாயனின் கையைப் பிடித்து மண்டபத்திற்குள் நுழைந்தாள் மயிலு. எதித்தாற் போல மயிலு புருசன் வருகிறார். “மயிலு லாரி நெறைய லோடு மேன்கள கூட்டிட்டு வந்தாச்சு” என்கிறார். அவரும் அதிசயமாய் பேண்ட் சட்டை போட்டிருந்தார். அவளுக்கு சிரிப்பு வந்தது. ‘சர்க்கஸ் கோமாளி மாதிரி இருக்கு’ என்று சொல்லிவிட்டு, “வந்தவங்களப் பூராம் மொதல்ல சாப்பிட வையுங்க, இவனுக்கு அலங்காரம் பண்ணீட்டு வர்ரே...” என்கிறாள். லாரியில் வந்த லோடு மேன்கள் கையில் குச்சி கோலுடன் சாப்பாட்டுப் பந்தியில் நுழைகிறார்கள்.

“நா அவங்களுக்கு பந்தி பரிமாறிட்டு வர்ரேனே...” என்று கெஞ் சுகிறான் மாயன்.

“சின்னப்பிள்ளையாடா நிய்யி....!” மாயன் தலையில் ஓங்கிக் குட்டுகிறாள். மணமகன் அறைக் கதவைத் திறந்து அவனை உள்ளே தள்ளி இவளும் நுழைகிறாள்.

அரை பிரகாசமாய் இருக்கிறது. பெரிய்ய்ய அறை. அதும் ஒரு கல்யாண மண்டபம் போல நீளமாக இருக்கிறது. வரிசை வரிசையாக ஆளுகள் உக்காந்திருக்கிறார்கள். கடேசியில் மணவறை இருக்கிறது.

அங்கே எதோ ஒரு ஜோடிக்கு கல்யாணம் நடந்து கொண்டிருக்கிறது. மாயனை இழுத்துக் கொண்டு போகிறாள். அந்த மணவறையைச் சுற்றிலும், காமாட்சியும் கருத்தக்கண்ணும் காவலுக்கு நிற்பது போல ரெண்டு பக்கமும் நின்று கொண்டிருக்கிறார்கள். அக்காவும் மாமாவும் அவர்களுக்குப் பின்னால் நிற்கிறார்கள். அய்யர் மந்திரம் போட்டுக் கொண்டிருக்கிறார். மணவறையில் மாயன் பளிச்சென சந்தனக் கலரில் பட்டு வேட்டியும், சட்டையும் உடுத்தி கழுத்தில் பெரிய மாலையுடன் உட்கார்ந்திருக்கிறான்.

மயிலுக்கு குழப்பமாயிருக்கிறது. யாரைக் கைப்பிடித்து இழுத்து வந்தோம். அருகில் நிற்பவனை பார்க்கிறாள். அதுவும் மாயன்தான். இப்போது மணவறையில் இருந்தவனைப் போலவே பட்டு வேட்டி சட்டையும், கழுத்தில் மாலையுமாய் நிற்கிறான். இவள் மட்டும் பழைய சேலையுடன் நிற்கிறாள். “நீ சேலய மாத்தலியா சித்தீ...” என்கிறான் மாயன்.

“அங்க இருக்கது யாரு...” மணவறையைப் பார்க்க, மணவறையில் யாரும் இல்லை. பொண்ணுப் பிள்ளை மட்டும் தனியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறது.. ‘‘மாப்பிள்ளைய வரச் சொல்லுங்கோ, முகூர்த்தத்துக்கு நேரமாச்சு...” அய்யர் கத்துகிறார்.

“நீ போடா...” அவனைத் தள்ள, “நீ புதுச்சேலய மாத்து போவம்’ என்று சேலை ஒன்றை அவளிடத்தில் நீட்டுகிறான்.

“நாங் கட்டிக்கிறேன். மொதல்ல நீ போடா அய்யா...” சேலையை வாங்கிக் கொண்டே அவனை மணவறைக்கு அனுப்புகிறாள்.

உட்கார்ந்திருந்த மொத்த கூட்டமும் அறுவாளோடு எழுந்து நிற்கிறது.. மாயனை மணவறைக்குப் போகவிடாமல் தடுக்கிறது.

“சித்தீ...” கத்துகிறான்.

மயிலு, சேலையை பாதி உடுத்திய கையோடு “மகனே....!” என்று பாய்கிறாள்.

அவளது புருசனும் லோடு மேன்களும் உருட்டுக் கட்டையோடு ஓடி வர, அதற்குள் ஒருத்தன் மாயனை கழுத்தில் வெட்ட, “சித்தீ...” என்று மாயன் இவள் மீது சாய்கிறான். அப்படியே அவனை மார்போடு சேர்த்தணைத்துக் கொள்ளுகிறாள். மயிலுவின் ஜாக்கட்டெல்லாம் ரத்தம் சூடாகப் பாய்கிறது.

“அய்யோ மகனே... மாயா... மாயக்கண்ணா...” கீச்சுக் குரலில் கத்தினாள். உருண்டாள். எழுந்திருக்க விடாமல் யாரோ போட்டு அமுக்குகிறார்கள். நெஞ்சு படபடக்க மேலே கிடந்தவனை நெட்டித் தள்ளி விட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

“மயிலு.. மயிலு.. என்னா.. என்னாடீ...”

கோபால் லைட்டைப் போட்டுக் கொண்டு அவளை உலுப்பினான்.

RangaRakes tamilnavarasam.com

முட்டைக் கருவின் மஞ்சளாய் ஒளிர்ந்தது குண்டு பல்பு. பிள்ளைகள் ஒட்டு மொத்தமாய் குவிந்து கிடந்தார்கள். மயிலுக்கு நெஞ்சு இன்னமும் ஏறி இறங்கி மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது. "கெனா தானா.. ச்சீ..." நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள். மார்பெல்லாம் ஈரமாய் இருந்தது. ரத்தமா... தொட்டுப் பார்த்தாள். நீராய் சில்லிட்டது. முகர்ந்தாள். "ச்சீ... மூத்தரம்..." எந்தச் சனியெ...

அவள் தலமாட்டில் நடுவுலவன் படுத்துக் கிடந்தாள்.

"என்னா மயிலு... என்னாடீ..." மறுபடியும் கேட்டான் உறக்கம் கலைந்த எரிச்சல் அவனுக்கு.

"ஒண்ணுமில்ல... எதோ கெட்ட சொப்பனம்."

"அதுக்கா இம்புட்டு கூப்பாடு போட்ட.. ஒறக்கமெல்லாம் போச்சு..." அப்படியே மறுபடி பாயில் விழுந்தான்.

"ந்தா... எந்திரிச்சு பிள்ளைகளத் தூக்கிப் போடுங்க... ஒண்ணுமேல ஒண்ணா கொடவண்டி சாஞ்ச மாதிரி கெடக்குக... ந்தா.. தள்ளிப்படுறா... பத்து வயசாச்சு. இன்னம் நொட்ட மாதரி மூத்தரம் பேய்றான்... ச்சீ, சட்ட சேலையெல்லாம்.. நாறுது, எம்புட்டுப் பதவளத்தே அடக்கி வச்சிருக்கானோ...! தூங்குறப்ப இருந்துட்டுப் பட்றான்னா.. டெய்லி சொல்லணும்..'' எழுந்து பழைய துணி எடுத்து துடைத்துக் கொண்டாள். துடைக்க வீச்சம் அதிகமாகியது. அலசாமல் நாத்தம் போகாது... கதவைத் திறந்து வெளியே வந்தாள்.

அப்பவும் நிலா பொழிந்து கொண்டிருந்தது. தூக்கக் கலக்கம் கண்ணைச் சுழற்றியது. வெளிச்சத்தை வாங்க மறுத்தது. கண்ணைச் சுருக்கிக் கொண்டு சாக்கடையில் உட்கார்ந்தாள். தொட்டியிலிருந்த நீரைத் தொட்டு மார்பை துடைத்துக் கொண்டாள். உடம்பு சில்லிட்டது சேலைத் தலைப்பால் தடைத்துக் கொண்டு நிலாவைப் பார்த்தாள். லக்ஸ் சோப்பு போலஅழகாய் இருந்தது. ரெம்ப நேரம் பார்க்க முடியவில்லை. கெனா வந்து பயமுறுத்தியது.

"மணி எத்தன..." புருசனிடம் கேட்டாள்.

"மூணே கால்..."

"விடியல்ல வந்த கெனா பலிக்கும் பா. ங்களே... நெஞ்சுக்கூடு படக் படக்கென்றது. நாலு மணிக்கு மேலதான கணக்கு...! இது ராத்திரிக் கணக்குதான... தாயே மகமாயி எல்லாம் நல்லபடியா நடக்கணுமாத்தா... நெனச்சது நடந்தா அவகளுக்கு பொறக்குற தலப் புள்ளைக்கு ஓம்பேர வச்சுடுறம்... காப்பாத்து..."

"சரி.. எந்திரிங்க.. இனி தேனிக்குப் போயி ஆள்களப் பாத்துப் பேசிப் போக சரியாப் போகும்.. கௌம்புங்க.." கோபாலைக் கிளப்பினாள்.

"அஞ்சு மணியாகட்டுமே மயிலு.."

"போலுமா... அஞ்சுக்குக் கௌம்பி... ஆளக் கூப்பிட்டு பஸ்சப் பிடிச்சு... ஆத்தாடி... எந்திரிங்க எந்திரிங்க..." பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு உசுப்பினாள்.

முழித்தவன் சில வினாடி அவளை நிலை குத்திப் பார்த்தான். சடாரென அவளை இழுத்து மார்பில் சாய்த்துக் கொண்டு இறுக்கினான்.

அவள் பலமாய் உதறி எழுந்தாள். "வேற சோலி மயிரு கெடையாது... நானே கெனாக் கண்டு அரண்டு போயிருக்கே... தயவு செஞ்சு கௌம்புங்க சாமீ...மீ..."

"எத்தன பேரக் கூட்டிட்டுப் போக..."

"எனக்கு அந்தக் கணக்கெல்லாந் தெரியாது. அவன பத்தரமாக் கூட்டிட்டு வரணும்... போங்க.."

"முருகவேல் தோழர கூட்டிட்டுப் போகட்டுமா..."

மயிலு யோசித்தாள். கம்மூனிஸ்ட் கட்சிக்காரங்கன்னா பயங்கரமாப் பேசுவாங்க, இவரு என்னான்னா பொட்டிப் பாம்பா, பேசணும் வக்கெனும், அவனும் பாவம் அவளும் பாவம்னு சாமியார் கணக்காப் பேசுறாரு... வருவாரா...!" "எனக்குத் தெரியல சாமி... நானே பொலம்பிச் செத்துக் கிட்டிருக்கேன்.. ஆம்பள வேணுங்கறத பாத்து செஞ்சுக்கங்க... எங்கிட்ட கேட்டா எதுன்னாலுஞ்சரி ஒடனுக்கொடனே ராவுத்தர் கடைக்கி போன் பண்ணீருங்க... காலைல எட்டு மணிக்கு நிப்பேன்."

ரூவாயை எண்ணிக் கொடுத்தாள்.

"ங்கொக்கா வீட்டுக்குப் போய்ப் போகவா..."

"எதுக்கு...? படைய காட்டவா.. நேரா போங்க, போறதும் தெரியக் குடாத வாரதும் தெரியக் குடாது."

கோபால் வெளியே வந்தபோது வழக்கம் போல நாய் குலைத்தது.

RangaRakes tamilnavarasam.com

# 26

இரவு முழுக்கப் பயணம் செய்தும் நிலா, சோர்ந்து போனதாய்த் தெரியவில்லை. தனது சேவையை மாற்றித் தரவே நேரம் பார்த்தது. புள்ளி மான்களாய் ஓடித் திரிந்த மேகங்கள் முட்டி மோதி மூச்சுத் திணறியதில் முகம் வெளுத்துப் போயிருந்தது. கிழக்கில் வெளுப்பின் வரவுக்காக வானம் தன் வாசல் பார்த்திருந்தது. ஆதவனைப் பிரசவிக்கும் அல்குல் போல கீழ்வானம் கனிந்திருந்தது.

மரத்தில் அடைந்திருந்த கோழிகள், சிறகுகளில் படிந்த பனித் தூறல்களை உதறி விழித்தது. கோழியின் சிறகடிப்பால் உறக்கம் கலைந்த சேவல்கள், கோழிகளை விடவும் நீளமான தமது இறகை விரித்து கழுத்தை உயர்த்திக் கூவியது. அது புலர் காலைப் பொழுதின் முதல் அணிகலனாய் அமைந்தது. அதனைத் தொடர்ந்து பல சாரீரங்களில் கூவலோசை எழுந்தடங்கியது. இதில் முற்றிலும் உறக்கம் கலைந்த கோழிச் செல்லங்கள் மரத்தை விட்டிறங்கி அப்பொழுதே இரை பொறுக்க ஆரம்பித்தன.

ஊரின் மேற்கிலிருந்த பள்ளி வாசலில் முதல் வாங்கு சொல்ல ஆரம்பித்தனர். மினாரின் உச்சியில் கட்டியிருந்த கூம்பு வடிவ குழாய் வழியே “அல்லாஹ்... அக்குபர் என்று ஒரு கனத்த குரல் ஊரை உசுப்பிவிட்டது.

சோனைமுத்து வீட்டில் பிள்ளைகள் உறங்கிக் கிடக்க, லட்சுமியம்மாள் மட்டும் ஊர்ப்பட்ட வசவுகளோடு வாசலைப் பெருக்கி, சாணி தெளித்தார். பேருக்கு ரெண்டு கம்பி இழுத்து கோலம் போட்டு விட்டு கதவடைத்துக் கொண்டார். இத்தனை நாளும் நெருக்கடியாக இருந்த வீடு, ஒரே பொழுதில் முட்டைக் கூடு போல லேசாகிப் போனதில் வெறுமை ஒருபுறமிருந்தாலும் பெருத்த நிம்மதி நிறைந்திருந்தது. எப்பிடியோ தலைக்கு வந்து தப்பிச்சது புண்ணியம். ஆனாலும் சந்தேகம் இருந்தது. தப்பிச் சாச்சா... பெரியாளுக வந்தது பஞ்சாயத்து நடந்தது எல்லாமே இங்கதான்... வழின்னு கேட்டாலும் இங்க வந்துதான போகணும்.. அடக் கடவுளே... காணி வெளஞ்சும் கஷ்டந் தீராத பொழப்பாவுல்ல இருக்கு.

அவிங்கெ பத்து பேரக் கூப்புட்டு வரணுங்கிறானுங்க... இவெங்கெ போலீச கூப்புடணுங்கிறாங்கெ... ஹூம்... நடு வீட்ல வெனைய வச்சுகிட்டு அடுத்த வீட்டுக்கு புத்தி சொல்ல அக்குசு கெடையாது. புலம்பியபடியே பிள்ளைகளோடு தலை சாய்த்தார்.

“டொக் டொக் டொக்...” தலை சாய்ந்த மறுநிமிசம் கதவு தட்டப் பட்டது. திடுக்கென எழுந்தார்.

“ஆ...ரு...!”

“கவத் தெற... அதுங்குள்ள ஒரு ஒறக்கமா...” அய்யாச்சாமியின் குரலில் அவசரம் தெறித்தது.

கதவைத் திறந்தவர், "என்னாவா..ம்" என்றார்.

"ஒண்ணுமில்ல... ஒறங்கிட்டியான்னு கேட்டேன்" புருசன் எதையோ மறைப்பது தெரிந்தது.

"ஒறங்கவா... இன்னிக்கித்தே ஏகாதசி கணக்கா முழிக்காத முழிப்பெல்லா முழிச்சாச்சே..." சொல்லுங்க..."

"வேறொண்ணுமில்ல.." என்றவர், படுக்கையில் உட்கார்ந்தார். சற்றுநேரம் கழித்து, "நிய்யும் பிள்ளைகளும் பெரியகுளத்துக்குப் போயிர்றீகளா..." என்றார்.

"எப்ப..."

"இப்பத்தேன்..."

"இந்த நேரத்திலியா...ஏன்..?" தணிந்திருந்த பதட்டம் மறுபடி தாண்டவ மாடியது.

"பெரிய வில்லங்கமா இருக்கும் போல இருக்கு. இப்பிடி வெறி பிடிச்சு அலயறாங்கெ... என்றவர், "மாயனோட சித்தப்பெ, பூதிப் பொரத்துலருந்து ஆள்க் கூப்புட்டு வாரானாம்..."

"எதுக்கு...?"

"எதுக்கு..! மல்லுக்கட்டத்தே... பொண்ணு வீட்டுல நேத்தே இங்கன ஆள எறக்கிட்டாங்க போல, இன்னிக்கி எப்பிடிப்பட்ட ஏற்பாட்டோட வாராங்கென்னு தெரியல. ஓம் மகெங் கூட திரிறான்ல... மாதாரிப்பய.. பன்னீரு...!"

"ஆமா.. பன்னீரு.."

"அவன கட வீதில வச்சு அடிச்சுப் புட்டாங்களாம்..."

"ஆரு...?"

"ஆரு.! காமாச்சி ஆள்கதே...!"

"அட கண்றாவியே... ஏனாம்."

"ஏனா.. காதல் சோடிக்கு காபந்து பண்றானுகன்னு தே...

"இப்ப எங்க கூப்புட்டுப் போயி ஒளிச்சு வச்சிருக்காங்களாம்..."

"அது தெரில... சித்ரம் பிள்ளைய ஊருக்கு அனுப்பிச்சு விடப் போயிருந்தேன்ல... இப்பிடி சேதி... அடி வாங்குனவ... கத்தியோட சுத்திட்டு திரியிறான் போல..."

"எதுக்கு.."

"அடிச்சவன குத்தறதுக்கு.."

"அய்யோ தெய்வமே... நம்ம கொரங்கே எங்க இருக்யான்..."

"அவனும் கட்சிக்காரப் பயலும் பன்னீரத் தேடிக் கிட்டிருக்காங்க..."

"அவன அடிச்சு இழுத்துட்டு வராம... ஒப்புச்சுக் கிட்டிருக்கீங்க.."

"அடிச்சு இழுத்து வர அவெனன்னா சின்னப் பயலா அவெந்தெ இன்னிக்கி ஏற்பாட்டுக்கே கதாநாயகெம் மாதிரில்ல அலயிறான்" என்று பிரலாபித்தவர், "சரி கதவ சாத்திக்கங்க... ந்தா வந்திர்ரேன்..." என்று வாங்கருவாள் ஒன்றை எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டு வாசலைக் கடந்தார்.

# 27

“விடுங்க... அவிங்களக் குத்தாம வரமாட்டே...” விசும்பிக் கொண்டே இருந்தான் பன்னீர்.

அவனது சட்டை கிழிந்திருந்தது. தலை கலைந்து முகத்தில் சிராய்ப்பும் கண்டிருந்தது. உடம்பில் நிறைய அடி விழுந்திருக்க வேண்டும். லேசான நடுக்கமும் இருந்தது.

சோனைமுத்துவாலும், சித்திரம் பிள்ளையாலும் அவனைச் சமாதானப்படுத்த முடியவில்லை. கடைகளுக்கு வாசல் தூத்தி சாணமிடும் கிழவிகள் முக்காடு போட்டுக் கொண்டு சேலையை முழங்காலுக்கு மேல் ஏத்திச் சொருகிக் கொண்டு, பெரிய வாளியில் கரைத்த சாணித் தண்ணீரோடு அலைந்தார்கள். பக்கத்தில் ரப்பர் குடம். அடிகுழாயில் தண்ணீர் நிரப்பி வைத்திருந்தார்கள்.

பட்டிகளிலிருந்து வரும் பால்காரர்கள் பெரிய பெரிய அலுமினிய கேன்களை, சைக்கிள் கேரியரில் வைத்துக் கட்டிக் கொண்டு, ஹேன்ட் பாரில். சின்ன தகர கேன்களை கொத்துக் கொத்தாய் தொங்க விட்டபடி ஊருக்குள் நுழைந்தனர். இன்னும் திறக்காத காப்பிக் கடைகளுக்குள் வைத்துவிட்டுப் போனார்கள். ஒன்றிரண்டு பேப்பர்க்கார பையன்கள், சைக்கிளில் ஆலவட்டம் போட்டு பேப்பரை வீசி எறிந்து கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு வீச்சும் குறி தவறாமல் இலக்கைச் சென்றடைந்தன.

ஊர் முழித்துக் கொண்டு விட்டது. இனி ரெம்பவும் பொறுப்பாகத் தான் நடக்க வேண்டும். ஆகவே, பன்னீரை இழுத்துக் கொண்டு அம்மன் கோயிலடிக்கு சாம்பல் மேட்டுப் பகுதிக்குப் போனார்கள்.

“நா. ஒண்ணுமே செய்யல” என்றான் பன்னீர் மறுபடியும். “சத்தியமா... நா எதுமே பண்ணல, நீங்க பூராமும் வீட்டுக்குள்ள ஒக்காந்துக் கிட்டீங்க... என்னிய வெளில விட்டீட்டீங்க, பனில கெடந்தே...” சொல்லும் போதே அவன் தங்களை குற்றம் சாட்டுகிற தொனி இருந்ததை தோழர் குமார் உணர்ந்தார்.

“நானும் எம்புட்டு நேரத்தே வெளில நிக்க...? தம்மடிக்க பீடி வேற இல்ல... சரி, கீழ கடவரைக்கும் போயிட்டுத் திரும்பீரலாம்னு வந்தே... கோயிந்து டீக்கடை இட்டக்க வந்ததும் புடிச்சுக் கிட்டாங்க...”

“ஏற்கனவ அவங்களத் தெரியுமா...?” சோனைமுத்து கேட்டான்.

RangaRakes tamilnavarasam.com

"நாந்தே அப்பவே சொன்னன்ல... ராத்திரி காப்பிக் கடைல தகலாறு பண்ணிட்டாங்கன்னு..."

"அதே ஆளக தானா...?"

"ஆ...மா.."

"கூடுதலா யாரும் இல்லியா..."

"இல்ல..."

"நீ என்னா செஞ்ச..."

"ச்ச்... எங்காத்தாலறிய நா எதுமே செய்யல. ஒங்க வீட்லருந்து வந்தே... கடவீதி நொழய புடிச்சுக்கிட்டாங்க..." மறுபடி அதையே சொன்னான்.

"கண்ணி வச்சு பிடிச்ச மாதிரி...!" சித்திரம்பிள்ளை எடுத்துக் கொடுத்தார்.

"ஆர்ரா நீ...ன்னாக! 'நீங்க ஆரு போலீசான்னு நாங்கேட்டே... வதுலு பேசல... ஏண்டா எங்கூருலயே வந்து என்னியவே அரட்றியா...ங்கவும் விட்டுட்டாங்க. எத்தன வேர்ரா வந்திருக்கீங்கன்னு சவுண்டு விட்டேன்... மூச்சு விட மாட்டேன்னுட்டாங்கெ... பெரிய ரகள பண்ணேன்... கப்புன்னு ஒருத்தே வாயப் பொத்தி கழுத்தச் சேந்து இறுக்கிப் புடுச்சுக்கிட்டான்... விசும்பலாம்னு பாக்குறேன்... தாயளி உசிர்த்தளத்துல கைய வச்சு நசுக்கீட்டான். அப்படியே முக்கமுடில... மொனங்க முடில... இதேஞ் சாக்குன்னு தாயளிக அடிக்க ஆரம்பிச்சிட்டாங்கெ... ஓர் நிம்சந்தே... அப்பிடியே ஒரு துள்ளு... கையிக்கு சிக்குன ஒரு கல்ல எடுத்த விட்டேம்பாரு... ரெண்டு பேருக்கும் நல்ல எறி. இருங்கடா நானும் ஆளக் கூட்டிட்டு வர்ரண்டான்னு ஓடிவந்திட்டேன்... அதுப் பெறவு. வீட்ல போயி ஆயிதத்த எடுத்தாந்தே... கண்டாரஓளீகள அப்பாத புடிச்சுத் தேடுறே... ஆளக்காங்க முடில..." பரபரத்தான்.

சட்டை கிழிந்த கதை எல்லாம் சொல்லவில்லை இதற்கு மேலும் நடந்திருக்கிறது.

"வேற எதும் பேசுனீங்களா..." தோழர் கேட்டார்.

"வேற என்னத்தப் பேச, எங்காத்தாளும் அவக ஆத்தாளும், சின்னயா பெரியா மக்களா...! தாயாளி எஞ்சாதியப் பத்தி வேற பேசிட்டான்யா... அவனச் சும்மா விட்றதுல்ல.. எங்குட்டு ஒளிஞ் சிருக்கப் போறான்... எப்பிடியு இங்குட்டு வந்து தான காரேரணு..."

"அதத்தாண்டா... அவெ என்ன மாச்சும் கேட்டானுகளா... நீ என்னத்தியாச்சும் பேசினியா..."

"ஒண்ணுமில்லீங்க... இவகளத்தேங் கேட்டானுங்க... அதும், கழுத்தில கால வச்சி அமுக்கிக்கிட்டுக் கேட்டான். 'எவ் வீட்ல தாண்டா ஒளிச்சு வச்சிருக்கே... என்னாடா செய்வன்னு...' சும்மாங்காச்சும் அடிச்சு விட்டே... அப்பத்தே எங்க மொதலாளி மக... ஒவ்வீட்லயாடா தப்பிளி நாயேன்னு சாதியப் பத்தி வஞ்சிட்டான்..யா..."

மூன்று பேரும் தலையில் அடித்துக் கொண்டனர். சித்திரம் பிள்ளைக்கு கிறுகிறுவென பூமியே தலைகீழாய் சுற்றுவது போல இருந்தது.

“இந்தக் கிறுக்கன வச்சு என்னாசெய்ய...” சோர்ந்து போனான் சோனைமுத்து.

“சரிவாங்க... வேற எதுவும் யோசிக்க இப்ப நேரமில்லை...” என்ற குமார் சித்திரம் பிள்ளையை ஊருக்குப் போகச் சொன்னார்.

“போய்ட்டதும் வந்துடுவேன் இந்நேரம் அங்க தேடிக்கிட்டிருப்பாங்க... ” என்ற அவர். ‘ஜாக்ரத’ என்ற வார்த்தையை மட்டும் விட்டு விட்டுக் கிளம்பினார்.

மாயன் ஜோடிகளுக்கு வேறொரு இடம் தேட வேண்டும்... அது சம்பந்தமாக யோசிக்கச் சொன்னார். அதோடு நமக்கான ஆட்களை இன்னமும் அதிகமாக திரட்ட வேண்டும் என்றும் சொன்னார்.

மறுபடி பன்னீரிடம் பேசி அவனைக் குளிரச் செய்து... ‘நாலஞ்சு பேரோட வா’ என அனுப்பிவிட்டு மீண்டும் வீருசின்னு வீட்டுக்கு நடந்தனர்.

# 28

காமாட்சி பவனத்திலிருந்து நாட்டாமையையும், அவரது மகனையும், சின்னராசுவும் கருத்தக்கண்ணுவும் வம்பாடுபட்டு பிரித்து இழுத்து வந்தனர். கருத்தக்கண்ணு நாட்டாமையை அள்ளிக் கொள்ளாத குறையாய் தூக்கி வந்தார். அவமானத்தாலும் ஆவேசத்தாலும் நாட்டாமையின் உடல் துடிப்பு கருத்தக்கண்ணுக்கு கேட்டது.

"ஒங்க வயசுக்கும் தரத்துக்கும், இது ஆகுமா..." பாதி கோபமும், பாதி ஆற்றாமையுமாகக் கேட்டார் கருத்தக்கண்ணு.

"போ...டா. நீயெல்லா ஆம்பள மாதரி...? விட்றா. ஆனா, இம்புட்டு ஆட்டம் நல்லதுக்கில்ல கருப்பு...அழிச்சுப் போடும்." சாபமிட்டபடி தன்னை விடுவித்துக் கொண்டார். உடம்பு முழுக்க அலுப்பும், வலியும் சேர்ந்து அழுத்தின. கால்களை இயல்பாக எடுத்து வைக்க முடியவில்லை. ஏதாவது ஒரு ஊன்றுகோல் தேவைப்பட்டது. தனது வண்டியைப் பிடித்தபடியே நின்று கொண்டு ஆசுவாசப்படுத்தினார்.

வாசலருகே நின்றிருந்த போசும் ஓட்டையனும் அவரது நிலை கண்டு ஓடி வந்தனர். அவர்களைக் கண்டதும் தன்மான உணர்ச்சி தலை தூக்க, தலைகுனிந்த நிலையிலேயே உடலை நிமிர்த்தி செருக்குடன் நின்று கொண்டார். மகனைப் பார்த்தார். அவன் சின்னராசுவுடன் எதோ ஒப்பித்துக் கொண்டிருந்தான். சின்னராசு முருகேசனை வெளியே கடத்திக் கொண்டு வந்தான். முருகேசனின் தலையில் ரத்தம் கசிந்த இடத்தில் உறைந்து போயிருந்தது.

"ராஸ்ணே... நீதே சாச்சிண்ணே... பாத்துக்க வீட்டுக்கு கூப்புட்டு வச்சு அடிச்சுட்டாங்நெ... வந்தேறிப் பயகூடச் சேந்து எங்கள அசிங்கப்படுத்திட்டீங்க..."

"காலைல பேசிக்கலாந் தம்பி... அய்யாவக் கூட்டிட்டுப் போய்யா...!"

"அய்யாவக் கூட்டிக்கிட்டு இப்ப நேரா போலீஸ் ஸ்டேசனுக்குப் போகப் போறே... அத்தன பேரையும் தூக்கி உள்ள போட்டு... விடியவும் பாரு, நாட்டாம குடும்பம். எத்தன தலக்கட்டுங்கறது தெரியும்டி... அவெங்கிட்ட சொல்லி வையி... வாங்கப்பா..."

வண்டியைக் கிளப்பினான்.

“வீட்டுக்குப் போ” என்றார். “எல்லாத்தையும் சவைல பேசிக்கலாம்... சாதிய மட்டும் சவைக்கு இழுக்க வேண்டாம்.”

ஸ்டேசனுக்குப் போக வேண்டும் என்பதில் முருகேசன் பிடிவாதம் பிடித்தான். ‘சொல்றதக் கேளு...” என்ற ஒற்றை வார்த்தையில் மகனை அடக்கினார். “விடிஞ்சா என்னென்ன கூத்து நடக்கப் போகுதோ தெரியல... அந்த ஆண்டவந்தே காப்பாத்தணும்...”

தலைக் காயமும் மணிக்கட்டில் விழுந்த அடியும், வண்டியோட்ட சற்று சிரமமாயிருந்தது முருகேசனுக்கு.

காமாட்சியை யாராலும் சரிக்கட்ட முடியவில்லை. தன் காரியமெல்லாம் மண்ணாய்ப் போனதாகப் புலம்பினாள். தரித்திரம் பெத்த வீட்டுக்கு, தாம் பெத்தமக. தண்ணி செமக்க போறாளே... என்று பிலாக்கிணம் பாடினாள். எவெ எவெ மேல இருந்த காண்டெல்லா வம்மம் வச்சு அதத்தீக்க ஏவ் வீடுதானடா கெடச்சுச்சு’ என்று வீரபத்திரனை சாடினாள். ஆள் அம்போட போயி சுத்தி வளச்சு, அருமப் பிள்ளைய மீட்டுட்டு வந்திரலாம்ன னெப்புல நெருஞ்சி முள்ளப் போட்டு அடச்சிட்டியேடா பாவி... ஓம் வம்பு வழக்குக்குக்கு எம்புள்ள பொழப்புத்தான கெடச்சுச்சு... நீ நாசமாத் தாண்டா போயிருவ...” என்றவள் திடீரென ஆவேசமடைந்தவளாய் எதோ ஒரு புதிய வெளிச்சம் கண்டவளாய் எழுந்தாள். “விட மாட்டேன்டா... யாரையும் நம்ப மாட்டே நானே போய் நடத்திக் காட்டுறேன்...’’ வேகமாய் எழுந்து அரங்கு வீட்டுக்குள் நுழைந்தாள்.

“மாமா... நீங்க கௌம்புங்க... ஓட்டையனையும், போசையும் கூட்டிக்கிங்க... நா வேற ஏற்பாட்டுல வர்ரேன். அஞ்சர மணிக்கு வேன் வந்திரும். பளபளன்னு விடிய... ஆறு ஆறரைக்கெல்லா ஊருக்குள்ள நொழையறம்... ஊரக்கலக்கி உருப்படிய வண்டில தூக்கிப் போட்டு வர்ரம். எவெவந்தாலும், எது நடந்தாலும் எல்லாத்தியும் பாப்பம்... கௌம்புங்க...”

“நாட்டாமையை அசிங்கப்படுத்தியதில் அளவற்ற சந்தோசம் வீரபத்திரனுக்கு. அதோடு இந்தக் காரியத்தில் காமாட்சியிடம் நல்ல பேர் வாங்கி விட்டால், தன்னுடைய ஆளுமையின் முழு பூரணத்துவமும் வெளிப்படுத்தின திருப்தி கிட்டும்.

“யே... காமாச்சீ...” ஒப்புதலுக்காக மனைவியை அழைத்தார் கருத்தக்கண்ணு.

“அத விடுங்க... வந்து பாத்துக்குவம்...”

“ரூவா...?”

“ம்... போற வழில பேங்க கொள்ளை யடிக்கணும்..” நக்கலாய் பதில் சொன்னான் வீரபத்திரன்.

## 29

சித்திரம்பிள்ளை ஊருக்கு காரேறிய சமயம், மயிலு புருசன் கோபால் ஏழு பேருடன் வந்து, விலக்கில் இறங்கினான்.

“நேரா பஸ் டாண்டுல எறங்கினாலும், 'சரக்க' வாச்சும் புடிச்சுட்டு வரலா..ம்..” காது விடைத்த ஒராள் கோபாலிடம் சடவாய்ப் பேசினான்.

“இந்நேரத்துல எவெங் கடயத் தெறெந்து வச்சிருக்கப் போறான்! கரெக்ட்டா பத்து மணிக்கு மொத பாட்லு வந்து சேரும் சரியா.. நட...” என அமைதிப்படுத்திய கோபால்,

‘வீட்டக் கேக்காம வந்திட்டம்... யார்ட்ட கேக்க... எப்பிடி விசாரிக்க...’ யோசித்தபடி அந்த அரையிருட்டுப் பொழுதில் ஆட்களை நடத்திப் போனான்.

ஐந்தரை மணிக்கான வாங்கொலி ஊருக்குள் ஒலித்தது.

## 30

‘அல்லாவின் நல்லடியார்களே!
தூக்கத்தைக் காட்டிலும்
தொழுகை மேலானது...!
தொழுகைக்கு வாருங்கள்...
அல்லா ரஹ்மத் செய்வானாக!
அல்லாஹு அக்குபர்...”

வாங்குச் சத்தத்தை காதில் வாங்கியபடி அய்யாச்சாமி கடை வீதிக்கு வந்தார். எந்த ருசுவும் தெரியவில்லை. ஒர்த்தரும் கண்ணில் தென்படவில்லை. ஆண்டவர் டீக் கடையில் நின்று டீ கேட்டார். இடுப்பில் இருந்த வாங்கருவாள் ரெம்பத் தொந்தரவாய் உறுத்தியது. அதற்கு இசைவாய் உடலைச் சாய்த்து நின்று கொண்டார். கண்கள் நாலாபுறமும் சுழன்றபடி இருந்தது.

RangaRakes tamilnavarasam.com

## 31

பன்னீர், தனது கத்திக்கு வேலை தர, வெறி கொண்ட நாயாய் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு கண்களை அகல விரித்துக் கடை கடையாய்த் தேடியபடி அலைந்து கொண்டிருந்தான்.

## 32

மாயனுக்கும் வசந்திக்கும் மறைந்து கொள்ள புது இடம் ஒன்றை யோசித்த சோனைமுத்து, வாத்தியார் வீட்டை குறி வைத்துப் போனான்.

## 33

குமார், தனது தோழர்கள் நாலைந்து பேரோடு ஆலோசனை செய்து கொண்டிருந்தார்.

“இதை வெறும் சாதியாய் மட்டும் பாக்கக் குடாது தோழர்... சாதிக்குள்ளயே நடக்கிற ஒரு வர்க்க பிரச்சனை... ஒரு பாட்டாளிக்கு காதல் செய்ய உரிமை கிடையாதா..?”

## 34

எதோ ஒரு அசங்கலில் சட்டென முழித்துக் கொண்ட மயிலு, அவதி அவதியாய் எழுந்தாள். நெஞ்சுக்குழி ஏனோ படபடத்து உதறிக் கொண்டிருந்தது.

யாரோ சொல்லிக் கொடுத்தது போல, முடியைத் திருத்திக் கொண்டை போட்டுக் கொண்டாள். படுத்துக் கிடந்த பிள்ளைகளின் உறக்கம் கலையாமல் வெளியே வந்து கதவைச் சாத்திவிட்டு, தோழர் முருகவேலைக் கண்டு பேச பூதிப்புரத்திற்கு கிளம்பினாள்.

## 35

வீருசின்னுவின் வீட்டுக்குள் மாயனும் வசந்தியும் பஞ்சாரத்தில் அடைபட்ட கோழிகளாய் படுத்துக் கிடந்தார்கள். உள்ளம் குறுகி, சிந்தனை அடைபட்டு, ஆளுக்கொரு பக்கம் திரும்பி சுவரைப் பார்த்தபடி கண்ணுறங்காமல் இருந்தார்கள்.

கையில் பிடித்த அருவாளோடு கதவில் சாய்ந்து கிடந்த வீருசின்னு, தன்னறியாமல் வந்த உறக்கத்தை கண்களைத் திரட்டி முழி பிதுக்கி விரட்டினாள்.

## 36

வானத்து நிலா, பனிபடர்ந்த இலையாய் வெளுத்துப் போய்ச் சரிய, கீழ்வானம் பழுத்துக் கிளம்பியது.